# பாலகாண்டப் பைம்பொழில்

முனைவர்
சுந்தர சண்முகனார்



வானதி
பதிப்பகம்

பால காண்டப் பைம் பொழில்

# பால காண்டப் பைம் பொழில்

ஆராய்ச்சி அறிஞர்

**முனைவர் சுந்தர சண்முகனார்**

தமிழ்-அகராதித் துறைப் பேராசிரியர் (ஓய்வு)

புதுச்சேரி—11

**வானதி பதிப்பகம்**

13. தீனதயாளு தெரு

தி.நகர், சென்னை-17.

முதல் பதிப்பு: 1991
**1991 ஆம் ஆண்டு புதுவைக் கம்பன் கழக விழாவில் வெளியிடப் பெற்றது.**

**திருநாவுக்கரசு தயாரிப்பு**

**விலை: ரூ. 25-00**

அச்சிட்டோர் :
ஸ்ரீகோமதி அச்சகம்
41, சூரப்ப முதலி தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

# பதிப்புரை

அழியா வரம் பெற்ற அருமைத் தமிழ் மொழிக்குக் கம்பர் பெருமான் வழங்கிய ஒப்பற்ற காவிய அணி கம்பராமாயணம். இராம காதை— வடமொழிக் காவியத்தை வால்மீகி முனிவர் படைத்தார். அதை அடிப்படையாகக் கொண்டு கம்பர் தமது இராம காதையைப் படைத்திருப்பினும், மூலத்திலிருந்து கம்பர் பெருமான் பல இடங்களில் மாற்றங்களைச்செய்துள்ளார்.

ஆறு காண்டங்களுக்குள் தமது காவியத்தைச் சிறப்புற அமைத்துள்ள கம்பர் பெருமானின் மொழிப் புலமை, கற்பனைத் திறன், சொல்லாட்சி, வடிவமைப்பு, புராண அறிவு, பொது நோக்கு, கதை சொல்லும் திறன் போன்றவைகளை உணராத தமிழர் இருக்க மாட்டார்.

ஆறு காண்டங்களில் ஒன்றான பாலகாண்டப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுத்த பாடல்களின் மூலம், ஏனைய தமிழ் இலக்கிய நூல்களின் செய்யுட்களையும் ஒப்புமைப் படுத்தி, முனைவர் திரு. சுந்தர சண்முகனார் 'பால காண்டப் பைம்பொழில்' என்னும் இந்நூலைப் படைத்துள்ளார்; கம்பரது கவித்திறமையை உரைத்துப் பார்த்து, உண்மையை உணர வைத்து உச்சி முகர்ந்து பாராட்ட வைக்கிறார். நமது குழந்தையின் அருமை பெருமையை நம்மிடமே எடுத்துச் சொல்லி நம்மையே வியப்புக்குள்ளாக்குகிற உத்தி இதில் பாராட்டு முகமாய் கையாளப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிட உதவிய புதுவைக் கம்பன் கழகத்தாருக்கும், அதன் செயலாளரான கம்பமாணர் திரு. அ. அருணகிரி அவர்கட்கும், நூலாசிரியர் அவர்கட்கும், அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ கோமதி அச்சகத்தினருக்கும் மனமார்ந்த நன்றி.

அன்புடன்

**வானதி ஏ. திருநாவுக்கரசு**

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| | ஆசிரியர் முன்னுரை | 3 |
| 1. | புகுவாயில் | 5 |
| 2. | பாயிரம் | 10 |
| 3. | உலகியல் நடைமுறைகள் | 27 |
| 4. | கருத்து வெளியீட்டில் புதுமை | 39 |
| 5. | கம்பரின் சொல் மலர்-மாலைகள் | 73 |
| 6. | சிறப்புறு செய்திக் கனிகள் | 87 |
| 7. | கற்பனைக் கனிகள் | 144 |
| 8. | ஒட்டு மாங்கனிகள் | 161 |
| 9. | நயம் மிக்க நற்கனிகள் | 173 |
| 10. | புராண வரலாற்றுப் பூந்துணர்கள் | 189 |
| 11. | சொல் கோயில்கள் | 196 |
| 12. | அணி மலர்கள் | |
| | 12-1 உவமை-உருவகங்கள் | 200 |
| | 12-2 வேற்றுப் பொருள் வைப்பணி | 223 |
| | 12-3 தற்குறிப் பேற்ற அணி | 235 |
| 13. | ஒரு கண்ணோட்டம் | 243 |
| 14. | கருத்து வழங்கிய கருவூல நூல்கள் | 249 |

# ஆசிரியர் முன்னுரை

1989 ஆம் ஆண்டு புதுவையில் நடைபெற்ற கம்பன் விழாவில் வெளியிடுவதற்காகப் புதுவைக் கம்பன் கழகச் செயலாளர் உயர்திரு புலவர் கம்பவாணர் அ. அருணகிரி யவர்கள் இட்ட அன்புக் கட்டளையின்படிச் 'சுந்தர காண்டச் சுரங்கம்' என்னும் நூல் எழுதித் தந்தேன். விழாவில் நூல் வெளியிடப் பெற்றது.

**ஊக்குவிப்பு:**

அந்த நூலுக்கு நேரிலும் மடல் வாயிலாகவும் பெரிய பாராட்டு கிடைத்தது. கம்ப ராமாயணத்தின் மற்ற ஐந்து காண்டங்கள் பற்றியும் நூல் எழுதுமாறு அன்பர்களால் பணிக்கப் பெற்றேன். இந்த ஊக்குவிப்பால், 'அயோத்தியா காண்ட ஆழ்கடல்' என்னும் நூல் எழுதிக் கொடுத்தேன். அது 1990 ஆம் ஆண்டுக் கம்பன் விழாவில் வெளியிடப் பெற்றது. அடுத்து 1991 ஆம் ஆண்டுக் கம்பன் விழாவில் வெளியிடுவதற்காக இந்தப் 'பால காண்டப் பைம் பொழில்' என்னும் நூலை எழுதி யளித்துள்ளேன்.

பால காண்டப் பைம் பொழிலைச் சுற்றிப் பார்த்து அனைத்து மலர்களையும் கனிகளையும் கொய்து தருதல் அரிய செயல். எளிய அடியேன் இயன்றவரை இந்நூல் வாயிலாக அவற்றை அறிமுகம் செய்துள்ளேன்.

**கம்ப ராமாயணப் பதிப்புகள்:**

கம்ப ராமாயண ஓலைச் சுவடிகள் இருநூற்றுக்கும் மேல் உள்ளன. கம்ப ராமாயணத்தைப் பலர் பதிப்பித்துள்ளனர். பதிப்புக்குப் பதிப்பு வேறுபாடுகள் உள்ளன. அவற்றுள், எஸ். இராஜம் அவர்கள், பதிப்பாசிரியர் குழு அமைத்துப் பல சுவடிப் படிகளையும் ஆராய்ந்து ஒப்பு நோக்கச் செய்து, 'மர்ரே அண்டு

கம்பெனி—சென்னை' என்னும் நிறுவனத்தின் வாயிலாக வெளியிட்டுள்ள பதிப்பையே என் நூலுக்கு அடிப்படை—ஆதாரமாகக் கொண்டு எழுதியுள்ளேன்.

யான் இப்பதிப்பினைத் தேர்ந்தெடுத்தற்கு உரிய காரணம், தமிழ் யாப்பிலக்கணம் அறியாதாரும் எளிதில் படித்துப் பொருள் புரிந்து கொள்ளும்படிச் சொற்களைப் பிரித்து அமைத்துப் பதிப்பித்திருத்தலே யாகும். மற்றும் இம்மலிவுப் பதிப்பே, பலராலும் வாங்கப்பட்டிருக்கலாம்—என் நூலோடு ஒத்திட்டு நோக்க உதவலாம்.

மலரை இதழ் இதழாகப் பிய்த்தும் கசக்கியும் நுகர்வது பொருந்தாது என்பது அடியேனும் அறிந்த செய்தியே. இருப்பினும், எல்லாரும் படித்து இன்புறும்படி இப்படியொரு பதிப்பும் இருக்கலாமே! யாப்பிலக்கண வல்லுநர்கள் சுவைக்கும்படியாக வேறு சில பதிப்புகள் உள்ளனவே—அவர்கட்கு அவை சாலும்.

பாடல்களின் சொற்களைப் பிரிக்காத வடிவத்தை முதலிலும், சொற்களைப் பிரித்துள்ள வடிவத்தை அதை அடுத்தும் அமைத்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பும் எனக்குப் பெருந்துணை புரிந்தது. நன்றி.

நன்றி:

அடியேனைத் தூண்டி நூல் எழுதச் செய்த திரு அ. அருணகிரி அவர்கட்கும் என் நூலைக் கற்று ஆதரவு தருகின்ற சுவைஞர்கட்கும் மிகவும் நன்றி செலுத்துகிறேன். இந்நூலை அன்புடன் நன்முறையில் வெளியிட்ட வானதி பதிப்பகத்தார்க்கு என் மாபெரு நன்றி உரியது. வணக்கம்.

புதுச்சேரி-11<br>பிப்ரவரி 1991

சுந்தர சண்முகன்

# 1. புகு வாயில்

**காண்டங்கள் :**

கம்ப ராமாயணத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு பிரிவுகள் உள்ளன. இந்தக் காண்டப் பெயர்கள் வால்மீகி தம் இராமாயண நூலில் வைத்த பெயர்களே. இந்த ஆறனுள் இங்கே எடுத்துக் கொண்டது பால காண்டம் ஆகும்.

பால காண்டம் பருவத்தால் பெற்றபெயர். அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம் ஆகியவை செயல் நிகழ்ந்தஇடத்தால் பெற்ற பெயர்களாகும். சுந்தர காண்டம் செயல் நிகழ்த்தியவர் பெயரால் பெற்ற பெயராகும். யுத்த காண்டம் செயலால் பெற்ற பெயராகும். பால காண்டத்தில், இராமனின் இளமைப் பருவத்தில் நிகழ்ந்தவை இடம் பெற்றுள்ளன.

**உட்பிரிவு :**

வால்மீகி தம் காண்டங்களின் உட்பிரிவுகட்குச் சருக்கம் என்னும் பெயர் தந்துள்ளார். கம்பர் தம் காண்டங்களின் உட்பிரிவுகட்குப் படலம் என்னும் பெயர் ஈந்துள்ளார். கம்பரின் பால காண்டத்தில் ஆற்றுப் படலம் முதலாகப் பரசுராமப்படலம் ஈறாக இருபத்து நான்கு படலங்கள் உள்ளன. இப்படலங்களில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் சுருக்க அறிமுகம் வருமாறு:—

1. ஆற்றுப் படலம்—கோசல நாட்டில் ஓடும் சரயு என்னும் ஆற்றின் வளம் கூறுவது.

2. நாட்டுப் படலம்—கோசல நாட்டின் வளம் பற்றியது.

3. நகரப் படலம்—அயோத்தி நகரின் சிறப்பு பற்றியது.

4. அரசியல் படலம்—தயரத மன்னனின் அரசியல் சிறப்பு பற்றியது.

5. திரு அவதாரப் படலம்—தயரதன் வேள்வி செய்தது—இராமன் முதலிய நால்வரும் பிறந்தது—பற்றியது.

6. கையடைப் படலம்!—தயரதன் விசுவாமித்திரரிடம் காட்டிற்குச் செல்ல இராமனை ஒப்படைத்தது பற்றியது.

7. தாடகை வதைப் படலம்—இராமன் காட்டில் தாடகையைக் கொன்றது பற்றியது.

8. வேள்விப் படலம் — விசுவாமித்திரர் காட்டில் வேள்வி செய்தது—அழிக்க வந்த அரக்கர்களை இராமன் கொன்றது - பற்றியது.

9. அகலிகைப் படலம்—காட்டு வழியில் சென்றபோது இராமன் ஒரு கல்லை மிதிக்க அகலிகை தோன்றியது பற்றியது.

10. மிதிலைக் காட்சிப் படலம்—விசுவாமித்திரர், இராம - இலக்குமணர் ஆகிய மூவரும் மிதிலைக்குச் சென்றது—இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டது -அன்றிரவு சீதை இராமனை எண்ணி எண்ணி ஏங்கியது—பற்றியது.

11. கைக்கிளைப் படலம்—அன்றிரவு இராமன் சீதையை எண்ணி எண்ணி ஏங்கியது பற்றியது. கைக்கிளை என்பது ஆணோ—பெண்ணோ—இணையாமல், தனியே எண்ணி வருந்தும் 'ஒரு தலைக்காமம்' ஆகும்.

12 வரலாற்றுப் படலம்—மூவரும் சனக மன்னனின் மணி மண்டபத்தில் அமர்தல். விசுவாமித்திரர் சனகனிடம், இராமனின்முன்னோரிலிருந்து குல வரலாற்றைக்கூறியது—இராமனின் வரலாற்றைக் கூறியது—பற்றியது.

13. கார் முகப் படலம்—இராமன் சனகனது வில்லை நாண் ஏற்றி ஒடித்துச் சீதையை மணக்கத் தகுதி பெற்றது பற்றியது, கார்முகம் = வில்.

14. எழுச்சிப் படலம்—இராமன்—சீதை திருமணம் காணத் தயரதன் படைகளுடனும் மக்களுடனும் அயோத்தியிலிருந்து புறப்பட்டு மிதிலைக்குச் செல்லுதல் பற்றியது.

15. சந்திர சயிலப்படலம்-மிதிலைக்குச் செல்பவர்கள் வழியிலுள்ள சந்திர சயிலம் என்னும் மலைப் பகுதியில் தங்கியது பற்றியது.

16 வரைக் காட்சிப் படலம்—மலைக் காட்சிகளைக் கண்டு பொழுது கழிப்பது பற்றியது.

17. பூக் கொய் படலம்—சோலைகளில் உள்ள மலர்களைக் கொய்து சூடி மகிழ்வது பற்றியது.

18. நீர் விளையாட்டுப் படலம்—வழியில் நீர் நிலையில் குளித்து முழுகி இன்புறுவது பற்றியது.

19. உண்டாட்டுப் படலம்—வழியில் பல வகை உணவுகளை உண்டு மகிழ்வது பற்றியது.

20. எதிர் கொள் படலம்—மாப்பிள்ளை வீட்டாரைப் பெண் வீட்டார் (சனகன்) எதிர் கொண்டு வரவேற்பது பற்றியது.

21. உலாவியல் படலம்—இராமன் பெண்டிர் பலர் கண்டு மயங்கும்படி தெருவில் உலாப் போந்தது பற்றியது.

22. கோலம் காண் படலம்—சீதையின் மணக்கோல அழகை அனைவரும் கண்டு மகிழ்வது பற்றியது.

23. கடி மணப் படலம்—திருமணம் பற்றியது.

24. பரசுராமப் படலம்—திருமணம் முடிந்த பின்னர், தயரதன் மணமக்களுடனும் மற்றவருடனும் மிதிலையிலிருந்து அயோத்திக்குத் திரும்பிச் செல்லும் வழியில், அவனுடைய குலப் பகைவனாகிய பரசுராமன் வந்து எதிர்க்க, அவனை இராமன் வெற்றி கொண்டது பற்றியது.

**வேறுபாடுகள்**

கம்பராமாயணத்தின் சில படலங்கட்கு வேறு பெயர்கள் தரல், ஒரு பதிப்பாளர் ஒரு படலத்தின் இறுதியில் அமைத்திருக்கும் பாடல்களுள் சிலவற்றை வேறு பதிப்பாளர் அடுத்த படலத்தின்தொடக்கத்தில் அமைத்தல், ஒரு பதிப்பாளர் ஒரு படலத்தின் தொடக்கத்தில் அமைத்திருக்கும் பாடல்களுள் சிலவற்றை வேறு பதிப்பாளர் முன் படலத்தின் இறுதியில் அமைத்தல், பாடல்களிலே சில தொடர்களும் சில சொற்களும் பதிப்புக்குப் பதிப்பு வேறுபட்டிருத்தல், பாடல்களின் எண்ணிக்கையில் ஏற்றத்தாழ்வு உள்ளமை, சில பதிப்புகளில் இல்லாத பாடல்கள் வேறு பதிப்புகளில் உள்ளமை முதலிய பல வேறுபாடுகள் கம்பராமாயணப் பதிப்புகளில் உள்ளன. பால காண்டம் இதற்கு விதிவிலக்கு அன்று.

கம்பராமாயணம் பதினாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் உடைமையால், இடத்திற்கு இடம்—ஆளுக்கு ஆள் சுவடிகளைப் பெயர்த்து எழுதும்போது இவ்வாறெல்லாம் வேறுபடுவதற்கு வாய்ப்பு உண்டு. இடைச்செருகலாகச் சில பாடல்கள் சிலரால் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் ஒரு கருத்து கூறப்படுகிறது. இருநூறுக்கும் மேற்பட்ட சுவடிகள் இருத்தலின், சுவடிக்குச் சுவடி குழப்பம் ஏற்பட்டுள்ளது. இவையெல்லாம், கம்பராமாயணம் ஒரு காலத்தில் நாடு முழுவதும் பரவலாகப் பயிலப்பட்டது என்னும் உண்மையை அறிவிக்கின்றன.

**கம்பரும் வால்மீகியும் :**

வால்மீகி இராமாயணத்தின் வழி நூலே கம்பராமாயணம். எனினும், கம்பர் வால்மீகியினும் சிற்சில

வேறுபாடுகள் கொண்டுள்ளார். அடிப்படையான பெரிய வேறுபாடாவது: வால்மீகி இராமனையும் சீதையையும் மக்கள்போல் கொண்டிருக்க, கம்பரோ, இருவரையும் திருமால் — திருமகள் ஆகியோரின் தெய்வப் பிறவிகளாகக் கொண்டு அதற்கு ஏற்பக் கதையை அமைத்துக் கொண்டு சென்றுள்ளமையாகும். மற்றுமொரு வேறுபாடு காணலாம்: இராவணன் சீதையை உடலைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு போனதாக வால்மீகி அறிவித்திருக்க, கம்பரோ, சீதை இருந்த குடிலை அடியோடு அகழ்ந்து சீதையைத்தீண்டாமல் குடிலோடு இராவணன் தூக்கிக் கொண்டு சென்றதாகக் கூறியுள்ளார்.

கதையின் இடையிடையே இருவர்க்கும் சிறு சிறு மாறுபாடுகள் பற்பல உண்டு. அவர் சொன்னதை இவர் விட்டிருப்பார்...அவர் சொல்லாததை இவர் சொல்லி யிருப்பார். புனைவுகளில் இருவரிடையே ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். ஒரு கதையைப் பலர் எழுதும்போது, இவ்வாறு சில அல்லது பல வேறுபாடுகள் அமைவது இயற்கை.

**கம்பரின் காலம்**

கம்பர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டினர் எனச் சிலரும், பன்னிரண்டாம் நூற்றாண்டினர் எனச் சிலரும் கூறுகின்றனர். எனது கொள்கை இரண்டாவதேயாகும். (இது குறித்து எனது ''அம்பிகாபதி காதல் காப்பியம்'' என்னும் நூலின் முன்னுரையில் விரிவாக எழுதியுள்ளேன்).

**பைம் பொழில் பொருள்கள்:**

பாலகாண்டப் பைம்பொழிலில் எண்ணிறந்த நறுமண மலர்களும் சுவைக் கனிகளும் உள்ளன. இனி அவற்றுள் சிலவற்றை அணிந்தும் நுகர்ந்தும் மகிழலாம்.

## 2. பாயிரம்

பாயிரம் என்பது, இப்போது நூல் எழுதுபவர்கள் 'ஆசிரியர் முன்னுரை' என்னும் பெயரில் எழுதுகிறார்களே அது போன்றது. இந்தப் பகுதியில், ஆசிரியர் கம்பர், கடவுள் வாழ்த்தும் அவையடக்கமும், நூல் வழியும், நூல் எழுதிய இடமும், நூல் பெயரும், தம்மை ஆதரித்தவர் பெயரும் கூறியுள்ளார். இவற்றை முறையே காண்பாம்.

### கடவுள் வாழ்த்து

உலகம் முழுவதையும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களும் புரியும் தலைவர் எவரோ— அவர்க்கு நாங்கள் அடைக்கல மாவோம்.

''உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே'' (1)

கம்பர் தம்மைப் பற்றி மட்டும் கவலைப்படாமல் மற்றவர்களையும் உள்ளடக்கி 'நாங்களே' என்று கூறி யிருப்பது, அவரது உயரிய பண்பை அறிவிக்கிறது. பின்னால் கடவுள் பெயர் குறிப்பிடப்படினும், முதல் பாடலில் வெளிப்படையாக இல்லாமல் பொதுவாகக் கடவுள் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதும் எண்ணத் தக்கது. முத்தொழிலும் அவர்க்கு ஒரு விளையாட்டாம்.

இந்தப் பாடலில் ஒவ்வோர் அடியிலும் நான்கு சீர்கள் உள்ளன. ஒவ்வொரு சீரிலும் உள்ள மெய்யெழுத்தை

நீக்கிவிடின், உயிரும் உயிர்மெய்யுமாக மும்மூன்று எழுத்துகள் இருக்கும். இஃது ஓர் அழகான அமைப்பாகும்.

'நாங்களே' என எல்லாரையும் உள்ளடக்கிக் கூறிய கம்பர் உலகப் பொது நோக்கு உடையவர் என்பது, அவர் 'உலகம்' என முதல் பாடலைத் தொடங்கியிருப்பது புலப்படுத்துகிறது. உயரிய பொது உள்ளம் உடையவர்கட்கு இது இயற்கை. திருவள்ளுவர் முதல் குறளிலேயே

"அகர முதல எழுத்தெல் லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என உலகைக் குறிப்பிட்டுள்ளார். நக்கீரர், "உலகம் உவப்ப" எனத் திருமுருகாற்றுப் படையினையும், 'உலகு எலாம்' எனச் சேக்கிழார் பெரிய புராணத்தையும் தொடங்கியிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. முன்னோர் முறைப்படியே கம்பர் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

## அவையடக்கம்

பாடுவதில் மாமன்னர் மன்னன் (கவிச்சக்கரவர்த்தி) ஆகிய கம்பர் மிகவும் தம்மைத் தாழ்த்திக் கொண்டு அவையடக்கம் கூறியுள்ளமை, அடியேனைப் (சு. ச.) போன்ற இக்கால எழுத்தாளர்கள் மிகவும் அறிந்து பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்.

**ஆசை பற்றி:**

திருப்பால் கடல் முழுவதையும் ஒரு பூனை குடிக்க முற்பட்டதுபோல், குற்றமற்ற வெற்றியுடைய இராமனது கதையை யான் ஆசை பற்றி எழுதத் தொடங்கினேன்— எனக் கம்பர் கூறியுள்ளார்.

"ஓசை பெற்று உயர் பால்கடல் உற்று ஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறைய லுற்றேன் இக்
காசு இல் கொற்றத்து இராமன் கதையரோ" (4)

'இந்தப் பூனையும் பால் குடிக்குமா' 'பாலுக்கும் காவல்—பூனைக்கும் தோழன்' என்பன பழமொழிகள் சார்பான தொடர்கள். இதனால் பூனைக்கும் பால் குடிப்ப தற்கும் உள்ள தொடர்பு தெரியவரும். எனவேதான், கம்பர் இந்த உவமையை எடுத்துக் கொண்டார். ஓர் ஓசை கேட்டதும் ஓடிவிடக்கூடிய பூனை, மிகுந்த ஓசையுடைய கடலை நெருங்கிக் குடிக்க முடியுமா? குவளை குவளை யாகக் குடிப்பதுபோல் இயலாது என்பதை 'நக்குபு' என்ற சொல் அறிவிக்கிறது. 'ஆசை வெட்கம் அறியாது' என்பது ஒரு பழமொழி. கம்பர் ஆசையினால் பாடத்தொடங்கி விட்டாராம்.

**பன்னப் பெறுபவோ?**

இயல், இசை, கூத்து என்னும் மூன்று தமிழ்க் கடல் துறைகளிலும் படிந்து முறையே முற்றும் அறிந்துள்ள உயர்ந்த புலவர்கட்குப் பணிவுடன் ஒன்று தெரிவித்துக் கொள்கின்றேன்? பித்துக் கொண்டார் பிதற்றியனவும், அறிவிலிகள் உளறியனவும், அன்பு (பக்தி) மேலிட்டவர்கள் குழறியனவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளத்தக்கனவோ?—(இல்லை)—என்கிறார் கம்பர்.

**"முத்தமிழ்த் துறையின் முறை போகிய**
**உத்தமக் கவிஞர்க்கு ஒன்று உணர்த்துவென்**
**பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்**
**பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?"** (8)

கம்பர் தம்மைப் பித்தர் — பேதையர் — பத்தர் என்றெல்லாம் கற்பனையாகக் கூறிக் கொண்டுள்ளார். பித்தரும் பேதையரும் அன்றி, பத்தரும் பக்தி மேலீட்டால் ஒன்று கிடக்க ஒன்று கூறிவிடக் கூடுமாதலின் 'பத்தர் சொன்னவும்' எனக் குறிப்பிட்டுள்ளார். உயர்ந்த கவிஞர் கள் மட்டமான நிலைக்குப் போய் அது சொத்தை—இது பொத்தை என்று கூறி இடுப்பை ஒடிக்க மாட்டார்கள்—மட்டமானவர்களே அவ்வாறு கூறுவது ஒருவகை இயல்பு என்பதை, "உத்தமக் கவிஞர்" என்பதன் வாயிலாக

அறிவித்துள்ளார். அப்படியே குற்றம் குறை இருப்பினும் உத்தமர்கள் பொருட்படுத்தார் என்பதையும் புலப்படுத்துகிறது இது. 'அவர் கற்றுத் துறை போகியவர்' என்பதாக யாரையாவது புகழ்பவர் கூறும் 'துறை போதல்' என்னும் தொடர், 'துறையின் முறை போகிய' என்னும் கம்பரின் ஆட்சியிலிருந்து கற்றுக் கொண்டதாக இருக்குமோ!

**யாழும் பறையும்:**

பல துறைகள் பற்றிய பாடல் தொகைகளைக்(பாமாலைகளைக்) கேட்டறிந்த கல்வியாளர்களின் செவிகளில் என் பாக்கள் ஒலிப்பது, யாழ் இசைக்கு மயங்குகின்ற அசுணம் நையும்படி பறை ஒலிப்பது போன்றதாகும்!

> **"துறை அடுத்த விருத்தத் தொகைக் கவிக்கு**
> **உறை அடுத்த செவிகளுக்கு ஓதில், யாழ்**
> **நறை அடுத்த அசுண நன்மாச் செவிப்**
> **பறை அடுத்தது போலும் என் பா அரோ"** (7)

'தொகைக் கவி' என்பது, முற்காலத் தமிழ் நூல்கள் பல தொகை நூல்களாக இருப்பதைக் குறிக்கின்றதோ? அசுணத்தைப் பிடிப்பதற்கு முதலில் தேன் அனைய இனிய யாழை இசைப்பார்களாம். அவ்வொலி கேட்ட அசுணம் அருகில் வந்து இசையைச் சுவைத்துக் கொண்டிருக்குமாம். உடனே வெடியோசைபோல் பறை மேளம் அடித்ததும் அசுணம் செயலற்றுப் போகுமாம். அப்போது அசுணத்தைப் பிடித்துக் கொள்வார்களாம்.

அசுணம் பறவையா?— விலங்கா?— என மயங்குவார் உளர். கம்பர், 'அசுணமா' எனக் கூறியிருப்பதிலிருந்து அசுணம் விலங்கு என்பது புலப்படும். அமெரிக்காவின் ஒரு பகுதியில், செவ்விந்தியர்கள் ஒரு பறவையைப் பிடிப்பதற்காக, ஒரு சிறு திடலைச் சுற்றி உயரமான வேலி கட்டுவார்களாம். அதன் உள்ளே இருந்தபடி இன்னிசை எழுப்புவார்களாம் அப்பறவை வேலிக்குள் வந்து இசையை மெய்ம் மறந்து நுகருமாம். அந்நேரத்தில் வல்லோசை எழுப்பி

அப்பறவையைப் பிடித்துக் கொள்வார்களாம். அது போன்றது இது. நூலின் உள்ளும் கம்பரால் 'அசுணமா' குறிப்பிடப்பட்டுள்ளது.

**தெய்வ மாக்கவி:**

உலகம் என்னை இகழவும் அதனால் எனக்குக் குற்றம் வந்து சேரவும் யான் இந்நூலை இயற்றுவது, பொய் அற்ற சீரிய நேரிய கேள்விப் புலமையுடைய அறிஞர்கள் அருளிய தெய்வத் தன்மையுடைய சிறந்த கவியின்—கவிஞரின் மாண்பைத் தெரிவிக்கவேயாம்.

**"வையம் என்னை இகழவும் மாசு எனக்கு**
**எய்தவும் இது இயம்புவது யாது எனின்,**
**பொய் இல் கேள்விப் புலமையினோர் புகல்**
**தெய்வ மாக்கவி மாட்சி தெரிவிக்கவே"** (6)

தம்மை உலகம் இகழவும் குற்றம் உண்டாகவும் இந்நூலை இயற்றுவதாகக் கம்பர் தம்மை மிகவும்தாழ்த்திக் கொண்டுள்ளார். அளவுக்கு மீறிய அவையடக்கம் இது. அவர் கூறியது உண்மையன்று, ஆனால், அவர் கூறியதற்கு ஏற்பச் சிலர் குற்றம் குறைகாண்பதை இன்றும் காணலாம்.

பொய் இல் கேள்விப் புலமையினோர் வால்மீகி எனச் சிலர் பொருள் கொண்டு,அவர்இயற்றிய இராமாயண நூலின் பெருமையை அறிவிக்கக் கம்பர் பாடியதாகக் கூறுவது ஒரு கொள்கை. புலமையினோர் என்பது ஒருவரை மட்டும் குறிக்கும் சொல்லாட்சியாகாது; ஒருவர்க்குமேல் சிலர் பாடிய நூல்களின் பெருமையைத் தெரிவிப்பது நோக்கம் எனக் கூறுபவரும் உளர். பிறர் நூல்கள் என்பன வட மொழியில் உள்ள இராமாயண நூல்களே. கம்ப இராமாயணத்தைக் கற்கின் வடமொழி நூல்களின் பெருமையை அறிவது எப்படி? தாய் மொழி வழிக் கல்வியின் தரம் இங்கே உணரப்பட வேண்டும்.தாய் மொழியில் உள்ள கம்பர் நூலைத் தமிழர்கள் முதலில் கற்கின், அந்தக் கதை யமைப்பின் துணை கொண்டு பிறமொழி நூல்களை எளிதில் கற்கமுடியும்—என்பது கருத்தாக இருக்கலாம்.

இங்கே உளவியல் கருத்து ஒன்று இலைமறை காயாய் மறைந்திருப்பது புலனாகிறது. ஒரு மொழியில் நல்ல புலமை உடையவர் இன்னொரு மொழியியைக்கற்பதுஎளிது. மிதிவண்டி ஓட்டுபவர் பொறியமைந்துள்ள பெரிய வண்டியை (ஸ்கூட்டர்) ஓட்டக் கற்பது எளிது. சிற்றுந்து (சிறியகார்) ஓட்டுபவர் பேருந்து (பஸ்) சரக்குந்து (லாரி) ஆகியவற்றை எளிதில் திறமையுற்று ஓட்டலாம். தமிழ் மொழியிலோ, வேறு மொழியிலோ, பல நூல்களை ஆசிரியரிடம் பாடங்கேட்டுக் கற்றவர்கள், தாம் பாடம் கேட்காத மற்ற நூல்களைத் தாமே படித்துப் புரிந்து கொள்ளலாம். இதற்குப் பயிற்சி மாற்றம் (Transfer of Training) என்று உளநூலார் (Psychologist) பெயர் குறிப் பிட்டுள்ளனர். எனவேதான், புலமையினோர் புகல் தெய்வ மாக்கவி மாட்சி தெரிவிக்கத் தாம் தமிழில் நூல் இயம்புவ தாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார் போலும்.

இந்தப் பாடலில், பொய் இல் கல்விப் புலமையினோர் என்று கூறாமல், 'பொய் இல் கேள்விப் புலமையினோர்' என்று கூறியிருப்பதில் உள்ள நுட்பத்தை உணரவேண்டும். வால்மீகி போன்றோரின் காலத்திலேயே இராமாயணக் கதை நிகழ்ந்ததாகக் கூறுவது ஒரு கொள்கை. ஆனால், இராமன் வரலாறு, வாய்வழிச் சொல்ல, செவிவழிக் கேட்கப்பட்டு மரபு வழி—மரபு வழியாக அறியப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் 'கேள்விப் புலமையினோர்' எனப்பட்டுள்ளது.

'கேள்வியும் கல்வியாகும்' என்பது திவாகர நிகண்டு நூற்பா. மொழிகளுக்கு எழுத்து கண்டுபிடித்து எழுது வதற்கு முன்பே, வாய்வழி— செவிவழிக் கல்வி வளர்ந்து வந்தது என்பது நினைவிருக்க வேண்டும். வடமொழி வேதம் இவ்வாறு கற்கப்படுவதை இன்றும் அறியலாம். நாகரிகம் அற்ற பகுதிகளாகக் கருதப்படும் ஆப்பிரிக்கக் கண்டத்தின் பகுதிகளில் கல்வி இவ்வாறு கற்கப்படுவதாகக் கூறப்படுவதுண்டு. எனவே, 'கேள்விப் புலமையினோர்'

என்ற தொடர் பொருள் பொதிந்ததாகும். ஆனால் கம்பரின் அடுத்த பாடல்களை நோக்குங்கால், யாரோ ஒருவரைச் சிறப்பாகக் கம்பர் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. அவர் வால்மீகியாகவே இருக்க வேண்டும். அந்தப் பாடலை யும் பார்க்கலாமே.

**நூல் நூற்றல்!**

முனிவர்கள் வைது சொன்ன வைவு (சாபம்) தப்பாமல் ஏழு பிறவிகள் வரையிலும் கூடச் சென்று பலிப்பது போல், தவறாமல் ஏழுமராமரங்கள் துளை எய்தும்படி அம்பு எய்த இராமனைப் பற்றிய பெருங்கதையை எழுதிய தவ முனிவனின் நூல் உள்ள இந்நாட்டிலே, எளிமையினும் எளிய சொற்களால் யான் நூல் நூற்கலுற்றேன்! என்ன வியப்பு!

**''நொய்தின் நொய்ய சொல் நூற்கலுற்றேன்; எனை!**
**வைத வைவின் மராமரம் ஏழ்துளை**
**எய்த எய்தவற்கு எய்திய மாக்கதை**
**செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே''** (5)

இங்கே 'தவன்' என்பது வால்மீகியைக் குறிக்கும். மராமரம் ஏழ் என்பதை ஏழ் மராமரம் எனக் கொள்ளல் வேண்டும். வைத வைவு என்பது வைத சாபம். இந்தச் சாபம் என்னும் வடமொழிக்கு நேர்த் தமிழ்ச் சொல்லாகக் 'கெடு மொழி' என்னும் குறியீட்டை யான் எழுதுவது வழக்கம். அதற்குப் பொருத்த மான தமிழ்ச் சொல் 'வைவு' எனக் கம்பர் கற்றுத் தந்துள்ளார்.

''தவன் சொல் நின்ற தேயத்தை நூற்கலுற்றேன்'' என்பது நாட்டின் ஒருமைப் பாட்டை உணர்த்துகின்றது. ஒரே மாதிரியான சொல் வெவ்வேறு பொருளில் பொருந்தி யுள்ள ''எய்த எய்தவற்கு எய்திய'' என்னும் தொடரில், 'சொல் பொருள் பின்வரு நிலை அணி' அமைந்துள்ளது. 'தவன் சொல்' என்பதில் உள்ள 'சொல்' என்பது, ஆகு

பெயராய்ச் சொற்களால் ஆன நூலை உணர்த்துகிறது. கம்பர் 'நூற்கலுற்றேன்' என்று கூறியிருப்பது, உடை நெய்ய நூல் நூற்பது போல், சொல்லாகிய நூலால் (இழையால்) நூற்கலுற்றேன் என்னும் கருத்தைத் தருகின்றது. ஈண்டு,

''பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூல்முடியு மாறு'' (24)

என்னும் நன்னூல் பொதுப் பாயிர நூற்பா எண்ணத் தக்கது.

**தச்சரும் நூலோரும் :**

சிறு பிள்ளைகள் அறைகள் போலவும் ஆடும் நடன அரங்கம் போலவும் கீறி விளையாடினால், அவை பொருத்தமாயில்லை எனச் சிற்பிகள் விளையாட்டுப் பிள்ளைகளை வெறுக்க மாட்டார்கள். அதுபோல், சிறிதும் புலமை இல்லாத என் புல்லிய பாடல்களை முறையாக நூல் உணர்ந்து கற்றவர்கள் வெறுக்க மாட்டார்கள்.

''அறையும் ஆடரங்கும்படப் பிள்ளைகள்
தறையில் கீறிடத் தச்சரும் காய்வரோ
இறையும் ஞானம இல்லாதஎன் புன்கவி
முறையின் நூல் உணர்ந்தாரும் முனிவரோ'' (9)

தச்சர் = சிற்பிகள். இறையும் = சிறிதும். கல்வியில் சிறந்த ஒருவரை 'அவர் முறையாகக் கற்றவர்' என்று குறிப்பிடுவதும், சிலர் அவையடக்கமாக 'நான் முறையாகத் தமிழ் கற்கவில்லை' என்று கூறுவதும், கம்பரின் 'முறையின் நூல் உணர்ந்தார்' என்ற தொடரை அடி ஒற்றியதாகும் போலும்.

**நூல் வழி**

ஒருவர் எந்த நூலையும் பின் பற்றாமல் தாமே முதல் முதலாக செய்த நூல் முதல் நூல் எனவும், அதன்வழி

ஒருவர் இரண்டாவதாகச் செய்த நூல் வழிநூல் எனவும் இவற்றை ஓரளவு சார்ந்து செய்யப்பட்ட நூல் சார்பு நூல் எனவும் பெயர் வழங்கப்படும் கம்பர் தமது நூல் வழி நூல் என்கிறார். அதாவது:- வடமொழியில் மூவர் இராமகாதை எழுதியுள்ளனர்; அவர்களுள் முற்பட்டவர் உரைத்துள்ளபடி யான் தமிழ்ப் பாடல்களால் இராம காதையை எழுதுகிறேன் என்று கூறியுள்ளார் :

**"தேவ பாடையின் இக்கதை செய்தவர்**
**மூவர் ஆனவர் தம்முளும் முந்திய**
**நாவினான் உரையின்படி நான்தமிழ்ப்**
**பாவினால் இது உணர்த்திய பண்புஅரோ" (10)**

தேவபாடை=வடமொழி எனப்படும் சம்சுகிருதம். பாடை=பாஷை. மூவர் எனப்படுபவர், வால்மீகி-வசிட்டர்-போதாயனர்- எனச் சிலரும், வால்மீகி - வசிட்டர் - அகத்தியர்- எனச் சிலரும், வால்மீகி-வியாசர்-போதாயனர் எனச் சிலரும், வால்மீகி - பாசகவி - காளிதாசர் எனச் சிலரும் பலவாறு கூறுகின்றனர் எல்லாரும் வால்மீகியை விடவில்லை. எனவே, 'மூவருள் முந்திய நாவினான்' என்பது வால்மீகியைக் குறிக்கும். எனவே, வால்மீகி ராமாயணத்தின் வழிநூல் கம்ப ராமாயணம் என்பது பெறப்படும்.

**நூல் பெயரும் எழுதிய இடமும் :**

உயர் நிலையுடைய நாயகனாகிய திருமாலின் பிறவிகளுள் (அவதாரங்களுள்) ஒன்றாகிய இராமரது பிறவியின் செயலைப் பற்றிக் கூறும் 'இராமாவதாரம்' என்னும் பெயருடைய — யாப்புத் தொடை அமைந்த குற்றமற்ற இக்கதை நூல்,சடையப்பவள்ளலின் வெண்ணெய் நல்லூர் என்னும் ஊரிலே இயற்றப்பட்டதாகும்.

**"நடையின் நின்று உயர் நாயகன் தோற்றத்தின்**
**இடை நிகழ்ந்த இராமாவ தாரப் பேர்த்**
**தொடை நிரம்பிய தோம்அறு மாக்கதை**
**சடையன் வெண்ணெய் நல்லூர்வயின் தந்ததே" (11)**

அவதாரம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் 'தோற்றம்' என்பது எனக் கம்பரால் இப்பாடலில் அறிவிக்கப்பட்டுள்ளது

இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள 'இராமாவதாரம்' என்னும் நூல் பற்றியும், சடையப்ப வள்ளலைப் பற்றியும் ஈண்டு ஒரு சிறு ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. முதலில் நூல் பெயரை எடுத்துக் கொள்ளலாம் :

## இராமாவதாரம்

முதலில் கடவுள் வாழ்த்தும் அவையடக்கமும் கூறிப் பின், 'இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோமறு மாக்கதை' என நூற்பெயர் கம்பர் கூறியிருந்தும், பிற்காலத்தில் இராமாவதாரம் என்னும் பெயர் மறைந்து இராமாயணம் என்னும் பெயருக்கு இடம் தந்து விட்டது. இதுபிற்காலத்தார் இட்ட பெயராகும்.

கம்பர் அக்கால முறையைப் பின்பற்றி யுள்ளார். 'ஒப்பிலக்கியம் காண்டல்' என்ற முறையில், மூன்று நூல் களில் உள்ள இந்த அமைப்பினை இவண் காணலாம்.

1. திருமந்திரம்

திருமந்திரம் அளித்த திருமூலர் முதலில் கடவுள் வாழ்த்துப் பாடி, பின்னர் அவையடக்கம் கூறுகிறார். இறைவன் பெருமையை யாரால் அறிய முடியும்? ஓர் அடிப்படையும் அறியாத யான் பாடத் தொடங்கி விட்டேன்.

**''ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை**
**யாரறிவார் இந்த அகலமும் நீளமும்**
**பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்**
**வேரறியாமை விளம்புகின் றேனே''** (95)

என்பதுபாடல். பின்னர், நூல் பெயரும் பயனும் கூறுகிறார்

**''மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது**
**காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்**
**ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே''** (99)

திருமூலர் நூலுக்கு இட்ட பெயர் 'மூவாயிரம் தமிழ்' என்பது இப்பாடலால் தெரிகிறது. பிற்காலத்தில் இந்நூலின் அருமை பெருமைஅறியப்பட்டுத் 'திருமந்திரம்' என்னும் பெயர் சூட்டப்பட்டது. இந்நூலை ஓதின் இறைவனை அடையலாம் என்பது நூல் பயனாகும்.

அடுத்துச் சேக்கிழாரிடம் செல்வோம்.

**2. பெரியபுராணம்**

பெரிய புராணம் பாடிய சேக்கிழார் முதலில் பாயிரப் பகுதியில் கடவுள் வாழ்த்துப் பாடியபின் அவையடக்கம் கூறுகிறார்: திருத்தொண்டர்களின் பெருமை அளப் பரியது. பெரிய கடல் நீரை ஒரு நாய் ஆசையால் குடிக்க முற்பட்டது போல், யான் தொண்டர் பெருமை ஆசையால் கூறலுற்றேன் என்கிறார்:

''அளவிலாத பெருமைய ராகிய
அளவிலா அடியார் புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பரி தாயினும்
அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்'' (5)

''தெரிவரும் பெருமைத் திருத் தொண்டர்தம்
பொருவருஞ்சீர்ப் புகலலுற்றேன் முற்றப்
பெருகு தண்கடல் உற்று உண் பெருநசை
ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமையேன்'' (6)

கம்பரைப் போலவே, சேக்கிழாரும் ஆசைபற்றிக் கூறினாராம். கம்பர், கடலைப் பூனை பருக நினைப்பது போல்—என்று கூறினார். சேக்கிழார் 'நாய் குடிக்க நினைப்பதுபோல்'—என்று கூறியுள்ளார். எனது உரை அற்ப மாயினும் பெரியோர்கள் ஏற்றுக் கொள்வர் எனச் சேக்கிழாரும் கம்பரைப் போல் அறிவித்துள்ளார்.

''இப்பொருட்கு என் உரை சிறிதாயினும்
மெய்ப் பொருட்கு உரியார் கொள்வர் மேன்மையால்''(7)

என்பது பாடல் பகுதி. கம்பர் சடையப்ப வள்ளலைக்

குறிப்பிட்டிருப்பதுபோல்,சேக்கிழார் அநபாய சோழனைக் குறிப்பிட்டுள்ளார்.

''தூய பொன்னணி சோழன் நீடுழிபார்
ஆய சீர் அநபாயன் அரசவை'' (8)

என்பது பாடல் பகுதி. சேக்கிழார் தமது நூலுக்குத் 'திருத்தொண்டர் புராணம்' என்னும் பெயரைத்தான் இட்டார்.

''இங்கிதன் நாமம் கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புற இருள் போக்கு கின்ற
செங்கதிரவன் போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம்
என்பாம்'' (10)

என்பது பாடல். சேக்கிழார் இட்ட 'திருத்தொண்டர் புராணம்' என்னும் பெயர், பின்னர், அதன் அருமை பெருமை கருதிப் பெரிய புராணம் என அன்பர்களால் வழங்கப்படலாயிற்று. அடுத்து, மாணிக்கவாசகரிடம் செல்வோம்.

### 3. திருவாசகம்

திருவாசகம் அருளிய மாணிக்க வாசகரும், முதற் பகுதியில் கடவுள் வணக்கம் கூறிப் பின் நூல் பெயர்—அவையடக்கம்—நூல் பயன் ஆகியவை கூறியுள்ளார்:

''சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள்வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன்யான். பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
..................................................
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.''

என்பன பாடல் பகுதிகள் 'பொல்லா வினையேன் புகழு மாறு ஒன்றறியேன்' என்பது அவையடக்கம். இறுதிப் பகுதி நூல் பயன் கூறுவது. மாணிக்கவாசகர் நூலுக்கு இட்ட பெயர் 'சிவ புராணம்' என்பது, 'சிவபுராணம் தன்னை உரைப்பன் யான்' என்று கூறியிருப்பதிலிருந்து அறியவரும். ஆனால், நூலின் பெயராகிய சிவபுராணம் என்பது பாயிரப் பகுதி என அறியாமல் நூலிலுள்ள பல பகுதிகள் போல் இதுவும் முதலில் உள்ள ஒரு பகுதியாகும் எனப் பிற்காலத்தில் மாறி எண்ணப்பட்டது. அவ்வாறே அச்சிட்டும் ஓதியும் வரப்படுகிறது. உண்மையில், 'சிவ புராணம்' என்பதே மாணிக்கவாசகர் நூலுக்கு இட்ட பெயராகும், இந்நூலின் வாசகத்தின் அருமை பெருமை கருதிப் பின்னர் இதற்குத் திருவாசகம் என்னும் பெயர் சூட்டப்பட்டது.

இதுகாறும் கூறியவற்றால், திருமூலரின் 'மூவாயிரம் தமிழ்' என்னும் நூற்பெயர் பின் திருமந்திரம் என வழங்கப்படுவது போலவும், சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்' பின் பெரிய புராணம் என வழங்கப்படுவது போலவும், மாணிக்க வாசகரின் சிவபுராணம் பின்னர்த் திருவாசகம் என வழங்கப்படுதல் போலவும், கம்பரின் 'இராமாவதாரம்' என்னும் நூற்பெயர் பின்னர் 'இராமாயணம்' என வழங்கப்படலாயிற்று—என்பது பெறப்படும்.

இனி, கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளலைப் பற்றிய செய்தி காண்போம் :

**சடையப்ப வள்ளல் :**

நூல் எழுதிய இடம், 'சடையன் வெண்ணெய் நல்லூர் வயின் தந்ததே' எனக் கம்பர் கூறியுள்ளார். வெண்ணெய் நல்லூர் என்பது, தென்னார்க்காடு மாவட்டத்தில்—திருக்கோவலூர் வட்டத்தில் உள்ள திருவெண்ணெய் நல்லூரைக் குறிக்கும்; அந்த ஊரில்தான் சடையன் இருந்தார் எனச் சிலர் அடித்துக் கூறுகின்றனர்.

ஆனால் சில இலக்கியச் சான்றுகளைப் பார்க்கும் போது இது பொருத்தமாகத் தெரியவில்லை. தஞ்சை மாவட்டத்தில் வெண்ணெய் நல்லூர்—புதுவை என்னும் பகுதிகள் இருந்தன. அந்த வட்டாரத்தில்தான் சங்கரன் என்பவரும், அவர் மகன் சிறப்புற்ற சடையன் (சடையப்ப வள்ளல்) என்பவரும், சடையனின் மகன் சேதிராயன் என்பவரும் வாழ்ந்ததாகத் தனிப் பாடல்கள் தெரிவிக்கின்றன. சடையனால் கப்பல் கப்பலாக நெல் பெற்ற இலங்கைத் தமிழ் மன்னன் 'பரராச சிங்கன்' என்பவன் நன்றியறிதலாகச் சடையனைப் புகழ்ந்து பாடிய பாடல் ஒன்று உள்ளது. அது வருமாறு :

**''இரவு நண்பக லாகிலென் பகல் இருளறா இரவாகி லென்**
**இரவி எண்திசை மாறிலென் கடல் ஏழும் ஏறிலென் வற்றிலென்**
**மரபு தங்கிய முறைமை பேணிய மன்னர் போகிலென் ஆகிலென்**
**வளமை இன்புறு சோழ மண்டல வாழ்க்கை காரண மாகவே**
**கருது செம்பொனின் அம்பலத்திலொர் கடவுள் நின்று நடிக்குமே**
**காவிரித் திருநதியிலே ஒரு கருணை மாமுகில் துயிலுமே**
**தருஉயர்ந்திடு புதுவையம்பதி தங்கு மானிய சேகரன்**
**சங்கரன்தரு சடையன் என்றொரு தரும தேவதை வாழவே''**

என்பது பாடல். இது பெருந்தொகை என்னும் தொகை நூலில் 1135 ஆம் பாடலாக உள்ளது. இந்தப் பாடலில் சங்கரனும் அவர் மகன் சடையனும் இடம் பெற்றுள்ளனர். இனிச் சடையன் மட்டும் இடம் பெற்றுள்ள இரண்டு தனிப் பாடல்களைக் காண்போம்.

**''மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்**
**கைகழுவ நீர் போதுங் காவிரி—பொய்கழுவும்**
**போர்வேல் சடையன் புதுவையான் இல்லத்தை**
**யார்போற்ற வல்லார் அறிந்து''**

(சடையன் சோழ மன்னனிடத்தில் அலுவல் பார்த்ததும் உண்டாதலால், 'போர் வேல் சடையன்' எனப்பட்டான்.)

"புரந்தர தாரு புதுவைச் சடையன்
இருந்த வியலூர் தெற்கு மேற்கு—பரந்தபொன்னி
ஆற்று நீரால் விளையு மப்பாற் கிழக்காகி
மாற்று நீரால் விளையு மாம்"

இனிச் சடையன் மகன் சேதிராயனைப் பற்றிய பாடல் வருமாறு :

"காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரை பூவலயம்
உள்ளத் தகும்புதுவை ஊரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து"

என்பது பாடல். சடையனுக்குப் பிறந்த பிள்ளைப் பெருமாள் சேதிராயன் என்பவன். மேலுள்ள பாடல்களில் அறிவிக்கப்பட்டுள்ள சங்கரன், சடையன், காவிரி, சோழ மண்டலம் என்னும் பெயர்களை நோக்குங்கால், வெண்ணெய் நல்லூர், தஞ்சை மாவட்டத்து வெண்ணெய் நல்லூராகவே இருக்கவேண்டும் என்பது தெளிவு.

இலங்கையில் கருப்பு (பஞ்சம்) ஏற்பட்ட காலத்தில் சடையன் கப்பல் கப்பலாய் அரிசி அனுப்பியதால், இலங்கை மன்னன் பரராச சிங்கன், காவிரியோடும் சோழமண்டலத் தோடும் தொடர்புறுத்திச் சடையனைப் புகழ்ந்து பாடியுள்ளான். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் சடையன் இருந்திருந்தால், கப்பல் கப்பலாய் இலங்கைக்கு அரிசி அனுப்பியிருக்க முடியாது. காவிரி பாயும் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவனாயிருந்ததாலேயே கப்பல் கப்பலாய் அரிசி அனுப்ப முடிந்தது.

பால காண்டத்தில் – மிதிலைக்காட்சிப் படலத்தில் கம்பர் பாடியுள்ள ஒரு பாடலும் இதற்குச் சான்று பகரும்.

இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட நாளில் மாலை கழிந்து இரவு வந்தது. அந்த இரவில், திங்கள், உலகெங்கும் உள்ள இருள் முழுவதையும் மாலையாகிய கையைப் பரப்பி உண்ண எண்ணியது போல் எங்கும் வெண்மையான மிக்க நிலவு ஒளியைப் பரப்பியது. எது போல் எனில், பரந்து விரிந்த நல்ல நீர் வளத்தினால் வயல்கள் செழித்துள்ள வெண்ணெய் நல்லூரில் உள்ள சடையனது புகழ் போலப் பரப்பியதாம். பாடல்:

**"வண்ண மாலை கைபரப்பி உலகை வளைத்த இருள் எல்லாம்**
**உண்ண எண்ணித் தண்மதியத்து உதயத்து எழுந்த நிலாக்கற்றை**
**விண்ணும் மண்ணும் திசை அனைத்தும் விழுங்கிக் கொண்ட விரி நல்நீர்ப்**
**பண்ணை வெண்ணெய்ச் சடையன் புகழ்போல் எங்கும் பரந்துளதால்" (73)**

என்பது பாடல். தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலை நன்றியறிவிக்கும் முகத்தான், கம்பர் தம் நூலில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் இந்தப் பாடலும் ஒன்று. புகழை வெண்ணிறத்ததாகச் சொல்லுதல் இலக்கிய மரபு. பிற நூல்களில் இருப்பதன்றிக் கம்பராமாயணத்திலும் புகழ் வெண்ணிறத்ததாகச் சில இடங்களில் சொல்லப்பட்டுள்ளது.

திங்கள் இயற்கையாக வெள்ளொளி பரப்பியது; ஆனால் இருளை விழுங்குவதற்காகப் பரப்பியது என ஆசிரியர் தாமாக ஒரு காரணம் குறித்தேற்றிச் சொல்லியிருப்பதால், இப்பாடல் தற்குறிப்பேற்ற அணி அமைந்ததாகும்.

இந்தப் பாடலில் 'விரிநல்நீர்' என்பது காவிரியைக் குறிக்கும். எனவே, சடையனது ஊர், தஞ்சை மாவட்டத்து வெண்ணெய் நல்லூராகவே இருக்கும். கம்பர் பிறந்த திருவழுந்தூர் பக்கத்தில் இருந்ததால்தான், இயற்கையாக—

எளிதாகச் சடையப்பர் கம்பரை வளர்த்து உருவாக்க முடிந்தது.

இதில் இன்னொரு சிக்கல் இருப்பதாகச் சொல்லப் படுகின்றது. வெண்ணெய் நல்லூர் என்னும் பெயரில் இப்போது தஞ்சை மாவட்டத்தில் ஓர் ஊரும் இல்லை. "கதிரா மங்கலம் இரயில் நிலையத்துக்கு வடக்கே உள்ள முப்பெருமான் திடல் என்பதும் அதைச் சார்ந்த இடங் களும் முன்பு வெண்ணெய் நல்லூர் என்று வழங்கப்பட்டன என்பர்"—என அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கம்ப ராமாயணப் பதிப்பில் கூறப்பட்டுள்ளது. மற்றும் பலரும் இக்கருத்தைக் கூறுகின்றனர்.

இதிலேயும் ஒரு சிக்கல் உள்ளது. மிகப் பெரிய வள்ளலாக வாழ்ந்த சடையப்பரின் ஊர்ப்பெயர் மறையும் படி வேறு பெயர் எவ்வாறு தோன்றியிருக்க முடியும்? என்பது அந்தச் சிக்கல். இதற்கு எளிதில் விடை கூற முடியும். நூல்களின் பெயர்களே ஆசிரியர்கள் வைத்ததற்கு மாறாக மாறியிருப்பதாக மேலே கண்டோம். இவ்வாறு ஊர்களின் பெயர்களும் மாறலாம் அல்லவா? மயிலாடுதுறை மாயூரம் அல்லது மாயவரம் ஆயிற்று. மறைக்காடு வேதாரண்யம் ஆயிற்று. புள்ளிருக்கு வேளூர், வைத்தீசுவரன் கோயில் ஆயிற்று. இப்படியே கூறிக்கொண்டு போனால் இந்தப் பட்டியல் மிகவும் நீளும். எனவே, கம்பர் பிறந்த திருவழுந்தூருக்கு ஒரு தோற்றம்—ஆறு அல்லது ஏழு அல்லது பத்து கி.மீ. தொலைவில் உள்ள கதிரா மங்கலத் தைச் சார்ந்த பகுதி சடையனின் வெண்ணெய் நல்லூரா யிருக்கலாம். ஒரே பெயருள்ள ஊர்கள் பல இருப்பது போலவே, தென்னார்க்காடு மாவட்டத்துத் திருவெண்ணெய் நல்லூர் போன்ற பெயரினதாய்த் தஞ்சை மாவட்டத்திலும் ஓர் ஊர் இருந்திருக்கலாம் அல்லவா? யான் இங்கே கூறுவதே முடிந்த முடிவு அன்று. ஆராய்ச்சியாளர்கள் மேலும் ஆய்ந்து முடிவு காணலாம்.

இந்தப் பாயிரப் பகுதியை அடுத்து, இனிப் பால காண்டப் பைம்பொழிலுக்குள் சென்று பயன் பெறலாம்.

# 3. உலகியல் நடைமுறைகள்

கல்வியில் பெரிய கம்பர் ஏட்டுக் கல்வியுடன் உலகியல் நடைமுறைகளையும் மிகவும் அறிந்தவர். அவற்றைத் தம் நூலில் அழகாக ஓவியப் படுத்திக் காட்டியுள்ளார். அவற்றுள், பால காண்டப் பைம்பொழிலின் நிழலில் உள்ள சில பகுதிகளைக் காண்போம்.

## ஆற்றுப் படலம்

### பறை கறங்கல்

ஆற்றிலோ—கால்வாய்களிலோ புது வெள்ளம் வரும் போது உழவர்கள் பறையறைந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்வது வழக்கம். சரயு ஆற்றிலும் அதன் கிளைகளிலும் புதுவெள்ளம், அலையாகிய கையால் பொன்னையும் முத்தையும் வீசிக்கொண்டு சென்றதாம்; அப்போது உழவர்கள் கிணைப்பறை கொட்டினார்களாம்.

**''காத்தகால் மள்ளர் வெள்ளக் கலிப்பறை கறங்கக்**
**கைபோய்ச்**
**சேர்த்தநீர்த் திவலை பொன்னும் முத்தமும் திரையின் வீசி**
**நீத்தமாம் தலையதாகி நிமிர்ந்துபார் கிழிய நீண்டு**
**கோத்தகால் ஒன்றின் ஒன்று குலம்எனப்**
**பிரிந்ததன்றே'' (18)**

என்பது பாடல். ஒரு குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இருந்தால், பின்னர் ஒவ்வொரு பிள்ளைக்கும் பிள்ளைகள் சிலர் பிறக்கின்றனர். பின்னர் அவர்களுள் ஒவ்வொருவர்க்

கும் பிள்ளைகள் பிறப்பர். இவ்வாறு குலம் பிரிந்து விரிந்து கொண்டு போகிறது. அது போல், சரயு ஆற்றிலிருந்து பலகிளைகள் பிரிகின்றன. அந்தப் பெருங் கிளைகளிலிருந்து சிறு சிறு கிளைகள் பிரிகின்றன — என ஆற்று வெள்ளம் புனைந்துரைக்கப்பட்டுள்ளது.

புதுவெள்ளம் வரும்போது உழவர்கள் பறையடித்து வரவேற்கும் நிகழ்ச்சி, அருணகிரிநாதரின் திருவதிகைத் திருப்புகழிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருவதிகையை ஒட்டிச் செல்லும் கெடிலம் என்னும் ஆற்றில் புதுவெள்ளம் பெருகும்போது, உழவர்கள் திமிதிம்-திமிதிம் எனப் பறை அறைந்து மகிழ்வார்களாம்:

**''திமி திம் எனப் பறையறையப் பெருகுபுனல் கெடிலநதித்**
**திருவதிகைப் பதிமுருகப் பெருமாளே''**

என்பது திருப்புகழ்ப் பாடல். இலக்கிய ஒப்புமையாக இது ஈண்டு தரப்பட்டுள்ளது.

## அரசியல் படலம்

### துறவியர் கண்டுகொள்ளும் முறை

தமிழகத்தில் மடாதிபதி ஒருவரைக் காணும் மக்கள் கைகூப்பி வணங்கலும், காலில் விழுந்து வணங்குதலும் உண்டு. ஆனால், ஒரு மடாதிபதி மற்றொரு மடாதிபதியைக் காணும்போது ஒருவரையொருவர் கைகூப்பி வணங்குதல் அரிது. இது போன்ற நிகழ்ச்சி ஒன்று அயோத்தியில் காணப்பட்டது. வசிட்ட முனிவரை மன்னன் தயரதன் வணங்குவான் அயோத்திக்கு வந்த கலைக்கோட்டு முனிவரையும் தயரதன் வணங்கினான். இந்த முனிவர்கள் இருவரும் ஒருவரையொருவர் வணங்கியதாகக் கம்பர் கூற வில்லை. இருவரும் அரசவை அடைந்தனர் என்று மட்டும் கூறியுள்ளார்.

**''வசிட்டனும் அருமறை வடிவு போன்று ஒளிர்**
**விசிட்டனும் வேத்தவை பொலிய மேவினார்''** (74)

என்பது பாடல் பகுதி. (தமிழ் நாட்டு நிலைமையை இரண்டோரிடத்தில் நான் நேரில் கண்டுள்ளேன்).

**அரசின் மகிழ்ச்சிச் செயல்கள்**

நாட்டில் மகிழ்ச்சியான புதுமைச் செயல்கள் நிகழும் போது, அரசு, சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்தலும், வரிகளைக் குறைத்தல் அல்லது நீக்குதல் செய்தலும் இயற்கை. இவ்வாறாக, தயரதன் பிள்ளைகள் பிறந்தபோது, ''ஏழாண்டுக் காலத்திற்கு வரிகள் நீக்கப் படும்; கருவூலத்தைத் திறந்து வறியவர் வேண்டிய செல்வம் பெற்றுக் கொள்ளலாம்''— என்பதாகப் பறையறைய ஏவினான்.

**''இறை தவிர்ந்திடுக பார் யாண்டு ஓர் ஏழ்; நிதி**
**நிறைதரு சாலை தாள் நீக்கி யாவையும்**
**முறைகெட வறியவர் முகந்து கொள்க எனா**
**அறை பறை என்றனன் அரசர் கோமகன்''** (108)

என்பது பாடல். அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கம்ப ராமாயணப் பதிப்பில்,

**''இறை தவிர்ந்திடுக பார் யாண்டு ஓர் ஏழொடு ஏழ்''** என்றுள்ளது. இதன்படி நோக்கின், பதினான்கு ஆண்டுக் காலம் வரிகள் நீக்கப்படும் எனக் கருத்து கொள்ள வேண்டும்.

**நலம் உசாவுதல்**

ஒருவர் மற்றொருவரைக் காணும்போது, இப்போது என்ன வேலை நடக்கிறது? வாழ்க்கையில் ஒன்றும் தொல்லை இல்லையே? மனைவி மக்கள் நலமா?— என்றெல்லாம் நலம் உசாவுதல் வழக்கம். இவ்வாறே, இராமன் நகர மாந்தர்களைக் காணும்போதெல்லாம் நலம் வினவினான்.

"எதிர்வரு மவர்களை எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிதர
எதுவினை? இடர் இலை? இனிது நும் மனையும்
மதிதரு குமரரும் வலியர் கொல்? எனவே"— (130)

## கையடைப் படலம்

### புகழ்ந்து கேட்டல்

வசதியான ஒருவரிடம் உதவி கேட்கச் செல்லும் ஒருவர், முதலில் அவரைப் புகழ்ந்து பின்னர் உதவி வேண்டுதல் ஒருவகை உலகியல். "உங்களைப் போன்ற பெரியவர்கள்— நல்லவர்கள் இருப்பதனால்தான் எங்களைப் போன்றோர் வாழ முடிகிறது. எத்தனையோ பேருக்கு நீங்கள் உதவி செய்துள்ளீர்கள். உங்களுக்குச் சமுதாயத்தில் நல்ல பெயர் உண்டு. என் போன்றோர் உதவி வேண்டின், உங்களிடமே வரவேண்டும்—' என்றெல்லாம் புகழ்ந்து அடிப்படை போட்டுப் பின்னர் உதவி கேட்பது ஓர் உலகியல் நடைமுறை.

விசுவாமித்திர முனிவர் வேள்வி காக்கத் தயரதனிடம் இராமனைக் கேட்டுப் பெறுவதற்காகத் தயரதனிடம் வந்துள்ளார். தயரதன் வணங்கி வரவேற்றான். பின்னர் முனிவர் மன்னனை நோக்கிக் கூறுகிறார்: "என் போன்ற முனிவர்களும் தேவர்களும் தமக்கு இடையூறு ஏற்பட்ட போது அதைப் போக்கிக் கொள்ள, சிவனிருக்கும் வெள்ளிமலை, திருமாலிருக்கும் பாற் கடல், நான்முகனது நகரம், இந்திரனின் கற்பக நகரம், நீ இருக்கும் அயோத்தி ஆகிய இந்த ஐந்து இடங்களைத் தவிர வேறு புகலிடம் உண்டா? இல்லையே!

இந்திரன் சம்பராசுரனால் அரசிழந்து நின்னிடம் வந்து குறையிரந்தபோது, நீ சென்று சம்பரனைக் கொன்று மீட்டுக் கொடுத்த அரசு அல்லவா வென்று அவ்விந்திரன் இப்போது ஆள்வது?" என்றெல்லாம் மன்னனைப் புகழ்ந்தார்: பின், மன்னன், "நீங்கள் வந்தது

என் தவப்பேறு. இனி யான் செய்ய வேண்டியது யாது?'' என்று வினவினான். பின்னர் முனிவர், காட்டில் யான் செய்யும் வேள்வியை அரக்கர்கள் அழிக்காவண்ணம் காக்க இராமனைத் துணைக்கு அனுப்புக என்று வேண்டினார். முதலில் புகழ்ந்துரைக்கும் பாடல்கள் வருமாறு:—

## கையடைப் படலம்

''என் அனைய முனிவரரும் இமையவரும்
இடையூறு ஒன்று உடைய ரானால்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்,
பாற்கடலும், பதும பீடத்து
அந்நகரும், கற்பக நாட்டுஅணி நகரும்
மணிமாட அயோத்தி என்னும்
பொன்நகரும் அல்லாது புகல் உண்டோ?
இகல் கடந்த புலவு வேலோய்!'' (8)

''இன்தளிர்க் கற்பக நறுந்தேன் இடை துளிக்கும்
நிழல் இருக்கை இழந்து போந்து
நின்றளிக்கும் தனிக்குடையின் நிழல் ஒதுங்கி
குறை இரந்து நிற்ப நோக்கி,
குன்றளிக்கும் குலமணித் தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீ கொண்டு
அன்றளித்த அரசன்றோ புரந்தரன் இன்று
ஆள்கின்றது, அரச! என்றான்'' (9)

இந்த உலகியல் நடைமுறையை விசுவாமித்திரரும் பின்பற்றியுள்ளார். இதை விசுவாமித்திரரின் பேச்சு நயம் என்பதா? விசுவாமித்திரர் இவ்வாறு கூறியதாகப் பாடியுள்ள கம்பரின் கவிநயம் என்று பாராட்டி மகிழ்வதா? (இந்தக் காலத்தில் இத்தகைய செயலை 'ஐஸ் (Ice) வைத்தல்' என்று வேடிக்கையாகச் சிலர் கூறுவது வழக்கம்),

## வேள்விப் படலம்

### தாரை வார்ந்து விடுதல்

நெடியவனான திருமால் குறிய வாமன வடிவத்துடன் மாவலியிடம் வந்து மூன்றடி மண் கேட்க, பெற்றுக் கொள்க என மாவலி வாமனன் கையில் தாரை (நீர்) வார்த்தான். அந்நீரில் வாமனன் கையே நீட்டி ஒப்புக் கொண்டதை உணர்த்தினான்.

''அடி ஒரு மூன்றும் நீ அளந்து கொள்க என,
நெடியவன் குறியகை நீரில் நீட்டினான்'' (23)

ஒரு பொருளை இன்னொருவர்க்குக் கொடுக்கும்போது தாரை (நீர்) வார்த்தல் ஒருவகை மரபு, இந்த மரபு, தாரை வார்க்காவிடினும், ஒருவர்க்கு மற்றொருவர் கொடுத்ததைத் 'தாரை வார்த்து விட்டார்' எனக் கூறும் அளவுக்கு நாளடைவில் மாறிவிட்டது. இது, இன்னும் நாளடைவில், ஒரு பொருள் காணாது தொலைந்து போயினும், 'தாரை வார்ந்து விட்டது' என்று கூறும் வகையில் மாறிவிட்டது. மேலும் நாளடைவில், 'தாரை வார்ந்து விடுதல்' என்பது மக்களது கொச்சைப் பேச்சு நடையில் 'தாராந்து விட்டது' என்றும் சொல்லப்படுகிறது.

### ஒருவர் முன் ஒருவர்

விசுவாமித்திரரின் வேள்வியைக் குலைக்க வந்த அரக்கர்கள் பலரை இராமன் கொன்றான். எஞ்சிய அரக்கர் சிலர், நம்மையும் கொல்வர்—நாம் ஓடி விடுவோம் என்று சொல்லிக் கொண்டு பிணங்களை மிதித்துக் கொண்டு ஒருவர்க்கு முன்னால் ஒருவர் ஓடினராம்.

''பிணத்திடை நடந்து இவர் பிடிப்பர் ஈண்டுஎனா
உணர்த்தினர் ஒருவர்முன் ஒருவர் ஓடினார் (42)

இடுக்கண் நேர்ந்த போது ஒருவரை முந்திக்கொண்டு ஒருவர் ஓடுவது உலகியலில் உண்டன்றோ?

## மிதிலைக் காட்சிப் படலம்

### அயினி நீர் சுற்றல்

இராமனைக் கண்ட பின் சீதை, காம வேதனையில் நைந்து நொந்து கிடந்தாள். இந்த நோய்க் காரணத்தை அறியாத தோழியரும் செவிலியரும் தாயரும் தமக்கை முறையுள்ளவரும், சீதைக்குக் கண்ணூறு (திருஷ்டி) ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சி, கண்ணூறு கழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்; ஒரு கலத்தில தண்ணீரும் உணவுப் பொருளும் இட்டு ஆலத்தி சுற்றினார்களாம், உலகியலில் எளிய ஏழையர் வீடுகளிலும் கண்ணூறு கழிக்கும் மரபு உண்டு. கண்ணூறு கழிப்பதற்குப் பல முறைகள் உள்ளன; அவற்றுள் 'அயினி நீர்' சுற்றுவதும் ஒருமுறை என்பது அறியக் கிடக்கிறது.

### புள்ளிக் குறி

வழி தெரிவதற்காகப் பழங்காலத்தில் புள்ளிக் குறி (புள்ளி அடையாளம்) வைப்பது உண்டு. இருட்டில் வழி தெரிவதற்காக வெள்ளைப் புள்ளிகளை நடு நடுவே வைப்பதுண்டாம். இரவில் வானத்தில் விண்மீன்கள் புள்ளிக் குறிகள் இட்டது போல் தோன்றுகின்றனவாம். இப்போது கூட, சிலர் அடையாளம் காண எதையாவது பயன்படுத்திக் கொள்வதுண்டு. பாடல்:

> ''புள்ளிக் குறி இட்டென ஒளி மீன்
> பூத்த வானம் பொலி கங்குல்'' (72)

## வரலாற்றுப் படலம்

### கரை ஏறல்

உலகியலில் அரிய பெரிய செயல் ஒன்றைக் குறிப்பிடுங்கால், அதைப் பற்றிச் சொல்லிக் கரை ஏற முடியாது—அதைச் செய்து முடித்துக் கரை ஏறல் அரிது— என்றெல்லாம் கூறுவதுண்டு. விசுவாமித்திரர் சனகனை நோக்கி, தயரதன் பெருமைகளையும் அவன் மக்களின்

பெருமைகளையும் சொல்லி முடித்துக் கரை ஏறுதல் நான் முகனாலும் முடியாது எனக்கூறுகிறார், பாடல்.

> "அயன் புதல்வன் தயரதனை அறியார் இல்லை அவன்
> பயந்த குலக் குமரர் இவர் தமக்கு உள்ள பரி செல்லாம்
> நயந்துரைத்துக் கரை ஏறல் நான் முகற்கும்
> அரிதாம்" (15)

மாப்பிள்ளையின் பெருமை:

மாப்பிள்ளையைச் சேர்ந்தவர்கள், மணம் பேசும் நோக்கத்துடன், பெண்ணின் தந்தையிடம் மாப்பிள்ளையின் பெருமைகளையெல்லாம் எடுத்துக் கூறுதல் மரபு. அவ்வாறே, விசுவாமித்திரர், சீதையின் தந்தையாகிய சனகனிடம் இராமன் பெருமைகளை விரிவாக விளக்குகிறார். இறுதியில், கல்லாய்க் கிடந்த கோதமனின் மனைவி அகலிகைக்கு இராமனது கால் தூசு பழைய உருவம் கொடுத்தது என்றும், என் உயிரினும் இராமனிடம் எனக்குப் பற்று மிகுதி என்றும் கூறி, இராமனின் வரலாற்றையும் தோள் வலிமையையும் அறிவித்து முடிக்கிறார். இறுதிப் பாடல் வருமாறு:-

> "கோதமன்தன் பன்னிக்கு முன்னை உருக் கொடுத்தது
> இவன்
> போது வென்ற தெனப் பொலிந்த பொலங் கழல்
> கால் பொடி கண்டாய்
> காதல் என்றன் உயிர்மேலும் இக்கரிபோன்பால்
> உண்டால்
> ஈது இவன்றன் வரலாறும் புயவலியும் என
> உரைத்தான் (31)

## எழுச்சிப் படலம்

உழுந்து விழ:

மக்கள் கூட்டம் மிகவும் நெருக்கமாக—மிகுதியாக இருப்பின் எள் விழ இடம் இல்லை என்று கூறுவது

உலகியல். அயோத்தியிலிருந்து திருமணம் காண மிதிலைக்குச் செல்லும் தயரதனின் படைப்பெருக்கம் உழுந்து விழ இடம் இல்லாமல் இருந்ததாம்."உழுந்து இட இடம் இலை" (23) என்பது பாடல் பகுதி. கம்பர் உழுந்தினும் சிறிய எள்ளை விட்டது ஏனோ? இடத்திற்கு இடம் வழக்கில் வேறுபாடு இருக்கலாம்.

## உலாவியல் படலம்

நீங்குமின்

கும்பலில் பின்னால் இருப்பவர்கள் முன்னால் செல்வதற்காக, வழியில் உள்ளவர்களை நோக்கி, 'வழி விடுங்கள் — நகருங்கள்' என்று கூறிக் கொண்டு முந்திச் செல்ல முயல்வது உலகியல். அவ்வாறே, இராமனைக் காண வந்த பெண்டிரும், நீங்குமின் — நீங்குமின் (வழிவிடுங்கள் — வழி விடுங்கள்) என்று சொல்லிக் கொண்டு ஒருவரை ஒருவர் முந்தினராம். பாடல்,

> "நெருங்கினர் நெருங்கிப்புக்கு நீங்குமின்
> நீங்குமின் என்று
> அருங்கலம் அனைய மாதர் தேன் நுகர் அளியின்
> மொய்த்தார்" (2)

இவ்வாறாக மகளிர் தேனை மொய்க்கும் வண்டுகள் போல் மொய்த்துக் கொண்டனராம்.

## கோலம் காண் படலம்

கண் பனி சோரல்

தம் பெண்ணை மணமுடித்துக் கொடுக்கத் தம் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துச் செல்லத் தொடங்கும் போதே, பெண்ணின் பெற்றோரும் உடன் பிறந்தோரும் அழுவது பல இடங்களில் நிகழும். திருமணம் முடிந்தபின் கணவன் வீட்டிற்கு அனுப்பும் போதும் பிரிவாற்றாமல் அழுவதுண்டு. திருமண அரங்கில், மாப்பிள்ளை முதல்முதலாகப் பெண்ணின் கையைப்

பிடிப்பதைப் பார்க்கப் பொறாமல் கண் கலங்குபவர்களும் உண்டு. தன் தாய் வீட்டில் உள்ள தமையன் மகனுக்குத் தன் பெண்ணைக் கட்டிக் கொடுத்த தாயும் மகளைப் பிரிய மனமின்றி அழுவதுண்டு, இது உலகியல். இதற்குச் சீதையின் தந்தையாகிய சனக மன்னனும் விதி விலக்கு இல்லை.

மண அரங்கிற்கு அழைத்துச் செல்லப்பட்ட சீதை முறைப்படி முதலில் முனிவரை வணங்கி, பின் மன்னன் தயரதனை வணங்கி, பின்னர், கண்களில் நீர் சோர இருக்கின்ற தன் தந்தை சனகன் அருகில் ஓர் இருக்கையில் அமர்ந்தாள். இதைச் சுவைபெறக் கம்பர் பாடியுள்ளார்.

**''மாதவரை முற்கொள வணங்கி, நெடுமன்னன்**
**பாதமலரைத் தொழுது, கண்கள் பனி சோரும்**
**தாதை அருகு இட்ட தவிசில் தனி இருந்தாள்**
**போதினை வெறுத்து அரசர் பொன்மனை**
**புகுந்தாள்'' (35)**

இறுதி அடிக்கு, தாமரை மலரை வெறுத்துச் சனக மன்னன் வீட்டில் வந்து வளரும் திருமகளாகிய சீதை— எனப் பொருள் கொள்ளல் வேண்டும். இந்தப் பாடலில் உள்ள 'கண் பனி சோரும் தாதை' என்னும் பகுதி உள்ளத்தை நெகிழச் செய்கிறது.

கவுதமப் புத்தர் காப்பியம் என்னும் நூலிலும்கண்ணீர் சிந்தும் செய்தி சொல்லப்பட்டுள்ளது. மணமகன் சித்தார்த்தனின் அரண்மனையில் மணப்பெண் யசோதரையைப் பெற்றோர் அழைத்து வந்தனர்; பல வண்டிகளில் சீர் வரிசைகளை ஏற்றி வந்தனர். கிளி போன்ற பெண்ணைப் பிரிய பெற்றோர் மனம் இன்றிக் கண்கள் நீர் முத்தைச் சிந்த, மணமகனது அரண்மனையில் கொண்டு வந்து சேர்த்தனர். பாடல்:

"இத்தனை ஊர்தி மீதும் ஏற்றியே கொணர்ந்த சீர்கள்
மொத்தமும் இறக்க ஓர்நாள் முழுவதும் போதவில்லை.
தத்தைநேர் பெண்ணைப் பெற்றோர் தணத்திட உளமே இன்றி
முத்தினைக் கண்கள் சிந்த மூதரண் மனையில் சேர்த்தார்." (9—5)

என்பது பாடல்.

## கடிமணப் படலம்

### திருமண நீராட்டு

உலகியலில் நாட்டு மக்கள், திருமணத்தின்போது மணமகனை, பல இடத்து நீர் கலந்த தண்ணீரால் முழுக் காட்டாவிடினும், 'அறுபதாம் கல்யாணம்' என்று பெயர் வழங்கப் பெறும் 'அறுபது ஆண்டு நிறைவு மணி விழாவின் போது, கங்கை—காவிரி முதலிய பல ஆற்று நீர்களும் கடல் நீரும் கலந்த தண்ணீரால் கிழ மணமக்களை முழுக்காட்டும் மரபு உண்டு. இராமன் மன்னன் மகன் அல்லவா? ஏழு கடல்களிலிருந்தும் கங்கை முதலிய ஆறு களிலிருந்தும் கொண்டு வந்து கலந்த மங்கல நீரால், மணமகன் இராமனை முழுக்காட்டினர்.

"சங்கினம் தவழ் கடல் ஏழில் தந்தவும்
சிங்கலில் அருமறை தெரிந்த தீர்த்தங்கள்
கங்கையே முதலவும் கலநத நீரினால்
மங்கல மஞ்சனம் மரபின் ஆடியே" (48)

### அம்மி மிதித்தல்

வைதிகச் சடங்குத் திருமணங்களில் அம்மி மிதித்தலும் அருந்ததி காணலும் நிகழும். இங்கும் அவை நிகழ்ந்தனவாம்.

''இலங்கொளி அம்மி மிதித்து எதிர்நின்ற
கலங்கலில் கற்பின் அருந்ததி கண்டார்'' (91)

என்பது பாடல் பகுதி.

## பரசுராமப் படலம்

### தினவு தீர்த்தல்

இராமன் அனைவரும் புடைசூழத் திருமணக் கோலத்துடன் மிதிலையிலிருந்து அயோத்திக்குச் சென்றான். வழியில், தயரதனது குலப்பகைவனாகிய பரசுராமன் இராமனை இடை மறித்து, நீ மிதிலையில் ஒடித்த வில்லின் நிலையை யான் அறிவேன். இப்போது உனது வலிமையை அறிய விரும்புகிறேன். என் தோள்கள் தினவு கொண்டுள்ளன. உன்னோடு பொருது தினவு தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காகவே வந்துள்ளேன்—என்றான்.

''இற்றோடிய சிலையின் திறம் அறிவேன் இனியான் உன்
பொற்றோள் வலிநிலை சோதனை புரிவான் நசை
உடையேன்
செற்றோடிய திரள்தோள் உறுதினவும் சிறிதுடையேன்
மற்றோர் பொருளிலை இங்கிது என் வரவு
என்றனன் உரவோன்'' (18)

'தினவு தீர்த்தல்' என்ற வழக்காறு உலகியலில் உண்டு. 'முதுகு ஊருகிறதா? தினவு தீர்க்க வேண்டுமா? (உதை வேண்டுமா)—என்று கேட்பதும் உண்டு.

இவ்வாறாக, கம்பர் உலகியல் நடைமுறைகள் பலவற்றைத் தம் நூலில் தந்து கற்போர் உள்ளம் களிக்கச் செய்துள்ளார். கல்வியறிவோடு பட்டறிவும் இருந்தாலேயே அறிவு முழுமை பெற்றதாகும். இதை அடுத்துப் புதுமைக் கனிகள் சிலவற்றைச் சுவைக்கலாம்.

# 4. கருத்து வெளியீட்டில் புதுமை

கருத்தை வெளியிடுவதில் புதுமை இருக்க வேண்டும். பசு பால் தரும். பால் வெள்ளையாயிருக்கும் என்றால் இதில் புதுமை வெளியீட்டுப் பங்கு இல்லை. கறுப்பு—சிவப்பு மாடுகளின் பாலும் வெண்மையா யிருக்கும். தண்ணீர் மிகுதியாய் ஊற்றினாலும் பால் வெண்மையா யிருக்கும்-என்றாவது எழுதினால் ஒரு சிறிது புதுமை தெரியும். இது கூடப் போதாது. பசு பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பால் தருகிறது என்று எழுதினால் இன்னும் சுவையாயிருக்கும்.

> ''பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பால்தர நீ என்ன
> பக்குவம் செய்வாய் அதனைப் பகருவையோ பசுவே'
>
> (மலரும் மாலையும்—பசு)

என்னும் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் கருத்து வெளியீடு மிக்க சுவையாயுள்ளதல்லவா? இனி, கம்பரின் புதுமைக் கருத்து வெளியீட்டுக் கனிகள் சிலவற்றைப் பால காண்டத்திலிருந்து காண்பாம்.

### நாட்டுப் படலம்

**இல்லாதவை :**

கோசல நாட்டில் உள்ள மக்களுக்கு எமனைப் பற்றிய அச்சமே இல்லையாம். அவர்தம் உள்ளத்தில் சினமே எழாதாம். அங்கே உயர்வே அன்றி இழிவு கிடையாதாம். இவற்றைச் சொல்ல வந்த கம்பர், சுவை கூட்டிச் சொல்

கிறார். அதாவது:—அந்நாட்டு மக்கள் எந்தத் தீமையும் (பாவமும்) செய்யாததால் எமனுக்கு அங்கு வேலை யில்லை. அவர்தம் உள்ளம் செம்மை உடையதாதலின் சினமே எழாது. அவர்கள் அறச்செயல்கள் அன்றி மறச் செயல்கள் புரிவது இல்லையாதலால், அங்கே இழிதகைமையே இல்லை; புகழான மேன்மையே உள்ளது. பாடல்:

**''கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்**
**சீற்றம் இல்லை தம் சிந்தையின் செம்மையால்**
**ஆற்றல் நல்லறம் அல்லது இலாமையால்**
**ஏற்றம் அல்லது இழிதகவு இல்லையே. (39)**

மேலும், அந்நாட்டில் யாரும் நன்னெறியைக் கடப்பது (மீறுவது) இல்லையாம். ஒருவரும் நல்ல குறிக்கோளிலிருந்து பிறழ்வது இல்லையாம். அங்கே சிறுமை (அற்பம்) என்பதே கிடையாதாம். வெறித்தனமும் ஆண்டு இல்லையாம். இந்தக் கருத்துகளைக் கம்பர் பின்வருமாறு சுவை படக்கூறுகிறார். அந்நாட்டில், ஆற்று வெள்ளம் தவிர வேறு யாரும் நெறி கடப்பதில்லை. குங்குமச் சாந்து அணிந்த தோள்களில் எழுதிய (தொய்யில்) குறி அழிவதைத் தவிர வேறு குறி (குறிக்கோள்) அழிவதில்லை. பெண்களின் இடுப்புகள் சிறுமை (ஒடுக்கம்) உடையனவே தவிர, வேறு சிறுமை (அற்பம்) ஆங்கு கிடையாது. பெண்களின் மலர் சூடிய கூந்தலே வெறி (மணம்) உடையதே யன்றி, வேறு எவரும் வெறிச் செயல் புரியார். பாடல்:

**''நெறி கடந்து பரந்தன நீத்தமே**
**குறி அழிந்தன குங்குமத் தோள்களே**
**சிறிய மங்கையர் தேயும மருங்குலே**
**வெறியவும் அவர் மென்மலர்க் கூந்தலே'' (40)**

**நகுவன :**

மங்கையரின் விழிகள் விதியை நோக்கியும், அவர்தம் ஏடை பெண் யானையின் நடையினையும், மார்பகங்கள்

தாமரை மொட்டையும், முகம் திங்களையும் நோக்கி எள்ளி நகையாடுகின்றனவாம். மடந்தையரின் உறுப்புகள் அவற்றிற்கு ஒப்புமையாகச் சொல்லப்படும் சிறந்த பொருள் களினும் சிறந்துள்ளன என்பது புதுமைக் கருத்து. பாடல்:

> ''விதியினை நகுவன அயில் விழி; பிடியின்
> கதியினை நகுவன அவர் நடை; கமலப்
> பொதியினை நகுவன புணர் முலை; கலைவாள்
> மதியினை நகுவன வனிதையர் வதனம்'' (44)

பிரமன், காசிபன் ஆகியோர்க்கு விதி என்னும் பெயர் உண்டு. பரிபாடல் நூலின் மூன்றாம் பாடலில் உள்ள ''திதியின் சிறாரும் விதியின் மக்களும்'' என்னும் பகுதி யில், விதி என்பதற்குக் காசிபன் என்று பரிமேலழகர் பொருள் கூறியுள்ளார். பிரமன் திலோத்தமையின் விழியைக் கண்டும், காசிபன் மாயையின் விழியைக் கண்டும் மயங்கினார்களாம் இங்கே உள்ள பெண்களின் விழிகளும் அவர்களின் எளிமையை எண்ணி நகுகின்றனவாம். வளர்ந்தும் தேய்ந்தும் குறைபடுகின்ற திங்களைக் கண்டு என்றும் தேயாத முகங்கள் நகுகின்றனவாம்.

உவமை மாற்றம் :

சோலை முகிலையும், நெல் போர் பொன்மலையையும், ஆற்று அணைநீர் கடலையும், கோசல நாட்டு ஊர்கள் தேவர் உலகையும் ஒத்துள்ளன என்று சொல்வதற்குப் பதிலாக, பொன்மலை நெல்போரையும், கடல் அணைநீரை யும், தேவர் உலகம் கோசல நாட்டு ஊர்களையும் ஒத்திருப்பதாகக் கம்பர் உவமை மாற்றம் செய்துள்ளார். பாடல் :

> ''காரொடு நிகர்வன கடிபொழில், கழனிப்
> போரொடு நிகர்வன பொலன்வரை; அணைசூழ்
> நீரொடு நிகர்வன நிறைகடல்; நிதிசால்
> ஊரொடு நிகர்வன இமையவர் உலகம்'' (46)

**இன்மையால் இல்லை:**

கோசல நாட்டு மக்களிடம் வள்ளல் பண்பும், வலிமையும், உண்மையும், ஒன்றும் அறியாத வெள்ளைத் தன்மையும் இல்லையாம் என்று கூற வந்த கம்பர் அதற்குக் காரணமும் கூறுகிறார். எவரிடமும் வறுமை என்பதே சிறிதும் இல்லாமையால், ஒருவர் மற்றொருவர்க்கு உதவுவதான வள்ளல் பண்புக்கே அங்கு இடமில்லை. பகைவரே இல்லாமையால் (பகைவர் அஞ்சுவதால்) வலிமைக்கே—வீரச் செயலுக்கே வாய்ப்பில்லை. எவரும் பொய்யே பேசாமையால், உண்மை என்ற ஒரு பண்பு இருப்பதாக அறியப்படவில்லை. பல்வகைக் கல்வி கேள்வி அறிவைப் பெற்றிருப்பதால், மக்களின் அறிவுடைமையில் வெறுமைக் கூறே இல்லை. பாடல் :

**''வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர்செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய்யுரை இலாமையால்
ஒண்மை இல்லை பல கேள்வி ஓங்கலால்''** (53)

பின்னால் நகரப் படலத்திலும் இது போன்றதொரு கருத்தைக் கம்பர் கூறியுள்ளார். வனவசை மாநகரில் திருடர்கள் இல்லாததால் எந்தப் பொருளுக்கும் காவல் வேண்டியதில்லையாம்; கொள்பவர்கள் இல்லாமையால் கொடுப்பவர்களும் இல்லையாம். (பிரபுலிங்கலீலை)

சோவியத் (ரஷ்ய) நாட்டிலும், அரபுநாடுகள் சிலவற்றிலும் போட்டபொருள் போட்ட இடத்தில் கிடக்குமாம். களவு போகாதாம். இதுபற்றிக் கம்பர் பல நூற்றாண்டுகட்கு முன்பே கனவு கண்டுள்ளார்.

'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்'' என்பது போன்றதொரு கருத்து, சிவப்பிரகாச அடிகளார் இயற்றிய பிரபுலிங்கலீலை என்னும் நூலிலும் மாயையின் உற்பத்தி கதி என்னும் பகுதியில் உள்ளது. வனவசை மாநகரில் உடை, உணவு, மலர், அணிகலன், உறைவிடம்

(மனை) முதலியவற்றால் குறை ஏதும் இல்லையாம்; கொடுப்பவருக்குக் கொள்வோர் இல்லாத குறை ஒன்று தான் உள்ளதாம். பாடல் :

**''உடுப் போர்க்கு உடுக்கும் துகில்களால்**
**உண்போர்க்கு உண்ணும் பொருள்களால்**
**தொடுப்போர்க்கு எடுக்கும் மலர்களால்**
**அணிவோர்க்கு அணியும் சுடரிழையால்**
**அடுப்போர்க்கு அடுக்கும் மனைகளால்**
**குறைபாடு உடையதன்று அதுதான்**
**கொடுப்போர்க்கு இரப்போர் இல்லாத**
**குறை ஒன்றுளது கூறுங்கால்''** (16)

இவ்வாறு கம்பரும் சிவப்பிரகாசரும் அறிவித்திருப்பது உண்மையா? இல்லை - உண்மை இல்லை— கற்பனைக் கருத்தே. கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தது— கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தது; ஈ என இரத்தல் இழிந்தது—ஈயேன் என்றல் அதனினும் இழிந்தது- என்றெல்லாம் தமிழ் இலக்கியங்கள் கூறத் தவறவில்லை. இதற்கு அமைதி யாது?

உள்ளதை உள்ளவாறு—நடந்ததை நடந்தவாறு கூறுவது வரலாறு. இருப்பதைக் கொண்டு இருக்க வேண்டியதையும், நடந்ததைக் கொண்டு நடக்க வேண்டியதையும் பரிந்துரைப்பது இலக்கியம். எனவே தான், பிறரிடம் கையேந்தும்படி நாட்டில் வறுமை, பகை, பொய், அறியாமை முதலியன இருத்தல் கூடாது; வளமையும் அமைதியும், உண்மையும் கல்வி கேள்வியறிவும் இருத்தல் வேண்டும் — என்பதை அறிவுறுத்தவே— வற்புறுத்தவே இவ்வாறு புதுமைச் சுவையுடன் கருத்து கூறியுள்ளனர் கம்பர் முதலானோர்.

**பல கால்கள் :**

கோசல நாடு மிகவும் பரந்து பட்டது. அதன் எல்லையை யாராலும் காலால் நடந்து அறிய முடியாது.

அந்நாட்டிலுள்ள சரயு ஆறு நாடு முழுதும் பல கால்களால் (கால்வாய்களால்) ஓடியும் நாட்டின் பரப்பை அறிய முடியவில்லையாம்.

''சோலை மாநிலம் துருவி யாவரே
வேலை கண்டுதாம் மீள வல்லவர்
சாலும் வார்புனல் சரயுவும் பல
காலின் ஓடியும் கண்டது இல்லையே'' (60)

கோசல நாடு மிகப் பெரிய நாடு என்பதைக் கம்பர் இவ்வாறு புதுமுறையில் அறிவித்துள்ளார். சரயு ஆறு பல கால்களால் ஓடியும் காண முடியாத எல்லையை, இரு கால்கள் மட்டும் உடைய மக்கள் எவ்வாறு காண முடியும்?- முடியாது. வேலை = எல்லை, சாலும் = மிகுந்த.

## அரசியல் படலம்

**கரு வெளுப்பு:**

தயரதனின் மனைவியர் மூவரும் கருவுற்றனர்; மசக்கை நோயால் தொல்லைப் பட்டனர்; உடல் வெளுத்தனர். மசக்கையும் உடல் வெளுப்பும் கருவுற்றார்க்கு உண்டாதல் இயல்பு. இங்கே, உடல் வெளுப்பைக் கம்பர் ஒரு புது முறையால் அறிவித்துள்ளார். அதாவது, பெண்களின் முகத்திற்குத் திங்களை உவமிப்பது மரபு. இவர்கட்கு முகம் திங்கள் போல் இருப்பதன்றி, உடம்பும் வெண்திங்கள்போல் வெளுத்திருந்ததாம். திங்களின் நிறம் வெண்மை என்பது இலக்கியமரபு.

''தெரிவையர் மூவரும் சிறிது நாள் செலீஇ
மருவிய வயாவொடு வருத்தம் துய்த்தபின்
பொருவரு திருமுகம் அன்றிப் பொற்புநீடு
உருவமும் மதியமோடு ஒப்பத் தோன்றினார்'' (98)

வயா = மசக்கை நோய். பொற்பு = அழகு.

**ஆறு நிறைத்த கடல்:**

தயரதனின் மக்கள் நால்வருக்கும் வசிட்ட முனிவர் பெயர் சூட்டியபின், பெயர் சூட்டு விழாவின் ஓர்

உறுப்பாகத் தயரதன் அந்தணர்கட்குப் பெரிய அளவில் தானம் செய்தானாம். தானம் வழங்கும்போது செல்வப் பொருளுடன் தண்ணீரும் (தாரையும்) வார்ப்பது உண்டு. மன்னன் மிகுந்த பொருள்களுடன் வார்த்த நீர் ஆறுபோல் பெருகிற்றாம். அதனால் அந்தணர்களின் அவாக் கடல் நிறைந்ததாம். அந்தணர்களின் ஆசைக்கு அளவில்லை என்பது உவரி (கடல்) என்னும் சொல்லால் குறிப்பிடப் பட்டுள்ளது. அந்தக் கடலை நிறைக்கும் ஆறாகத் தயரதன் பொருள்களுடன் வார்க்கும் தண்ணீர் குறிப்பிடப் பட்டுள்ளது.

"பொய் வழிஇல் முனி புகல்தரு மறையால்
இவ்வழி பெயர்கள் இசைத்துழி, இறைவன்
கைவழி நிதிஎனும் நதி கலை மறையோர்
மெய்வழி உவரி நிறைத்தன மேன்மேல்" (119)

நிதி எனும் நதி = தண்ணீருடன் கூடிய செல்வப் பொருள்களாகிய ஆறு. மெய்வழி உவரி = அந்தணர்களின் உடம்பு முழுவதும் பொருள்கள் நிறைக்கப்பட்டன; ஆதலின், அவர்களின் ஆசை, மெய்வழி உவரி (கடல்) எனப்பட்டது.

## மிதிலைக் காட்சிப் படலம்

அணிகலன்கள், சீதை பிறப்பதற்கு முன்பே, பெண்கள் பலரால் அணியப்பட்டு அவர்கட்கு அழகு செய்து பழகியிருப்பினும், சீதையால் அணியப்பட்ட பின்பு அவ்வணிகலன்கள் தனியழகு பெற்றனவாம். சீதை மற்ற மடந்தையரினும் மிக்க அழகுடையாள் என்பதைக் கம்பர் இவ்வாறு சிறப்பித்துள்ளார் பாடல்:

"இழைகளும் குழைகளும் இன்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகிய எனினும் இப்பாவை தோன்றலால்
அழகு எனும் அணியும் ஓர் அழகு பெற்றதே" (34)

அழகு என்னும் பண்பும் மேலும் புதுமை பெற்றதாகவும் கூறலாம்.

**அண்ணலும் அவளும்:**

கம்பர் ஒரு காதல் காட்சியைப் படம் பிடித்துக் காண்பித்துள்ளார். சீதை மாளிகையின் மேல் தளத்தில் தோழியருடன் நின்றுகொண்டிருக்கிறாள். அந்த மாளிகைத் தெருவில் இராமன் விசுவாமித்திரருடனும் இலக்குவனுடனும் சென்று கொண்டிருக்கிறான்.

தற்செயலாக அண்ணலும் அவளும் (இராமனும் சீதையும்) ஒருவரை ஒருவர் நோக்கிக் கொள்கின்றனர். நோக்கம் ஆரம்பக் கட்டத்திலிருந்து ஆழ்ந்த கட்டத்திற்குப் போய்விட்டது. சீதையின் இரு கண்களாகிய இரு வேல்கள், இராமனின் தோள்களில் ஆழ்ந்து பதிந்தன. இராமனின் கண்களோ சீதையின் மார்பகத்தில் தைத்துக் கொண்டன.

**கயிறு இழுப்புப் போட்டி :**

கயிறு இழுப்புப் போட்டியில் இருவர் எதிர் எதிராக இரு பக்கங்களில் நின்று கொண்டு கயிற்றை இழுப்பர். ஒத்த வலிமையினராயின், அவரவரும் அவரவர் இடத்தி லேயே இருப்பர். ஒருவன் மற்றவனினும் மெலியனாயின் அவன் வலியவன் பக்கம் இழுக்கப்பட்டுவிடுவான். இதுதான் இயற்கை நிலை. ஆனால் சீதையும் இராமனும் ஒரு புதுவகைக் கயிறு இழுப்புப் போட்டி நடத்தினர். இருவரும் நோக்கு என்னும் கயிற்றால் உள்ளம் என்னும் கை கொண்டு ஒருவரை ஒருவர் இழுத்தனர். ஆனால், இயற்கைக்கு மாறாக, இருவருமே ஒருவரிடத்தை மற்றவர் அடைந்தனர். அதாவது, சீதையின் இதயத்தை இராமனும் இராமனின் இதயத்தைச் சீதையும் மாறி அடைந்தனர். முதல் காட்சியிலேயே முற்றிய நிலைக்குச் சூழ்நிலை நேர்ந்து விட்டது.

**திருக்குறள் காதலர்கள் :**

திருவள்ளுவர் ஒரு காதல் காட்சியை மிகவும் நாகரிகமாகப் படைத்துக் காட்டியுள்ளார். காதலன் நோக்கும் போது காதலி பார்க்காதது போல் தலைகுனிந்து தரையைப் பார்க்கிறாளாம். காதலன் பார்க்காதபோது காதலி புன்முறுவலுடன் நிமிர்ந்து அவனைப் பார்க்கின்றாளாம்' இரவில் பேருந்துகள் (பஸ்கள்) எதிர் எதிராக இயங்கும்போது, ஒரு வண்டி இயக்குநர் விளக்குப் போட்டால் எதிர் வண்டியினர் விளக்கை நிறுத்தி விடுவார். அவர் விளக்குப் போட்டால் இவர் நிறுத்தி விடுவார். இது போன்றல்லவா இந்தக் காதலர்களின் காட்சி இருக்கிறது!

> **''யான் நோக்குங் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்**
> **தான் நோக்கி மெல்ல நகும்''** (1094) என்பது குறள்.

**புதுமுகமும் பழமுகமும் :**

திருவள்ளுவர் காதலர்களின் நோக்கை இவ்வளவு நாகரிகமாகக் கூறியிருக்க, கம்பரோ மிகவும் பச்சையாகக் கூறியிருக்கிறார், இதற்குத் தக்க காரணம் உள்ளது. திருவள்ளுவரின் காதலர்கள் புதுமுகங்கள். கம்பரின் காதலர்களோ மிகவும் பழைய முகங்கள்—

> **''கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்**
> **பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?''**

என்று கம்பர் பாடி இராமன்—சீதை காதலை நாகரிகப் படுத்திக் காட்டியுள்ளார். இருவரும் இரண்டு உடல்கட்கு ஓர் உயிர் ஆயினர்.

திருவள்ளுவரின் காதலர்களோ ஒருவர் பார்க்குங்கால் மற்றொருவர் பார்க்கவில்லை. கம்பரின் காதலர்களோ, ஒரே நேரத்தில் ஒருவரை ஒருவர் நோக்கிக்கொள்கின்றனர். இருவர் கண்களும் ஒன்றை ஒன்று கவ்வி உண்ணப் பார்க்கின்றனவாம். நோக்கின் வாயிலாக நிலை தடுமாறி

இருவர் உள்ளமும் ஒன்றும்படியாக இராமனும் நோக்கி னானாம்— அதே நேரத்தில் சீதையும் நோக்கினாளாம். இனி, இச்செய்திகள் அடங்கிய செய்யுள்களைக் காண்போம்:

“எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண்இணை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்” (35)

“நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேல் இணை
ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே? (36)

“பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாள்கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்” (37)

மருங்கிலா நங்கையும் வசைஇல் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற்கு உயிர் ஒன்று ஆயினர்
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ!” (38)

**நிகழ்வது தழீஇய எச்ச உம்மை:**

“அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்” என்னும் கம்பரின் பாடல் பகுதியைக் கொண்டு, ஒரு புது இலக்கணக் குறிப்பு படைக்க வாய்ப்பு உள்ளது. இதற்கு, எச்ச உம்மைகளைப் பற்றி முதலில் ஆய்வு செய்தல் வேண்டும்.

முன்பெல்லாம் கூட்டங்களில் பேச்சாளர்களே யன்றித் தலைவர் ஒருவர் இருப்பார். இப்போது ‘முன்னிலை வகிப்பவர்’ என ஒருவர் முளைத்துக் கொண்டுள்ளார். மற்றும், வாழ்த்துரையாளர் ஒருவரும் வரவழைக்கப்

படுகிறார். இம்மூவருள் முதலில் முன்னிலையாளர் வந்து விட்டார். முதனமையாகத் தலைவரை எதிர்நோக்கி யுள்ளனர். தலைவரும் வந்து விட்டார் உடனே கழகத் தார்கள் 'தலைவரும் வந்து விட்டார்' எனக் கூறுகின்றனர். இங்கே 'தலைவரும்' என்பதில் உள்ள 'உம்', முன்னால் நடந்து விட்ட (இறந்து விட்ட) முன்னிலையாளர் வந்ததைத் தழுவுகிறது. எனவே, தலைவரும் என்பதில் உள்ள 'உம்', 'இறந்தது தழீஇய (தழுவிய) எச்ச உம்மை' எனப்படுகிறது (உம்மை = உம்).

வாழ்த்துரையாளர் வராத நிலையில், தலைவர் வந்து விட்டாராயின், 'தலைவரும் வந்து விட்டார்' என்று கூறின், தலைவரும் என்பதில் உள்ள 'உம்', இன்னும் வாழ்த்துபவர் வரவில்லையே என, எதிர்காலத்தில் வர இருக்கிற வாழ்த்துநரைத் தழுவுவதால்' எதிரது தழீஇய எச்ச உம்மை எனப்படும். (உம்மை = உம்):

'தலைவரும் வந்து விட்டார்' என்பதில் உள்ள 'உம்' இரண்டையும் தழுவுவதாகவும் கூறலாம். அதாவது— முதலில் முன்னிலையாளர் வந்து விட்டார் என்ற இறந்த கால நிகழ்ச்சியையும், இன்னும் வாழ்த்துநர் வரவில்லை என்ற எதிர்கால நிகழ்ச்சியையும் தழுவுவதால், இந்த உம்மை, இறந்ததும் எதிரதும் தழீஇய எச்ச உம்மை என்றும் கூறலாம்.

இலக்கண உரையாசிரியர்கள், இறந்தது தழீஇய எச்ச உம்மை, எதிரது தழீஇய எச்ச உம்மை என்னும் இரண்டைத் தவிர, நிகழ்காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது தழீஇய எச்ச உம்மை என ஒன்று இருப்பதாக எங்கும் கூறவே இல்லை. அதை நாம் கண்டு பிடிக்கலாம்.

ஒரே நேரத்தில் முருகனும் கூவினான்— கண்ணனும் கூவினான் என்றால், முருகனும் கண்ணனும் என்பவற்றில்

உள்ள உம்மைகளை நிகழ்வது தழீஇய எச்ச உம்மைகள் எனலாம். இதற்கு இலக்கிய ஆட்சி ஒன்று காண்பாம்:

''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'' என்பதுதான் அந்த ஆட்சி. அண்ணலும் நோக்கினான் என்பதில் உள்ள உம்மை, சீதையும் நோக்கினாள் என்பதைத் தழுவுகிறது. அவளும் நோக்கினாள் என்பதில் உள்ள உம்மை, இராமனும் நோக்கினான் என்பதைத் தழுவுகிறது. இவ்விரண்டனுள் முன்னால் நடந்த இறந்தது எது?— பின்னால் நடந்த எதிரது எது? இல்லை— இறந்ததோ, எதிரதோ இல்லவே இல்லை. இரண்டும் ஒரே நேரத்தில் நடந்ததால், அண்ணலும் அவளும் என்ற உம்மைகள் நிகழ்வது தழீஇய எச்ச உம்மைகளாம்.

சிலர், 'இடமுன்— கால முன்' என்னும் 'கரடி' விட்டு இந்தக் கருத்தைக் குலைக்கப் பார்க்கலாம். இங்கே எந்த முன்னும் எந்தப் பின்னும் இல்லை. இரண்டும் ஒரே நேரத்தில் நடைபெற்றதால், இவற்றை நிகழ்வது தழீஇய எச்ச உம்மை எனக் கூசாது கூறலாம். இந்தப் புதுமையைக் கம்பர் பாடல் அறிவிக்கிறது.

**கண் வழிக் கள்வன்:**

சீதை இராமனைக் கண்டதால் காதல் வயப்பட்டு வருந்துகிறாள். என் பெண்மையையும் நாணையும் யான் காண்கிலேன். தெருவில் சென்ற அவன் என் கண்ணின் வழியாக என்னுள்புகுந்து அவற்றைத் திருடிக்கொண்டான். இவன் ஒரு புதுவகைக் கள்வனாவான்: பாடல்:

**''பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும்**
**எண்வழி உணர்வும் நான் எங்கும் காண்கிலேன்**
**மண்வழி நடந்து அடிவருந்தப் போனவன்**
**கண்வழி நுழையுமோர் கள்வனே கொலாம்''** (55)

**ஆறுதல் உரை:**

தமக்கு எதிரியாக இருக்கும் ஒருவரைத் தம் வழிக்குக் கொண்டு வர நான்கு வழிகளைக் கையாளுதல் உண்டு.

அவை: (1) ஆறுதல் உரை (சாமம்), கொடை (தானம்), பகைப் பேச்சு (பேதம்), ஒறுப்பு (தண்டம்) என்பன. தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியைத் திங்கள் வருத்துவதாகக் கூறல் இலக்கிய மரபு. அதனால், வருந்தும் தலைவி, திங்களை நோக்கிப் பழித்தும் தாக்கியும் மாறுபாடாகப் (பேதமாகப்) பேசுவதுண்டு. சிவப்பிரகாச அடிகளார் பிரபுலிங்க லீலை என்னும் நூலில் பிரபுதேவர் வந்தகதி என்னும் பகுதியில் மாறுபட்டுப் பேசுவதை மிகவும் நயமாகக் கூறியுள்ளார். அல்லமன் என்னும் காதலனை அடைய முடியாத மாயை என்னும் மங்கை திங்களை நோக்கிப் பின்வருமாறு பழிக்கிறாள்:—

''கடலிலே திருமகளுடன் பிறந்த திங்களே! நீ முழு உருவத்துடன் (பருவ நிலவாய்த்) தோன்றும் போது உன்னைப் பெற்ற தாயாகிய கடல் பொங்கி அலைமோதித் தலை சாய்கின்றது. நீ தோன்றினால், உன்னுடன் பிறந்த திருமகளின் இருக்கையாகிய தாமரை மலர் குவிந்துவிடச் செய்கிறாய். தேய்கின்ற திங்களே! தாயையும் தமக்கையையும் இவ்வாறு வருத்தும் நீ, ஒரு தொடர்பும் இல்லாத என்னை என்ன செய்யமாட்டாய்?

தக்கன் வேள்வியில் நீ காலில் மிதிபட்டாய். சிவன் தலைமேல் ஏறிக்கொண்டு இறங்காமல் இருக்கலாம். நஞ்சை உனக்கு ஒப்புமையாக யாராயினும் கூறின் அது பொருந்தாது. நஞ்சினும் கொடியை நீ.

கழுத்தில் நஞ்சை வைத்த சிவன், உன்னை முடிமேல் வைத்துக் கொண்டது உனது கொடுமையைக் கருதியே. நின் நிலவொளியை அமிழ்த கலை என்று சிலர் கூறுவது காராட்டை வெள்ளாடு எனக் கூறுதல் போன்றதாம்! பாடல்கள்:

''தாய்வா யடைந்து மிகுந்தலையை மோதிச்சலித்தலறக்
காய்வாய் நிலவே உடன்பிறந்தாள் இருந்து வாழும்
கடிமனையை
நீ வான் எழுந்து வந்தழிப்பாய் என்றால் அந்தோ
நிலையின்றித்
தேய்வாய் நின்னோடு இயைபில்லா என்னை என்ன
செய்யாயோ? (57)

''தக்கன் மகத்தில் ஒருஞான்று தாளில் படுநீ தலையேறி
மிக்க முனிவர் மந்திரநீர் இறைப்ப இன்னும் மீண்டிலாய்
நக்கன் பவள வாய்ப்பட்டுக் களத்தே இறங்கு நஞ்சுநினை
ஒக்கும் என்பது அறியாமை அன்றோ ஒளிர்வெண்
மதியமே'' (58)

அங்கமதில் நஞ்சிருத்தினோன் அங்க மல்லா அவிர்சடைமேல்
தங்க நினைவைத் திட்டதுநின் கொடுமை கருதித்
தானன்றோ
பொங்கும் அமுத கலையென்ன நின்னைப் புகறல்
வெண்திங்காள்
இங்கு மனிதர் காராட்டை வெள்ளா டென்ப
தொக்குமால்'' (59)

இவ்வாறு பகை கொண்டு (பேதமாகப்) பேசுவதாகப் பிரபுலிங்கலீலை கூறுகிறது. ஆறுதல் உரையாகத் (சாமமாகத்) திருக்குற்றாலக் குறவஞ்சியில் கூறப் பட்டுள்ளது வருமாறு:

திருமகளாகிய பெண்ணுடனும், அமிழ்தத்துடனும் கடலில் தோன்றினாய். தண்ணளி இன்றிப் பெண்ணாகிய என்னைக் காயலாமோ? எனது சடையுடன் கூடிய கூந்தலை நின்னைப் பிடிக்க வரும் (கிரகணகால) நாகமாக எண்ண வேண்டா. தாமரையைக் குவியச் செய்த வெண்ணிலாவே! திருக்குற்றால நாதர் முன் போய் காய்வாயாக! பாடல்கள்:

''தண்ணளியுடன் பிறந்தாய் வெண்ணிலாவே அந்தத்
தண்ணளியை ஏன்மறந்தாய் வெண்ணிலாவே
பெண்ணுடன் பிறந்ததுண்டோ வெண்ணிலாவே என்றன்
பெண்மைகண்டும் காயலாமோ வெண்ணிலாவே
நாகமென்றே எண்ண வேண்டாம் வெண்ணிலாவே இது
வாகு குழல் பின்னல் கண்டாய் வெண்ணிலாவே
கோகனக வீறழித்தாய் வெண்ணிலாவே திரி
கூடலிங்கர் முன்போய்க் காய்வாய் வெண்ணிலாவே''
(23)

இலக்கிய ஒப்புமை காண்டல் என்ற முறையில் மேலே இரு நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளைக் கண்டோம். இவ்வாறு இன்னும் பல நூல்களில் காணலாம். இனிக் கம்பரிடம் வருவோம். இராமனை எண்ணி வருந்தும் சீதை திங்களை நோக்கி முதலில் வெறுப்பாய்ப் பேசிப் பின்னர் ஆறுதலாகப் பேசுகிறாள்.

இருள் என்னும் பெயருடன் வந்து உலகை விழுங்கி எனை வருத்தும் கரு நெருப்பினிடையே தோன்றி யெழுந்த வெள்ளை நெருப்பாகிய திங்களே! அவருடைய (இராமருடைய) கரு நிறத்திற்குத் தோற்று அலறிக் கொண்டிருக்கும் கடலை நீ தோன்றி அலைமோதச் செய்து வருத்துகிறாய்; என்னையும் வருத்துகிறாய்.

ஆனால், திங்களே! நீ கொடியை அல்லை. நீ அமிழ்தத்துடன் தோன்றியதால் யாரையும் கொல்லமாட்டாய். மற்றும் பெண்ணாகிய திருமகளோடு கடலில் தோன்றியதால் என்னைச் சுடுவாயா? மாட்டாய்—சுடாதே.

''நீங்கா மாயையவர் தமக்கு நிறமே தோற்றுப் புறமே போய்
ஏங்காக் கிடக்கும் எறிகடற்கும் எனக்கும் கொடியை
ஆனாயே
ஓங்கா நின்ற இருளாய் வந்து உலகை விழுங்கி
மென்மேலும்
வீங்கா நின்ற கரு நெருப்பி னிடையே எழுந்த
வெண் நெருப்பே'' (76)

இருள் கருமையா யிருந்தும் நெருப்பு போல் சுட்டு வருத்துகிறதாம். அதனிடையே திங்களாகிய வெள்ளை நெருப்பும் தோன்றி வருந்துகிறதாம்.

''கொடியை அல்லை நீ யாரையும் கொல்கிலாய்
வடு இல் இன் அமுதத்தோடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடு; என்றால் எனைச்
சுடுதியோ கடல் தோன்றிய திங்களே'' (77)

பிடியின் மென்னடைப் பெண்—பெண் யானை போல் நடக்கும் பெண்—அதாவது திருமகள்.

## கைக்கிளைப் படலம்

**கண்ணிலும் கருத்திலும் :**

சீதையைக்கண்ட நாள் இரவில், உறக்கம் கொள்ளாமல் அவளது உருவெளித் தோற்றத்தை எண்ணி இராமன் கலங்கிக் கூறுகிறான். விண்ணிலே தோன்றும் மின்னல் பெண் உருவம் கொண்டுவருமோ? ஈது அல்லாது வேறில்லை. அவ்வுருவை என் கண்ணுக்குள்ளும் கருத்துக்குள்ளும் காண்கிறேன்.. பாடல்:

''விண்ணின் நீங்கிய மின்உரு இம்முறை
பெண்ணின் நல்நலம் பெற்றது உண்டேகொலோ
எண்ணின் ஈதலது என்று அறியேன் இரு
கண்ணி னுள்ளும் கருத்துள்ளும் காண்பெனால்'' (3)

மின்னல் மின்னி மின்னி மறைவது போல், சீதையின் உருவம் தோன்றித் தோன்றி மறைகிறது. அவ்வுருவைப் புறக்கண்களாலும், அகக் கண்ணாலும் காண்கிறேன் என்கிறான். கருத்து—அகக் கண். இங்கே உளவியல் - அறிவியல் கருத்து ஒன்று அமைந்துள்ளது. கண் பார்க்கும் கருவியே தவிர, உண்மையில் பார்ப்பதுஉள்ளமே(கருத்தே). கருத்து வேறு எதையாவது எண்ணுங்கால், கண் மற்றொன்றை அறிய முடியாது. கண்ணோடு கருத்தும் ஒன்றினாலேயே எதையும் பார்த்து அறிய முடியும்.

மேலும் இராமன் மனம் கலங்கி எண்ணுகிறான். என்னை வருத்தும் அப்பெண் உருவம் எமனாய் இருக்குமோ? அதற்கு, மேகலை அணிந்த அல்குலும் இரண்டு கண்களும் இரண்டு நகில்களும் உயிரை உண்ணும் புன்னகையும் இருக்கின்றனவே. எனது உயிரை வாட்ட இவற்றுள் ஒன்று போதுமே! இத்தனை உறுப்புகள் வேண்டியதில்லையே!

**''வண்ண மேகலைத் தேர்ஒன்று, வாள் நெடுங்**
**கண்ணிரண்டு கதிர்முலை தாமிரண்டு**
**உண்ணவந்த நகையும் என்று ஒன்று உண்டால்**
**எண்ணும் கூற்றினுக்கு இத்தனை வேண்டுமோ?''** (7)

கரும்பு வில்லையுடைய மன்மதன் மலர் அம்பு மழையால், எதற்கும் தோற்காத வலிமை உடைய என்னையே வருத்துகிறான் எனில், வலிமை என்பது வேறு யாரிடந்தான் இருக்குமோ!

**''கன்னல் வார்சிலை கால்வளைத்தே மதன்**
**பொன்னை முன்னிய பூங்கணை மாரியால்**
**என்னை எய்து தொலைக்கும் என்றால் இனி**
**வன்மை என்னும இது ஆரிடை வைகுமோ?''** (8)

நஞ்சு கருநிறம் உடையதென்பர். பால் கடலின் வெள்ளம் (நீர்) போல் வெண்மையான ஒளி பரந்திருக்கும் திங்கள், என் உயிரைத் துருவி நஞ்சு போல் கொல்லப் பார்க்கிறது. வெண்ணிற நஞ்சும் உண்டு போலும்!

**''கொள்ளை கொள்ளக் கொதித்து எழு பாற்கடல்**
**பள்ள வெள்ளம் எனப் படரும் நிலா**
**உள்ள உள்ள உயிரைத் துருவுமால்**
**வெள்ளை வண்ண விடமும் உண்டாம் கொலோ''** (9)

கருநிற நஞ்சு போல் வெண்ணிறத் திங்கள் வருத்துவதால் வெள்ளை நஞ்சும் உண்டு போலும் என வியக்கின்றான்.

மேலும் இராமன் எண்ணுகிறான். நாம் கண்டு விரும்புகிற அந்தப் பெண் திருமணம் ஆனவளாக இருப்பாளோ! அங்ஙனமெனில் நமது எண்ணம் தீய தாயிற்றே. இல்லை இல்லை—என் மனம் நல்ல வழி அல்லாத தீய வழியில் என்றுமே சென்றதில்லை—செல்லக் கூடியதும் இல்லை. எனவே, அவள் மணமாகாத கன்னிப் பெண்ணாகத்தான் இருக்கக்கூடும். இதில் ஐயமே இல்லை:

**''ஏகும் நல்வழி அல்வழி என் மனம்**
**ஆகுமோ இதற்கு ஆகிய காரணம்**
**பாகுபோல் மொழிப் பைந்தொடி கன்னியே**
**ஆகும் வேறு இதற்கு ஐயுறவு இல்லையே!''**

இந்தப்பாடல்கள் உள்ள படலத்தின் பெயர் கைக்கிளை. இங்கே, கைக்கிளை என்றால், காதலனும் காதலியும் சொல்லாலோ உடலாலோ தொடர்பு கொள்வதற்கு முன், தனித் தனியே தாங்கள் எண்ணி உருகிக் கொண்டிருப்ப தாகும். இந்த அடிப்படையில்தான், சீதையும் இராமனும் தனித் தனியே இரங்கியுள்ளனர். இந்நேரத்தில், இன்பப் பொருள்களாகிய திங்கள், தென்றல், மன்மதனது செய்கை முதலியவற்றை வெறுத்தும் பழித்தும் பேசுவ தாகக் கூறுவது இலக்கிய மரபு.

**அல் ஆழிக்கரை காணல் :**

இராமன், திருமாலின் பிறவி. ஆயிரம் மணித் தலை உடைய ஆதிசேடனாகிய படுக்கையிலே—பால் கடலிலே இப்போது படுக்காமல், மிதிலையில் துன்பக் கடலிலே படுத்திருக்கிறான். ஆழிப்படையை (சக்கராயுதத்தை)விட்டு இப்போது வில் படையை வைத்துக் கொண்டுள்ளான் விடியல் காலையில், ஒற்றை ஆழித்தேருடைய ஞாயிறு தன் கதிராகிய கையால் இராமனது அடியைத் தடவித்துயில் எழுப்பினான். இராமன் இரவாகிய கடலின் கரையைக் காணலானான். பாட்டு :

''கொல் ஆழி நீத்து அங்கோர் குனிவயிரச்
சிலைத் தடக்கைக் கொண்ட கொண்டல்
எல் ஆழித் தேர் இரவி இளங் கரத்தால்
அடிவருடி அனந்தல் தீர்ப்ப,
அல் ஆழிக் கரை கண்டான்; ஆயிரவாய்
மணிவிளக்கம் அழலும் சேக்கைத்
தொல் ஆழித் துயிலாதே துயர் ஆழி
யிடைக் கிடந்து துயில்கின் றானே'' (17)

கொல் ஆழி = கொல்லும் சக்கரப்படை. அல் ஆழி = இரவாகிய கடல். தொல் ஆழி = பழைய பால் கடல். துயர் ஆழி = துன்பக் கடல். அனந்தல் = தூக்கம். இரவாகிய கடலின் கரையைக் காணுதல் = என்றால், பொழுது விடியத் துயில் எழுதல். ஞாயிறு புறப்பட்டுத் தூக்கத்திலிருந்து எழுப்பியதாக உலகியலில் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இங்கும் ஞாயிறு அவ்வாறு எழுப்பியதாகச் சொல்லப் பட்டுள்ளது.

## வரலாற்றுப் படலம்

**வில்லும் காண்பார் :**

சனகனது அரண்மனையில் விசுவாமித்திர முனிவருடன் இராமனும், இலக்குமணனும் சென்று அமர்ந்தனர். அவர்களை வரவேற்ற சனகன் முனிவரை நோக்கி, இவர்கள் யார் என்று வினவ, முனிவர் கூறலானார்: இவர்கள் விருந்தினர்; பேரரசனாகிய தயரதனின் பிள்ளைகள்; நீ புரியும் வேள்வியைக் காண வந்துள்ளனர்; உன்னிடம் இருக்கும் ஒடிக்க முடியாத வில்லையும் ஒரு கை பார்ப் பார்கள்—என்று கூறி, அவர்களின் வரலாற்றை அறிவிக்கலானார். பாடல் :

''இருந்த குலக் குமரர்தமை இருகண்ணும்
முகந்து அழகு பருக நோக்கி

''அருந் தவனை அடி வணங்கி, யார் இவர்கள்
உரைத்திடுமின் அடிகள் என்ன,
விருந்தினர்கள் நின்னுடைய வேள்விகாணிய
வந்தார் வில்லும் காண்பார்
பெருந்தகைமைத் தயரதன்தன் புதல்வர் என
அவர் தகைமை பேச லுற்றான்'' (2)

இந்தப் பாடலில், இரு கண்களாலும் அழகை மொண்டு பருகுவதாகக் கூறப்பட்டிருப்பது சுவையான பகுதி. அழகில் மிக்கவர்கள் அவர்கள் என்பது கருத்து. அடுத்து ''வேள்வி காணிய வந்தார் வில்லும் காண்பார்'' என்னும் பகுதி மிக்க நயம் செறிந்தது. வில்லை ஒடித்துச் சீதையை மனம்புரியும் ஆற்றல் உண்டு என்பதை முனிவர் குறிப்பாகவும் நயமாகவும் உணர்த்துகின்றார். 'ஒரு கை பார்ப்பார்' என்னும் உலக வழக்கு 'காண்பார்' என்னும் சொல்லில் மறைந்திருக்கிறது.

## கார்முகப் படலம்

### குணமும் அழகும்

ஒருவர்க்கு அழகு மட்டும் இருந்தால் போதாது. நல்ல குணங்களும் இருத்தல் வேண்டும். அழகு இல்லாவிடினும் நற்குணம் நிறைந்தவர் அழகராகப் போற்றப்படுவார். நற்குணங்கள் அனைத்தும் அழகுடன் சீதைபால் உள்ளனவாம். இதைக் கம்பர் புதுமையான முறையில் கூறுகின்றார். நற்குணங்கள் யாவும் சீதையிடம் தாம் சேர்ந்து பெருமை பெற ஒன்றோடொன்று போட்டியிடு கின்றனவாம். அழகு தவம் செய்து சீதையிடம் சேர்ந்த தாம். விண்ணிலிருந்து கங்கையாறு மண்ணில் வந்ததும் மற்ற ஆறுகள் பெருமை யிழந்தது போல், சீதை தோன்றியதும் மற்ற பெண்கள் பெருமை குறைந்தனராம். பாடல்:

''குணங்களை என் கூறுவது கொம்பினைச் சேர்ந்து
அவை உய்யப்
பிணங்குவன; அழகு இவளைத் தவம்செய்து பெற்றது
காண்;
கனங் குழையாள் எழுந்ததற்பின் கதிர் வானில்
கங்கை எனும்
அணங்கு இழியப் பொலிவிழந்த ஆறு ஒத்தார்
வேறுள்ளார் (18)

''எல்லா அழகும் குணத்திலே விட்டுப் பார்த்தால் தெரியும்'' என்று உலகியலில் கூறுவதுண்டு. இந்தப் பாடலிலும் அழகுடன் நற்குணங்களின் இன்றியமையாமை பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு உணரும் திறம் :**

விசுவாமித்திரரும் இராம இலக்குமணரும் அவையில் அமர்ந்திருந்தனர். இந்த வில்லை வளைத்து நாணேற்றியவர் சீதையை மணக்கலாம் எனச் சதானந்த முனிவர் விசுவாமித்திரரிடம் கூறினார். உடனே, விசுவாமித்திரர், தலையசைத்து நான் இராமனைத் தனியாக அழைத்துக் கொண்டு போய்ப் பேசவேண்டி (Consult) யுள்ளது என்று கூறி இராமனைத் தனியே அழைத்துச் சென்றாரா இல்லை. உலகியலில் இவ்வாறு நடப்பதுண்டானாலும் இங்கே இவ்வாறு நடை பெறவில்லை. அல்லது, விசுவாமித்திரர் இராமனை நோக்கி, ''தம்பீ, நீ வில்லை வளைத்து நாணேற்ற முடியுமா?—முடியாதா? என்று கேட்டாரா— இல்லை—அதுவும் இல்லை. பின் என்ன செய்தார்? இந்தச் செய்தியைத் தம் கண்களின் வழியாகக் குறிப்பாக இராமனுக்கு உணர்த்துவதற்காக இராமனை ஏறிட்டு நோக்குதல் மட்டுமே செய்தார். அவரது குறிப்பை இராமன் உணர்ந்து கொண்டான். அவர் உள்ளத்தில் நினைந்ததைத் தானும் தன் உள்ளத்தில் நினைந்து அந்தப் பெரிய வில்லை நோக்கினான். பாடல்:

"நினைந்த முனி பகர்ந்த எலாம் நெறி உன்னி அருந்தவனும்
புனைந்த சடைமுடி துளக்கிப் போரேற்றின் முகம் பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலும் அம்மாதவத் தோன்
நினைந்த எலாம் நினைந்து அந்த நெடுஞ்சிலையை நோக்கினான்" (25)

விசுவாமித்திரர் இராமனிடம் சொல்லியதாக வால்மீகி கூறியுள்ளார்.

**கண்டதும் கேட்டதும்:**

பொன்மலை போன்ற பெரிய வில்லை, சீதைக்கு இடும் மணமாலையைப் போல இராமன் எளிதில் கையால் எடுத்தான். இது மற்றவரால் அசைக்கவும் முடியாதது. இராமன் செயலை, ஆங்கிருந்தவர்கள், கண்ணை மூடி இமைக்காமல் திறந்த படியே பார்த்துக் கொண்டிருந்தனர். வில்லின் அடிமுனையை ஒரு காலால் மிதித்தபடி வளைத்து மறுமுனையில் நாண் ஏற்றினான். வில் முறிந்து வீழ்ந்தது. ஆங்கிருந்தவர்கள் கண் மூடி இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தும், இராமன் அடிமுனையை காலால் மிதித்து மறு முனையில் நாண் ஏற்றியதைக் காணவில்லை—அறிய வில்லை; வில்லை எடுத்ததைக் கண்டார்கள்; வில் முறிந்த ஒலியைக் கேட்டார்கள். அவ்வளவே! அதாவது, கணப் பொழுதில் எல்லாம் நடந்து விட்டன.

"ஆடக மால்வரை அன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதை எனும்பொன்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை இதுஎன்ன எடுத்தான்" (33)

"தடுத்து இமையாமல் இருந்தவர், தாளில்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்

கடுப்பினில் யாரும் அறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்'' (34)

யாராலும் அசைக்கவும் முடியாததும் பலர் கூடித் தூக்கிக் கொண்டு வந்து வைத்ததுமாகிய பெரிய வில்லை இராமன் மிக எளிதில் எடுத்து, திறந்த கண் மூடுவதற்கு முன்பே கணநேரத்தில் நாணேற்றி முறித்து விட்டான் என்பது மிக்க வியப்பே! ''எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்'' என்பதில் ஒரு கருத்து இயற்கையாக மறைந்து கிடக்கின்றது. ஆற்றின் ஒரு கரையில் இருப்பவர்கள், எதிர்க் கரையில் யாராவது துணி துவைப்பதைக் கவனிக்கும் போது, முதலில் துணியைக் கல்லில் அடித்தது கண்ணுக்குத் தெரியும்; சிறிது நேரம் கழித்தே, அடித்த ஒலி காதுக்குக் கேட்கும். விண்ணில் முகில்கள் ஒன்றோடொன்று மோதும் போது மின்னல் உண்டாகிறது.—இடியும் உண்டாகிறது. இரண்டும் ஒரே நேரத்தில் உண்டானாலும், ஒலியைவிட ஒளியின் விரைவு மிகுதியாதலின் மின்னல் முதலில் நம் கண்கட்குத் தெரிகிறது. சிறிது நேரம் கழித்த பின்னரே இடி ஒலி நமக்குக் கேட்கிறது. முதலில் காட்சியும் பின்னர்க் கேள்வியும் நிகழும் என்னும் இந்தக் குறிப்பு. ''எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்'' என்பதில் மறைந்து கிடப்பதுபோல் தோன்றுகிறது. கண்மூடிக் கண்திறப்ப தற்குள் எல்லாம் நடந்து விட்டன என்னும் உலகியல் பேச்சு வழக்கு ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

**ஆவலைத் தூண்டுதல்:**

இராமன் வில் ஒடித்த நற்செய்தியைத் தெரிவிக்க நீலமாலை என்னும் தோழி சீதைபால் ஓடினாள்; சீதையை வணங்கினாள், மகிழ்ச்சியுடன் ஆடிப் பாடினாள். இதைக் கண்ட சீதை, அவளை நோக்கி, உன் மகிழ்ச்சிக்குக் காரணமான செய்தியை விரைவில் சொல்என்று கேட்டாள். நீலமாலை சொல்லத் தொடங்கினாள்:

நால்வகைப் படையைக் கடல்போல் மிகுதியாக உடைய வன்; கல்வியில் சிறந்தவன்; தயரதன் எனும் பெயரன்; முகில் போல் வழங்கும் கையன். அவனுடைய மகன் மன்மதனினும் அழகுடையவன்.

''கயரத துரக மாக் கடலன் கல்வியன்
தயரதன் எனும் பெயர்த் தனிச்செல் நேமியான்
புயல் பொழி தடக்கையான் புதல்வன் பூங்கணை
மயல்விளை மதனற்கும் வடிவு மேன்மையான்'' (58)

இராமன் வில்லை முறித்தான் எனமூன்று சொற்களில் செய்தியைச் சொல்லிவிட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு சொல்லாமல், நீலமாலை சீதையின் ஆவலைத் தூண்டி மேலும் வளர்த்துகிறாள்.

மராமரம் போன்ற திண்ணிய தோளினன்;அரவணைத் திருமாலோ என ஐயுறும் ஆற்றலன்; இராமன் என்பது அவன் பெயர். அவன் தம்பியோடும் முனிவரோடும் மிதிலைக்கு வந்தான்.

''மராமரம் இவைஎன வளர்ந்த தோளினான்
அரா அணை அமலன் என்று அயிர்க்கும் ஆற்றலான்
இராமன் என்பது பெயர்; இளைய கோவொடும்
பராவரு முனியொடும் பதி வந்து எய்தினான்'' (59)

ஓர் ஆண்மகன் மற்றோர் இளைஞனுடனும் முனிவர் ஒருவருடனும் ஊருக்குள் வந்தான் என்று சொல்வதன் வாயிலாக,சீதை தெருவில் கண்ட காட்சியை நினைவுறுத்தி மேலும் ஆவலைத் தூண்டுகிறாள். சிவனிடமிருந்து வந்த அந்த வில்லைக் காண வந்தவன், நாணேற்றினான். விண்ணுலகமே அதிர்ந்தது.

''பூண் இயல் மொய்ம்பினன் புனிதன் எய்தவில்
காணிய வந்தனன் என்ன, காவலன்
ஆணையின் அடைந்த வில் அதனை ஆண்தகை
நாண் இனிது ஏற்றினான்; நடுங்கிற்று உம்பரே'' (60)

வில்லை நாண் ஏற்றினான் என்றால் போதுமா? அதனை வளைத்து முறித்தானா என்பது தெரிய வேண்டுமே. மேலும் கூறுகிறாள். ஒரு நொடி நேரத்தில் வில்லை எடுத்தான்; இதற்கு முன்பே எடுத்துப் பழகிய ஒரு பொறி போல நாணேற்றி வளைத்து முறித்தான்:

**''மாத்திரை அளவில் தான் மடுத்து முன்பயில்**
**சூத்திரம் இது எனத் தோளின் வாங்கினான்**
**ஏத்தினார் இமையவர், இழிந்த பூமழை**
**வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்ததே''** **(61)**

தேவர்கள் பூமாரி பொழிந்தனராம். வில் இற்ற ஒலி கேட்டு அவையே நடுங்கிற்றாம். ஒரு தொடரில் சொல்ல வேண்டிய செய்தியை, சீதையின் ஆவலைத் தூண்டும் முறையில் பல தொடர்களில் கூறியதாக அமைந்துள்ள சுவையான இந்தப் பகுதி ஒரு கம்ப சூத்திரமோ?

## ஆசிரிய இராமாயணம்

சீதையின் ஆவலைத் தோழி தூண்டும் இந்தப் பகுதி வால்மீகி இராமாயணத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இது கம்பரின் சுவையான சொந்தப் படைப்பாகவே தோன்றுகிறது. கம்ப இராமாயணம் விருத்தப் பாவால் ஆனது. ''விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்'' எனக் கம்பர் சிறப்பிக்கப் பெற்றுள்ளார். தமிழில் ஆசிரியப் பாவால் ஆன இராம காதை ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. தொல்காப்பியம் – பொருளதிகாரம்—அகத் திணையியலில் உள்ள

''மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்'' (54)

என்னும் நூற்பாவின் உரையில், சுட்டி ஒருவர் பெயர் கொண்ட கைக்கிளைக்கு எடுத்துக்காட்டாக, நச்சினார்க் கினியர் ஆசிரிய இராமாயணப் பாடல் ஒன்றைத் தந்துள்ளார். அதன் கருத்தாவது:-

விசுவாமித்திர முனிவர் காட்டில் தமது வேள்வியைக் காப்பாற்றிய இராமனோடு மிதிலைக்குச் சென்றிருந்த போது இராமன் சனகனதுவில்லை நாணேற்றி முறித்தான். முதலிலேயே இராமனைக் கண்டு அவனிடம் தன் உள்ளத்தைச் செலுத்திய சீதை, மிக்க விசையுடன் நாணேற்றி வில்லை ஒடித்த இடி போன்ற ஒலியைக் கேட்டு, இடியேறுண்ட பாம்புபோல் வாட்டம் எய்திப் படுக்கையி லிருந்து எழுந்து, வில்லை ஒடித்தவர் நாம் முன்பு கண்ட இளைஞராக (இராமனாக) இருப்பாரோ—அல்லது வேறு யாராகவாவது இருப்பாரோ என்று மயங்கினாள். பாடல்:

"ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய இராம னவனொடு
மிதிலை மூதூர் எய்திய ஞான்றை
மதியுடம் பட்ட மலர்க்கண் சீதை
கடுவிசை வில்ஞாண் இடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்டம் எய்தித்
துயிலெழுந்து மயங்கினள் அதாஅன்று மயிலென
மகிழ்.. ......" —(புறத்திரட்டு)

என்பது பாடல் பகுதி. இந்தப் பாடலும் முழுமையாகத் தரப்படவில்லை. நீலமாலை என்னும் தோழி சீதையின் ஆவலைத் தூண்டிப் பின்னர் இராமன் வில் ஒடித்த செய்தியைச் சீதைக்குத் தெரிவித்ததாகக் கம்பர் பாடியுள்ளார். இந்த ஆசிரியப் பாடலோ, வில் ஒடித்த ஒலியைச் சீதைதானே கேட்டதாகத் தெரிவிக்கிறது. இவ்வாறு சிறுசிறு வேற்றுமையுடன் பல்வேறு இராம காதைகள் இருக்கும் போலும்.

இந்த ஆசிரியப்பா இராமாயணத்தை மு. இராகவையங்கார் 'பழைய இராமாயணம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆசிரியப் பாவை நோக்கக் கம்பரின் நன்கொடை மிகவும் சுவையான தன்றோ!

## எழுச்சிப் படலம்

விழியும் வேலும்:

மணவினை காண அயோத்தியிலிருந்து மிதிலைக்குச் செல்பவர்களுள் ஒருவன், முடிமிசை வண்டுகள் மொய்க்க ஒரு மதயானையின் மேல் சென்று கொண்டிருந்தான்; அப்போது பெண் ஒருத்தியின் மிகவும் கூர்மையான கண்களைப் பார்த்துப் பின் தன் வேலையும் கண்டான்.

''சுழியும் குஞ்சிமிசைச் சுரும்பு ஆர்த்திடப்
பொழியும் மாமத யானையின் போகின்றான்
கழிய கூரிய என்றொரு காரிகை
விழியை நோக்கித் தன்வேலையும் நோக்கினான்' (33)

அவள் கண்கள் வேல்போல் வடிவத்தில் கூர்மையும் செயலில் வருத்துதலும் உடையவை என்பது இவ்வாறு குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

நீண்ட கூந்தலையும் சிறிய அடிகளையும் வாள்போல் வருத்தும் கண்களையும் உடைய ஒருத்தியை ஒருவன் நோக்கி, நெருங்கிய முலைகளையும் வளையணிந்த தோள்களையும் உடைய நங்காய்! உன் இடுப்பு (இடை) எங்கே காணவில்லையே! மறந்து—மறைத்துள்ளீரா என வினவினான்.

''தரங்க வார்குழல் தாமரைச் சீறடிக்
கருங்கண் வாள் உடையாளை ஓர் காளைதான்
நெருங்கு பூண்முலை நீள்வளைத் தோளினீர்
மருங்குல எங்கு மறந்ததுநீர் என்றான்'' (34)

மற்ற உறுப்புகளினும் இடை மிகவும் மெலிந்துள்ளமையை இவ்வாறு சுட்டிக் கூறினான்.

பெண் யானை மேல் அமர்ந்து சென்ற மகளிர், ஆண் யானை பெண் யானையின் மேல் துதிக்கையை நீட்டி

வைத்ததும்; பார்க்கப் பொறாமல் அஞ்சித் தம் கைகளால் தம் கண்களைப் பொத்திக் கொண்டனர். அவ்வாறு பொத்தியும், கைகட்குள் கண்கள் அடங்கவில்லை.

**''பித்த யானை பிணங்கிப் பிடியில் கை**
**வைத்த; மேலிருந்து அஞ்சிய மங்கையர்**
**எய்த்து இடுக்கண் உற்றார், புதைத்தார்க்கு இரு**
**கைத் தலங்களில் கண் அடங் காமையே''** (38)

இந்தப் பாடலில் சுவையான குறிப்பு ஒன்றுள்ளது. பெண்களின் கண்கள் காது வரையும் நீண்டிருப்பதாகச் சொல்வது இலக்கிய மரபு. விசாலமான கண்ணுடையவள் என்னும் பொருளுடைய 'விசாலாட்சி' என்னும் பெயர் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. கண்கள் மிகவும் பெரியன வாயிருத்தலின், கைகளால் முழுதும் மறைக்க இயல வில்லை. கண்களின் சில பகுதிகள் வெளியில் தெரிவதால் அப் பகுதிகள், ஆண் யானையினைப் பார்த்து அஞ்சு கின்றன. பெண்களின் கண்கள் பெரியவை என்பதை இவ்வாறு புதிய முறையில் சுவையாகக் கூறியுள்ளார் கம்பர் பெருமான்.

**இரவும் பகலும்**

இந்தியாவில் ஏறக்குறையப் பகல் பன்னிரண்டு மணி நேரம் சென்றதுமே இரவு வரும்; இரவு பன்னிரண்டு மணி நேரம் கடந்ததுமே பகல் வரும். ஆனால், அயோத்தி மக்கள் மிதிலை சென்ற வழியில் ஒரு கணப் பொழுதில் இரவும் பகலும் மாறிமாறி வந்தனவாம். துணிக்குடைகளும் மயில்பீலிக் குடைகளும் பல் வகை மாலைகளும் மிகுந்த கொடிகளும் எடுத்துச் செல்வதால், இவை வெயிலை மறைத்து இரவு போல் இருள் உண்டாக்கு கின்றன; இவை சிறிது நகர்ந்ததும், உடனே ஒளி பொருந்திய படைக்கலங் களும் முடி மணிகளும் அணிகலன்களும் ஒளி வீசுவதால் இருள் போய், பகல் போன்ற சூழ்நிலை உருவாகிறது எனக்

கம்பர் பகலையும் இருளையும் புதுமைப் படுத்தியுள்ளார். பாடல்:

''குடையொடு பிச்சம்தொங்கல் குழாங்களும் கொடியின் காடும்
இடையிடை மயங்கி எங்கும் வெளிகரந்து இருளைச் செய்ய,
படைகளும் முடியும் பூணும் படர்வெயில் பரப்பிச் செல்ல,
இடையொரு கணத்தினுள்ளே இரவு உண்டு பகலும் உண்டே'' (55)

மற்றொரு ஞாயிறு:

ஞாயிற்றின் முன்னே தாமரை மலரும்; ஆனால் இங்கே ஒரு வகைத் தாமரை மலர்கள் குவிகின்றனவாம். தயரத மன்னன் ஞாயிறே போல் வீறுடன் செல்கிறான். அவனைச் சூழ்ந்து செல்லும் சிற்றரசர்களின் கைகளாகிய தாமரை மலர்கள் குவிந்து கும்பிட்டுக்கொண்டுள்ளனவாம்.

''கொற்றவேல் மன்னர் செங்கைப் பங்கயக் குழாங்கள் கூம்ப
மற்றொரு கதிரோன் என்ன மணி நெடுந்தேரில் போனான்'' (75)

விண்ணிலுள்ள ஞாயிறு போல் இன்றி, மண்ணிலுள்ள தசரத ஞாயிறின் முன் சிற்றரசர்களின் கைத் தாமரைகள் குவிவதால், தசரதனை 'மற்றொரு கதிரோன்' என்றார்.

பார் பொறை:

வேந்தர்கள் தம் தோளினால் பார் பொறை (பூ பாரம்) தாங்கிக் காப்பதாகக் கூறுதல் மரபு. அதாவது, பாரிலுள்ள மக்களின் துன்பச் சுமையைப் போக்கிக் காப்பாற்றுவார்களாம். ஆனால் இங்கே நிலைமை வேறுவிதமாக உள்ளது. அதாவது,மிதிலை செல்லும் வழி நெடுகிலும், காலாட்படை, யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை ஆகியவை மிகுதியாக நெருங்கியிருப்பதால், அப்படி இப்படி யாரும் நகரவே இடம் இல்லை. இடம் பெயர்த்துச் செல்லவைக்க அருகில் வேறு உலகமும் இல்லை. இந்தப் பெருங்கூட்டத்

தைத் தாங்க முடியாமல் பார்மகள் (பூமா தேவி) முதுகை நெளிக்கின்றாளாம். நிலைமை இங்ஙனம் இருப்பதால், மன்னன் பார்பொறை (பூபாரம்) நீக்கித் தான் தாங்கினான் என்று சொல்வது எவ்வாறு பொருந்தும்?

**''வீரரும் களிறும் தேரும் புரவியும் மிடைந்த சேனை**
**பேர்விடம் இல்லை மற்றோர் உலகில்லை பெயர்வதாக,**
**நீருடை ஆடையாளும் நெளித்தனள் முதுகை என்றால்**
**பார்பொறை நீக்கினான் என்று உரைத்தது எப்பரிசு**
**மன்னோ!'' (80)**

படையின் மிகுதியை இவ்வாறு புதிய முறையில் படைத்துக் காட்டி இன்புறுத்தியுள்ளார் கம்பர். நிலத்தைச் சுற்றிக் கடல் இருப்பதால், நிலமகள் நீராகிய ஆடையை உடையவள் என்று சொல்வது இலக்கிய மரபு. எனவே, நீருடை ஆடையாள் என்பது நிலமகளைக் (பூமா தேவியைக்) குறிக்கும்.

## நீர் விளையாட்டுப் படலம்

**கண் உள்ள தடாகம் :**

தடாகத்திலே மீன்கள் துள்ளுவதைப் பார்த்த பெண், தடாகங்களுக்கும் கண்கள் உண்டோ என்று கணவனை வினவுகிறாளாம் :

**''உள் நிறை கயலை நோக்கி, ஒடு நீர்த் தடங்கட்கு எல்லாம்**
**கண் உளவாங் கொல் என்று கணவரை வினவுவாரும்'' (7)**

கண்ணுக்குக் கயலை ஒப்புமையாகக் கூறுதல் உண்டு! மீனாட்சி, அங்கயற் கண்ணி என்னும் பெயர்கள் எண்ணத் தக்கன. எனவே, தடாகத்தில் உளள கயலைக் கண்ணாக எண்ணியதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது.

**தடாகத்திற்கு நன் கொடை :**

மாலையணிந்த கூந்தலையுடைய பெண்ணொருத்தி ஒரு தடாகத்தின் கரையில் நின்று அத்தடாகத்தைப் பார்த்

தாள். அமைதியான நீருடைய அத்தடாகத்தில் அவளது உருவம் அப்படியே தெரிந்தது. உடனே அவள் சிரித்தாள். தடாகத்தில் தெரிந்த உருவமும் சிரித்தது. தான் சிரித்ததால் பதிலுக்கு தடாகத்துப் பெண் சிரித்ததாக அவள் எண்ணி, இவள் நம்பால் அன்புடைய தோழி யாவாள்; இவளுக்கு நாம் ஏதாவது நன்கொடை அளிக்க வேண்டும் எனக் கருதித் தான் அணிந்திருந்த மணி மாலையைக் கழற்றித் தடாகத்தில் எறிந்தாளாம்.

**"தேன் உகுநறவ மாலைச் செறிகுழல் தெய்வம் அன்னாள்**
**தானுடைக் கோல மேனி தடத்திடைத் தோன்ற நோக்கி**
**நான் நக நகுகின்றாள் இந்நலநுதல் தோழியாம் என்று**
**ஊனமில் விலையில் ஆரம் உளம் குளிர்ந்து**
**உதவுவாரும்" (8)**

**கையும் கண்ணும் :**

சிற்றரசன் ஒருவன் தன் நீண்ட கையினால் ஒரு பெண்ணுக்குக் குறிப்புக் காட்ட (சாடை காட்ட), அந்தப் பெண் அவளுடைய தோழியின் கண்களால் பதிலுக்குக் குறிப்பு காட்டச் செய்தாள்.

**' தாழ நின்ற ததை மலர்க் கையினால்**
**ஆழிமன் ஒருவன் உரைத்தான்; அது**
**வீழியின் கனிவாய் ஒரு மெல்லியல்**
**தோழி கண்ணில் கடைக்கணின் சொல்லினார்" (28)**

வீழியின் கனிவாய் = வீழிப்பழம் போன்ற வாய். ஆடவன் கையால் பேசினான். பெண்ணாதலின் நாணத்தால் தான் நேரில் கண்ணால் பேசாமல், கண்ணாலேயே தன் தோழிக்குக் குறிப்பு காட்ட, தோழி தன் கண்ணாலேயே அவனுக்குக் குறிப்பு காட்டினாள். கண் தூதாகச் செயல்படுவதாகத் திருத்தக்க தேவர் தம் சிந்தாமணி நூலில்

"காதன்மை கண்ணுளே அடக்கிக் கண்எனும்
தூதினால் துணி பொருள் விளக்கி" (1485)

என்று கூறியுள்ளார். கண்கள் ஒத்துப் பேசிக் கொண்டால் வாய்ச் சொற்கட்கு வேலையில்லை என்னும் கருத்தில்,

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல" (1100)

எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். திரையோவியத்தில் பயன்படுத்தப்பட்ட பாடல் பகுதி ஒன்றை இங்கே நினைவு செய்ய ஒப்புதலுடன் பொறுத்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இங்கே தெரிவிக்கிறேன்: "பம்பரக் கண்ணாலே ஒரு சங்கதி சொன்னாளே"— (பல ஆண்டுகட்கு ஒருமுறை திரையோவியம் பார்க்கும் நான் இந்தப் பாடல் பகுதியை வெளியில் கேட்டுள்ளேன்.) திரை ஓவியப்பாடலை மட்டமாக எண்ணக்கூடாது. கம்பர் கூறியுள்ள பெண்களின் கண்களும் பம்பரக் கண்களே 'நயன பாஷை' என்பது இதுதான்.

## உண்டாட்டுப் படலம்

**நிலவொளியின் பரப்பு:**

மிதிலை செல்பவர்கள் வழியில் நிலவொளியில் உண்டு இன்புறுகின்றனர். நிலவின் ஒளி எங்கும் பரந்தது. அதனால், எல்லா ஆறுகளும் கங்கை போலவும், எல்லாக் கடல்களும் பாற்கடல் போலவும், எல்லா மலைகளும் அழிவில்லாத சிவனின் கயிலைமலை போலவும் தோன்றின. இதற்குமேல் நிலவின் பெருகிய பரப்பை என்ன என்று சொல்வது! பாடல்:

"ஆறெலாம் கங்கையே ஆய; ஆழிதாம்
கூறுபாற் கடலையே ஒத்த; குன்றெலாம்

**ஈறிலான் கயிலையே இயைந்த; என் இனி**
**வேறு நாம் புகல்வது நிலவின் வீக்கமே''** (3)

*நிலவொளி வெண்மையானது. எனவே, அது பரந்த இடம் எல்லாம் வெண்மையாயினவாம். வெண்ணிறமான கங்கை போலவே மற்ற ஆறுகளும், வெண்ணிறமான பால் கடல் போலவே மற்ற கடல்களும், வெண்ணிறமான கயிலையைப் போலவே மற்ற மலைகளும் ஆயின என்று கூறுவதன் வாயிலாகக் கம்பர், நிலவின் வெள்ளொளிப் பரப்பை விளக்கியுள்ளார்.*

## கடிமணப் படலம்

நெடிதோ நெறி :

*திருமணத்திற்கு முன் இராமன் சீதையை எண்ணி நைகின்றான்; தன் நெஞ்சை வைகின்றான்: என்னை விட்டு மான் அனைய அப்பெண்ணிடம் சென்றுவிட்ட என் மனமே! என்னை ஒரு முறை கூட நினைக்கமாட்டாய். நீ அப்பெண்ணைத் தேடிப்போன வழி நெடுந்தொலைவோ? அதனால்தான் இன்னும் திரும்பவில்லையோ! அவளிடமிருந்து நீ விடை பெறவில்லையோ! அவள்தான் என்னை மறப்பினும், நீயும் என்னை மறந்துவிட்டாயே, ஐயகோ! பாடல்:*

**''நினையாய் ஒருகால்; நெடிதோ நெறிதான்**
**வினவா தவர்பால் விடைகொண் டிலையோ**
**புனமான் அனையா ரொடு போயின என்**
**மனனே எனை நீயும் மறந்தனையோ?''** (16

*தன் மனம் தன்னைவிட்டுச் சென்று சீதையிடமே இருக்கின்றதாம் என்பது, தன் நெஞ்சு அவளையே எண்ணிக் கொண்டுள்ளது என்னும் பொருளது. இன்னும் திரும்பாததால்,போக்கு வரவு வழி நெடுந்தொலைவோ என ஐயுறுவதுபோல் கூறுகிறான். இதில் இன்னொரு செய்தியும் மறைந்துள்ளது. விரைந்து செல்வதில் மனமும் காற்றும் வல்லவை என்னும் கருத்தில் 'மனோ வேகம் வாயு வேகம்' என்பது உலகியல். மிகவும் விரைந்து சென்ற ஒருவரை,*

மனோ வேகம் வாயு வேகமாக ஓடினார் என்று கூறுவதுண்டு. காற்றினும் மனம் மிகவும் விரைவானது. ஒரு நொடியில் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய இடங்கட்கெல்லாம் சென்று வந்துவிடும். அத்தகைமை மனம், சீதையிடம் போய்த் திரும்புவதற்குத் தொலைவு ஒரு தடையாய் இருக்க முடியாதே என்ற கருத்து எண்ணுவதற்குச் சுவையாயுள்ளது.

கம்பர் வள்ளுவத்தையும் கற்றிருப்பார். வள்ளுவத்திலும் தலைவி இவ்வாறு கூறுவதாகச் சொல்லப்பட்டுள்ளது. என் நெஞ்சமே! அவர் அருளாதிருந்தும் அவர் பின்னே சென்றது உன் பேதைமையாகும்.

**''பரிந்தவர் நல்கா ரென்று ஏங்கிப் பிரிந்தவர்**
**பின்செல்வாய் பேதை என் நெஞ்சு''** (1248)

அவர் நெஞ்சு என்னிடம் வராமல் அவரையே எண்ணிக் கொண்டிருக்கவும், நீ மட்டும் என்னிடம் இல்லாமல் அவரிடம் சென்றது ஏன்?

**''அவர் நெஞ்சு அவர்க் காதல் கண்டும் எவன் நெஞ்சே**
**நீ எமக்கு ஆகா தது''** (1291)

என் நெஞ்சே! என்னை விட்டு உன் விருப்பப்படி நீ அவர் பின்னே செல்வது, கெட்டழிந்தவர்க்கு நண்பர்கள் இல்லை என்னும் முதுமொழிப்படியா?

**''கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சே நீ**
**பெட்டாங்கு அவர்பின் செலல்''** (1293)

முன்னோடியான திருவள்ளுவரின் குறட்பாக்கள் ஈண்டு இலக்கிய ஒப்புமை காண்டல் என்னும் முறையில் தரப்பட்டுள்ளன.

கம்பரின் பாலகாண்டப் பைம்பொழிலில் உள்ள 'கருத்து வெளியீட்டில் புதுமை' என்னும் பயன் மரத்தில் இவ்வாறு பல கனிகளைப் பறித்து உண்டு மகிழலாம். அடுத்துப் பைம்பொழிலில் உள்ள சொல் மலர்—மாலைகள் சிலவற்றை அணிந்து மகிழலாம்.

# 5. கம்பரின் சொல் மலர்-மாலைகள்

தக்க இடத்தில் தக்க சொல்லைப் பெய்து பேசுவதும் எழுதுவதும் ஒரு விதக் கலையாகும். பேச்சினும், என்றும் நிலைத்திருக்கும் எழுத்து வடிவத்திற்கு இந்தக் கலை மிகவும் இன்றியமையாத தாகும்.

பேச்சு நடையும் எழுத்து நடையும் காலப் போக்கில் மாறுவதுண்டு. மாறுதலுக்கு மிகுந்த இடம்தரின், முற்கால நடை ஒரு மொழி போலவும், பிற்கால நடை மற்றொரு மொழி போலவும் தோன்றக்கூடும். அதனால், மாறுதலிலும் ஓரளவு கட்டுப்பாடு வேண்டும்.

எழுத்தால் ஆனது சொல் — சொல்லால் ஆனது சொற்றொடர் (வாக்கியம்) என்ற அடிப்படையில் ஆய்வது 'காரண காரிய முறை' (Logic Method) ஆகும். முதலில் சொற்றொடர் — பின்பு சொல் — பின்னர் எழுத்து என்ற முறையில் ஆய்வது 'உளவியல் முறை' (Psychological Method) ஆகும்.

மாந்தர் முதலில் சொற்றொடராகத்தான் பேசினர். பின்பே சொற்றொடரிலிருந்து சொல் பிரிக்கப்பட்டது — அதற்குப் பின்பு சொல்லிலிருந்து எழுத்து பிரிக்கப்பட்டது. தனி எழுத்துக்கோ — தனிச் சொல்லுக்கோ பொருள் இல்லை. ஓரெழுத்து ஒரு மொழியாயினும் — தனிச் சொல்லாயினும் ஒரு சொற்றொடரில் வைத்துப் பயன் படுத்தும் பொழுதே அவற்றிற்கு மதிப்பும் பொருளும் உண்டு.

இதனால்தான், மொழியாசிரியர்கள் தனித் தனிச் சொற் களைத் தந்து, சொந்தச் சொற்றொடரில் வைத்துப் பயன் படுத்தக் கற்றுத் தருகின்றனர். பொருள் தெளிவாக விளங்காத ஒரு சொல்லை ஒரு தொடரில் வைத்துச் சொல்லின் அகராதியின்றியே பொருள் ஓரளவாயினும் புரியும். இத்தகைய வாக்கியத்திற்குத் 'தன் பொருளைத் தானே விளக்கும் தொடர்' என்று பெயராம்.

இந்த அடிப்படையில், கம்பர், தக்க சொல் மலர்களைத் தக்க சொற்றொடர் மாலைகளில் வைத்து ஆண்டிருக்கும் கலையழகைச் சிறிது காண்பாம்.

## ஆற்றுப் படலம்

**மேய்தல்**

வெண்ணீறு அணிந்த சிவன்போல் வெளுத்திருந்த மேகம், கடல் நீரை உட்கொண்டு திருமால்போல் கருநிறம் கொண்டதாம். மேகம் கடல் நீரை உட்கொண்டதை, 'ஆர்கலி மேய்ந்து' என்று குறிப்பிட்டுள்ளார் கம்பர். ஆர்கலி=கடல். ஆடு மாடு முதலிய அஃறிணை உயிரிகள் தீனி உட்கொள்வதற்கு 'மேய்தல்' என்னும் பெயர் வழங்குதல் மரபு. நிரம்ப நீரை உட்கொண்டது என்பதைக் குறிக்க 'ஆர்கலி மேய்ந்து' என்று கூறியிருக்கும் சொல்லாட்சி ஒரு வகைச் சுவை பயக்கிறது.

**"நீறு அணிந்த கடவுள் நிறத்த வான்**
**ஆறு அணிந்து சென்று ஆர்கலி மேய்ந்து..."** (2)

என்பது பாடல் பகுதி

**சேத்தல்**

சரயு ஆற்றுவெள்ளம் பால், தயிர், வெண்ணெய், சேந்தநெய் ஆகியவற்றை உறியோடு அடித்துச் சென்றதாம்.

"செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயும்
சேந்த நெய்யும்
உறியொடு வாரி உண்டு..." (15)

என்பது பாடல் பகுதி: வெண்ணெய் அதன் பெயரிலிருந்தே வெள்ளையாய் இருக்கும் என்பது தெரியும். வெண்ணெயைக் காய்ச்சினால் சிவந்த நெய் உருவாகும். வெண்ணெயைச் சிவக்கக் காய்ச்சி நெய்யாக்குவார்கள். இதைத்தான் 'சேந்த நெய்' என்று கம்பர் குறிப்பிட்டுள்ளார். சேந்த நெய்=சிவந்த நெய். சேத்தல்=சிவத்தல். நெய் சேத்தலைக் கம்பர் கூர்ந்து கவனித்து நினைவில் கொண்டு எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கம்பரின் சேந்த என்னும் சொல்லாட்சி, ஒரு புணர்ச்சி விதியின் திருத்தத்திற்குத் துணை புரிகிறது. சேயரி என்றால் சிவந்த (இரேகை) கோடு என்பது பொருளாம். இதற்குப் புணர்ச்சி விதி கூறுபவர்கள், செம்மை+அரி என்பதுதான் சேயரி என்றாயிற்று என்று நன்னூல் விதியை ஒட்டிக் கூறுவர். நன்னூல் நூற்பா ஒன்றில் 'சொல்லப்பட்டுள்ள* 'ஈறுபோதல்' என்றவிதிப்படி, செம்மை என்பதன் 'ஈற்றிலுள்ள 'ம்மை' என்னும் எழுத்துக்கள் மறைந்தனவாம். 'ஆதிநீடல்' என்றபடி, முதல் எழுத்தாகிய 'செ' என்பது சே' எனநீண்டதாம். இவ்வாறாக, செம்மை என்பது 'சே' என்றாயிற்றாம். சேய் அரி என இடையிலுள்ள 'ய்' என்பதை உடம்படு மெய் எனலாம். அல்லது 'முன்னின்ற மெய் திரிதல்' என்றபடி, 'ம்' என்பது 'ய்' எனத் திரிந்ததாகவும் கூறுவர்.

இது தவறான புணர்ச்சி விதி. செம்மை அரி என்பதைப் பலமுறை செம்மை அரி—செம்மை அரி என்று சொல்லிப் பார்க்கினும் சேயரி என்ற முடிவு கிடைக்காது. எனவே, சே+அரி என்பதே சேயரி ஆயிற்று எனலே பொருந்தும். 'சே' என்னும் ஓரெழுத்துச் சொல்லே சிவப்பு -சிவத்தல்

* நன்னூல்— எழுத்து —பதவியல் - 9

என்னும் பொருள் உடையதாகும். 'சே' என்பதைப் பகுதியாக உடைய 'சேந்த' என்னும் கம்பரின் சொல்லாட்சி திருத்தமான புணர்ச்சி விதிக்குத் துணை செய்வதை ஈண்டு அறியலாம்.

பண்டி

## நாட்டுப் படலம்

வண்டி என்னும் பொருளில் 'பண்டி' என்னும் சொல்லைக் கையாண்டுள்ளார் கம்பர்.

> ''நெறிகளும் புதையப் பண்டி நிறைத்து
> மண்ணெளிய ஊர்வார்'' (20)

என்பது பாடல் பகுதி. வண்டியில் நெல் ஏற்றிச் செல்வது இங்கே அறிவிக்கப்பட்டுள்ளது. வண்டி என்னும் பொருளில் பண்டி என்னும் சொல் தெலுங்கிலும் கன்னடத்திலும் உள்ளது. தமிழில் உள்ள 'வ' என்னும் எழுத்துக்குப் பதிலாக, பகர வரிசை எழுத்துகள் சில கன்னடச் சொற்களில் வரும். எடுத்துக்காட்டுகள்: வரை =(பேச்சுத் தமிழில்) வரெ—கன்னடத்தில் பரெ. தமிழில் வெள்ளி, கன்னடத்தில் பெள்ளி. மலையாளத்தில் வண்டி என்பதே வழங்கப்படும். இந்த அமைப்பை நோக்குங்கால், இந்த நான்கு மொழிகளும் ஓரின மொழிகள் அதாவது திராவிடக் குடும்ப மொழிகள் என்பது புலனாகும்.

குப்பை – ஊட்டிடம்

கோசல நாட்டில் உணவு ஊட்டும் (வழங்கும்) இடங்களில் உணவுப் பொருள்கள் நிரம்ப உள்ளனவாம். உணவளிக்கும் அறநிலையத்தை 'ஊட்டிடம்' எனக் கம்பர் குறிப்பிட்டிருப்பது சுவையாயுள்ளது. இது மலையாள மொழியில் 'ஊட்டுப் புரை' எனப்படுகிறது. அங்கே, பிறை நிலாபோல் வளைந்த தலைமுனையையுடைய இரும்பு அரிவாள் மணையால் அரியப்பட்ட காய்கறிக் குவியல்களும்,

பருப்பு வகைகளின் குவியல்களும், முத்துப் போல் வெண்மையாயுள்ள அரிசிக் குவியல்களும் மண்டிக் கிடந்தனவாம்:

"பிறைமுகத் தலை பெட்பின் இரும்பு போழ்
குறைநறைக் கறிக்குப்பை பருப்பொடு
நிறைவெண் முத்தின் நிறத்து அரிக்குவை
உறைவ கோட்டம் இல் ஊட்டிடம் தோறுமே" (37)

என்பது பாடல். இங்கே காய்கறிக் குவியலைக் குப்பை என்று சொல்லியிருப்பதன் பொருத்தம் என்ன? இதற்கு விடை காணக் குப்பையைக் கிளறவேண்டும்—அதாவது குப்பையின் வரலாற்றைக் கண்டறியவேண்டும்:-

தொடக்கத்தில், கழிவுப் பொருளாக இருந்த குப்பை போடப்பட்ட இடத்தில் செடி கொடிகள் செழித்து வளர்வதைக் கண்ட மக்கள், குப்பையை வயல்களில் இட்டு விளைச்சலைப் பெருக்கினர். உயிர்காக்கும் உணவுப் பயிர்களைச் செழிக்கச் செய்யும் குப்பை வீடுகளில் விலைக்கு வாங்கிப் போடப்பட்டது. இவ்வாறு குப்பை படிப்படியாக—விலைப் பொருளாக—செல்வமாகக் கருதப் பட்டது. குப்பைக்குச் செல்வ மதிப்பு (பணக்கார அந்தஸ்து) ஏறவே, குப்பைக் குவியல் போன்ற மற்ற பொருள்களின் குவியலும் குப்பை எனப்பட்டன. அதாவது, நெல், வரகு, ஆம்பல், உப்பு, பாக்கு, அகில், சந்தனம், இரத்தினம், பன் மணிகள், பலவகைச் செல்வப்பொருள்கள் முதலிய வற்றின் குவியல்களும் குப்பை எனப்பட்டன. இதற்கு உரிய சில இலக்கியச் சான்றுகளை நூற்பெயர்களுடன் காண்போம்:-

"குப்பை நெல்லின் முத்தூறு தந்த"
(புறநானூறு, 24—22)

"சில்விளை வரகின் புல்லென் குப்பை"
(புறம், 327—2)

''ஆம்பல் குப்பை'' கல்லாடம்—கல்லாடர்

''உவர்விளை உப்பின் குன்றுபோல் குப்பை''
(நற்றிணை, 138—1)

''பளிக்காய்க் குப்பையும் பலம்பெய் பேழையும்''
(பெருங்கதை, 2—2—72—பளிக்காய் = பாக்கு)

''யானை வெண்கோடும் அகிலின் குப்பையும்''
(சிலப்பதிகாரம், 25—37)

''சந்தின் குப்பையும் தாழநீர் முத்தும்''
(சிலப்பதிகாரம்,26—168 —சந்து = சந்தனம்)

''மரக்கனி யன்ன திருத்தகு பொன்னும்
இரத்தினக் குப்பையும் இலங்கொளிப் பவழமும்''
(பெருங்கதை ,2—14—68, 69)

''கோடுபல அடுக்கிய கொழுநிதிக் குப்பை''
(சிலம்பு, 6—121)

''விரைமரம் மென்துகில் விழுநிதிக் குப்பை''
(மணிமேகலை, 16—122, 123)

இவற்றால் குப்பையின் உட்பொருளை உணரலாம். எனவேதான், 'கறிக் குப்பை' என்றார் கம்பர்.

## நகரப்படலம்

நானா விதம் :

முகில்கள் வான வீதியில் பலவிதமாக ஓடுகின்றனவாம். பல விதம் என்பதற்கு ''நானா விதம்'' என்னும் வழக்குச் சொல்லைக் கம்பர் கையாண்டுள்ளார்.

''நானா விதமா நாளி மாதிர வீதி ஓடி'' (69)
என்பது பாடல் பகுதி.

## அரசியல் படலம்

**நான்கு கடல் :**

தயரதன் இரப்பவர்களாகிய கடலை, அவர்கட்கு வேண்டியவற்றையெல்லாம் நிரம்பக் கொடுத்துக் கடந்தான்; இனி இரப்பவர்கள் இல்லை. அறிவு என்னும் அளக்கரை (கடலை), அளவற்ற நுட்பமான கருத்துச் செறிந்த நூல்களை ஆராய்ந்தறிந்து கடந்தான்; அதாவது அவன் கல்லாத கலை இல்லை. பகைவர்களாகிய வேலையை (கடலை), வாளால் கொன்று வென்று கடந்தான்; இனி அவனுக்குப் பகை இல்லை. செல்வத்தால் நுகரக் கூடிய இன்பமாகிய பௌவத்தை (கடலை), முற்றும் துய்த்துக் கடந்தான்; அவன் நுகராத இன்பம் இல்லை. பாடல்:

**''ஈந்தே கடந்தான் இரப்போர் கடல்;**
**எண் இல் நுண் நூல்**
**ஆய்ந்தே கடந்தான் அறிவுஎன்னும்**
**அளக்கர்; வாளால்**
**காய்ந்தே கடந்தான் பகைவேலை;**
**கருத்து முற்றத்**
**தோய்ந்தே கடந்தான் திருவின்**
**தொடர் போக பௌவம்''** (5)

இரப்போர் கடல், அறிவுக் கடல், பகைக் கடல், இன்பக் கடல் ஆகிய நான்கு கடல்களையும் தசரதன் கடந்த முறையைக் கம்பர் கூறியிருப்பது நயமாயுள்ளது. ஒரே பொருளுடைய கடல், அளக்கர், வேலை, பௌவம் என்னும் நான்கு சொற்களும் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன. ஒரே பொருளுடைய வெவ்வேறு சொற்கள் பின்னே தொடர்ந்து வந்தமையின், இந்த அமைப்பு, பொருள் பின் வருநிலை அணி எனப்படும். கடந்தான் என்னும் ஒரே சொல் நான்கு முறை தொடர்ந்து வந்திருப்பது, சொல் பின் வருநிலை அணி எனப்படும்.

இந்தப் பாடலின் கருத்து வெளியீட்டு அமைப்பு புதுமையாகவும் இருக்கிறது. கம்பரது பாடல் அல்லவா?

**இயம் மொழிதல்**

கலைக் கோட்டு முனிவன் அயோத்திக்கு வந்த போது பல இயங்கள் (வாத்தியங்கள்) இசைக்கப் பட்டன; முரசம் அடிக்கப்பட்டது, தீவினை அழியலாயிற்று-

**"மொழிந்தன பல் இயம், முரசம் ஆர்த்தன,**
**விழுந்தன தீவினை வேரி னோடுமே"** (67)

'பல் இயம் மொழிந்தன' எனக் கம்பர் கூறியுள்ளார். இதில் உள்ள நயமாவது;—மொழிதல் என்றால் பேசுதல் இது வாய்—நாக்கு முதலிய ஒலி உறுப்புகளின் வேலை. ஆனால், இயம் மொழிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது, வாயால் பேசிக் கருத்து அறிவிப்பது போலவே இயங்கள் முழங்கின—என இதற்குக் கருத்து கொள்ளல் வேண்டும். இயங்கள் இசைத்ததை 'அப்படியே பேசுவது போல் இருந்தது' என்று உலகியலில் மக்கள் கூறுவதுண்டு. நீடா மங்கலம் மீனாட்சி சுந்தரம் தவில் (மேளம்) அடித்தால் அப்படியே பேசுவது போல் இருக்கும் என்று ஒருவர் கூறியதை யான் கேட்டிருக்கிறேன். இங்கே பிரபுலிங்க லீலை என்னும் நூலில் உள்ள ஒரு கருத்து நினைவிற்கு வருகிறது:-

மாயை என்பவள் நடனம் ஆடியபோது மத்தளம் அடிக்கப்பட்டது. இதைச் சிவப்பிரகாசர் சுவையாகப் பாடியுள்ளார். மத்தளம், வாய் சொல்லும் மொழி போலக் கைகளின் மூலம் வார்த்தை (மொழி) பேசிற்றாம்.

**"வாயுரைக்கும் மொழிபோலத் தண்ணுமை செங்**
**கைகளால் வார்த்தை சொல்ல"** –

(மாயை பூசை கதி—50)

என்பது பாடல் பகுதி. இந்தச் சுவை, 'மொழிந்தன பல் இயம்' என்னும் கம்பர் பாடலாலும் நுகரப்படுகிறது.

**செனம் :**

மக்கள் என்னும் பொருளில் உள்ள ஜனம் என்பது வடமொழிச் சொல். புதுச்சேரி வட்டாரத்தில் மக்கள் என்னும் பொருளில் 'செனம்' என்னும் சொல் வழங்கப் படுகிறது. (என் மாமியார் 'செனம்' என்பார்கள்.)

> ''அருமறை முனிவரும் அமரரும் அவனித்
> திருவும் அந்நகர் உறை செனமும்... (124)

எனக் கம்பர் மக்களைச் செனம் என்னும் சொல்லால் குறிப்பிட்டுள்ளமை ஒருவகை வியப்பளிக்கிறது.

## தாடகை வதைப் படலம்

**சாபம்:**

சாபம் என்னும் சொல்லுக்கு வில் என்னும் பொருளும்; பிறர்க்குக் கேடு உண்டாக்கும் கெடுமொழி என்னும் பொருளும் உண்டு. இரு பொருளையும் அமைத்துக் கம்பர் ஒரு பாடலில் விளையாடியுள்ளார். அகலிகையின் கணவராகிய கௌதம முனிவரைப் பற்றிக் கூறுமிடத்து, அம்பு எய்யும் வில்லின் செயல் தவறினும், முனிவரின் சாபம் (கெடுமொழி) தவறாது என்று அறிவித்துள்ளார்.

> ''சரம்தரும் சாபம் அல்லால் தடுப்பருஞ் சாபம் வல்ல
> வரம தரு முனிவன்...'' (20)

என்பது பாடல் பகுதி. பெரியோரின் சினத்தின் விளைவைச் சிறிதும் தடுக்க இயலாது என்னும் கருத்துடைய

> ''குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயும் காத்தல் அரிது'' (29)

என்னும் குறளும், வில்லின் ஆற்றலினும் சொல்லின் ஆற்றலே மிகுதி என்னும் கருத்துடைய

''வில்ஏர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல்ஏர் உழவர் பகை'' (872)

என்னும் குறளும் ஈண்டு எண்ணத் தக்கன. 'தடுப்பரும் சாபம் வல்ல முனிவர்' என்பதோடு கம்பர் நிறுத்தவில்லை; 'வரம் தரு முனிவன்' என்றும் கூறியுள்ளார். ஏன் எனில்,— தன் மனைவி அகலிகையைக் கெடுத்த இந்திரன் உடலில் ஆயிரம் பெண் குறிகள் உண்டாகுக என்று சாபமிட்டார். அப்படியே நடந்தது. பின் வேண்டுதலின் பேரில், ஆயிரம் பெண் குறிகளும் ஆயிரம் கண்களாகுக எனச் சாப விலக்கு செய்தார். அகலிகையைக் கல்லாக ஆகுக எனச் சபித்தார். பின் வேண்டுதலின் பேரில், கல்லைத் தசரத இராமன் மிதித்ததும் மீண்டும் பெண்ணாவாய் என்று சாப விலக்கு செய்தார். எனவேதான், 'தடுப்பரும் சாபம் வல்ல வரம் தரு முனிவன்' என்று கம்பர் பாடியுள்ளார். இந்தச் சொல் - தொடர் அமைப்பு மிகவும் சுவை பயக்கிறது.

**கல் இயல்:**

கௌதமர் அகலிகையை நோக்கி,
''விலைமகள் அனைய நீயும் கல் இயல் ஆதி...'' (22)

என்று வைவு (சாபம்) இட்டாராம். கல்உரு ஆதி என்றோ கல்வடி வாதி என்றோ கூறாமல் 'கல் இயல்' ஆதி என்று கூறியதில், ஏதேனும் ஆழ்ந்த கருத்து இருக்கலாம் எனத் தோன்றுகிறது. மக்கள் எடுக்கும் பல பிறவிகளுள் கல்லையும் மாணிக்க வாசகர் சேர்த்துள்ளார். இது திருவாசகம் பாயிரப் (சிவபுராணம்) பகுதியில்,

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்

செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்'' (26—31)

எனக் கூறப்பட்டுள்ளது. கல்லுக்கும் உயிர் உண்டு எனத் தேல்சு (Tales) என்னும் அறிஞர் கூறியுள்ளார். இக்கருத்து களோடு 'கல் இயல்' என்பதை ஒத்திட்டு ஆய்வு செய்ய வேண்டும்.

## மிதிலைக் காட்சிப் படலம்

**சொற்கலை முனிவன்:**

அகத்தியர் 'சொற்கலை (சொல் கலை) முனிவன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். சொல் கலை என்றால் மொழிக்கலை. மொழிக்கலை என்பது இலக்கணம். இலக்கணம் என்னும் சொல் இலட்சணம் என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு என்று சொல்பவர்கள் உண்டு. கம்பர் இலக்கணத்திற்குச் 'சொல் கலை' என அழகான பெயர் தந்துள்ளார். இப்போது 'மொழியியல்' என்னும் பெயர் நடமாடுகிறது. Linguistics என்னும் ஆங்கிலச் சொல்லின் பெயர்ப்பாகவும் 'மொழியியல்' என்னும் சொல் வழங்கப் படுகிறது. அகத்தியம் என்னும் சொல் கலை (இலக்கண) நூல் எழுதியதால், அகத்தியர் சொற்கலை முனிவர் எனப்பட்டார்.

''சொற்கலை முனிவன் உண்ட சுடர் மணிக் கடலும்''(5) என்பது கம்பரின் பாடல் பகுதி.

**பொலம்**

''பொலம்குழை மயிலைக் கொண்டு அரிதின்
போயினார்'' (45)

என்று கம்பர் சீதையைப் 'பொலம் குழை மயில்' எனக் குறிப்பிட்டுள்ளார். மயில் என்பது, மயில் போன்றவள் என உவமை யாகு பெயராய்ச் சீதையைக் குறிக்கின்றது. சீதை பொலம் குழை அணிந்துள்ளாளாம். பொலம் குழை

என்பதற்குப் பொன்னால் ஆன காதணி என்பது பொருள். பொலம் என்றால் பொன். இந்தப் பொன் என்னும் பொருளில் 'பொலம்' என்ற சொல் சங்க இலக்கியங்களிலும் ஆளப்பட்டுள்ளது. ஆயினும், தொல்காப்பியர், பொலம் என ஒரு சொல் இல்லை—பொன் என்னும் சொல்லே புணர்ச்சியில் பொலம் எனத் திரிந்தது எனப் பொருந்தாத கருத்து ஒன்றைப் புகன்றுள்ளார். அதாவது: பொன் என்னும் சொல் குழை, கலம் என்பன போன்ற சொற்களோடு புணருங்கால், பொன் என்பதில் உள்ள ஈற்றெழுத்தாகிய 'ன்' கெட்டு விடுமாம்; பின்பு 'ல, ம்' என்னும் எழுத்துகள் வந்து தோன்றப் பொலம் என்று ஆகுமாம். தொல்காப்பியம் — எழுத்ததிகாரம் — புள்ளி மயங்கியலில் இவ்வாறு கூறியுள்ளார்:

> ''பொன் என் கிளவி ஈறு கெட,முறையின்
> முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
> செய்யுள் மருங்கில் தொடரிய லான'' (61)

என்பது நூற்பா. இது பொருந்தாது. பொன்+குழை= என்பவற்றைப் பொன்குழை—பொன்குழை என ஆயிரம் முறை—ஏன்—பதினாயிரம் முறை இணைத்துச் சொல்லிப் பார்க்கினும் பொலம் குழை என்ற முடிவு கிடைக்காது.

கால்+அடி=என்பவற்றை இணைத்துச் சொல்லின், கால் அடி—கால் அடி—காலடி என்ற முடிவு கிடைக்கும். கல்+அடி என்பவற்றை இணைத்துக் கூறின், கல் அடி—கல் அடி—கல்லடி என்ற முடிவு எளிதில் கிடைக்கும். அதுபோல், பொன்+குழை என்பவற்றை இணைத்துக் கூறின், பொன் குழை—பொன் குழை என்ற முடிவே கிடைக்கும்—பொலம் குழை என்ற முடிபு ஒரு போதும் கிடைக்காது.

ஒன்பது+பத்து என்பன சேர்ந்து தொண்ணூறு எனவும், ஒன்பது+நூறு என்பன இணைந்து

தொள்ளாயிரம் எனவும் ஆனதாகத் தொல்காப்பியர் தவறாகக் கூறியிருப்பது போலவே, பொன்+குழை என்பது பொலம் குழை என்றாகும் எனக் கூறியிருப்பதும் தவறே யாகும்.

எனவே, கம்பர் கூறியுள்ள 'பொலம்' என்னும் சொல்லைப் 'பொன்' என்பதின் திரிபாகக் கொள்ளாமல், பொன் என்னும் பொருள் உடைய ஒரு தனிச்சொல் லாகவே கொள்ள வேண்டும். தொல்காப்பியர் காலத்தில், 'பொன்' என்னும் பொருளில் 'பொலம்' என்னும் சொல் ஆட்சியில் அரிதாய் இருந்தது போலும். அறிஞர்கள் இதனை ஆய்க.

## எழுச்சிப் படலம்

**புல மகன்**

புலம் = புலமை = அறிவு. புல மகன் = புலவன் = அறிஞன். இந்தச் சொல்லாட்சியைக் கம்பர்,

"வேறொரு புலமகன் விரும்பி வாங்கினான்" (3)

என்னும் பகுதியில் கையாண்டுள்ளார்.

**பயப் பய**

'மெல்ல' (மெதுவாக) என்னும் பொருளில் 'பைய' என்னும் சொல் சில வட்டாரங்களில் வழங்கப்படும். "பையவே சென்று பாண்டியற்காகவே" என்பது ஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்பகுதி (திருவாலவாய்—5—1)

"அசை இயற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்" (1098)

என்பது திருக்குறள், இவ்வாறு பாடல்களிலும் இடம் பெற்றுள்ள 'பைய' என்பது மருவி, 'பயப்பய' (பைய-பைய) எனக் கம்பரால் அடுக்குத் தொடராகத் தரப்பட்டுள்ளது.

''ஆடலகத்து ஓடை யானை அழி மதத்து
இழுக்கல் ஆற்றில்
பாடகக் காலினாரைப் பயப் பயக்
கொண்டு போனார்'' (52)

என்பது கம்பரின் பாடல் பகுதி. யானைகளின் மத நீரால் வழுக்குகின்ற தரையில் பெண்களை மெல்ல—மெல்ல அழைத்துச் சென்றனராம்.

## வரைக் காட்சிப் படலம்

உடுபதி

உடுபதி = திங்கள் (சந்திரன்). உடு = விண்மீன்கள். அசுவினி முதல் இரேவதிவரை சொல்லப்படுகின்ற இருபத்தேழு விண்மீன்கட்கும் உரிய கணவன் (பதி) திங்கள் என்பது புராணக் கதை மரபு. ''ஒப்புறத் துளங்குகின்ற உடுபதி ஆடி'' (5) எனக் கம்பர் திங்களை உடுபதி எனக் குறிப்பிட்டுள்ளார். மலை மீது இருந்த பெண்கள் திங்களாகிய கண்ணாடியில் முகம் பார்த்துக் கொண்டனராம்.

## பூக் கொய் படலம்

**மறலிக்கு ஊண்**

அயோத்தியிலிருந்து திருமணங் காண மிதிலைக்குச் செல்பவன் ஒருவன், எமனுக்கு உணவு தேடித் தரும் வேலை உடையவன் எனக் கூறப்பட்டுள்ளான்:

''மறலிக்கு ஊண் நாடும் கதிர் வேலான்'' (27)

என்பது பாடல் பகுதி. அவனது மற வலிமையைக் கம்பர் இந்தத் தொடரால் சுவைபெறப் புனைந்துள்ளார்.

# 6. சிறப்புறு செய்திக் கனிகள்

கம்பர் பெருமானின் பாலகாண்டப் பைம்பொழிலில் உள்ள 'சிறப்புறு' செய்திகள்' என்னும் செழு மரத்தில் உள்ள சில கனிகளைச் சுவைத்துப் பார்க்கலாம்.

## ஆற்றுப் படலம்

**நால் நில மயக்கம்:**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு திணைகளுள் (நிலங்களுள்) ஒரு திணைக்கு உரிய பொருள் மற்றொரு திணையில் இருப்பதாகக் கூறினால், அந்த நிலையைத் திணை மயக்கம் என்பர். கோசல நாட்டில் உள்ள சரயு ஆறு இந்தத் திணை மயக்கத்தைச் செய்கிறது. முல்லை நிலத்துப் பொருள்களைகுறிஞ்சிக்கும், மருதப் பொருளை முல்லைக்கும், நெய்தல் பொருளை மருதத்திற்கும் ஆற்று வெள்ளம் கொண்டு போய்ச் சேர்த்துத் திணைகளை மாற்றுகிறது. மக்கள் செய்த வினை அவர் எப்பிறவி எடுப்பினும் தொடர்ந்து செல்வது போல், எவ்வகை நிலத்திலும் ஆற்று நீர் சென்று கொண்டிருந்தது. இது நாட்டின் நீர் வளத்தை அறிவுறுத்துகின்றது. பாடல்:

**"முல்லையைக் குறிஞ்சி ஆக்கி, மருதத்தை முல்லை ஆக்கி,**
**புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரு மருதம் ஆக்கி,**

எல்லையில் பொருள்கள் எல்லாம் இடைதடுமாறும் நீரால்
செல்லுறு கதியில் செல்லும் வினை எனச் சென்றது அன்றே! (17)

ஒன்றே பல:

தெய்வம் ஒன்றே; ஆயினும், பல சமயத்தினருக்கும் உரிய பல தெய்வங்களாகப் பிரிவுபட்டிருப்பது போல, இமய மலையில் பிறந்து கடலில் கலக்கும் சரயு ஆறு, தான் ஒன்றானாலும், பின்னர்ப் பல சிற்றாறுகளாகவும் கால்வாய்களாகவும் பிரிந்தும், ஏரி – குளம்—குட்டைகளை நிரப்பிப் பரந்தும் சென்று கொண்டிருந்தது.

''கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈது என்னத்
தொல்லையின் ஒன்றே ஆகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்த தன்றே'' (19)

பல ஆறுகளும் ஒரு கடலில் கலப்பது போல், பல சமயங்களும் சென்றடையும் தெய்வம் ஒன்றே என்று கூறுவது பயின்று வரும் கூற்று. அதே போன்ற கருத்து, இங்கே நேர் மாறாகச் சொல்லப்பட்டுச் சுவைபயக்கின்றது. அதாவது: ஒரே தெய்வம் பல சமயத்தவராலும் பல தெய்வங்களாகப் பரவப்படுவதுபோல், ஒரே ஆறு, பல கால்வாய்களாகப் பிரிந்து பரந்து செல்கிறது— என்பது. 'கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்' என்னும் தொடர், 'மலைத் தலைய கடல் காவிரி' என்னும் பட்டினப் பாலை நூல் தொடரை (6) நினைவுறுத்துகிறது.

## நாட்டுப் படலம்

### ஆடல் அரங்கம்:

ஓர் ஆடல் அரங்கத்தை மருதம் என்னும் மன்னன் காண்கிறான். அரங்க மேடை சோலை; ஆடுவன மயில்கள்; விளக்கு ஏந்துவன தாமரைகள்; முழவு முகில்கள்; யாழ் இசைப் பாடகர் வண்டுகள்; திரைச் சீலை நீர் அலைகள்; காணும் கண்கள் குவளை மலர்கள். குவளை மலர்களாகிய கண்களால் மருதநிலம் என்னும் மன்னன் காண்கிறான். பாடல்:

**''தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்**
**கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளை கண்விழித்து நோக்கத்**
**தெண்திரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்**
**வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ'' (4)**

தண்டலை = சோலை. கொண்டல் = மேகம். எழினி = திரை. தாமரைக் கொடிகள் தம் மலர்களாகிய விளக்கு களைத் தாங்கிப் பிடித்துக் கொண்டுள்ளனவாம். யாரும் பிடிக்க வேண்டியதில்லாமலேயே இந்தக் காலத்தில் விளக்குகள் பொருத்தப் பட்டிருப்பது போல் அந்தக் காலத்தில் இல்லை; யாராவது தாங்கிப் பிடித்துக் கொண் டிருக்க வேண்டும். தெருக் கூத்தில், தீவட்டி பிடித்துக் கொண்டிருப்பவர், நடிகர் போகும் இடமெல்லாம் கூடவே போவது அக்காலத்தில் உண்டு. கொடி — இலை இவற்றிற்கு மேலே தாமரை மலர்கள் உயர்ந்து நீட்டிக் கொண் டிருப்பதால் ஒளி பொருந்திய தாமரை மலர்கள் விளக்கு எனப்பட்டன. கண்ணுக்கு ஒப்புமை குவளை. எனவே, மருதம் என்பவன், குவளையாகிய கண்ணால் கண்டதாகப் புனைந்துரைக்கப்பட்டுள்ளது. நீர் அலைகள் திரைச் சீலை போல் இருந்ததாகக் கூறியிருப்பது ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டுகிறது. நான் இளமையில், 'கண்ணையா

கம்பெனியார்' என்னும் நாடக நிறுவனத்தார் நடத்திய ஒரு நாடகத்தில், வெள்ளைத் துணிகளை ஏற்றியும் இறக்கியும் அலை அடிப்பதுபோல் காட்டிய காட்சியைக் கண்டு வியப்புற்றேன். நாடகத்தில் துணி அலையாகிறது; கம்பரது பாடலில், அலை துணியாகச் சொல்லப் பட்டுள்ளது.

இனிய இசைக்கு இங்கே தேன்பிழி மகரயாழ் ஒப்புமையாக்கப்பட்டுள்ளது. யாழ் தமிழர்களின் இசைக் கருவி. யாழில் பலவகை உண்டு. பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் என்னும் ஒரு வகை நான்கனுள் மகரயாழும் ஒன்றாகும். இது மகர (மீன்) வடிவமானது; பத்தொன்பது நரம்புகளைக் கொண்டது. 'குழலினிது யாழினிது' என்னும் குறள் பகுதி (66) யாழின் இனிமையை அறிவிக்கிறது.

யாழுக்கும் இசைக்கும் நெருக்கம் மிகுதி. பண்டு, யாழ்க் கருவியை நிலைக்களமாகக் கொண்டே பெரும் பண்களும் அவற்றின் திறங்களும் நுண்ணிதின் ஆராய்ந்து வகைப்படுத்தப் பட்டன. யாழ் நரம்பின் துணை கொண்டு ஆராய்ந்து கண்ட பண்வகைகள் 'யாழின் பகுதி' எனப் படும். அப்பண்களின் இயல்பினை விளக்கும் இசை நூலை 'நரம்பின் மறை' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். யாழ்களுள் மகரயாழ் பற்றிக் கம்பர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். மணிமேகலையில்,

> ''தகரக் குழலாள் தன்னொடு மயங்கி
> மகரயாழின் வான்கோடு தழீஇ (4—55,56)

எனவும், மேரு மந்திர புராணத்தில்,

> ''மகரயாழ்வல்ல மைந்தன் ஒருவனைக் கண்ட மத்தப்
> புகர் முகக் களிற்றின்... (வச்சிராயுதம்— 1)

எனவும், சிலப்பதிகாரத்தில், ''யாழிடைப் பிறவா இசையே என்கோ'' (2—79) எனவும், பாரதி தாசனது பாடலில்,

''வெண்ணிலாவும் வானும் போல
வீரனும் போர் வாளும் போல,
வண்ணப் பூவும் மணமும போல,
மகரயாழும் இசையும் போல,
கண்ணும் ஒளியும் போல, எனது
கன்னல் தமிழும் யானும் அல்லவோ''

எனவும், மகரயாழ் இசைக்கு மிகவும் நெருக்கமான உரிமை உடையது என்னும் செய்தி விளக்கப்பட்டுள்ளது. கம்பர் பல இடங்களில் மகரயாழ் பற்றிக் கூறியிருப்பதால், இங்கே இவ்வளவு எழுத நேர்ந்தது.

பொழுதுபோக்கு.

கோசல நாட்டு மக்கள் பலவகையில் இன்பமாகப் பொழுது போக்கினார்கள். சிலர், மணந்துகொண்ட புதுமண மகளிரோடு மகிழ்ச்சியாய்ப் பொழுதைக் கழித்தனர். சிலர் பருந்தோடு நிழல் செல்வதைப் போல், பாடலுக்கு ஏற்ப அமைந்த இசையினைத் துய்த்தனர். அமிழ்தினும் இனிய கேள்வியாகிய செவி உணவை அருந்தினர் சிலர். விருந்தினரின் முகத்தைக் கண்டதும் உணவு படைத்து இன்புற்றனர் சிலர். பாடல் :

''பொருந்திய மகளிரோடு வதுவையில் பொருந்துவாரும்
பருந்தொடு நிழல் சென்றன்ன இயல் இசைப் பயன் துய்ப்பாரும்
மருந்தினும் இனிய கேள்வி செவி யுற மாந்துவாரும்
விருந்தினர் முகம் கண்டன்ன விழா அணி விரும்புவாரும் (15)

வதுவையில் பொருந்துதல்=தேன் நிலவு நடத்துவது போன்றது. இயல்=இயல் தமிழ். இசை=இசைத்தமிழ் இயல் தமிழ் என்பது பாட்டு. இசைத் தமிழ்=பாட்டை அதற்கு ஏற்ற இசையோடு பாடுதல். பாடலின் கருத்துக்கு ஏற்ற இசை இருக்க வேண்டும். திருமணப் பாடலை முகாரி

இசையில் பாடலாமா? கருத்துக்கு மட்டும் அன்று;பாடலின் யாப்புக்கு ஏற்ற இசையும் இருக்க வேண்டும். அதாவது; வெண்பாவைச் சங்கராபரணம் என்னும் இசையில் பாடல் வேண்டும் என்பது போன்றது இது.

**''பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்''** (573)

என்னும் குறள் ஈண்டு ஒப்பு நோக்கற்பாற்று. ஏதோ ஒரு பொருளும் அதன் நிழலும் போல என ஒப்புமை கூறாமல் 'பருந்தொடுநிழல் சென்றன்ன' எனக்கூறியிருப்பதில் உள்ள பொருத்தம் என்ன? கீழே இருக்கும் பொருளின் நிழல் விழுந்து தெரிவதில் வியப்பில்லை. பருந்து மிக்க உயரத்தில் பறக்கும் பறவை. அது எவ்வளவு உயரே பறந்தாலும், அதன் நிழல் கீழே தெரிந்து தொடர்ந்து கொண்டிருப்பது வியப்பாகும். மற்றும், நிலைப் பொருளின் நிழல் தொடர்வதில்லை. ஒரேவிதமாக இருக்கும். மிக்க உயரத்தில் பறக்கும் பருந்தின் நிழல் அதைத் தொடர்ந்து கொண்டிருப்பது எண்ணத் தக்கது.

அடுத்தது கேள்வி உணவு. வள்ளுவர் கேள்விச் செல்வத்தைச் 'செவிக்கு உணவு' என்றே கூறிவிட்டார்.செவிக்கு உணவு இல்லாத போழ்தே சிறிது வயிற்றுக்கும்தரலாமாம்

**''செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்''** என்பது குறள். **(412)**

கம்பரும், உண்ணுதல் என்னும் பொருள் உடைய 'மாந்துதல்' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். கம்பர் மற்றோரிடத்தில் செவி நுகர் கனிகள் என்றும் கூறியுள்ளார்.

**''கேள்வியும் கல்வி யாகும்''**

என்பது திவாகரநிகண்டு நூற்பா. இந்தக் கேள்வி உணவு அமிழ்தினும் (மருந்தினும்) இனியதாம்.

''செவி உணவிற் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து'' (413)

என்னும் குறளும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது,

இறுதியில் உள்ள ''விருந்தினர் முகம் கண்டன்ன விழா அணி விரும்புவாரும்'' என்னும் அடியில் உள்ள 'கண்டன்ன' என்பதைக் 'கண்டு அன்ன' எனப் பிரித்து, விருந்தினரைக் கண்டு அன்னம் (சோறு) படைக்கும் சிறப்பு நிகழ்ச்சி என்பதாகச் சிலர் கருத்துக் கூறியுள்ளனர். இவ்வாறு பொருள் கொள்வதில் சிறப்பு இல்லை. இதன் உண்மைக் கருத்தாவது :—சிலர் சில விழாக்களை நடத்தி மகிழ்கின்றனர். அவர்களுடைய மகிழ்ச்சி எத்தகையது எனில், விருந்தினரைக் கண்டதும் உண்டாகின்ற மகிழ்ச்சி போன்றது—என்பதாகும்.

'கண்டன்ன விழா' என்பதைக் கண்டு அன்னம் விழா' எனப் பிரிக்கலாகாது. 'கண்டன்ன' என்பது 'கண்டாற் போன்ற' என்றும் பொருளது. விருந்தினரைக் கண்டால் நல்லோர்க்கு முகம் மலரும் என்னும் கருத்தை, வள்ளுவர்

''அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்'' (84)

என்னும்குறளில் குறிப்பிட்டுள்ளார். எனவே, 'கண்டன்ன' என்பதற்குக் 'கண்டது போன்ற' என்ற பொருள் கொள்ளலே சாலப் பொருந்தும்.

## முதுகுக்கு ஓய்வு

நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும். வெளியிலிருந்து வந்த கப்பலில் உள்ள பொன் முதலிய பொருள்களை எல்லாம் இறக்கிவிட்டுச் சுமந்து வந்த கப்பலின் முதுகுக்கு நெய்தல் நிலம் ஓய்வு கொடுக்குமாம்.

''நிறைபரம் சொரிந்து வங்கம் நெடுமுதுகு
ஆற்றும் நெய்தல்'' (19)

என்பது பாடல் பகுதி. 'முதுகு ஆற்றும்' என்னும் தொடர் மிக்க இலக்கிய இன்பத்தைத் தருகிறது.

**விருந்தினர் உண்ண:**

உழவர்கள் நெல்லை அறுத்து அடித்துத் தூற்றிப் புடைத்து, வயலிலேயே ஏழையர் பலர்க்கும் ஓரளவு ஈந்து, மிகுதியை விருந்தினர் உண்ணுவதற்காக வீட்டிற்குக் கொண்டு வருவார்களாம். வழிமறையும்படி பலவண்டிகளில் நிறைத்துக் கொண்டுவருவார்களாம். மண்மடந்தை சுமை தாங்காமல் நெளியும்படி நிறைத்த நெல்லைக் கொணர்வார் களாம்.

''வறியவர்க்கு உதவி, மிக்க விருந்து உண மனையின்
உய்ப்பான்
நெறிகளும் புதையப் பண்டி நிறைத்து மண் நெளிய
ஊர்வார்'' (20)

விருந்தினர் உண்ண வீட்டிற்குக் கொணர்வர் என்பது,

''இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு'' (81)

என்னும் குறளை நினைவுகூரச் செய்கிறது.

**கொன்றைக் குழல் :**

புல்லாங் குழல் என்பது, புல் மர இனமாகிய மூங்கிலின் சிறு கோலில் துளை போட்டுச் செய்யப் பட்டது. இந்தக் குழலையே பெரும்பாலோர் அறிவர். கொன்றை மரத்தின் காய் நீளமாக இருக்கும். அதிலும் துளை போட்டு ஆயர்கள் குழல் செய்து இசைப்பர். இந்தக் குழல்களின் இசை கேட்டு முன்றிலில் கன்றுகள் உறங்குமாம். பாடல் பகுதி:

"கொன்றை வேய்ங் குழல் கோவலர் முன்றிலில்
கன்று உறங்கும்..." (34)

**செல்வமும் கல்வியும் :**

கோசல நாட்டில் பெண்கள் செல்வத்தோடு கல்வியும் நிரம்பப் பெற்றிருப்பதால், நாடோறும், வருந்தி வரும் ஏழையர்க்கு வேண்டிய உதவி புரிகின்றனர்; விருந்தும் படைக்கின்றனர்.

"பெருந்தடங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே" (36)

மலர் மொட்டாக இல்லாமல் பூத்தபிறகுதான் மணம் வீசி மகிழ்விக்கும். பெண்டிர்க்குச் செல்வமும் கல்வியும் நிரம்பிப் பூத்ததால், தம் இன்பத்தை விரும்பாமல், ஏழையர் துயரைப் போக்குகின்றனர்-

**கலை தெரி கழகம் :**

இள நங்கையர் பந்தாடும் இடம் சந்தனக் காடு அன்று; சண்பக மலர்க்காடே. மயில் ஊரும் முருகனைப் போன்ற இளைஞர்கள் கலைபயிலும் கழகம், சோலைகள் அன்று; முல்லை நிலக்காடே. பாடல்:

"பந்தினை இளையவர் பயில் இடம், மயில் ஊர்
கந்தனை அனையவர் கலைதெரி கழகம்,
சந்தன வனமல – சண்பக வனமாம்;
நந்தன வனமல நறைவிரி புறவம்" (48)

பந்தினை இளையவர் பயில் இடம் சந்தன வனமல சண்பகவனம் எனவும், கந்தனை அனையவர் கலைதெரி கழகம் நந்தனவனமல நறைவிரி புறவம் எனவும் கொண்டு கூட்டிப் பொருள் செய்ய வேண்டும்.

இந்தக் காலத்தில் பெண்கள் பந்தாடுவது குறைந்து, ஆடவர் பந்தாடுவது மிகுந்து விட்டது. அந்தக் காலத்தில் பெண்கள் பந்தாடியதாகவே இலக்கியங்கள் கூறியுள்ளன. எனவே, பந்தினைப் பயில் இடம் என்பதைக் கொண்டு 'இளையவர்' என்பது பெண்களைக் குறிக்கும் என்பது பெற்றாம். இலக்கியச் சான்றுகளும் காண்போம்: —

மிக்க வலிமையுடைய பேரரசர்கள், பகைவர்களைப் பெண்களாகக் கருதி, அரண்மனை வெளிவாயிலில் பந்தும் பாவையும் (பதுமையும்) கட்டித் தொங்கவிட்டிருப் பார்களாம். பகைவர்கள் வரின், பந்தையும் பாவையையும் எடுத்துக் கொண்டு விளையாடலாம் என்ற கருத்தில் இவ்வாறு செய்வார்களாம். இதனை நக்கீரர், தமது திருமுருகாற்றுப் படை நூலில், தமது ஊராகிய மதுரையைச் சிறப்பித்துக்கூறுங்கால் குறிப்பிட்டுள்ளார்.—மதுரையில், பாண்டிய மன்னனது வாயிலில், கொடிகளோடு பந்தும் பாவையும் கட்டித் தொங்க விடப்பட்டுள்ளனவாம். பாடல் பகுதி:-

''செருப்புகன்று எடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்'' (67—69)

மற்றும், இச்செய்தி தணிகைப் புராணத்தில்,

''பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும் பலவும்
சென்னெறிகிற்கு
முந்தை மாதரை இயற்றுபு பின்றைமொய்ப் பகழி
வாயிலில் தூக்கி'' (சீபரிபூரணம்—68)

எனவும், திருநாகைக் காரோணப் புராணத்தில்,

''பகைவரைப் பாவைமா ரெனத் தெரிப்பப்
பந்தொடு பாவைகள் தூங்கித்
தகைசிறி தறியா வாயில்சா னாஞ்சில்
தடப்பெரு நொச்சியும்''
(திருநகரப் படலம்—90)

எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. (தூங்குதல் = தொங்குதல்)

''வரிப்புனைபந்தொடு பாவைதூங்க'' என்னும் திருமுருகாற்றுப் படை அடிக்குப் பரிமேலழகர் பின் வருமாறு உரைவிளக்கம் தந்துள்ளார்.

''நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையின் தூங்கியே விடும்படி—என்றது; பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுதற்குத் தூக்கின என்றவாறு ''

எனவே, கம்பரது பாடலில் உள்ள 'இளையவர், என்பது ஆடவ இளைஞரைக் குறிக்காமல் பெண் இளையவரையே குறிக்கும். இளையார் என்பதும் அன்னதே. இலக்கியச் சான்றுகள்:-

''இளையவர் வயப்பட்டிருந்து' (தேவாரம்— 462 – 9)
''இளையார் குழாத்திடையாள்'' (சீவக சிந்தாமணி—2585)

''தூளையார் கருமென் குழல் ஆய்ச்சியர்தம்
துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் முற்றா
இளையார் விளையாட்டொடு காதல்வெள்ளம்
விளைவித்த அம்மகன் இடம்...''
(பெரிய திருமொழி—3—8—8)

எனவே, 'பந்தினை இளையவர் பயில் இடம்; என்பதற்குப் பெண்கள பந்து ஆடும் இடம் என்பது பொருள் ஆகும்.

அடுத்தது:—பெண்கள் பந்தாடும் இடம், 'சந்தன வனம் அல சண்பகவனமாம்'' என்பதன் கருத்தாவது:- பெண்கள் சந்தன வனத்தில்தான் பந்தாடுகின்றனர், அங்ஙனம் இருந்தும், அவர்கள் மீது சண்பக மலரின் மணம வீசுவதால், 'சந்தன வனமல—சண்பகவனமாம்' என்று மாற்றிக் கூறப்பட்டுள்ளது. பெண்களின் மீது சண்பக மணம் வீசுவதாகக் கூறல் மரபு. சண்பகம்,

காஞ்சனா, மாலதி என்னும் பெயர்கள் பெண்கட்கு உண்டு. இம்மூன்றும் ஒரே பொருளன.

அடுத்தது:- "கந்தனை அனையவர் கலைதெரி கழகம் நந்தன வனம் அல—நறை விரி புறவம்" என்பதன் கருத்தாவது. ஆடவ இளைஞர்கள் கலை தெரி கழகம் நந்தனவனமே. ஆயினும், அவர்கள் மீது முல்லை மலரின் மணம் வீசுவதால், நந்தனவன மல—நறை விரி புறவம், என மாற்றிக் கூறப்பட்டுள்ளது நறை விரி புறவம் - மணம் வீசும் முல்லைக் காடு.

இளைஞர் மீது முல்லையின் மணம் வீசும் என்பதற்கு இலக்கியச் சான்றுகள்:-தலைவி தோழியிடம் சொல் கிறாள்: தலைவன் நிலவொளியிலே என் தோளைத் தழுவினான். இப்போதும், அவன் மீது இருக்கும் முல்லை மணம் என்மீது வீசுகிறது என்னும் கருத்து குறுந்தொகைப் பாடல் ஒன்றில் அமைந்துள்ளது.

"தட்டைப் பறையின் கறங்கு நாடன்
தொல்லைத் திங்கள் நெடுவெண்ணிலவின்
மணந்தனன் மன் நெடுந்தோளே
இன்றும் முல்லை முகை நாறும்மே (193:3—6)

இக்கருத்து சிதம்பரச் செய்யுட் கோவை என்னும் நூலிலும் உள்ளது. பாடல்:

**தேன்மறிக்கும் வெறித் தொங்கல் அறல் கூந்தல் திருந்திழைகண்**
**மான்மறிக்குள் திருமேனி மலர்முல்லைப் புறவமே" (57)**

அடுத்து, 'கலை தெரிகழகம்' என்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டும். முன்னியது முடிக்கும் முருகனை ஒத்த இளைஞர்கள் கழகத்தில், படைப் பயிற்சி, நூற் பயிற்சி முதலியன பெறுகின்றார்களாம். இங்கே கழகம் என்பது, கலை பயிலும் உயர்ந்த இடமாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், திருக்குறள் முதலிய நூல்களில், கழகம் சூதாடும்

இடமாகவும், மக்களைக் கெடுக்கும் இடமாகவும் கூறப் பட்டுள்ளது. இதற்குச் சில சான்றுகள் காண்பாம். திருக்குறளில்:—

''கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்'' (935)

''பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்'' (937)

*திரிகடுகத்தில்:—*

''கழகத்தால் வந்த பொருள் காமுறாமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல்— ஒழுகல்
உழவின்கண் காமுற்று வாழ்தல் இம்மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு'' (42)

*ஆசாரக் கோவையில்:—*

''சூதர் கழகம் அரவம் அறாக்களம்
பேதைகள் அல்லார் புகார்அர் புகுவரேல்
ஏதம் பலவும் தரும்'' (98)

*சீவக சிந்தாமணியில்:-*

''ஆகம் தானோர் மணிப்பலகையாக முலைகணாயாகப்
போகக் கேற்றபுனை பவழ அல்குல் கழகமாக
ஏக இன்பக் காமக் கவறாடல் இயைவ தன்றேல்
ஆக நோற்றிட் டடங்கல் ஆண்மைக்கு
அழகென்பவே (101)

*நைடதத்தில்:*

''கள்ளுண விரும்புதல் கழகம் சேர்தல் மால்
உள்ளுறப் பிறர்மனை நயத்தல் ஒன்னலர்க்கு
எள்ளரு ஞாட்பினுள் இரியல் செய்திடல்
வள்ளியோய் அறநெறி வழுக்கும் என்பவே'' (20)

இவ்வாறு இந்நூல்களில் கழகம் தாழ்ந்ததாகக் கூறப் பட்டிருப்பினும், வேறு சில நூல்களில் உயர்ந்ததாகக் கூறப்

பட்டுள்ளது. சான்றுகள்:- நம்மாழ்வாரின் திருவாய் மொழியில்:-

''குழகி எங்கள் குழமணன் கொண்டு கோயின்மை செய்து
கன்மம் ஒன்றில்லை
பழகியாம் இருப்போம் பரமே இத்திருவருள்கள்
அழகியார் இவ்வுலகம் மூன்றுக்கும் தேவிமை தருவார்
பலருளர்
கழகம் ஏறேல் நம்பீ உனக்கும் இளைதே கன்மமே''
(கழகம் = திருவோலக்கம் — 6-2-6)

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணத்தில்:-

''கண்ணுதல் பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ''(57)

இந்தக் காலத்தில் இலக்கிய மன்றங்களையும் கல்வி நிறுவனங்களையும் செந்தமிழ்க் கழகம், பல்கலைக் கழகம் என்றெல்லாம் அழைக்கின்றோம். இவ்வாறாக, கழகம் என்பது, அன்று தொட்டு இன்றுவரை, இரு துருவங்கள் போல் உயர்வாகவும் தாழ்வாகவும் கூறப்பட்டிருப்பதில் உள்ள உண்மை யாது? இதைக் கண்டு பிடிக்கத் துணை புரியும் சேந்தன் திவாகர நிகண்டில் உள்ள நூற்பா ஒன்று வருமாறு (இடப் பெயர்த் தொகுதி—160):-

''செல்லல் தீய்க்கும் பல்புகழ்ச் சேந்தனில்
வல்லுநர் நாவலர் வாய்ந்த இடமும்
மல்லும் சூதும் படையும் மற்றும்
கல்விபயில் களமும் கழகம் ஆகும்''

இந்நூற்பாவில், நாவலர் (அறிஞர்கள்) கூடும் இடம், மற்போர் பயிலும் இடம், சூதாடும் இடம், படைப் பயிற்சி பெறும் இடம், கல்வி பயிலும் இடம் ஆகியவை 'கழகம்' எனக் கூறப்படும் என்ற கருத்து உள்ளது.

இந்நூற்பாவிலிருந்து உறிஞ்சி எடுத்துக் கொள்ளக் கூடிய கருத்தாவது:- படைப் பயிற்சியும் கல்விப் பயிற்சியும் நடைபெற்ற கழகத்தில், நாளடைவில், இப்பயிற்சி ஆர்வம் குறைந்ததால் மங்கிப் போக— மறைந்து போக, அந்த இடத்தைச் சோம்பேறித் தீயவர்கள் பிடித்துக் கொண்டு சூதாடியிருப்பர். சூதாடினும், அந்த இடத்திற்குப் பழைய 'கழகம்' என்ற பெயரே இருந்திருக்கக் கூடும். இது கலை தெரி கழகத்தின் வரலாறாகும்.

ஈண்டு, சுந்தரர் தம் தேவாரத் திருத்தொண்டத் தொகைப் பதிகத்தில், வேடர்குல இளைஞனாகிய கண்ணப்பனைக் குறிப்பிட்டு, "கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பற்கு அடியேன்" எனப் பாடியிருப்பது ஒப்பு நோக்கத் தக்கது.

மற்றும் ஒன்று:— இளைஞர்கள் கலைதெரி கழகம் என்னாது, 'கந்தனை அனையவர் கலைதெரி கழகம்' என இளைஞர்க்கு முருகனை ஒப்புமை கூறியிருப்பதில் உள்ள பொருத்தம் என்ன என்பதையும் நோக்க வேண்டும். முருகன் அழகிய இளைஞனாகவும், போர்ப் படை (வேல்) உடையவனாகவும், போர் புரிந்தவனாகவும் கூறப்படுகின்றான். இதனைத் திருமுருகாற்றுப் படை நூலின் பிற்சேர்க்கையாகச் சில பதிப்புகளில் சேர்க்கப் பட்டுள்ள பத்துப் பாடல்களுள் முதல் பாடலில் காணலாம் பாடல்:

**"குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்**
**புன்தலைய பூதப் பொருபடையாய்—என்றும்**
**இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே**
**உளையாய்என் உள்ளத் துறை"**

இந்தப் பாடலில் மற்ற சிறப்புகளோடு உள்ள 'என்றும் இளையாய்' என்னும் தொடர் குறிப்பிடத்தக்கது. மற்றும், "என்றும் அழியாத இளமைக்கார" என்னும் திருப்புகழ்ப் பகுதியும் ஈண்டு எண்ணத் தக்கது. எனவேதான்,

கலைதெரி இளைஞர்க்குக் கந்தன் (முருகன்) உவமை யாக்கப்பட்டுள்ளான்; 'பந்தினை இளையவர்' என்னும் கம்பரின் பாடலில் இவ்வளவு சிறப்புகள் பொதிந்திருப்பது உவகை ஊட்டுகிறது.

**செவி நுகர் கனிகள்:**

மாலைகள் தேனைச் சொரிகின்றன. பாதைகள் (வழிகள்) மாணிக்கமும் பொன்னும் சொரிகின்றன. காற்றுகள் குளிர்ச்சியாகிய அமிழ்தத்தைச் சொரிகின்றன. பழைய காப்பிய நூல்கள் செவி உண்ணும் கருத்துக் கனிகளை இசையுடன் சொரிகின்றன.

> **"கோதைகள் சொரிவன குளிர் இள நறவம்**
> **பாதைகள் சொரிவன பருமணிகனகம்**
> **ஊதைகள் சொரிவன உயிர் உறும் அமுதம்**
> **காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்"** (51)

இள நறவம் என்பது புதுப் புதுத் தேனைக் குறிக்கின்றது. பாதைகளில் செல்பவர்கள் மணிவகைகளையும் பொன்னையும் சிந்திச் செல்கின்றனர்—அவற்றை எடுப்பார் எவரும் இலர். இது நாட்டின் செல்வச் சிறப்பைக் குறிக்கிறது, ஊதைகள் (காற்றுகள்) எனக் காற்று பன்மையில் கூறப்பட்டிருப்பதில் உள்ள நுட்பமாவது :—கிழக்கேயிருந்து வரும் கொண்டல் காற்றும், தெற்கேயிருந்து வரும் தென்றல் காற்றும், மேற்கேயிருந்து வரும் கோடைக் காற்றும், வடக்கேயிருந்து வரும் வாடைக் காற்றும் எனக் காற்று நால்வகைப்படும் என்பதாம்.

நால்வகைக் காற்றுகளும் நுகர்வில் வேறுபடுவன எனினும், கோசல நாட்டில் எல்லாமே அமிழ்தம் போன்ற இனிமையையே செய்கின்றன என்பது கருத்து. காப்பியங்கள் கனி போன்ற செவியுணவாகியஉயரிய கருத்துகளை அளிக்கின்றனவாம். வள்ளுவர் கேள்வியைச 'செவியுணவு' என்றுகூறியிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. இது நாட்டினரின் கல்வி கேள்விச் சிறப்பை உணர்த்துகிறது.

நான்குமே சொரிந்ததாகக் கம்பர் கூறியுள்ளார். சொரிதல் என்பது மிகுதியாகப் பொழிதல்—கொட்டுதல் என்னும் பொருளது. வேறு பாடல் சான்று:—

"வானவர் பூ மழை சொரிந்தார்" (பெரியபுராணம்—திருநகரச் சிறப்பு—45)

சொரிதல் என்பது, மிகுதியோடு தொடர்ச்சியையும் குறிக்கும்.

## நகரப் படலம்

அகழி :

சக்கர வாள கிரியைச் சூழ்ந்த புறக்கடலைப் போல் கோட்டை மதிலைச் சூழ்ந்திருந்த அகழி, விலைமகளிரின் மனம்போல் மிகவும் கீழே யேகியும், கல்லாதான் இயற்றிய கவிபோல் தெளிவின்றியும், யாரும் துய்க்க முடியாத திருமணம் ஆகாமலே இருக்கின்ற கன்னியரின் அல்குல் போல், யாரும் நீராட முடியாத காவலினதாகியும், நல்ல நெறியிலிருந்து விலக்கி விழுங்கும் தீய பொறிபுலன்கள் போன்ற முதலைகளை உடையதாகியும் காணப்பட்டதாம். பாடல் :

"அன்னமா மதிலுக்கு ஆழிமால் வரையை
அலைகடல் சூழ்ந்தன அகழி,
பொன்விலை மகளிர் மனம்எனக் கீழ்போய்ப்
புன்கவி எனத் தெளி வின்றிக்
கன்னியர் அல்குல் தடம்என யார்க்கும்
படிவுஅரும் காப்பின தாகி,
நன்னெறி விலக்கும் பொறிஎன எறியும்
காத்தது நவிலலுற்றது நாம்" (13)

புறவெளியில் சக்கர வாளம் என்னும் மலை இருப்பதாகவும் அதைப் புறக்கடல் சூழ்ந்திருப்பதாகவும் கூறுவது புராணச் செய்தி. அந்தக் கடல்போல் அகழி, கோட்டை மதிலைச் சூழ்ந்துள்ளதாம். அது மிகவும் ஆழமாகக் கீழே

போயிற்று என்பதற்கு, பொன்விலை மகளிரின் மனம் கீழே தாழ்ந்த நிலையில் இருப்பது ஒப்புமையாக்கப் பட்டுள்ளது. இங்கே, 'கீழே போய்' என்பது, கீழ்த்தனமாய் இழிந்ததாய்ப் போயிற்று எனவும், மிகவும் ஆழமாகக் கீழ்உலகம் வரை போயிற்று எனவும் இருபொருள் தந்து நிற்கிறது. சிவப்பிரகாச அடிகளார் பிரபுலிங்கலீலை-மாயை உற்பத்தி கதி என்னும் பகுதியில், அகழி, கீழ் உலகின் கீழே மண்ணுலகைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேடனது முடிவரை தாழ்ந்து விட்டதாகக் கூறியுள்ளார்:

''மதில் சூழ் கிடந்த தொல்லகழி தாழ்ந்து
ஓர் அனந்தன் முடிமேல் நின்றன்று'' (14)

என்பது பாடல் பகுதி. கீழே போனது என்பதற்கு, பொன் விலை மகளிரின் மனம் கீழ்த்தரமானது என்பது ஒப்புமை யாக்கப்பட்டுள்ளது. எளிய பொருள் கொடுத்தால் போதாதாம். பொன் தரவேண்டும். பொருள் பெண்டிர் என்றும், பொருள் பொருளாளர் (பொருளையே குறிக்கோளாகக் கொண்டவர்) என்றும் வள்ளுவர் கூறியுள்ளது, ஈண்டு நோக்கத்தக்கது.

போலிக் கவிஞரின் கவிகள் பொருள் தெளிவின்றி இருப்பது போல், அகழி நீர், பல்வேறு பொருள்களின் கலப்பால் தெளிவில்லாமல் உள்ளதாம். கல்லாதான் கவியை எள்ளாதார் இலர். ஈண்டு,

''கல்லாதான் சொல்காமுறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று'' (402)

''கல்லாதவரும் நனிநல்லர் கற்றார் முன்
சொல்லா திருக்கப் பெறின்'' (403)

''கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்'' (404)

என்னும் குறட்பாக்கள ஒப்புநோக்கத் தக்கன.

அடுத்தது: அகழியில் யாரும் படியாதபடி (குளிக்கா வண்ணம்) காவல் உடையதாக, அதாவது யாருக்கும் பயன் படாததாக உள்ளதாம். இந்தப் பயன்படாமைக்கு, திருமணம் செய்து கொள்ளாமல் கன்னியாகவே இருக்கும் பெண்களின் பெண் உறுப்பு யாருக்கும் பயன்படாமை ஒப்புமையாக்கப்பட்டுள்ளது. மீண்டும் திருவள்ளுவரிடம் செல்ல வேண்டியுள்ளது. ஒருவர்க்கும் உதவாத கருமி செல்வம் பெற்றிருப்பது,மிகவும் அழகிய பெண்ணொருத்தி, மணந்து கொள்ளாமல் ஒருவர்க்கும் தன்னால் பயன் இல்லாமல், தனியாகவே இருந்து பின்னர் மூப்படைந்தது போன்றது என வள்ளுவர் கூறியுள்ளார்.

''அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று'' (1007)

என்பது குறள். இப்பாடலில் உள்ள ''மிக நலம் பெற்றாள் தமியள் மூத்தற்று'' என்னும் பகுதி, 'கன்னியர் அல்குல் தடம் என' என்னும் கம்பரின் பாடல் பகுதியோடு ஒப்பு நோக்கற்பாற்று. கன்னியர் அல்குலைத் 'தடம்' (நீராடும் தடாகம்) எனக் குறிப்பிட்டிருப்பது எண்ணத்தக்கது. வள்ளுவர் இடத்திற்கு ஏற்பக் கருத்தும் உவமையும் கூறியிருப்பது போலவே கம்பரும் செய்துள்ளார்.

**இல்லை—இல்லை:**

அயோத்தி நகரில் உள்ள எல்லாரும் கல்வி கற்றிருப் பதனால், கல்வியில் திறமுடையவர் என யாரையும் சொல்வதற்கும் இல்லை— கல்வியில் திறம் குறைந்தவர் எனவும் யாரையும் சொல்வதற்கு இல்லை. அனைவரும் அனைத்துப் பெருஞ்செல்வங்களையும் பெற்றிருத்தலின், அங்கே இல்லாதவர்களும் இல்லை—உடையவர்களும் இல்லை.

''கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இல்லை

**எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே**
**இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை**
**மாதோ! (73)**

கல்வியில் வல்லவர் என ஒருவர் இருந்தால் அல்லவா, கல்வியில் வல்லமை இல்லாதவர் என ஒருவரைக் கூற முடியும்! பொருள் இல்லாதவர் என ஒருவர் இருந்தால் அல்லவா, பொருள் உடையவர் என ஒருவரைக் கூற முடியும்?

கம்பர் நயமாக இப்பாடலை அமைத்துள்ளார்.

இப்பாடலின் இறுதியில் உள்ள 'மாதோ' என்பதைச் சிலர் அசை என்பர். அசை என்பது பொருள் இன்றி இடம் நிரப்புவது. எனவே மாதோ என்பதை அசை எனக் கூறல் பொருந்தாது. இது 'ஆகா!' என்பது போன்ற வியப்பைத் தரும் சொல்லாகும். பொருள் இன்றி இடம் நிரப்புவன வாகக் கருதப்படும் அசை என்பதற்கும் அளபெடை என்பதற்கும் பொருள் உண்டு. அசைகளையும் அளபெடைகளையும் பொருள் உடையனவாகப் பண்டைக் காலத்தில் ஆண்டார்கள். பிற்காலத்தில் சிலர்—அல்ல—பலர், அவற்றைப் பொருளற்றனவாகக் கருதி ஆளலாயினர். ஊர் என்றால் இவ்வாறு இருக்க வேண்டும் எனக் கம்பர் இப்பாடலின் வாயிலாகக் கண்டுள்ளார்.

## அரசியல் படலம்

### தயரதனின் ஒப்புமைப் பண்பு

தயரதன், மக்களிடத்தில் அன்பு செலுத்துவதில் தாய் போன்றவன்; பல நன்மைகள் செய்வதில் தவம்போன்றவன்; மக்களை நல்வழியில் செலுத்துவதில், பெற்றோரை நற்கதி செலுத்தும் சேய்போன்றவன்; மக்கட்கு நோய் போலத் துன்பம் நேரின் மருந்து போல் செயல்பட்டுக் காப்பவன்; கல்வி கேள்வி ஆராய்வோர்க்கு வேண்டிய நலம் செய்வதில், அறிவு போல் செயல்படுபவன். எவர்க்கும் இத்தகையவன்:

''தாய் ஒக்கும் அன்பின், தவம் ஒக்கும் நலம் பயப்பின்
சேய் ஒக்கும் முன்னின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால்,
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும், நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவு ஒக்கும் எவர்க்கும் அன்னான்'' (4)

மணிவாசகர் கூறியுள்ளபடி, அன்பிலே பால் நினைந்தூட்டும் தாயாவான். தவம், செய்வார்க்குப் பல நலம் தருதலால், மக்கட்கு நலம் புரிவதில் தவமாவான், பெற்றோர்க்கு முதுமையிலும் சேய் உதவுகிறான் — பெற்றோர் இறந்த பின்னும் நீர்க்கடன் முதலியன செய்தும் ஆண்டுதோறும் நினைவு நாள் கொண்டாடியும் அவர்க்கு நற்கதி கிடைக்கச் செய்கிறான்; மக்களை நன்னெறியில் உய்ப்பதில் அந்த சேய் போலாவான். கல்வி கேள்வி ஆராய்ச்சிக்கு அறிவு உதவும் என்னும் கருத்து,

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'' (355)

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு (423)

''எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பதறிவு'' (424)

ஆகிய குறள்களில் இலைமறைகாயாயிருப்பதை அறியலாம்.

**செய் எனக் காத்தல்:**

ஏழை ஒருவன், தனக்கு உள்ள மிகச் சிறிய ஒரு நிலத்தை மிகவும் கண்ணும் கருத்துமாகப் பயிரிட்டுக் காத்தல்போல், தயரதன் நாடு முழுவதையும் இனிது காத்து அரசாண்டான்.

''வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான்'' (12)

ஈண்டு சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலைப் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது: மோகினி என்னும் அரசி, தவம் செய்து பெற்ற தன் பெண் குழந்தையை, ஏழை தன் சிறிய ஒரே நிலத்தை நன்கு விளையும்படிக் கண்ணும் கருத்துமாய்க் காக்கும் செயல் போலக் காத்தாளாம்.

''மிடியன் ஒருசெய் யாளன் அச்செய் விளையக் காக்கும்
செயல் போல .....
கொடிய நோன்பு செய்து ஈன்ற கொடியை வளர்த்தாள்
மோகினியே (மாயையின் உற்பத்திகதி – 49)

என்பது பாடல் பகுதி. (கம்பரைச் சிவப்பிரகாசர் கற்றிருக்கலாமோ!) மற்றும், ஈண்டு, குறுந்தொகையில் உள்ள

''ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர் ஏர் உழவன் போல'' (131—4, 5)

என்னும் பாடல் பகுதியும், தனிப் பாடல் திரட்டு ஒன்றிலுள்ள,

''மா ஈரம் போகுது என்று விதை கொண்டு ஓட''

என்னும் பாடல் பகுதியும் ஒப்பு நோக்கத்தக்கன.

## திரு அவதாரப் படலம்

**தாமரைக் காடு:**

தேவர்க்கு அருள் செய்ய வந்த திருமால், கருமுகில் செந்தாமரை மலர்த்தொகுதி பூத்ததுபோல, இருசுடர் களையும் இருபக்கங்களிலும் ஏந்தி, திருமகளோடு ஒரு பொன் மலை உச்சியில் அமர்ந்து வருவதுபோல் கருடன் மேல் அமர்ந்து வந்தாராம்:

''கருமுகில் தாமரைக் காடு பூத்து நீடு
இருசுடர் இருபுறத் தேந்தி, ஏந்து அலர்த்
திருவொடும் பொலிய ஓர் செம்பொன் குன்றின்மேல்
வருவது போல் கருடன்மேல் வந்து தோன்றினான்''(10)

செந்தாமரைக் காடு என்பது மலரின் மிகுதியைக் குறிக்கிறது. பாவேந்தர் பாரதிதாசனது ''வாழ்வினில் செம்மையை'' என்று தொடங்கும்பாடலில், 'செந்தாமரைக் காடு பூத்தது போலே செழித்த என் தமிழே ஒளியே வாழி' என்னும் பகுதி உள்ளது. மலரின் மிகுதியைக் காடு எனக் கூறுதல் பொருந்தாது என யாரோ கருத்து தெரிவித்தாராம். இங்கே கம்பர் 'தாமரைக் காடு பூத்து' என்று கூறியுள்ளாரே. சீவக சிந்தாமணியில் 'ஆம்பல் ஆய் மலர்க்காடு' என ஆம்பல் மலரின் தொகுதி காடு எனப் பட்டுள்ளதே. மற்றும், திருவாசகத்தில்—திருச்சதகம் என்னும் பகுதியில்,

**''தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்**
**தனிச்சுடரே இரண்டு மிலித் தனியனேற்கே** (26)

என்று தாமரைக் காடே கூறப்பட்டிருக்கிறதே. திவ்வியப் பிரபந்தத்திலும் இத்தகைய அமைப்பு உள்ளது. எனவே, மலர்த் தொகுதியைக் காடு எனல் பொருந்தும்.

## தாடகை வதைப் படலம்

**வனம் எலாம்:**

இராம இலக்குமணர் விசுவாமித்திரருடன் ஒரு பாலைவனம் வழியாகப் போய்க் கொண்டிருந்தனர். காய்ந்து பிளந்த சுள்ளியிலிருந்து அகில்களும், காய்ந்து பிளந்த மூங்கிலிலிருந்து முத்துகளும், பாம்புகளின் வாய் களிலிருந்து உமிழப்பட்ட மாணிக்கங்களும் வனம் எலாம் கிடந்தன. பாடல்:

**''பேய்பிளந் தொக்க நின்று உலர் பெருங் கள்ளியின்**
**தாய்பிளந் துக்க கார் அகில்களும், குழைஇலா**
**வேய்பிளந் துக்க வெண் தரளமும், விட அரா**
**வாய்பிளந் துக்க செம் மணியுமே வனம் எல்லாம்''** (8)

சுள்ளியில் கிடைக்கும் அகில், நறுமணப் புகை (தூபம்) எழுப் பயன்படுத்தப்படும். மூங்கிலிலிருந்து வெண்தரளம் (முத்து) தோன்றும். முத்து பிறக்கும் இடங்களுள் மூங்கிலும் ஒன்று. மூங்கில் (கழை), கரும்பு, ஆவின் பல் பாம்பு, முகில், திங்கள், உடும்பு, முதலை ஆகியவை முத்து பிறக்கும் இடங்களாம்.

''கழைகன்னல், ஆவின்பல், கட்செவி, கார், இந்து,
உடும்பு, கரா முத்தம் ஈனும்''

என்பது காண்க.

**பசை அற்றது:**

அந்தப் பாலை நிலத்தில் ஈரப் பசையே இல்லையாம் இதற்கு இரண்டு உவமைகள் கம்பரால் காட்டப்பட்டுள்ளன. இருள் சேர் இருவினையுடன், காமம்—வெகுளி—மயக்கம் என்னும் மூவகைப் பகையரண்களைக் கடந்த அருளாளர் களின் மனம் உலகப் பசை-பற்று இல்லாததுபோல் பாலை இருந்ததாம். மற்றும், விலை மாதரின் மனம் எவரிடமும் உண்மையான பசை—பற்று வைக்காதது போன்றும் காணப்பட்டதாம்.

''தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகை அரண் கடந்து முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும் போல் பசையும் அற்றதே'' (15)

தாவரும் இருவினை செற்று, என்பது ''இருள் சேர் இருவினையும் சேரா'' என்னும் குறளை (5) நினை வூட்டுகிறது. காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றும் கடக்க முடியாத பகை அரண்களாக உருவாக்கப் பட்டிருப்பது உவகை தருகிறது.

**கண்டிலர்—கண்டனர்**

காட்டில் அரக்கி இராமன் மேல் சூலப்படையை எறிந்தாள். இராமன், வில்லின் ஒரு முனையைக் காலால்

அழுத்திக் கொண்டு நாணேற்றி வளைத்து அம்பு எய்தான். அவள் எறிந்த சூலப்படை, அம்பினால் இரு துண்டாகி வீழ்ந்தது:

**''மாலும் அக்கணம் வாளியைத் தொட்டதும்**
**கோலவில் கால் குனித்ததும் கண்டிலர்**
**காலனைப் பறித்து அக்கடியாள் விட்ட**
**சூலம் அற்றுவீழ் துண்டங்கள் கண்டனர்''** (47)

அப்போது அங்கு இருந்தவர்கள், இராமன் அம்பை எடுத்ததையும் வில்லை வளைத்து எய்ததையும் காண வில்லை; சூலம் இரண்டு துண்டாகி விழுந்ததைக் கண்டனர் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது, கண்மூடிக் கண் திறப்பதற்குள்—ஒருநொடிப் பொழுதில் மிகவும் விரைவாகச் செயல்பட்டுச் சூலத்தைத் துண்டித்தான் என்பது இதன் கருத்து. பின்னால், கார்முகப் படலத்தில் வரும் 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்' என்னும் பகுதிபோல் இருக்கிறது இது. தாடகை காலனைப் பறித்து விட்ட சூலம் என்பது கவனிக்கத் தக்கது. உயிரைக் கொல்லுபவன் காலன். அவனது உரிமையை—அதிகாரத்தை இந்தச்சூலம் பறித்துக் கொண்டு தான் கொல்ல இருந்தது என்று கருத்துக் கொள்ளலாம். வேறு கருத்து கூறுவாரும் உளர்.

**சுடுசரம் :**

இருள் போல் கரிய தாடகையின் வயிரம் பாய்ந்த மலைக்கல் ஒத்த நெஞ்சிலே தைக்கும்படி இராமன் விட்ட அம்பு, அவளது நெஞ்சைத் துளைத்துக் கொண்டு, பின்புறம்—முதுகுப் புறம்போய் அப்பால் வீழ்ந்தது.

**''சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல்**
**அல் ஒக்கும் நிறத்தினாள்மேல் விடுத்தலும்,**
**வயிரக் குன்றக்**

**கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று,**
**கல்லாப்**
**புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்எனப்**
**போயிற் றன்றே''** (49)

சொல் ஒக்கும் வேகச் சுடுசரம் = துறவியர் இடும் கெடுமொழி (சாபம்) யாராலும் தடுக்க முடியாதபடி விரைந்து செயல்படுவது போல், விரைந்து சென்று தாக்கும் அம்பு ஆகும். இங்கே,

**''குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது''** (29)

என்னும் குறள் எண்ணத்தக்கது. அற்பர்க்கு நல்லோர் சொல்லும் அறிவுரை, ஒரு காதால் வாங்கி மறு காதால் விடப்படுவதைப்போல, நெஞ்சிலே தைத்து முதுகுப் புறமாய் வெளியாய் விட்டது அம்பு, (சிலர் மறு காதால் விடுவதில்லை-ஒரு காதால் வாங்கினால் அல்லவா மறுகாதால் விட முடியும்!)

**''புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லு வார்''** (719)

**''அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்**
**அல்லார்முன் கோட்டி கொளல்''** (720)

என்னும் குறள்கள் ஈண்டு எண்ணத் தக்கன.

**படியிடை வீழ்ந்த பதாகை:**

குருதி சொரியத் தாடகை வீழ்ந்து இறந்தது, முடி சூடிய இராவணனுக்குப் பின்னால் விளையப் போகும் அழிவை முன் கூட்டி அறிவிக்கும் குறியாகக் கொடி அறுந்து விழுந்தது போல் காணப் பட்டது:

"பொடியுடைக் கானம் எங்கும் குருதிநீர் பொங்க வீழ்த்த
தடியுடை எயிற்றுப் பேழ்வாய்த் தாடகை தலைகள்
தோறும்
முடியுடை அரக்கற்கு அந்நாள் முந்தி உற்பாதம் ஆகப்
படியிடை அற்று வீழ்ந்த வெற்றியம் பதாகை
ஒத்தாள்" (51)

கொடி அறுந்து வீழ்தல் தீய குறி—கெட்ட சகுனம் என்பது இப்பாடலால் அறியப் படுகிறது.

## வேள்விப் படலம்

வறுமை மருந்து :

தாடகை வீழ்ந்ததும் தேவர்கள் பூ மழை பொழிந்தார்களாம். பின், விசுவாமித்திரர் இராமனுக்குச் சில படைக் கலங்கள் வழங்கினார். அப்படைக்கலங்கள், மக்களின் வறுமைப் பிணிக்கு மருந்துபோல் உதவி செய்யும் வெண்ணெய் நல்லூர்ச் சடையனின் சொல் போன்றவையாம்:

"விண்ணவர் போய பின்றை விரிந்த பூமழையினாலே
தண்ணெனும் கானம் நீங்கித் தாங்கரும் தவத்தின்
மிக்கோன்,
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன்
வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே அன்ன படைக்கலம்
அருளினானே" (1)

இப்பாடலில் உள்ள 'மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து' என்னும் பகுதி,

"பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எனக்கே"
(173— 11, 12)

என்னும் புற நானூற்றுப் பாடல் பகுதியை நினைவுறுத்து கின்றது. சடையப்ப வள்ளல் சொன்னசொல் தவறுவ தில்லை; அதுபோல், விசுவாமித்திரன் அளித்த படைக்கலம் எய்தால் தவறுவதில்லையாம். தம்மைப் புரந்த சடையப்பருக்கு, இப்பாடல் வாயிலாகக் கம்பர் நன்றிக் கடன் செலுத்தியுள்ளார்.

**நீண்ட கை:**

விசுவாமித்திரன் இராமனுக்கு மாவலியின் வரலாறு கூறுகிறான். திருமால் குள்ள அந்தணனாய் (வாமனன்) வடிவெடுத்து மாவலிபால் சென்று பின்வருமாறு கூறிக் கேட்கிறார்:

விரும்பிக் கேட்பவர் விரும்பியதற்கு மேலாக— கேட்பதற்குக் கூடுதலாக எடுத்து வீசி வீசிக் கொடுத்து அதனால் நீண்டு போன கையை உடையவனே! நின்பால் உதவி வேண்டுவோர் மாண்புடையர்; உதவி வேண்டாதவர் மாண்பு இல்லாதவர்—என்று கூறினான்.

**''ஆண்தகை அவ்வுரை கூற அறிந்தோன்**
**வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி**
**நீண்ட கையாய் இனி நின்னுழை வந்தோர்**
**மாண்டவர்; அல்லவர் மாண்பிலர் என்றான்''** **(14)**

வாமன அந்தணன் மாவலியை மடக்குவதற்காகச் சூழ்ச்சியுடன் கூறும் உரை இது. அதாவது, உன்னிடம் உதவி வேண்டுபவர் உயர்ந்தவர்; வேண்டாதவர் உயர்ந்தவர் அல்லர் என்று கூறித் தனக்கு உதவுமாறு தூண்டுகிறான். கரவாதவர் முன் இரத்தலும் ஓர் அழகுடைத்து— இரத்தலும் ஈதலே போலும் என்னும் கருத்துகள் கொண்ட,

**''கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று**
**இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து''** **(1053)**

''இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு'' (1054)

என்னும் குறள் பாக்கள் ஈண்டு எண்ணத்தக்கன.

## அகலிடைப் படலம்

பொன்னியும் கங்கையும் :

மும்மூர்த்திகள் என்னும்படி மூவராக உள்ள விசுவாமித்திரர்; இராமன், இலக்குமணன் ஆகியோர் காட்டில் செல்லும் வழியில் கங்கை யாற்றைக் கண்டனராம்:

''அங்குநின் றெழுந்து அயன்முதல் மூவரும் அனையார்
செங்கண் ஏற்றவன் செறிசடைப் பழுவத்தில் நிறைதேன்
பொங்குகொன்றை ஈர்த்து ஒழுகலால் பொன்னியைப்
பொருவும
கங்கை என்னும் அக்கரை பொருதிரு நதிகண்டார்''
(5)

தொண்டரடிப்பொடியாழ்வார் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள திருமாலை என்னும் தமது நூலில், காவிரிக்குக் கங்கையை ஒப்புமையாகக் கூறினார் பாடல்:

''கங்கையின் புனித மாய காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம் (894)

ஆனால், கம்பர் தமது பாடலில், 'பொன்னியைப் பொருவும் கங்கை' எனக் கங்கைக்குக் காவிரியை ஒப்புமையாக்கிக் காட்டியுள்ளார். பொன்னி = காவிரி. கங்கைக்கும் காவிரிக்கும் ஒப்புமையில் உள்ள பொதுத் தன்மை உருவாகும். கங்கையும் பொன்னிறமாகத் தோன்றுகிறதாம் – காவிரியும் பொன்னிறம் கலந்தது. கங்கைக்குப் பொன்னிறம் கலந்தது எப்படியாம்?

கங்கை விண்ணிலிருந்து சிவன் தலையில் (முடியில்) விழுந்து, பின்னர்ச் சிவன் தலையிலிருந்து மண்ணில்

விழுந்தது என்பது புராணச் செய்தி. சிவன் தலையில் கொங்கை அணிந்திருப்பவன். கொன்றை வேந்தன் அல்லவா சிவன். கொன்றை மலர் பொன்னிறமானது. எனவே பொன்னிறமான கொன்றையணிந்த சிவன் தலையிலிருந்து விழும் கங்கையும் பொன்னிறக் கொங்கை மலர்களை அடித்துக் கொண்டு வருகிறது. அதனால் கங்கை மேலோட்டமாகப் பார்ப்பதற்குப் பொன்னிறமாகத் தெரிகிறது; அதனால் பொன்னியைப் போன்றுளது என்று கம்பர் ஒப்புமைக் காரணம் கூறியுள்ளார்.

கம்பர், பாடலின் வாயிலாக வடக்கே சென்றும், தம்மை வளர்த்த காவிரியை மறக்கவில்லை.

காவிரிக்குப் பொன்னி என்னும் பெயர் உண்டு. அப்பெயர் எவ்வாறு வந்தது? காவிரி நீரை மேலோட்டமாகப் பார்த்தால் பொன் துகள் மின்னும். காவிரிக்கரையில் நான்கு ஆண்டுகள் வாழ்ந்த நான், நிறைநீர் வருங் காலத்தில் இந்தத் தோற்றத்தை நேரில் கண்டு வியந்துள்ளேன். இதற்கு இலக்கியச் சான்றுகளும் உள்ளன. பட்டினப் பாலைஎனும் சங்க நூலில்,

"புனல் பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனி" (7, 8)

'பொன் கொழிக்கும்' என்பதற்கு, செல்வம் கொழிக்கும் என்னும் பொருளும் கூறலாம் எனினும். பொன்னிறப் புனல் கொழிக்கும் என்னும் பொருளும் மறைந்துள்ளது. மற்றும் ஓர் எடுத்துக்காட்டு பாரதிதாசனது பாடலில் உள்ளது:

"பொன்விளைந்தாற் போலும் நறும்பொடி
விரிந்த......காவிரி"

என்பது அவரது பாடல் பகுதி. பொன்போன்ற பொடி (துகள்) காவிரி நீரில் கலந்துள்ளது என்னும் செய்தி இப்பாடலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே,

கங்கையையும் காவிரியையும் கம்பர் ஒப்புமையாக்கி உள்ள பொருத்தத்தை இவற்றால் அறியலாம்.

## மிதிலைக் காட்சிப் படலம்

**ஆடக அரங்கு :**

மூவரும் மிதிலை நகரின் தெருக்களில் சென்று கொண்டிருந்தபோது பலவகைக் காட்சிகளைக் கண்டார் களாம். அவற்றுள் ஒன்று நடனம் ஆடும் அரங்கக் காட்சி. பெண்டிர் நடனம் ஆடுங்கால், பாடல் இசை, வீணை இசை, மத்தள இசை முதலியவை ஆடலுக்கு ஏற்ப இசைக்கப்படுகின்றன. மங்கையர் கைவழி கண் செல்ல, கண்வழி மனம் செல்ல, ஆடினராம்:

**''நெய்திரள் நரம்பின் தந்த மழலையின் இயன்ற பாடல்**
**தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்க,**
**கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல**
**ஐயநுண் இடையார் ஆடும் ஆடக அரங்கு கண்டார்''**

**(8)**

மனம் செல்லும் வழியில்தான் கண்ணும் கையும் செல்லவேண்டும். ஆனால், இங்கே, கைவழி—கண்வழி மனம் சென்றதாகக் கூறப்பட்டிருப்பது, அம்மகளிர்க்கு உள்ள ஆடல் பயிற்சியின் மிகுதியை அறிவிக்கிறது. மனம் ஒன்றாத வழி உறுப்புக்களின் செயல்களால் பயன் விளையாது. மனம் ஒன்றிய வழியில் பலகாலும் உறுப்புகள் செயல்பட்டிருக்குமாயின், மனம் வேலை செய்யாதிருப்பி னும், உறுப்புகள், இயந்திர இயக்கம்போலத் தம்மில் தாமே இயங்கும். பயிற்சி மிகுதியால் விளையக்கூடியது இது எனவே, இப்பாடலால், ஆடும் மகளிரின் ஆட்டத் திறமையின் மிகுதி கூறப்பட்டுள்ளது.

தட்டச்சு அடிப்பவர் கண்களால் பார்க்காமலேயே கைவிரல்களால் பொத்தானைத் தட்டுவது ஈண்டு நினைவு கூரத் தக்கது.

இடுப்பு மடிப்பு விழுந்து படுத்திருப்பவர்களால் வளைந்து நெளிந்து ஆட முடியாது; இருக்கிறதோ— இல்லையோ என ஐயுறும்படி மிகவும் மெல்லிய இடை உடையவர்களாலேயே ஆட முடியும் என்பதை 'ஐய நுண் இடையார்' என்னும் பகுதி அறிவிக்கிறது. உறுப்புகளின் செயல்களெல்லாம் ஒன்றோடொன்று ஒத்த கருத்துடையனவாய் அமைந்திருக்க வேண்டும் என்பதும் இப்பாடலால் புலனாகிறது.

பொன்னி அன்ன ஆவணம் :

மிதிலையின் கடைத்தெருக்களில், மணி, பொன், ஆரம், கவரிவால், அகில், மயில் தோகை, யானைத் தந்தம் முதலிய பொருள்கள் இருமருங்கிலும் உள்ளனவாம். பொன்னியின் (காவிரியின்) இருகரைகளிலுங்கூட, இப்பொருள்கள் நீரால் அடித்துக் கொண்டு வரப்பட்டு இரு கரைகளிலும் ஒதுங்கியுள்ளனவாம். கடைத்தெருவிற்குப் பொன்னி இவ்வாறு ஒப்புமையாக்கப்பட்டுள்ளது.

''வரப்பறு மணியும் பொன்னும் ஆரமும் கவரி வாலும்
சுரத்திடை அகிலும் மஞ்ஞைத் தோகையும் தும்பிக்கொம்பும்
குரப்பணை நிரப்பும் மள்ளர்குவிப்புறக் கரைகள்தோறும்
பரப்பிய பொன்னி அன்ன ஆவணம் பலவும் கண்டார்'' (10)

தும்பிக் கொம்பு=யானைத் தந்தம், ஆவணம்=கடைத் தெரு. பொன்னியின் கரைகளில் ஒதுக்கப்பட்டுள்ள இப்பொருள்களை, உழவர்கள் நீர் மடை அடைக்கப் பயன்படுத்துவார்களாம். (காவிரிக்கரை வயல்களில், நீர் மடையை மண்—சேற்றால் அடைக்காமல், அகத்திக்கீரைக் கற்றையால் அடைத்ததை யான் நேரில் பார்த்திருக்கிறேன்). மிதிலை பற்றிக் கூறும் கம்பர் தமிழ்க் காவிரியை மறந்தாரிலர்.

கம்பர் இப்பாடலில், கடைத் தெருவிற்கு ஆற்றை உவமித்துள்ளார். இது முன்னோர் சென்ற பாதை.

**"ஆறுகிடந்தன்ன அகல் நெடுந் தெரு"**

என்னும் அடி, நெடுநல் வாடையிலும் (30), மதுரைக் காஞ்சியிலும் (359), நற்றிணையிலும் (200-3.) உள்ளன. 'ஆறெனக்கிடந்த தெரு' என்பது மலைபடு கடாம் நூலில் (481) உள்ளது. பெருந்தொகை நூலில்,

**"ஆறு கண்ட ன்ன அகன்கணை வீதி" (2-7-7)**

**"நீத்தியாற்றன்ன நெடுங்கண் வீதி" (5-7-23)**

என ஈரிடத்தில் உவமை கூறப்பட்டுள்ளது. முன்னோர் சென்றுள்ள பாதையில் கம்பரும் சென்றுள்ளார்.

அடுத்த காட்சி: குதிரைகள் ஒன்றன்பின் ஒன்றாய் மண்டல கதியில் வட்டமாய்த் தொடர்ந்து மிகவும் விரைவாக ஓடிக்கொண்டிருந்ததை மூவரும் கண்டனர்.

**"கொட்புறு கலினப் பாய்மா, குலால்மகன்முடுக்கிவிட்ட**
**மட்கலத் திகிரிபோல, வயின்வயின், வருவ, மேலோர்**
**நட்பினின் இடையறாவாய், ஞானிகள் உணர்வின் ஒன்றாய்க்**
**கட்புலத்து இனைய என்று தெளிவில திரியக் கண்டார்" (12)**

கொட்பு=சுழற்சி. கலினம்=கடிவாளம். பாய்மா = பாயும் குதிரை. குலால் மகன் = குலாலன் = குயவன். திகிரி=ஆழி. மண்டல கதியில் வட்டமாய் ஓடும் குதிரைகட்கு, குயவன் கலங்கள் செய்யச் சுழற்றும் ஆழி (சக்கரம்) ஒப்புமையாகும். இடையறாமல் தொடர்ந்து திரிவதற்குப் பெரியோர்களின் நட்பு உவமையாகும். ஈண்டு, நறுந் தொகை என்னும் வெற்றிவேற்கை நூலில் உள்ள

''ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே'' (35)

என்ற பாடலும், நன்னெறி நூலில் உள்ள

''நல்லார் செயுங் கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே'' (38)

என்னும் பாடல் பகுதியும்,

''நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு'' (782)

என்னும் குறட்பாவும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கன.

அருளாளர்கள் (ஞானிகள்) வேறுபாடு காணாது ஒரே நிலையில் இருப்பது போல, குதிரைகள் ஒன்றுக் கொன்று வேறுபாடு தெரியாமல் ஒரே மாதிரியாய்த் தோன்றினவாம். சுழற்சியில், கண்ணுக்கு, இன்ன குதிரை இது—அன்ன குதிரை அது என்று தெரிந்து கொள்ள முடியாதவாறு சுழன்று ஓடினவாம். கம்பரின் இப்பாடல் கருத்துக்கு அரண் செய்வனவாக உள்ள சிலஇலக்கிய மேற்கோள் களைக் காணலாம்:— 'குலால் மகன் திகிரி போல' என்பது, சீவக சிந்தாமணியில் உள்ள,—

''கூட்டுற முடுக்கிவிட்ட குயமகன் திகிரி போல
வாட்டிறல் தேவதத்தன் கலிமாத் திரியு மன்றே (786)

என்னும் பாடல் பகுதியோடு ஒப்பு நோக்கத் தக்கது. வட்டமாய், எல்லாம் ஒன்று போலத் தோற்றம் அளித்தமை, பரஞ்சோதியார் அருளிய திருவிளையாடல் புராணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இருவகைச் சாரியும் எதிர்ந்து வட்டமாய்
வருவழி ஞெகிழிபோல் மறுகெலாம் ஒரு
துரகதமே நிலைநின்ற தோற்றம் ஒத்து
ஒருவற நடத்தினான் ஒரு கணத்தினே''
(நரிபரியாக்கிய படலம்—99)

பந்தாட்டம் :

மங்கையர் பந்தாடியதை மூவரும் கண்டனர். ஆடவர் தம்மோடு உடலுறவு கொள்ளுங்கால் அவர்களைப் போலவே தாமும் காம இன்பம் துய்த்துப் பின் அவர்களிடமிருந்து பொருளையும் பறித்துக் கொள்ளும் விலை மகளிரின் உள்ளமும்,பளிங்கும்,பந்துகட்கு உவமையாக்கப் பட்டுள்ளன.

''மெய்வரு போகம் ஒக்க உடன்உண்டு விலையும் கொள்ளும்
பைஅரவு அல்குலார்தம் உள்ளமும் பளிங்கும் போல
மைஅரி நெடுங் கண் நோக்கம் படுதலும் கருகி வந்து
கைபுகின் சிவந்து காட்டும் கந்துகம் பலவும் கண்டார்'' (16)

விலைமாதர் வருபவர்கட்கு ஏற்ப நடந்து கொள்பவர்; எவர் வரினும் பொருளுக்குத் தம் உறுப்பை விற்று, மீண்டும்அவ்வுறுப்பைத் தம்முடைய தாக்கி மற்றொருவர்க்கு விற்பவர்.

''விற்றிடும் அல்குல் தன்னை மீளவும் தமதே யாக்கி
மற்றைய நாளும் விற்கும் வரைவிலார்''

என்னும் காஞ்சிப் புராணப் பாடல் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. பளிங்கும் தனக்கென ஒரு நிறம் இன்றி, எதிரே தெரியும் நிறத்தைக் காட்டக்கூடியது. ''அடுத்தது காட்டும் பளிங்கு'' என்பது வள்ளுவம். விலை மகளிரின் உள்ளமும் பளிங்கும் போல் பந்துகளும் ஒரு தன்மைத்தாய் இல்லை. இவை வெண்ணிறப் பந்துகள். ஆடும் பெண்கள் அவற்றைத் தம் கரிய கண்களால் பார்க்கும்போது பந்துகளும் கருமையாய்க் காணப்படுகின்றனவாம். அவர்கள் தம் சிவந்த உள்ளங்கைகளால்பற்றும்போது பந்துகளும் செந்நிறமாய்த் தோன்றுகின்றனவாம். பந்துகளைக் கொண்டு விலை மகளிரைச் சாடியுள்ளார் கம்பர்.

**பேடோடு அன்னம் :**

மூவரும் மிதிலைக்குள் சீதை இருக்கும் கன்னிமாடம் உள்ள தெருவழியே நடந்து சென்றனர். பொன் ஒளியும், மலர் மணமும், தேன் சுவையும், கவி—இசை இன்பமும் போன்றவளாகிய சீதை, பெடையோடு அன்னச் சேவல் ஆடுகின்ற துறையைப் பார்த்தபடி, அதன் அயலிலே மாடியில் நின்று கொண்டிருந்தாள். அவளை இராமன் நோக்கினான்.

**"பொன்னின் சோதி போதினின் நாற்றம், பொலி பூவின்**
**தென்னுண் தேனின் தீஞ்சுவை, செஞ்சொற் கவியின்பம்**
**கன்னிம் மாடத்து உம்பரின் மாடே, களிபேடோடு**
**அன்னம் ஆடும் முன்துறை கண்டங்கு அயல்**
**நின்றாள்"** (23)

ஐம்புல இன்பமும் பெண்ணால் பெறலாம் என்ற கருத்தில்,

**"கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்டொடி கண்ணே உள"** (1101)

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இங்கே கம்பர் பாடலில், நான்கு புலன்களின் இன்பம் போன்ற இயல்புடையவள் சீதை என்னும் கருத்து குறிப்பாய் அமைந்துள்ளது. பொன்னின் சோதி = கண்புலம். போதினின் நாற்றம் = மூக்கின் புலம். தேனின் சுவை = நாக்கின் புலம். செஞ்சொல் கவி இன்பம் = செவிச் சுவை. இவ்வளவு சிறப்புடையவளாம் சீதை. தொடாமையால் 'ஊறு' இல்லை.

இவள் பெடையோடு அன்னச் சேவல் ஆடுவதைக் கண்டு கொண்டிருந்தாளாம். இதுஒரு முன்னோட்டச்செயல். அதாவது, இன்னும் சிறிது நேரத்தில், அன்னச் சேவலும் அதன் பெடையும் போல இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் ஊன்றி நோக்கப் போகிறார்கள். இந்தக் குறிப்பு, பேடோடு அன்னம் ஆடும் என்பதில் அமைந்துள்ளது.

அன்னச் சேவலும் பெடையும் விளையாடுவதுண்டு என்பதை, மணிமேகலையில் உள்ள,

**"அன்னச் சேவல் அயர்ந்து விளையாடிய**
**தன்னுறு பெடையைத் தாமரை அடக்க" (5—123, 124)**

என்னும் பாடல் பகுதியாலும் அறியலாம். இந்தச் செய்தி, பின்னால், கிட்கிந்தா காண்டம்—நாடவிட்ட படலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. சீதையைத் தேடப் புறப்பட்ட அனுமனிடம், இராமன், சில செய்திகளை அடையாளத்திற்காகச் சீதையிடம் சொல்லும்படி அறிவிக்கிறான். அவற்றுள் இஃதும் ஒன்று. அதாவது:-மிதிலையில் சனகனது வேள்வியைக் காணச் சென்றபோது, அன்னம் ஆடும் துறைக்கு அருகே கன்னிமாடத்தில் நின்றிருந்த சீதையை யான் கண்டதையும் நினைவு படுத்துவாயாக—என்று இராமன் கூறினானாம்:

**"முன்னை நாள் முனியொடு முதியநீர் மிதிலைவாய்,**
**சென்னி நீள் மாலையான் வேள்வி காணிய செல,**
**அன்னம் ஆடும் துறைக்கு அருகு நின்றாளை அக்**
**கன்னி மாடத்திடைக் கண்டதும் கழறுவாய்" (67)**

என்பது பாடல். இது கம்பரின் இராமாயணச் செய்தி. இன்னும் பலவிதமாக இராமாயணக் கதை சொல்லப் படுகிறது. அன்னங்கள் ஆடும் நீர்த்துறையில் இராமனும் சீதையும் கண்டார்கள் என்பது ஒரு கதை.

**நலம் பழுதாகாது:**

சதானந்த முனிவர் சனகனிடம் இருக்கும் வில்லைப் பற்றிக் கூறிவருகிறார். இந்த வில் சனகனிடம் வந்ததிலிருந்து இன்று வரையும் எந்த அரசகுமரரும் வில்லருகே சென்றிலர்; போய் ஒளிந்தனர், திரும்பவில்லை. எனவே, சீதைக்கு இனித்திருமணம் கைகூடாது என இருந்தோம். ஆனால், இந்த இராமன் வில்லில் நாண் ஏற்றுவானானால் சீதையின் பெண் நலம் வீணாகாது—என்று கூறினார்:

**"அன்றுமுதல் இன்றளவும் ஆரும் இந்தச் சிலையருகு**
**சென்றுமிலர் போயொளிந்த தேர்வேந்தர் திரிந்துமிலர்**
**என்றுமினி மணமு மிலை என்றிருந்தோம் இவன் ஏற்றின்**
**நன்று மலர்க்குழல் சீதை நலம் பழுதாகாது என்றான்"** **(24)**

எவரும் வில்லை வளைத்து நாண் ஏற்றவில்லை எனில், சீதைக்கு மணம் ஆகாது: எனவே, அவளது பெண்மை நலம் எந்த ஆடவராலும் துய்க்கப் பெறாமல் வீணாகி விடும்-என்பது கருத்து. மணமாகாத பெண்ணின் நலம் வீணாகும் என்னும் கருத்து, நகரப் படலத்தில் அகழியைப் பற்றிக் கூறியுள்ள பாடலிலும் வந்துள்ளது. "கன்னியர் அல்குல் தடமென யார்க்கும் படிவு அரும் காப்பின தாகி" என்பது இந்தப் பகுதி. ஈண்டு, "மிகநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று" என்னும் குறள் பகுதியும் நினைவு கூரத்தக்கது.

**தோகையின் ஆடல்:**

இராமன் வில்லில் நாண் ஏற்றியதும், சீதைக்கு மணம் நடைபெறும் என்ற மகிழ்ச்சியால், மங்கையர், முகில்கள் தோன்றியதும் அதற்கேற்றதாகச் சொல்லப்பட்ட கார்ப் பருவம் வந்து விட்டது என்று நோக்கி மகிழ்ந்து ஆடும் மயில்களைப் போல நடனம் ஆடினராம்:

**"எல் இயல் மதியம் அன்ன முகத்தினர் எழிலி தோன்றச்**
**சொல்லிய பருவம் நோக்கும் தோகையின் ஆடினாரே"**
**(37)**

மதியம் அன்னமுகத்தினர் = திங்களன்ன முகமுடைய மங்கையர். மயில்கள் நடம் ஆடின், முகில் இடித்து மழை சொரியப் போகிறது என எண்ணலாம் என்னும் கருத்து ஞான சம்பந்தரின் திருவையாற்றுப் பதிகத் தேவாரத்தில் மிகவும் சுவையாகக் கூறப்பட்டுள்ளது.

திருவையாற்றுத் திருக்கோயில் திருச்சுற்றில் (சுற்றுப் பிரகாரத்தில்) பெண்கள் வலம் வந்தார்களாம். முழவு

(ஓர் இசைக்கருவி) முழங்கியதாம். பெண்கள் வலம் வந்ததைப் பார்த்ததும் முழவு ஒலியைக் கேட்டதும், சில மந்திக் குரங்குகள், மழைவரப் போகிறது என அஞ்சி, மரத்தின்மேல் ஏறி அண்ணாந்து விண்ணை நோக்கி முகில் உள்ளதா என்று பார்த்தனவாம்.

**"வலம் வந்த மடவார்கள் நடம் ஆட முழவு அதிர**
**மழை என்று அஞ்சிச்**
**சில மந்தி அலமந்து மரம் ஏறி முகில் பார்க்கும்**
**திருவையாறே" (2-1)**

என்பது பாடல் பகுதி. இந்தப் பாடலில் மயில் நடனம் ஆடியதாகவும் முகில் இடி இடித்ததாகவும் சொல்லவில்லையே எனில், பின்வருமாறு கொள்ளல் வேண்டும். அதாவது: பெண்கள் வலம் வந்தது மயில்கள் நடம் இடுவது போலவும், முழவு முழங்கியது இடி இடித்தது போலவும் தெரிந்தனவாம். அதனால், மழை வரும் என மந்திகள் அஞ்சி முகிலை நோக்கினவாம். எவ்வளவு நயமான கற்பனை! கடவுள் வழிபாட்டுப் பாடலிலும் நயமான இலக்கியச் சுவையைத் தந்துள்ள ஞானசம்பந்தர் பாராட்டிற்கு உரியவர். இந்தக் கற்பனையை அடியொற்றியதுபோல் கம்பரும் பாடியுள்ளார். இலக்கிய ஒப்புமை காண்டல் என்ற அடிப்படையில் சம்பந்தரின் பாடல் ஈண்டு தரப்பட்டது.

## சந்திரசயிலப் படலம்

**துருக்கர் தந்தவை:**

அயோத்தி மக்கள் மிதிலைக்குச் செல்லும் வழியில் குதிரைகளை ஓய்வுக்குக் கட்டி வைத்தனர். அந்தக் குதிரைகள் துருக்கர் தர வந்தவையாம். அதாவது, சோனகர் என்னும் அரபு நாட்டவரிடமிருந்து வாங்கினவையாம். குதிரைகளை விற்பவர்கள், அவற்றைப் பேணும் முறையைத் தமிழ் நாட்டவர்க்குக் கற்றுக் கொடுப்பதில்லை;

அதனால் குதிரைகள் விரைவில் இறந்து போக, வேறு குதிரைகளை வாங்குவர் என்பதாக ஒரு செய்தி சொல்லப் படுவதுண்டு. கம்பர் 'துருக்கர் தர வந்த' (13) எனக் கூறியுள்ளார்.

## வரைக் காட்சிப் படலம்

**பிடிக்கு உணவு :**

தந்தங்களை உடைய ஆண் யானைகள், தம் தும்பிக்கையால் மரக்கிளைகளைத் தழையோடு ஒடித்துப் பெண் யானைகட்குக் கொடுத்தனவாம்.

''கொம்புகள் பணைக்கை நீட்டிக் குழையொடும்
ஒடித்துக் கோட்டுத்
தும்பிகள் உயிரே அன்ன துணைமடப் பிடிக்கு
நல்கும்'' (2)

கோட்டுத் தும்பி = களிறு—ஆண் யானை. பிடி = பெண் யானை. பிடிக்குக் களிறு உணவு தேடித்தருவதாகக் கம்பர் கூறியிருப்பது ஒருவகைத் தமிழ் இலக்கிய மரபாகும். கலித் தொகையில்,

''துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின் உண்ணும் களிறு" (11—8,9)

''ஒடுங்கா எழில்வேழம் வீழ்பிடிக்கு உற்ற
கடுஞ்சூல் வயாவிற்கு அமர்ந்து நெடுஞ்சினைத்
தீங்கண் கரும்பின் கழைவாங்கும் (40—26, 27, 28)

எனவும், பூதத்தாழ்வாரின் திருவந்தாதியில்,

''பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இளமூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை'' (75)

எனவும், திருஈங்கோய்மலை எழுபது என்னும் நூலில்,

"சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனில்
தோய்த்தியானை
மந்த மடப்பிடியின் வாய்கொடுப்ப—வந்ததன்
கண்களிக்கத் தான்களிக்கும் ஈங்கோயே தேங்காதே
விண்களிக்க நஞ்சுண்டான் வெற்பு" (32)

எனவும் எழுதப்பட்டுள்ள பகுதிகள் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கன. கம்பரும் இந்த மரபை விட்டாரிலர். 'துணை மடப்பிடி' என்னும் கம்பர் கூற்று, மனைவியை வாழ்க்கைத் துணை' என்னும் திருவள்ளுவரின் கூற்றை நினைவூட்டுகிறது,

**கணித் தொழில் :**

கொடிச்சியர்க்கு (மலைவாழ் பெண்கட்குக்) கணித் தொழில் (சோதிடம் கூறும் தொழில்) புரியும் வேங்கை மரப் பூக்களில் தேன் உண்ட வண்டுகள், வெறுப்புற்று மாறுதல் விரும்பிச் சுரபுன்னை மலர் என்று விண்மீன்களை எண்ணி வானில் தாவினவாம்.

"பண்மலர் பவளச் செவ்வாய்ப் பனிமலர்க்குவளை அன்ன
கண்மலர் கொடிச்சிமார்க்குக் கணித்தொழில்
புரியும் வேங்கை
உண்மலர் வெறுத்த தும்பி, புதிய தேன்உதவும் நாகத்
தண்மலர் என்று வானத் தாரகை தாவும் அன்றே" (3)

நாகம் = சுரபுன்னை. தாரகை = விண்மீன். வேங்கை கணித் தொழில் புரிவதாகக் கூறுவதும் தமிழ் இலக்கிய மரபாகும்.

கணி என்பது நாளைக் கணிக்கும் சோதிடனைக் குறிக்கும். வேங்கை மரமும் நாள் அறிவித்தலால் 'கணி' என்னும் பெயர் உடையது. வேங்கை மரம் பூத்தால், மணம் புரியும் நல்ல நாள் வந்து விட்டது என மக்கள் அறிவராம். அந்த நல்ல நாளில் திருமணம் நடைபெறுமாம். தினை அறுவடை செய்யும் நாள் வந்துவிட்டது என்பதை

யும் வேங்கை பூத்து அறிவிக்குமாம். இங்கே, பழமொழி நானூறு என்னும் நூலில் உள்ள.

"பன்னாளும் நின்ற விடத்தும் கணிவேங்கை
நன்னாளே நாடி மலர்தலால்" (234)

என்னும் பகுதியும், திருக்கோவையாரில் உள்ள,

"மாதிடங் கொண்டு அம்பலத்து நின்றோன்
வடவான் கயிலைப்
போதிடங் கொண்ட பொன்வேங்கை தினைப்புனம்
கொய்க என்று
தாதிடங்கொண்டு பொன் வீசித்தன் கள்வாய்
சொரிய நின்று
சோதிடங் கொண்டு இது எம்மைக் கெடுவித்தது
தூமொழியே (138)

என்னும் பாடலும் ஒப்பு நோக்கத் தக்கன.

வேங்கையும் பூத்தது—திங்களும் முழுமை (பருவம்) அடைந்தது. இனி மணம் செய்து கொள்ள வேண்டும் எனத் தோழி தலைவனுக்குக் குறிப்பாய் அறிவிக்கும் பொருளில் அகநானூற்றில் உள்ள,

"வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே" (2)

என்னும் பாடல் பகுதியும் ஈண்டு எண்ணத் தக்கது. வேங்கையை வெறுத்த வண்டு சுரபுன்னையை விரும்பியதாகக் கம்பர் கூறியுள்ளார். ஈண்டு, 'புது மலர் தேடும் வண்டே போல்" என்னும் கலித்தொகைப் பாடல் பகுதி ஒப்பு நோக்கற் பாற்று.(வளர பிறையில் திருமணம் முதலிய நல்வினைகளைச் செய்வதன் உண்மை நோக்கம், அப்போது நிலவு ஒளி உதவும் என்பதனால் என்னும் கருத்து, 'நெடுவெண் திங்களும் ஊர் கொண்டன்றே' என்னும் அகப்பாடல் பகுதியால் அறியப்படும்.)

## உண்டாட்டுப் படலம்

**உறுஞ்சும் தாள் :**

அயோத்தியிலிருந்து மிதிலை செல்பவர்கள் பலவிதமான உணவுகளை உட்கொண்டனர். கருமிகளிடத்தில் உதவி கேட்டு இரவலர்கள் ஒலியெழுப்புவதுபோல், வண்டுக் கூட்டங்கள் ஆரவாரித்தன. பெண் ஒருத்தி, வாய் திறந்து வாயால் மது உண்ணக் கூசி, செங்கழுநீர் மலர்த் தண்டினால், மதுவை உறிஞ்சி உட்கொண்டாளாம்.

**''வான்தனைப் பிரித லாற்றா வண்டினம், வச்சை மாக்கள்**
**என்ற மா நிதியம் வேட்ட இரவலர் என்ன ஆர்ப்ப,**
**தேன்தரு கமலச் செவ்வாய் திறந்தனள் நுகர நாணி**
**ஊன்றிய கழுநீர் நாளத் தாளினால் ஒருத்தி உண்டாள்''**
**(19)**

வச்சை மாக்கள் = கருமிகள். நாளத்தாள் = மலருக்குக்கீழே நீளமாக உள்ள தண்டு. இரவலர்க்குக் கருமிகள் உதவாதது போலவே, கள்ளில் வண்டுகள் மொய்க்காதபடி இவள் ஒட்டி உட்கொண்டாள். வாய்திறக்காமல் மலர்த் தண்டினால் உண்பதால் வாயில் வண்டுகள்—ஈக்கள் மொய்க்கா. இவ்வாறு அருந்துவது நாகரிகமாகவும் இருக்கும். இக்காலத்தார் (Straw-Stem) அருந்தப் பயன்படுத்துவது அக்காலத்தும் இருந்திருக்கிறது.

**அன்றிலோடு ஒத்தி :**

கணவனைப் பிரிந்து எங்கோ ஒரு பக்கத்தில் இருக்கும் பெண் ஒருத்தி, தன் கிளியைத் தழுவி, கிள்ளாய்! நீ என் உயிரைப் போய் அழைத்து வர மாட்டாயா? அன்றிலைப் போலவே எனக்குத் துன்பம் தருகிறாய் என்று சினத்துடன் அழுதாளாம்:

**''மன்றல் நாறு ஒருசிறை இருந்து ஓர் வாணுதல்**
**தன்துணைக் கிள்ளையைத் தழீஇ என் ஆவியை**

**இன்றுபோய்க் கொணர்கிலை, என்செய்வாய் எனக்கு**
**அன்றிலோடு ஒத்தி என்று அழுது சீறினாள்''** **(28)**

என் உயிரைக் கொண்டுவா என்பதற்கு, என் உயிராக இருக்கும் கணவனிடம் தூது சென்று அழைத்து வா என்பது பொருளாகும். ஒரு சுவையான செய்தி இது.

காதலி காதலனிடம் தூதுவிடும் பொருள்களுள் கிளியும் ஒன்று. 'கிள்ளை விடு தூது' என்னும் பெயரில் ஒரு முழு நூலே உள்ளது. தனித் தனிப் பாடல்களிலும் இந்த அமைப்பு உண்டு. ஞான சம்பந்தர் தன்னை நாயகியாகக் கருதி நாயகனாகிய சிவனைப் பற்றிச் சொல்லும்படி கிளியைக் கேட்டதாக உள்ள பாடல் பகுதி வருமாறு:—

**''சிறையாரும் மடக்கிளியே இங்கே வா தேனொடுபால்**
**முறையாலே உணத் தருவேன்''**—(தோணிபுரம்—10)

கிளியே! நீ அன்றில் பறவைபோல் எனக்குத்துன்பம் தரும் பொருளாகி விட்டாயே—என்பதன் விளக்கமாவது:—

ஆண் அன்றில் சிறிது நேரம் பிரிந்திருந்தாலும் பெண் அன்றில் அதனைக் கூவிக்கூவி அழைத்துக்கொண்டே இருக்குமாம். நள்ளிரவில், பிரிந்து வருந்துகிற காதலர்கள், என்றும் ஒன்றியிருக்கும் அன்றில் இணையின் ஒலியைக் கேட்டுப் பொறாமை உள்ளத்துடன், இவை பெற்ற பேறு நாம் பெறவில்லையே என்று பெருமூச்செறிந்து நைந்து உருகுவார்களாம். இதற்கு இலக்கியச் சான்றுகள் சில வருமாறு:—குறுந்தொகையில் உள்ள—

**''நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்**
**இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு**
**தடவின் ஓங்குசினைக் கட்சியில் பிரிந்தோர்**
**கையற நரலும் நள்ளென் யாமத்து—''** **(160)**

''மன்றவம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலும் இன்றவர்
வருவர் கொல் வாழி தோழி'' (177)

''கருங்கால் அன்றில் காமர் கடுஞ்சூல்
வயவுப் பேடை அகவும் பானாள் கங்குல்
துயில் துறந்தனவால் தோழி என் கண்ணே'' (301)

என்னும் பாடல் பகுதிகளும், நற்றிணையில் உள்ள—

''பெடைபுணர் அன்றில் இயங்கு குரல் அளைஇக்
கங்குல் கையறவு தந்தன்று'' (152—7, 8)

''இன்னும் தமியேன் கேட்குவன் கொல்லோ
பரியரைப் பெண்ணை அன்றில் குரலே''
(218—10, 11)

''துணைபுணர் அன்றில் உயவுக் குரல் கேட்டொறும்
துஞ்சாக் கண்ணள் துயரடச் சாஅய்
நம்வயில் வருந்து நன்னுதல் என்ப'' (303—5, 6, 7)

''மையிரும் பனைமிசைப் பைதல வுயவும்
அன்றிலும் என்யுற நரலும்'' (335—7, 8)

என்னும் பாடல் பகுதிகளும், அகநானூற்றில் உள்ள—

''சேவலொடு புணராச் சிறு கரும் பேடை
இன்னாது உயங்கும் கங்குலும்'' (270—13, 14)

என்னும் பாடல் பகுதியும், மணிமேகலையில் உள்ள—

''அன்றில் பேடை அரிக்குரல் அழைக்கச்
சென்றுவீழ் பொழுது சேவற்கு இசைப்ப''
(5—127, 128)

என்னும் பகுதியும், பிற்காலத்து மனோன் மணியத்தி லுள்ள—

'எங்கிருந்தன இவ் வன்றில் பேய்கள்
நஞ்சோ நாவிடை நெஞ்சம் துளைக்கும்''

என்னும் பகுதியும் தக்க சான்றுகளாகும். இத்தனை நூல் கருத்துகளையும் உள்ளத்தில் கொண்டிருந்த கம்பர், 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்னும் அழகுடன், 'அன்றிலோடு ஒத்தி' என இரணடே சொற்களால் அறியச் செய்து மகிழ்வித்துள்ளார்.

## உலாவியல் படலம்

**யாரே கண்டார்?**

இராமன் தெருவில் உலாச் சென்றபோது, மங்கையருள் சிலர் தோள்களை மட்டும்— சிலர் தாள்களை மட்டும்— சிலர் கைகளை மட்டும் கண்டனர். கடவுளின் ஒவ்வொரு நிலையை மட்டும் காணும் சமயவாதிகள் போல், இராமனை யாரும் முழுமையாய்க் காணவில்லை.

**"தோள் கண்டார் தோளே கண்டார்; தொடு கழல் கமல மன்ன**
**தாள் கண்டார் தாளே கண்டார்; தடக்கை கண்டாரு மஃதே**
**வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்**
**ஊழ்கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்" (19)**

எந்தச் சமயத்தவரும் இன்னும் கடவுளின் முழு நிலையையும் கணடிலர்; ஒவ்வொருவரும் ஒவ்வோர் இயல்பினை மட்டுமே கூறிக் கொண்டுள்ளனர்— என்னும் கருத்து எண்ணுதற்கு உரியது.

**கல்வியினால்:**

இராமன் திருப்பெயரை உருவேற்றும் ஒருத்தி, இராமன் வில்லை ஒடித்தது, சீதையை மணக்க வேண்டும் என்னும் காம உணர்வினால் அன்று; தன் வில்பயிற்சியின்

திறமையைக் காட்டுவதற்காகவே ஒடித்திருக்க வேண்டும் என்று கூறினாள்:

''நாமத்தால் அழிவாள் ஒரு நன்னுதல்
சேமத்தார் வில் இறுத்தது, தேருங்கால்
தூமத்தார் குழல் தூமொழித் தோகைபால்
காமத்தால் அன்று, கல்வியினால் என்றாள்'' (39)

இப்பாடலில் வில் பயிற்சியும் ஒருவகைக் கல்வியாகக் கூறப்பட்டுள்ளது எண்ணத் தக்கது. ஈண்டு, நாட்டுப் படலத்தில் 'கந்தனை அனையவர் கலை தெரி கழகம்' என்னும் அடியைக் கொண்ட பாடலுக்குக் கூறப்பட்டுள்ள விளக்கத்தைத் திரும்பவும் காண வேண்டும்.

**சோளர்:**

இராமன் - சீதை ஆகியோரின் திருமணம் காணப் பல நாட்டு மன்னர்களும் மிதிலைக்கு வந்தனராம். அவர்களுள் சிலரைக் காண்பாம்:

''கங்கர் கொங்கர் கலிங்கர் குலிங்கர்கள்
சிங்க ளாதிபர் சேரலர் தென்னவர்
அங்கர் சீனர் குலிந்தர் அவந்திகர்
வங்கர் மாளவர் சோளர் மராடரே'' (46)

இந்தப் பாடலில், தமிழ் மன்னர்களுள், சேரர் சேரலர் எனவும், பாண்டியர் தென்னவர் என்றும், சோழர் சோளர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். சோழர் சோளர் எனப் பட்டிருப்பதின் அடிப்படையில், ழகர - ளகர மாற்றொலி பற்றி ஒரு சிறிய ஆய்வு செய்யலாம்:—

வட தமிழ் நாட்டார்க்கு ஒத்த ஒலிப்பில் ல, ள — என்னும் இரண்டெழுத்துகள் உள்ளன. தென் தமிழ் நாட்டார்க்கு ஒத்த ஒலிப்பில் ல, ள, ழ என மூன்று உள்ளன. குழறுதல்—குளறுதல் என்ற மாற்றொலியும், உழுந்து—உளுந்து, என்ற மாற்றொலியும், திகழ் தசக்கர—

திகள் தசக்கர=திகடச் சக்கர' என்ற கந்த புராணக் காப்புச் செய்யுளின் தொடக்கத்தில் உள்ள மாற்றொலியும்,

'சடையும் பிறையும் சாம்பல் பூச்சும் கீழ் உடையும்—

கீள் உடையும்' —என்னும் ஞானசம்பந்தரின் பாடலில் உள்ள மாற்றொலியும், ''இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர்'' என்னும் குறள் பகுதியும் (464) இன்ன பிறவும்

கவனிக்கத் தக்கன.

தமிழில் 'ழ' ஒலி கன்னடத்தில் 'ள' ஒலியாகவும் தெலுங்கில் 'ட' ஒலியாகவும் ஒலிப்பதுண்டு. எடுத்துக் காட்டுகள்:— ஏழு தமிழ்— ஏளு கன்னடம்— ஏடு தெலுங்கு. கோழி தமிழ்— கோளி கன்னடம்— கோடி தெலுங்கு, கூழு தமிழ்— கூளு கன்னடம்— கூடு தெலுங்கு. சோழர் களுள் தெலுங்குச் சோடர் என்ற பிரிவினர் இருந்ததான வரலாறு உண்டு. இந்த அடிப்படையில், கம்பர் பாடலில் சோழர் சோளர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். வேறு பதிப்பில் சோழர் என இருப்பதும் கருதத் தக்கது.

மற்றும் ஒன்று;— தமிழ் மன்னர் மூவரையும் குறிப்பிடுபவர் சிலர், சேர சோழ பாண்டியர் என்ற முறை வைப்பைக் கையாள்கின்றனர். ஆனால், தொல்காப்பியம், (போந்தை வேம்பே ஆரென வரூஉம்), புறநானூறு, சிறுபாணாற்றுப் படை முதலிய நூல்களில், சேரர்—பாண்டியர்— சோழர் என்ற வைப்பு முறையே உள்ளது. கம்பரது இப்பாடலிலும், சேரலர் -தென்னவர் - சோளர் என்ற முறையே பின்பற்றப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

**பன்னாட்டு மன்னர்கள்:**

மேல் பாட்டில் கூறியவர்களைத் தொடர்ந்து மேலும் இரு பாடல்களில் பன்னாட்டு மன்னர்களின் பட்டியலைத் தருகிறார் கம்பர்:

''மான மாகதர் மச்சர் மிலேச்சர்கள்
ஏனை வீர இலாடர் விதப்பர்கள்
சீனர் தெங்கணர் செஞ்சகர் சோமகர்
சோன கேசர் துருக்கர் குருக்களே'' (47)

ஏதி யாதவர் ஏழ்திறல் கொங்கணர்
சேதி ராசர் தெலுங்கர் கருநடர்
ஆதி வானம் கவித்த அவனிவாழ்
சோதி நீள்முடி மன்னரும் துன்னினார் (48)

கம்பர் கொடுத்திருக்கும் பட்டியலைப் பார்க்கும்போது நெடுந்தொலைவில் உள்ளவர்கள்கூட வந்திருக்கிறார்களே என்ற வியப்பு தோன்றுகிறது. இக்காலத்திலும், உலகநாடுகளுள் ஏதாவது ஒன்றில் முடிசூட்டு விழாவோ இறுதிக் கடனோ இன்ன பிறவோ நடைபெறுங்கால் பலநாட்டுத் தலைவர்களும்—அமைச்சர்களும் கலந்து கொள்ளும் செய்தி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

## கோலம் காண் படலம்

**உலகின் அறியாமை :**

கண்களின் அழகை அடிக்கடி மறைக்கும் இமைகளைப் போல, சீதையின் உடலழகை மறைக்கும்படி அணிகலன் களைத் தோழியர் அணிவித்தனர். இச்செயல் அமிழ்தத்திற்குச் சுவை சேர்ப்பதுபோன்று அழகுக்கு அழகு செய்யும் அறியாமையாகும். இதை நோக்குங்கால் உலகம் ஏழைமை (அறியாமை) உடையதென்றே சொல்ல வேண்டும்.

''அமிழ் இமைத் துணைகள் கண்ணுக்கு அணி என
அமைக்குமா போல்,
உமிழ் சுடர்க் கண்கள் நங்கை உருவினை மறைப்பது
ஓரார்

அமிழ்தினைச் சுவை செய்தென்ன அழகினுக்கு அழகு செய்தார்
இமிழ் திரைப் பரவை ஞாலம் ஏழைமை உடைத்து மாதோ'' (3)

இங்கே, திருக்குறளிலுள்ள

''பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து'' (1089)

என்னும் பாடலும், 'கல்வி அழகே அழகு' 'யாரே அழகுக்கு அழகு செய்வார்' என்னும் முன்னோர் மொழிகளும் ஒப்பு நோக்கத் தக்கன.

**உண்டா—இல்லையா?**

சீதையின் இடுப்பிற்கு (இடைக்கு) மேலே கொங்கைகள் (மார்பகங்கள்) உள்ளன. கொங்கைகளின் மேலே அணி அணிவித்தல்—தொய்யில் எழுதுதல் முதலிய செயல்களால் கொங்கைகள் மேலும் சுமையுடையனவாய்த் துன்பப்படும் படித் தோழியர் அணி செய்தனர். சீதைக்கு இடை உண்டோ—இல்லையோ என்று ஐயுறும்படி மெல்லிதாய் உள்ளது. மேலே கொங்கைகள் இருப்பதால், அவற்றைத் தாங்கும் இடை உண்டு எனக் கருத்தளவையில் (அனுமானப் பிரமாணத்தால்) உணரலாம், இந்தக் கருத்தை நூலாசிரியர்கள் பலர் தம் நூல்களில் கூறியுள்ளனர். கம்பரும் இளைத்தவர் அல்லர். இங்கே அருமையான ஓர் ஒப்புமை கூறியுள்ளார் கம்பர். மக்களுள் ஒரு சாரார் கடவுள் உண்டு என்றும், மற்றொரு சாரார் கடவுள் இல்லையென்றும் கூறுதல்போல், சீதைக்கு இடை உண்டா—இல்லையா என்று ஐயுறும்படி இருந்தது என்று உவமை கூறியுள்ளார் கம்பர்.

''சில்லியல் ஓதி கொங்கைத் திரள்மணிக் கனகச் செப்பில்
வல்லியும் அனங்கன் வில்லும் மான்மதச் சாந்தின் தீட்டிப்

பல்லியல் நெறியின் பார்க்கும் பரம்பொருள் என்ன
யார்க்கும்
இல்லை உண்டு என்ன நின்ற இடையினுக்கு இடுக்கண்
செய்தார்'' (12)

கனகச் செப்பு=பொன் குடம்--கொங்கையாகிய பொன் குடம். கொங்கைகளின்மேல், கொடி போலவும் மன்மதனின் கரும்பு வில் போலவும் மான்மதச் சாந்தால் எழுதினார்களாம். இதற்குத் தொய்யில் எழுதுதல் என்று பெயராம். பல் இயல் நெறியில் பார்த்தல் என்றால், துவிதம், அத்துவிதம், சைவ சித்தாந்தம்—நாத்திகம் என்னும் உலகாயதம் முதலிய பல கோணங்களில் கடவுளைப் பற்றி ஆய்தல் ஆகும். கடவுள் இல்லை என்னும் கொள்கையினர் கம்பர் காலத்திலேயே இருந்தனர் என்பது புலப்படுகிறது. அவ்வளவு ஏன்? கடவுள் இல்லை என்னும் கொள்கை எழுந்ததனால்தான், கடவுள் உண்டு என்னும் கொள்கை எழுந்திருக்க வேண்டும்.

''உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்'' (850)

என்னும் குறள் ஈண்டு ஆராயத்தக்கது.

### நஞ்சும் அமிழ்தும்

சீதையின் கண்கட்கு மை தீட்டினார்களாம். அக்கண்கள், ஒன்றுக்கு ஒன்று எதிர்மாறான நஞ்சும் அமிழ்தமும் சேர்த்து அமைக்கப்பட்டனவாய்த் தோன்றினவாம். அதாவது,இராமன் அந்தக் கண்ணின் குறும்புப்பார்வையை எண்ணி ஒரு நேரம் வருந்துகிறானாம். இன்னொரு நேரம் அதன் இனிய-குளிர்ந்த பார்வையை எண்ணி மகிழ்கின்றானாம். இங்கே, ''இப்பெண்ணிடம் இரு நோக்கு காண்கிறேன்; ஒரு நோக்கு வருத்தம் தரும் நோய் நோக்கு;மற்றொன்று அந்நோய்க்கு மருந்துபோன்ற இனிய நோக்கு'' என்னும் பொருள் பொதிந்த நோக்கு என்னும் கருத்தமைந்த

"இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து" (1091)

என்னும் குறள் கருத்தைக் கம்பர் உள்ளத்தில் கொண்டு,

"நஞ்சினோடு அமுதம் கூட்டி நாட்டங்கள் ஆன என்ன
............மதர்த்த கண்கள்" (15)

எனப்பாடியுள்ளார். மற்றும், கம்பரே, பூக்கொய் படலத்தில்

"நஞ்சினும் கொடிய நாட்டம் அமுதினும் நயந்து
நோக்கி" (7)

எனக் கூறியுள்ளார். மற்றும், சிந்தாமணியில் உள்ள
"நஞ்சும் அமிர்தமுமே போல் குணத்த" (167)

என்னும் பாடல் பகுதியும், திருக்கோவையாரில் உள்ள

"பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழ மின்னும்
பணியும் புரை மருங்குல் பெருந்தோளி படைக்
கண்களே" (5)

என்னும் பாடல் பகுதியும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலன.

## கடிமணப் படலம்

அஞ்சியவர் பழி:

இரவில் சீதையை எண்ணி உறக்கம் வராமல் இராமன் பிதற்றுகிறான். இரவு, என் உயிரை வருத்தும் அந்தப் பெண்ணின் (சீதையின்) கண்களைப்போல் நீண்டு வளர்கின்றது. இருட்டு, போரில் தன் தலைவன் மடிய, அஞ்சிப் புறமுதுகிட்டோடும் கோழை மறவனது பழி போல் நீண்டு வளர்ந்துகொண்டிருக்கிறது. இன்னும் விடிய வில்லை.

"கழியா உயிர் உந்திய காரிகைதன்
விழிபோல வளர்ந்தது; வீகிலதால்
அழிபோர் இறைவன்பட அஞ்சியவன்
பழிபோல வளர்ந்தது பாயிருளே" (15)

விழி போல வளர்தல்=காதுவரையும் நீண்டு வளர்ந்துள்ள விழிபோல் (விசாலாட்சி) இரவு நீள்கிறது. மற்றும், சீதையின் கண்நோக்கு இராமனது மனக் கண்ணிலிருந்து மறையாமல் தொடர்ந்து தெரிந்து கொண்டிருக்கின்றது.

போரில் அஞ்சிப் புறமுதுகிட்டு ஓடும் கோழையைப் பலரும்—பல காலத்தும்—பல இடங்களிலும் பழிப்பர். உயிர் உள்ள மக்களினம் பழிப்பது மட்டுமன்று; துணிவோடு போரிட்டு மறச்சாவு (வீரமரணம்) எய்திய மறவர்களைப் புதைத்த இடங்களின்மேல் அவர்களின் பெயரும் பெருமையும் பொறித்துக் கல் நட்டுள்ளார்கள் அல்லவா? அந்த நடுகற்கள் கூட, அந்த வழியாக அஞ்சி ஓடும் கோழைகளைப் பார்த்து ஏசி இகழுமாம். இந்தச் சுவையான கற்பனைக் கருத்து, இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் என்னும் புலவர் பாடிய மலைபடு கடாம் என்னும் நூலில் உள்ளது:—

''நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்ஏசு கவலை எண்ணுமிகப் பலவே (387-89)

என்பது பாடல் பகுதி. ஈண்டு, 'கல் ஏசு' என்பது, நடுகற்கள் எள்ளி ஏசுவதான பொருளைத் தருகிறது. உண்மையில் கல் ஏசுமா? யாம் ஒன்றும் இலோம் என்று சோம்பல் உற்றிருப்பவரை நோக்கி நிலம் என்னும் பெண் நகுவாள் என்னும் கருத்துடைய

''இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'' (1040)

என்னும் குறளில் உள்ள 'நிலம் நகும்' என்பது போல, 'கல் ஏசும்' என்பதையும் கொள்ளல் வேண்டும்.

**இராமனின் பண்பு :**

திருமணம் ஆனதும் இராமன் சீதையுடன் சேர்ந்து அன்னையர் மூவரையும் வணங்கினான். பரதனின் தாயும்

கேகயன் மகளுமாகிய கைகேயியைத் தன்னைப் பெற்ற தாயினும் மேலாக மதித்து முதலில் வணங்கினானாம் அடுத்துக் கோசலையையும் பின்னர்ச் சுமித்திரையையும் வணங்கினானாம்.

''கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கி
ஆயதன் அன்னை அடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாள்தொழ லோடும்'' (94)

கைகேயியை முதலில் வணங்கியது ஏன்? இராமன் தன் தாய் கோசலையினும் கைகேயினிடமே மிக்க அன்பு செலுத்தினான் கைகேயியும் தன் மகன் பரதனினும் இராமன் மேலேயே மிக்க அன்புகொண்டிருந்தாள். இதற்கு ஏற்ப, இங்கே கைகேயியை முதலில் வணங்கினான். கைகேயிக்கு முதன்மை கொடுப்பது, காப்பியத்தில் சூடுபிடிக்கும் பகுதியாகும்.

## பரசு ராமப் படலம்

### பறவைக் குறி

திருமணம் முடிந்ததும், தயரதன் மணமக்களுடனும் மற்றவர்களுடனும் மிதிலையிலிருந்து அயோத்திக்குப் புறப்பட்டுச் சென்ற வழியில், மயில் முதலிய சில பறவைகள் வலப்புறமாகவும், காகம் முதலிய சில பறவைகள் இடப்புறமாகவும் குறுக்கிட்டுச் சென்றனவாம்; இதைச் கண்டதும், ஏதோ இடையூறு வரப்போகிறது என்று எண்ணி, மேற்செல்லாமல் தேரை நிறுத்திவிட்டான்:

''ஏகும் அளவையின் வந்தன வலமும் மயில், இடமும்
காகம் முதலிய முந்திய தடை செய்வன கண்டான்
நாகம் அனன் இடை இங்கு உளது இடையூறு என நடவான்
மாகம் மணியணி தேரொடு நின்றான் நெறிவந்தான்'' (5)

மயில் முதலியன வலம் செல்வது நல்லகுறி (சகுனம்) ஆகும். காகம் முதலியன இடம் செல்வது தீக் குறியாகும். மன்னன், புள்ளின்குறி தேர்வானை அழைத்து இதன் நிலைமையை வினவினான். அதற்கு அவன், முதலில் தீமை வந்து, பின் நன்மை எய்த, தீமை விலகிவிடும் என்றான். அதன்படி, தயரதன் குல எதிரியாகிய பரசுராமன் வந்து எதிர்த்து அச்சுறுத்த, இராமன் பரசுராமனைவென்று மன்னனுக்கு மகிழ்ச்சியூட்டினான். எனவேதான், இருவகைக் குறிகளும் தென்பட்டதாகக் கூறப்பட்டன.

இந்தப் பாடலில் உள்ள இடையூறு என்னும் சொல்லைக் கவனிக்க வேண்டும். இந்தச் சொல், துன்பம் என்னும் பொருளில் பலராலும் ஆளப்படினும், இடையில் உற்றது 'இடையூறு' என்னும் சரியான பொருளில் இப் பாடலில் ஆளப்பட்டுள்ளது. தயரதன் சென்ற வழியிடையே உற்ற துன்பமல்லவா இது?

**அரியும் சிவனும் ஒண்ணு (ஒன்று):**

முற்காலத்திதில் சிவன் ஒரு வில்லும், திருமால் ஒரு வில்லும் வைத்திருந்தனர். இவற்றுள் எது சிறந்தது என்று தேவர்கள் பிரமனை வினவினர். எது வலியது என்று அறிவதற்காக, பிரமன், உண்மையில் ஒருவராய் வெளிக்கு இருவராயிருக்கும் சிவனையும் திருமாலையும் போர்புரியச் செய்தான். போரில் சிவன் வில் ஒடிந்தது. அதுதான் சனகனிடம் இருந்த வில். திருமாலின் வில் வழி வழியாக வந்து பரசுராமனுக்குக் கிடைத்தது.

**"சீரிது தேவர் தங்கள் சிந்தனை என்பது உன்னி**
**வேரியங் கமலத்தோனும் இயைவதோர் வினயம் தன்னால்**
**யாரினும் உயர்ந்த மூலத்து ஒருவராம் இருவர் தம்மை**
**மூரிவெஞ் சிலைமேல் இட்டு மொய்யமர் மூட்டி விட்டான்"** (28)

கமலத்தோன்=பிரமன். சிவனும் திருமாலும் மற்றவரினும் மேலான—மற்றவர்க்கெல்லாம் மூலமாக உள்ள ஒருவரே. ஆனால் அவர்கள், வெளியில் இருவர் போல் கருதப்படுகின்றனராம். இந்தக் கருத்தைத்தான், "யாரினும் உயர்ந்த மூலத்து ஒருவர் ஆம் இருவர்" எனக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உயரிய கருத்தை எளிய மக்கள் கூட ஒரு பழமொழி போல் கூறுவதுண்டு. அதாவது, அரியும் சிவனும் ஒண்ணு (ஒன்று); அறியாதவர் வாயில் மண்ணு (மண்)" என்பது அது. இச் செய்தியை அருளாளர்களும் தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். பூதத்தாழ்வார் பாடிய இயற்பா—மூன்றாம் திருவந்தாதியில் உள்ள—

"தாழ் சடையும் நீள்முடியும் ஒண் மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து" (63)

என்னும் பாடலும், பொய்கையாழ்வார்வார் அருளிய முதல் திருவந்தாதியில் உள்ள—

"அரன் நாரணன் நாமம் ஆள்விடை, புள் ஊர்தி;
உரை நூல் மறை உறையும் கோயில்—வரைநீர்
கருமம் அரிப்பு, அளிப்பு; கையது வேல், நேமி;
உருவம் எரி, கார்மேனி ஒன்று' (5)

"பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்,
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேலும், ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன்" (98)

என்னும் பாடல்களும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கன. கம்பர் தம் பாடலால், தாம் மத வேற்றுமை இல்லாதவர் என்பதைக் குறிப்பால் அறிவுறுத்தியுள்ளார்:

**உயிர் பிரிந்த உடல்:**

அனைவரும் மிதிலையிலிருந்து அயோத்திக்கு வந்த பின்னர், கேகய நாட்டிற்குச் சென்று வருமாறு தயரதன் கட்டளையிட்டதால், பரதன், இராமனது திருவடி தன் தலையில் பொருந்தும்படிக் கீழே விழுந்து வணங்கி விடை பெற்று, உயிரை விட்டு உடம்பு பிரிந்து போதல் போல் புறப்பட்டுச் சென்றான்:

**''ஏவலும் இறைஞ்சிப் போய், இராமன் சேவடிப்**
**பூவினைச் சென்னியில் புனைந்து போயினான்**
**ஆவி அங்கு அவனலது இல்லை ஆதலான்**
**ஓவல் இல் உயிர் பிரிந்து உடல்சென் றென்னவே''** (48)

பரதன் தந்தையை வணங்கிப் பின் இராமனை வணங்கிச் சென்றான். பரதனுக்கு இராமன் உயிர் போன்றவன். அதனால், உயிர் பிரிந்து உடல் சென்றது போல் பரதன் சென்றான் என்பது கூறப்பட்டுள்ளது. இராமன் பரதன் தொடர்பாகப் பின்னால் நிகழ இருக்கும் நிகழ்ச்சிகட்கு ஓர் அடிப்படை போட்டது போல் இருக்கிறது இது.

இவ்வாறாகப் பால காண்டத்திலுள்ள சிறப்புறு கனிகள் சிலவற்றை அருந்திச் சுவைத்தோம். இனி, அடுத்த மரத்திற்கு ஏகலாம்.

# 7. கற்பனைக் கனிகள்

அடுத்து இதோ ஒரு மரம்—கற்பனைக் கனிகள் உள்ள மரம் இருக்கிறது. இதன் கனிகளையும் துய்க்கலாம்:

கழகக் காலத்திற்குப் பிற்பட்ட இலக்கியங்களில் கற்பனை மிகுதி, வரலாற்றுத் தொடர்புடைய கம்ப ராமாயணம் போன்ற இலக்கியங்களில் கற்பனைக்கு மிகுந்த இடம் உண்டு. கற்பனை இல்லையேல் அவை இலக்கியங்களாகக் கருதப்படாமல், வரலாற்று நூலாகவே எண்ணப்படும். வரலாற்று நூலாசிரியன், சிறிதும் கற்பனை இல்லாமலும், தன் கருத்தை வலிந்து புகுத்தாமலும் வரலாற்றை அமைக்க வேண்டும். இங்ஙனமின்றி, கற்பனையும் சொந்தக் கருத்தும் இடம் பெறுமாயின், அவை இலக்கியங்களாகக் கருதப்படும். எனவே, வரலாற்றுத் தொடர்புடைய கம்பராமாயணத்தின் பால காண்டத்தில் உள்ள கற்பனைக் கனிகளைக் கண்டு நுகரலாம்

## நாட்டுப் படலம்

**தேன் வகை :**

கோசல நாட்டில் பலவகைத் தேன்கள் கிடைக்கின்றன. கரும்பாலையில் பிழியும் கருப்பஞ் சாறும், தென்னம் பாளையி லிருந்து வரும் கள்ளும், சோலையிலுள்ள கனிகளின் சாறும், தேனடையிலிருந்து இழிகின்ற தேனும், மக்கள் அணியும் மலர் மாலைகளில் துளிக்கும் தேனும், கப்பல்கள் வந்து போகும் கடலில் போய்க் கலக்கின்றன. அவற்றை மீன்கள் பருகி மகிழ்கின்றனவாம்.

**"ஆலைவாய்க் கரும்பின்தேனும், அரிதலைப் பாளைத்தேனும்**
**சோலைவாய்க் கனியின் தேனும் தொடைஇழி**
**இறாலின் தேனும்**
**மாலைவாய் உகுத்த தேனும் வரம்பிகந்து ஓடி வங்க**
**வேலைவாய் மடுப்ப உண்டு மீன் எலாம் களிக்கும்**
**மாதோ" (9)**

பாளையைத் தலையில் கத்தியால் சீவி (அரிந்து) விடுவார்களாதலின் 'அரிதலைப் பாளை' எனப்பட்டது.

இறால் = தேனடை, வங்கம் = கப்பல். வேடர்கள் தேன் கூட்டின்மேல் அம்பு எய்வார்கள். அம்பின் நுனியில் நூல் கயிறு கட்டியிருப்பார்கள், அம்பு தேன் கூட்டைத் துளைத்ததும் தேன் அந்தக் கயிறு வழியாகக் கீழ் நோக்கி இழியும். அதனால்தான், "தொடை 'இழி' இறாலின் தேன்" எனப்பட்டது. வங்க வேலை என்றதும் இப்போது வழங்கப்படும் வங்காளக் (வங்கக்) குடாக்கடல் நினைவுக்கு வரலாம். கம்பர் கூறியுள்ள வங்கம் என்பதன் பொருள் கப்பல் என்பதாகும்.

பாலும் தாலாட்டும் :

மங்கையர்போல் நடமாடும் தாய் அன்னம் பண்ணையில் உள்ள தாமரை மலராகிய படுக்கையில் தன் குஞ்சை உறங்கக் கிடத்திற்று. நீரிலே கிடக்கும் எருமை தன் கன்றை நினைத்துச் சொரிந்த பாலை அந்த அன்னக் குஞ்சு பருகுகின்றது. பின்னர்த் தவளைகள் தாலாட்ட அவை உறங்கின.

**"சேலுண்ட ஒண் கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்**
**மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை**
**காலுண்ட சேற்று மேதி கன்று உள்ளிக் கனைப்பச்**
**சோர்ந்த**
**பால்உண்டு துயிலப் பச்சைத் தேரை தாலாட்டும்**
**பண்ணை" (13)**

ஒண்கணார் = பெண்கள். நளினம் = தாமரை. மழலைப் பிள்ளை = இளங்குஞ்சு. மேதி = எருமை, பச்சைத் தேரை = பச்சைத் தவளை. 'வளர்த்திய' என்னும் சொல், 'கண் மணியே கண்வளராய்' என்று தாய் பாடிப் படுக்கையில் கிடத்தித் தூங்கப் பண்ணுவதை நினைவு செய்கிறது. எருமை கன்றை நினைத்துப்பால் சொரிகின்ற தாய்த்தலை யன்மை என்னென்பது! அன்னத்திற்கும் தாமரைக்கும் உள்ள தொடர்பை, மணிமேகலையில் உள்ள—

''அன்னச் சேவல் அயர்ந்து விளையாடிய
தன்னுறு பெடையைத் தாமரை அடக்க''(5—123; 124)

என்னும் பாடல் பகுதியாலும் அறியலாம்.

கூட்டு விளக்கு :

கோழி குப்பையைக் கால்களால் கிளற, குப்பையின் உள்ளிருந்த மாணிக்கங்கள் வெளியில் தெரிகின்றன. அவற்றைக் குருவிகள் மின்மினி என்று எண்ணி எடுத்துக் கொண்டு போய்த் தம் கூடுகட்குள் விளக்காக வைக்கின்றனவாம்.

''சூட்டுடைத் தலைத் தூநிற வாரணம்
தாள் துணைக் குடையத் தகைசால்மணி
மேட்டு இமைப்பன மின்மினி யாமெனக்
கூட்டினுள் உய்க்கும் குரீஇயின் குழாம் அரோ'' (27)

சூடு = தலைக்கொண்டை, தூ நிறம் = தூய்மையான வெண்ணிறம். வாரணம் = கோழி. மேடு = குப்பை மேடு. குரீஇ = குருவி. குப்பையைக் கோழி கிளறுவது என்றும் உள்ளது. இதனால் கோழி 'குப்பைக் கோழி' என்றே குறுந்தொகையின் ஒரு பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''குப்பைக் கோழித் தனிப்போர் போல'' (30—6)

என்பது பாடல் பகுதி. குப்பைக் கோழியைக் குறிப்பிட்டிருப்பதால், இப்பாடலைப் பாடிய புலவர் 'குப்பைக் கோழியார்' என்னும் பெயரால் வழங்கப்படுகிறார்.

கூட்டிலே குருவி மாணிக்கத்தை விளக்காக வைப்ப தான ஒரு கருத்து கச்சியப்பரின் கந்த புராணத்திலும் கூறப்பட்டுள்ளது.

> "காட்டில் எளிதுற்ற கடவுள் மணியைக் கொணர்ந்து
> கூட்டில் இருளோட்டக் குருகுய்த்த வாறன்றோ"

என்பது பாடல் பகுதி. இப்படி ஒரு செய்தியைக் கம்பரும் பின்னால் கிட்கிந்தா காண்டத்தில் கூறியுள்ளார்.

## நகரப் படலம்

**புறாவின் ஊடல் :**

அயோத்தி நகரத்து மாடங்களின் உச்சியில் உயிர் உள்ள புறாக்களும் உள்ளன; ஓவியப் புறாக்களும் உள்ளன. உயிர் உள்ள பெண் புறா ஒன்று, தன் காதலனாகிய சேவல் புறாவை அழைத்ததாம். ஆனால் சேவல் புறா, ஓவியத்தில் உள்ள பெண் புறாவை உண்மையான புறா என்று எண்ணி அந்த ஓவியத்தின் பக்கத்திலேயே இருந்த தாம். இதைக் கண்ட உயிருள்ள பெண் புறா, தன் காதலன் வேறொரு பெண் புறாவை விரும்பி அதன் பக்கத்திலேயே இருப்பதாக எண்ணி ஊடல் கொண்டு கற்பகச் சோலைக் குள் புகுந்து மறைந்து கொண்டதாம்.

> "தாவில் பொன்தலத்தின் நல் தவத்தினோர்கள்
> தங்குதாள்
> பூ வுயிர்த்த கற்பகப் பொதும்பர் புக்கு ஒதுங்குமால் —
> ஆவி ஒத்த சேவல், கூவ அன்பின் வந்து அணைந்திடாது
> ஓவியப் புறாவின் மாடு இருக்க, ஊடு பேடையே" (22)

உயர்ந்த மாடங்களில் புறாக்கள் இருப்பதைக் காணலாம். அதை நினைவில் வைத்துக் கொண்டு கம்பர் பாடியுள்ளார். ஓவியத்தில் உள்ளதை உண்மையானது என்று எண்ணி ஏமாந்து போனதாகக் கதைகள் கூறுவதுண்டு. ஊடல் கொண்ட பெண் புறா, நல்வினை

புரிந்தோர் தங்கும் தேவ உலகத்தில் உள்ள கற்பகச் சோலையில் புகுந்தது என்பதைக் கொண்டு, அந்த மாடம் மிகவும் உயர்ந்துள்ளது என்று எண்ணலாம். 'மாடப் புறா' என்னும் வழக்காறும் ஈண்டு எண்ணத்தக்கது. இது பற்றிப் பாரதிதாசனும் தமது 'அழகின் சிரிப்பு' என்னும் நூலில் புறா என்னும் தலைப்பில் பாடியுள்ளார்.

ஒரு பெண் புறா தனக்கென்று தான் வரித்துக்கொண்ட ஓர் ஆண் புறாவைத் தவிர, வேறு ஆண் எதையும் நெருங்க விடாதாம். அதே போலச் சேவல் புறாவும் தன் பெடையைத் தவிர, வேறொரு பெடை எவ்வளவுதான் கவர்ச்சியாயிருப்பினும் அதனைத் திரும்பியும் பார்க்காதாம். புறாக்களுள் ஆணாகட்டும்— பெண்ணாகட்டும் தன் துணை இறந்து விட்டால்தான் மற்றொன்றைத் துணையாகக் கொள்ளுமாம்:

''ஒரு பெட்டை தன் ஆண் அன்றி
வேறொன்றுக்கு உடன்படாதாம்
ஒரு பெட்டை மத்தாப்பைப் போல்
ஒளி புரிந்திட நின்றாலும்
திரும்பியும் பார்ப்பதில்லை;
வேறொரு சேவல்; தம்மில்
ஒருபுறா இறந்திட் டால்தான்
ஒன்றுமற் றொன்றை நாடும்''

இந்தச் சுவையான பாடல் ஈண்டு கம்பரின் பாடலோடு ஒப்பு நோக்கத் தக்கது.

**தேய் பிறை:**

திங்கள் பதினைந்து நாள் வளர்ந்து செல்வதை வளர்பிறை என்றும், 15 நாள் தேய்ந்து செல்வதைத் தேய்பிறை என்றும் மக்கள் வழங்குகின்றனர். இவ்வாறு நிகழ்வது திங்கள் மண்ணுலகைச் சுற்றுவதால் என்பது இக்காலத்தில் அறிந்த செய்தி. ஆனால், முற்காலத்தில்,

இதற்கு வேறு காரணம் இருப்பதாகப் புராணக் கதை கூறுகிறது. திங்கள்மேல் சினம் கொண்ட தக்கன் என்பவன், நீ ஒவ்வொரு கலையாய்த் தேய்ந்து அழிந்து போவாயாக எனக் கெடுமொழி (சாபம்) இட்டானாம். அதன்படி ஒவ்வொரு கலையாய்த் தேய்ந்து மீதியாக ஒரே கலை இருந்தபோது, திங்கள் சிவனிடம் சென்று முறையிட்டு வேண்டிக் கொண்டானாம். சிவன் நோக்கி, நீ ஒவ்வொரு கலையாய் வளர்ந்து முழுமை பெறுவாய்—மீண்டும் தக்கனது கெடுமொழிப்படி ஒவ்வொரு கலையாய்த் தேய்வாய்— இவ்வாறு மாறி மாறியிருப்பாயாக என்று அருளியதால் தேய்பிறையும் வளர்பிறையும் மாறி மாறி வருகின்றனவாம்.

இது புராணக் கதை. கம்பர் இதற்கு வேறொரு காரணம் தன் குறிப்பாகக் கூறுகிறார்: உயரமான மலைகளின் மேல் உள்ள வாழை மரங்கள் போல, அயோத்தியில் வானம் வரையும் உயர்ந்திருக்கும் மாட மாளிகைகளின் மேல் நிரம்பக் கொடிகள் கட்டப்பட்டுப் பறக்கின்றனவாம். அக்கொடிகள் முழுத் திங்களைத் தேய்த்துக் கொண்டே இருப்பதால் தேய்பிறை உண்டாயிற்றாம்:

**''காண்வரு நெடுவரைக் கதலிக் கானம்போல்**
**தாணிமிர் பதாகையின் குழாம் தழைத்தன**
**வாணனி மழுங்கிட மயங்கி வைகலும்**
**சேண்மதி தேய்வது அக்கொடிகள் தேய்க்கவே''** (37)

கதலி=வாழை. பதாகை=கொடி. ஆசிரியர், இயற்கையான ஒரு காரணம் இருக்க, அதைவிட்டுத் தானாக ஒரு காரணத்தைக் குறித்து ஏற்றியதால், இதைத் 'தற்குறிப்பு ஏற்ற அணி' என ஒருவகையில் கூறலாம்.

இமையா ஓவியம்:

அயோத்தி நகர்ப் பெண்கள் ஒளி விளக்குபோல் 'பள பள' என்று மின்னுகின்றனர். அவர்களின் அழகை ஓவியங்களும் பார்க்க விரும்பின; அதனால் அவை திறந்த

கண்களை மூடி மூடி இமைக்காமல் திறந்தபடியே உள்ளனவாம்.

> "பொழுதுணர் வரிய அப்பொரு இல் மாநகர்த்
> தொழுதகு மடந்தையர் சுடர் விளக்கு எனப்
> பழுதறு மேனியைப் பார்க்கும் ஆசைகொல்
> எழுது சித்திரங்களும் இமைப்பு இலாதவே" (49)

பெண்களை ஓவியங்கள் பார்ப்பதாகக் கூறியது ஏன்? அழகான பெண்களை மற்ற பெண்களும் உற்று நோக்குவர்— ஆண்களும் உற்று நோக்குவர். பெண்கள், அழகிய பெண்களின் ஆடை அணிகலன்கள் எவ்வாறு உள்ளன என்றறிய உற்று நோக்குவர். ஆண்கள் நோக்கு வதற்குக் காரணம் கூற வேண்டியதில்லை. மணிமேகலை யில் உள்ள—

> "ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
> பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்" (3—24,25)

என்னும் பாடல் பகுதி ஈண்டு எண்ணத் தக்கது. (இமை யாமல் பார்க்கும் ஓவியங்கள் ஆண் ஓவியங்களாக இருக்குமோ?) ஓவியம் இயற்கையாகவே இமைப்பதில்லை. அவை இமைக்காமல் இருப்பதற்கு ஆசிரியர் தாமாக ஒரு காரணத்தைக் குறித்து ஏற்றுவதால், இதையும் ஒரு வகையில் 'தற்குறிப்பு ஏற்ற அணி' என்று கூறலாம்.

## தாடகை வதைப் படலம்

**கூற்றுக்குச் சுவை:**

அயோத்தியிலிருந்து விசுவாமித்திரருடன் காடு ஏகிய இராமன், அம்பெறிந்து தாடகையைக் கொன்றான். இது வரையும் அரக்கர் குலத்தினரின் உயிரைக் குடிக்க அவா இருந்தும், அச்சத்தால் அவர்களை நெருங்காதிருந்த கூற்றுவன், இப்போது தாடகையின் உயிரைப் பற்றிச் சிறிது சுவை அறிந்தானாம்.

"வாசநாள் மலரோன் அன்ன மாமுனி பணி மறாத
காசுலாம் கனகப் பைம்பூண் காகுத்தன் கன்னிப் போரில்
கூசி வாள் அரக்கர் தங்கள் குலத்து உயிர் குடிக்க அஞ்சி
ஆசையால் உழலும் கூற்றும் சுவை சிறிது அறிந்த
தன்றே" (53)

இராமனுக்கு இது முதல் போர் ஆனதால் 'கன்னிப் போர்" எனப்பட்டது. கூற்றுவன் சுவை சிறிது அறிந்தான் என்பதில் மற்றொரு கருத்து மறைந்துள்ளது. அதாவது, இராமன் துணையால் இன்னும் பதினாயிரக்கணக்கான அரக்கர்களின் உயிர்களைச் சுவைக்க இருக்கிறான் கூற்றுவன்—என்பதே அது. இன்னும் பல போர்கள் நேருமாதலின் இது கன்னிப் போர் ஆகும்.

## அகலிகைப் படலம்

**நிழல் கயல்:**

ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கினமாகிய நாரை, தண்ணீரில் தெரியும் உழத்தியின் கண்களின் நிழலைக் கயல்கள் என்றெண்ணிக் கொத்த, ஒன்றும் இல்லாமையால் வெட்கியதாம். அத்தகைய நீர்வளம் மிக்க மிதிலை நாட்டை மூவரும் அடைந்தனர். இந்த நயமான கற்பனையுள்ள பாடலாவது:-

"பள்ளி நீங்கிய பங்கயப் பழனி நல் நாரை
வெள்ள வான்களை களைவுறும் கடைசியர் மிளிர்ந்த
கள்ளவாள் நெடுங்கண் நிழல் கயல் எனக் கருதா
அள்ளி நாணுறும் அகன்பணை மிதிலை நாடு
அணைந்தார்" (6)

**ஆடல் காட்சி.**

ஆங்குள்ள ஒரு சோலையில் பின்வருமாறு ஆடல் காட்சி ஒன்று நேர்ந்தது. மதகுகளிலிருந்து நீர் விழும் ஒலி

முழவு — அசோக— மலர்கள் — விளக்குகள்—மலர் யாழ் வண்டொலி பாடல்—இந்த அமைப்புகளுடன் நடம் ஆடுவது மயில். இவ்வாறு ஓர் ஆடல் அரங்கு நடைபெற்றது:

''வரம்பில் வான்சிறை மதகுகள் முழவொலி வழங்க
அரும்பு நாண்மலர் அசோகுகள் அலர் விளக்கு எடுப்ப,
நரம்பின் நான்ற தேன் தாரை கொள் நறுமலர் யாழின்,
சுரும்பு பாண் செயத் தோகை நின்றாடுவ சோலை'' (7)

இந்தப் பாடலில், ஆடலுக்கு ஏற்ற பக்க இசைக்கருவிகள் புதுமையாகக் கூறப்பட்டுள்ளன.

## வரைக் காட்சிப் படலம்

**உடுபதி ஆடி:**

தயரதனுடன் மிதிலை சென்றவர்கள் வழியில் சந்திர சயிலம் என்னும் மலைப் பகுதியை அடைந்தனர். அம்மலை உச்சியைத் தாண்டிப் போக முடியாமல் திங்கள் உச்சியில் அப்படியே நின்று விட்டதாம். உச்சியில் திங்கள் கண்ணாடிபோல் இருந்தது. திங்களின் அப்புறத்து இருந்த தெய்வமகளிர் திங்களின் அப்புறத்திலே தம் அழகைக் கண்டனராம். திங்களின் இப்புறத்திலே இருந்த மலைவாழ் மகளிர் திங்களின் இப்புறத்திலே தம் அழகைக் கண்டனராம்.

''குப்புறற்கு அருமையான குலவரைச் சாரல் வைகி
ஒப்புறத் துளங்கு கின்ற உடுபதி ஆடியின்கண்
இப்புறத்தேயும் காண்பார் குறத்தியர் இயைந்த கோலம்;
அப்புறத் தேயும் காண்பார் அரம்பையர் அழகு
மாதோ'' (5)

அசுவனி முதல் இரேவதிவரை உள்ள இருபத்தேழு விண்மீன்களாகிய (உடுக்களாகிய) பெண்களின் கணவன் (பதி) திங்களாம். அதனால் 'உடுபதி' என்னும் பெயர் ஏற்பட்டது. உலகில் கண்ணாடி ஒரு புறம் தெரிவதே

நடைமுறை. இந்தத் திங்களாகிய கண்ணாடியோ இருபுறமும் முகம் பார்க்கத் தெரிந்ததாம். இந்தக் காலத்தில் திங்களைப் பற்றி அறிந்துள்ள நிலையை அந்தக் காலத்தோடு ஒத்திட்டுப் பார்த்தலாகாது.

கின்னரம் மயங்கும் :

மங்கையர், கண், காதை நோக்கிச் செல்லாமலும், வாயில் முறுவலிக்கும் பற்கள் தெரியாமலும், கூந்தல் அவிழ்ந்து விடாமலும், புருவங்கள் நெரியாமலும், கழுத்திலிருந்து வாயின் வழியாக வெளிவரும் பாடலுக்கு ஏற்பக் கைகளால் யாழ் நரம்பை மீட்டிப் பாடும் பாடலைக் கேட்டுக் கின்னரம் என்னும் பறவை மயங்கும்.

**''செங்கயல் அனைய நாட்டம் செவி உறா, முறுவல் தோன்றா,**
**பொங்கிருங் கூந்தல் சோரா;புருவங்கள் நெரியா, பூவின்**
**அங்கையும் மிடறும் கூட்டி நரம்பு அளைந்து அமுதம் ஊறும்**
**மங்கையர் பாடல் கேட்டுக் கின்னரம் மயங்கும் மாதோ'' (9)**

உலகில் பாடுபவர் சிலர், கண்டபடிக் கண்ணைச் சுழற்றுதலும், பல் இளித்துச் சிரித்தலும், கூந்தலை அவிழ விட்டும், புருவங்களை நெரித்தும், யாழிசைக்கும் பாடலுக்கும் பொருத்தம் இல்லாமலும் பாடுவர். இத்தகைய உறுப்பின் சீர்கேடு (அங்கசேஷ்டை) பாடகருக்குக் கூடாதது. அடிபிடி சண்டை போடும்போது அல்லவா கூந்தல் அவிழும். கண்ணும் பல்லும் புருவமும் நிலை மாறுவது பாடும்போது தேவையில்லை – ஆடும்போது தான் தேவை. சிலர் பாடத் தொடங்கினால், ஆடவும் செய்வர்; இருந்த இடத்திலிருந்து சிறிது சிறிதாக அப்பால் நகர்ந்து வந்து விடுவர். கோணக் கோண இழுப்பு வந்தது போன்ற தோற்றம் எடுப்பர்.

இது தொடர்பாக ஒரு கதை சொல்வதுண்டு. பாடகர் ஒருவர் இப்படித்தான் உறுப்புகளை என்னென்னவோ போல் இயக்கிப் பாடிக் கொண்டிருந்தாராம். அவரைப் பார்த்த பாமரன் ஒருவன், என் ஆடு இப்படித்தான் கோணக் கோண இழுத்தது; அதற்குச் சூடு போட்டதும் சரியாய்ப் போயிற்று; அதுபோல் இவருக்கும் சூடு போட்டால் நன்றாகி விடுவார் என்று கூறினானாம்.

'இசை மரபு' என்னும் நூலில் பாடுவோர்க்கு இருக்க வேண்டிய இயல்பு கூறப்பட்டுள்ளது. பாடல்:

**''கண்ணிமையா, கண்டம் துடியா, கொடிறசையா,**
**பண்ணளவும் வாய்தோன்றா, பல் தெரியா—**
**எண்ணிலிவை**
**கள்ளார் நறுந்தெரியல் கைதவனே கந்தருவர்**
**உள்ளாளப் பாடல் உணர்''**

என்பது பாடல். கின்னரம் என்னும் பறவை வானம்பாடி போல் இசைபாடும்; இசை இன்பத்தைத் துய்க்கும். அந்தப் பறவையே மங்கையரின் பாடலைக் கேட்டு மயங்குகின்றதாம்.

## பூக்கொய் படலம்

**பெண்களின் ஊடல்:**

தெங்கு இளநீரைக் கண்ட ஒருவன், இது மாதரின் கொங்கைபோல் உளது என்று கூற, அதைக் கேட்ட அவன் மனைவி, எந்த மாதரின் கொங்கைபோல் உளது என்று கேட்டு, தன்னினும் வேறு பெண்ணோடு அவனுக்குத் தொடர்பு உண்டு போலும் என்றெண்ணி ஊடல் கொண்டாள்.

மற்றோர் ஆடவன், மலர் கொய்து கொண்டிருந்த போது, அவன் மனைவி பின்னால் வந்து அவன் கண்களைப் பொத்த, அவன் யார் என்று வினவ, கண்ணை

என்னைத் தவிர வேறு யார் வந்து பொத்த முடியும்? வேறு ஒருத்தியின் தொடர்பு உண்டு போலும் என்றெண்ணி ஊடல் கொண்டாள். பின்வரும் பாடல்களால் இவற்றை அறியலாம்:

''செம்மாந்த தெங்கின் இளநீரை ஓர் செம்மல் நோக்கி,
அம்மா! இவை மங்கையர் கொங்கையின் ஆய என்ன,
எம்மாதர் கொங்கைக்கு இவைஒப்பன என்று ஓர் ஏழை
விம்மா வெதும்பா வெயரா முகம் வெய்துயிர்த்தாள்''
(17)

'செம்மாந்த' என்பது, இளநீர்—கொங்கை ஆகிய வற்றின் எடுப்பான தோற்றத்தைக் குறிக்கிறது. ஏழை= பெண்.

''போர் என்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொள் திண்தோள்
மாரன் அனையான் மலர்கொய்து இருந்தானை வந்து ஓர்
காரென்ன கூந்தல் குயில் அன்னவள் கண்புதைப்ப
'ஆர்' என்னலோடும், அனலென்ன அயிர்த்து உயிர்த்தாள்'' (18)

மாரன் அனையான் = மன்மதனை ஒத்த அழகன். 'ஆர்' என்று கேட்டதும், நெருப்புபோல் பெருமூச்செறிந் தாளாம். இந்தக் கற்பனையைக் கம்பர் தாமே இயற்கை யாகக் கூறியிருப்பாரோ? அல்லது திருக்குறளிலிருந்து அறிந்திருப்பாரோ? இந்த ஐயத்திற்குக் காரணம், திருக்குறள்—புலவி நுணுக்கம் என்னும் தலைப்பில் உள்ள பத்துக் குறள்களுள் ஆறு குறள்கள் இத்தகைய கருத்துடை யவையாய் இருப்பதுதான். அக்குறள்களைக் காண்போமே:

''கோட்டுப் பூச்சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று'' (1313)

''யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று'' (1314)

''வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று'' (1317)

''தும்முச் செறுப்ப அழுதாள் நுமர் உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று'' (1318)

''தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று'' (1319)

''நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினிர் என்று'' (1320)

இந்தக் குறள்களில் உள்ள அடிப்படைக் கருத்து போலவே, கம்பர் பாடல்களிலும் கருத்து அமைந் திருப்பதைக் காணலாம். கம்பரின் மற்றும் சில பாடல் களிலும் இத்தகைய ஊடல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உண்டாட்டுப் படலம்

**நீயே உண்ணுதி:**

மிதிலை நோக்கிச் செல்பவர்கள் வழியில் உண்டு மகிழ்கிறார்கள். பெண் ஒருத்தி தன் மதுக் கிண்ணத்தில் தனது நிழல் தெரிய, அதை வேறொரு பெண்ணென்று எண்ணி, தோழியே! நீயே இந்த மதுவை உண்பாயாக என்றாளாம். எனவே, நஞ்சொத்த கண்ணையும் அமிழ் தொத்த இன்சொல்லையும் உடைய மடவாரின் மடமையை விட வேறு பெரிய மடமை உண்டோ? (இல்லை)

''விடன் ஒக்கும் நெடிய நோக்கின் அமிழ்து ஒக்கும்
இன்சொலார்தம்
மடன் ஒக்கும் மடமை உண்டோ வாள்நுதல் ஒருத்தி
காண,
தடன் ஒக்கும் நிழலைப் பொன்செய் தண் நறும் தேறல்
வள்ளத்து
உடன் ஒக்க உவந்து நீயே உண்ணுதி தோழி
என்றாள்'' (10)

தேறல் வள்ளம் = மதுக் கிண்ணம். இப்பாடலின் முதல் அடியில், ஒன்றுக்கு முரணான விடமும் அமிழ்தும் சொல்லப்பட்டிருப்பதால், இந்த அமைப்பை முரண்தொடை என்பர். விடன் = விடம் = கடைப்போலி. கண்ணால் கொல்லும் நஞ்சுபோல் நோக்கினும், அமிழ்தம் போன்ற சொல்லால் பின்னர் இன்புறுத்துவர்.

மற்றொரு பெண், தன் முகம் மதுக் கிண்ணத்தில் தெரிவதைநோக்கி, அந்த நிழலை ஒரு பெண் என்று எண்ணி 'அடி பைத்தியமே! நீ வேறு நல்ல மதுவை அருந்தாமல் நான் அருந்தி மீதியாய் வைத்திருக்கும் இந்த எச்சில் மதுவை அருந்துகிறாயே என்று கூறி நகைத்தாளாம்.

**"அச்சநுண் மருங்குலாள் ஓர் அணங்கு அனாள் அளக பந்தி**
**நச்சு வேல் கருங்கண் செவ்வாய் நளிர் முகம் மதுவுள் தோன்ற,**
**பிச்சி நீ என் செய்தாய் இப்பெருநறவு இருக்க வாளா**
**எச்சிலை நுகர்தியோ என்று எயிற்று அரும்பு இலங்க நக்காள்" (11)**

அச்சநுண் மருங்குல் = ஒடிந்து விடுமோ என அஞ்சும் படியான நுண்ணிய இடுப்பு. அளக பந்தி = கூந்தலின் செறிவான வளம். பிச்சி = பைத்தியக்காரி.

**தண்மதி**

மதுக் கிண்ணத்தில் தெரிந்த தன் முகத்தை, மது வேட்கையால் திங்கள் வந்து விழுந்து விட்டதாகக் கருதிய பெண் ஒருத்தி, அந்த நிழல் முகத் திங்களை நோக்கி மதியமே! நான் என் கணவரோடு ஊடிக் கூடாதிருக்கும் காலத்தில் என்மேல் வெப்பத்தை வீசாமல் தண்மையை வீசுவதானால், இந்த மதுவை இப்போது உனக்குத் தருவேன் என்றாள்:-

"கண்மணி வள்ளத்துள்ளே களிக்கும் தன் முகத்தை
நோக்கி
விண்மதி மதுவின் ஆசை வீழ்ந்தது என்று ஒருத்தி உன்னி
உண்மகிழ் துணைவனோடும் ஊடுநாள் வெம்மை நீங்கித்
தண்மதி ஆகின், யானும் தருவென் இந்நறவை
என்றாள் (18)

கண்மணி = கள் மணி. உண்மகிழ் = உள் மகிழ் கணவனோடு கூடாத காலத்தில் பெண்ணுக்கு நிலவு ஒளி வெப்பமாய்ச் சுடுவதாகக் கூறுவது பல இலக்கியங்களில் உள்ள செய்தி. அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு கம்பர் இந்தப் பாடலில் விளையாடியுள்ளார். இங்கே,

"அழல் நிறத் தேறலுள் மதிகண்டு" (2677)

என்னும் சீவக சிந்தாமணிப் பாடல் பகுதி ஒப்பு நோக்கத் தக்கது.

**பேர் சொல்லும் கிளி:**

ஒருத்தி, காமக் கடலில் படுக்கையாகிய தெப்பத்தில் மிதந்து கொண்டு, தன் கணவனது பெயரை அடிக்கடிச் சொல்லும் தன் கிளியைக் கட்டித் தழுவினாள்:

"விரைசெய் பூஞ்சேக்கையாம் தெப்பமீ மிசை
கரைசெயா ஆசை யங்கடல் உளாள் ஒரு
பிரசமென் குதலையாள் கொழுநன் பேரெலாம்
உரைசெயும் கிள்ளையை உவந்து புல்லினாள்" (17)

பிரைசம் = பிரசம் = தேன்; இடைப்போலி. காதலனின் பேரைக் கேட்பதில், பிரிந்திருக்கும் காதலிக்கு ஒரு விதமான மகிழ்ச்சி உண்டாகும் என்னும் கருத்து, வேறு இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளது.

ஞான சம்பந்தரின் தோணிபுரப் பதிகத்தில் இத்தகு பாடல் ஒன்றுள்ளது. சிவன்மேல் காதல் கொண்ட ஒருத்தி,

தன் கிளியை நோக்கி, சிவனது திருப்பெயரை ஒரு முறையாவது சொல்ல மாட்டாயா? உனக்குத் தேனோடு பால் தருவேன்—சொல்வாயாக—என்றாளாம். பாடல்:

**''சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்**
**முறையாலே உணத்தருவன் மொய் பவளத்தொடு தரளம்**
**துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்கும் இளம்**
**பிறையாளன் திருநாமம் எனக்கொருகால்**
**பேசாயோ'' (10)**

## உலாவியல் படலம்

**கண் வாயில்**

இராமன் மிதிலையின் தெருவில் சென்று கொண்டிருந்த போது, கண்டு விரும்பிய பெண் ஒருத்தி தன் தோழியிடம் கூறிகிறாள்: ''தோழி! அந்த வஞ்சகன் என் கண் வழியாகப் புகுந்து நெஞ்சில் வந்து தங்கி விட்டான். அவன் திரும்ப வெளியில் போகாவண்ணம் கண்ணாகிய வாயில் கதவை இறுக மூடி அடைத்து விட்டேன். படுக்கை அறைக்குச் செல்லலாம் வா'' என்றாள்.

**''மைக்கருங் கூந்தல் செவ்வாய் வாள்நுதல் ஒருத்தி**
**உள்ளம்**
**நெக்கனள் உருகுகின்றாள்: நெஞ்சிடை வஞ்சன் வந்து**
**புக்கனன் போகாவண்ணம் கண் எனும் புலம்**
**கொள்வாயில்**
**சிக்கென அடைத்தேன் தோழீ சேருதும் அமளி**
**என்றாள்'' (14)**

இராமன் கண்வழியாகக் கள்ளத்தனமாய்ப் புகுந்து விட்டதால் அவனை 'வஞ்சன்' என்றாள். கண்வழியாகப் புகுந்தவன் அக்கண் வழியாக வெளியே போகாதவாறு கண்ணை மூடிக் கொண்டதால், இவளுக்குக் கண் தெரியாததலால், படுக்கையறைக்குச் செல்வதற்குத்

தோழியின் துணையை நாடினாள். இது, அழகிய ஒரு கற்பனையாகும்.

இதுபோன்ற கருத்தமைந்த பாடல் ஒன்று முத்தொள்ளாயிரம் என்னும் நூலில் உள்ளது. பாண்டிய மன்னன் ஒருத்தியின் கண்வழியே புகுந்து விட்டானாம். அவளது உயிரைப் போக்குவதாயினும், கண்ணைத் திறக்க மாட்டாளாம்—திறந்தால் ஓடி விடுவானாம்.

**''தளையவிழும் பூங்கோதைத் தாயரே ஆவி**
**களையினுமென் கண்திறந்து காட்டேன்—**
**வளை கொடுபோம்**
**வன்கண்ணன் வாள்மாறன் மால்யானை தன்னுடன்**
**வந்து**
**என்கண் புகுந்தான் இரா''** (38)

என்பது அந்தச் சுவையான பாடல்

இவ்வாறாகக் கம்பரின் பால காண்டத்தில் பல கற்பனைக் கனிகள் இன்சுவை அளித்துக் கொண்டுள்ளன. இனி அடுத்த பழுமரம் காணலாம்.

# 8. ஒட்டு மாங்கனிகள்

இரண்டு இனங்களை ஒட்டி உண்டாக்கும் ஒட்டு மாங்கனிகள் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. மற்றும் பயறு வகைகள் போன்றவற்றிலும் இத்தகைய ஒட்டு வேலை செய்து வளர்ச்சி உண்டாக்கப்படுகிறது. மாடுகளிலும் ஈரின ஒட்டுகளால் பிறந்தவை மிக்க வளர்ச்சி உடையன வாய்க் கருதப்படுகின்றன. மக்களுள்ளும் தமக்கை மகள் போன்ற நெருங்கிய உறவுடையவர்களுக்குள் மணஞ் செய்து கொண்டவர்கட்குப் பிறக்கும் குழந்தைகள் வளர்ச்சி குன்றியவராவார்கள் என்னும் கருத்து கூறுவது உண்டு. நடைமுறையிலும் சில குடும்பங்களில் இந்நிலைமையைக் காணலாம். எட்டிய உறவினர்கட்குள் அல்லது வெவ்வேறு இனத்தவர்கட்குள் மணந்து கொண்ட வர்களின் குழந்தைகட்கு நல்ல வளர்ச்சி இருப்பது கண் கூடு. இலக்கியங்களிலும் இத்தகைய அமைப்பு உண்டு.

திருக்குறள் உயரின இலக்கியம். இந்த நூல் கருத்துகள் அமையப் பெற்ற வேறு இலக்கியப் பாடல்கள் சிறந்த ஒட்டு மாங்கனிகள் போல் சுவைக்கப்படுகின்றன.

கம்பராமாயணச் சொற்பொழிவாளர் ஒருவர், கம்பராமாயணத்தில் எடுத்தாளப்பட்டுள்ள திருக்குறள் பாக்கள் சிலவற்றை அறிவிக்கும்படி என்னிடம்(சு.ச.இடம்) கேட்டார். நான் எழுதியுள்ள 'அயோத்தியா காண்ட ஆழ்கடல்,' 'சுந்தரகாண்டச் சுரங்கம்' என்னும் இரு நூல்களிலும், 'திருக்குறள் ஆட்சி' என்று தலைப்பிட்டுச்

சில குறள் கருத்துகள் அமைத்துள்ள கம்பர் பாடலை விளக்கியுள்ளேன். அந்நூல்களைப் படித்து அறிந்து கொள்ளுங்கள் என்று கூறினேன். அவர் அவ்வாறே செய்தார்.

அந்நூல்களில் அமைந்திருப்பது போலவே, பால காண்டப் பைம் பொழில்' என்னும் இந்நூலிலும், பல தலைப்புகளின் கீழ்த் தரப்பட்டுள்ள கம்பர் பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ள பல குறள்களை எடுத்துக்காட்டியுள்ளேன். 'ஒட்டு மாங்கனிகள்' என்னும் இந்தத் தனித் தலைப்பிலும் குறள்கள் ஒருசில எடுத்தாளப்பட்டுள்ள, கம்பர் பாடல்களைக் காண்போம்:—

## நாட்டுப் படலம்

தம் இல்லும் தம் உணவும்:

கோசல நாட்டில், பல இனத்தவரும் உணவு கொள்ளும் ஆரவாரம் எங்கும் மிக்குள்ளது. வாழை, மா, பலா என்னும் முக்கனிகளும், நாலா வகையான பருப்பு வகைளும், செந்நிறத் தயிர்க் கட்டிகளும் இன்ன பிறவும் இடையிடையே கலந்த சோற்றினை, தங்கள் தங்களுடைய வீடுகளில் இருந்து கொண்டு, தாம் மட்டும் அல்லாமல், விருந்தினர்-சுற்றத்தார் முதலியவரோடும் அந்நாட்டு மக்கள் உண்கிறார்களாம்.

> **"முந்து முக்கனியின், நானா முதிரையின், முழுத்த நெய்யின்,**
> **செந்தயிர்க் கண்டம் கண்டம் இடையிடை செறிந்த சோற்றின்**
> **தந்தம் இல் இருந்து தாமும் விருந்தொடும் தமரினோடும்**
> **அந்தணர் முதலோர் உண்டி அயிலுறும் அமலை எங்கும்"** (22)

தந்தம் = தம்தம். இந்தக் காலத்தில் பல வகைக் கனிகள் உண்ணப்படுகின்றன. அந்தக் காலத்தில் வாழை,

மா, பலா என்னும் முக்கனிகள் உயர்ந்தனவாகக் கருதப் பட்டன. 'முக்கனியும் சோறும்' அளித்தார்கள் என்று தமிழக மக்கள் கூறும் கனிகளைக் கம்பர் கோசல நாட்டிலும் உள்ளனவாக ஏற்றிக் கூறியுள்ளார். முக்கனி யின் முதன்மையை 'முந்து முக்கனி' என்னும் தொடர் அறிவிக்கிறது.

பயறு வகைகளும் உண்டாம். சமநிலை உணவுக்குப் பயறு வகைகளும் தேவை. இவற்றுள் முந்திரிப் பருப்பு வறுவலுக்கு முதலிடம் அளிப்பர் சிலர்.

குழம்பு கொஞ்சமாக ஊற்றப்படின், உண்பவர் பரிமாறுபவரை நோக்கி, 'என்னய்யா நெய் போடுவது போல் போடுகிறாய்—இன்னும் தாராளமாய்ப் போடு என்பது உண்டு. அதாவது, நெய் சிறிதளவே பரிமாறப்படும். ஆனால், இங்கோ, உணவுப் பொருள் மறையும் (முழுகும்) அளவு நெய் ஊற்றப்படுமாம். இதனை 'முழுத்த நெய்யின்' என்னும் தொடர் அறிவிக்கிறது.

தயிர் கட்டி—கட்டியாகப் பரிமாறப்படுகிறதாம். சில இடங்களில் மோரில் நீர் கலப்பதற்குப் பதிலாக, நீரில் மோர் கலப்ப துண்டு. இதனை 'நீர் மோர்' என்று கூறாமல், 'மோர் நீர்' என்றே கூற வேண்டும். ஈண்டு, காளமேகப் புலவரின் நகைச்சுவைப் பாடல் ஒன்று நினைவைத் தூண்டுகிறது. ஆய்ச்சி ஒருத்தி விற்ற மோர் மிகவும் தண்ணீரா யிருந்ததாகப் புலவர் கிண்டல் செய்கிறார். இந்த மோர், விண்ணில் இருந்தபோது கார்(மேகம்) என்று பெயர் பெற்றதாம்; நிலத்திற்கு வந்த பின் நீர் என்னும் பெயர் பெற்றதாம். இந்த ஆய்ச்சி கையில் அகப்பட்ட பின்னர் மோர் என்னும் பெயர் பெற்றதாம். அதாவது, கார், நீர், மோர் என்னும் முப்பேரும் பெற்றதாம். பாடல்:

**''காரென்று பேர்பெற்றாய் ககனத்தில் உறும்போது,**
**நீரென்று பேர்பெற்றாய் நீள்நிலத்தில் வந்ததற்பின்,**

வாரொன்று பூங்குழலாள் ஆய்ச்சி கையில் வந்ததற்பின்
மோரென்று பேர்பெற்றாய் முப்பேரும் பெற்றாயே''

என்னும் தனிப்பாடல் காளமேகப் புலவருடையது. மோர் நீர் பரிமாறுபவர்டிள்,

''நீரைக் கருக்கி நெய்யை உருக்கி
மோரைப் பெருக்கி உண்பவர்தம்
பேரை உரைக்கின் போமே பிணி''

என்னும் சித்தர் பாடலைப் பின் பற்றுபவர்கள் போலும்! நீர் கலக்காமல் நன்றாக முறுகக் காய்ச்சிப் பிரை குத்திய பால்அமுத்தமான கட்டித் தயிராகும்—சிறிதளவு செந்நிறம் கலந்தது போல் தோன்றும். இது கத்தியால் வெட்டி வைக்கப்படுமாம்.

''தைத்திங்கள் நிலாநிறம் தான்மிகப் பெற்ற
கத்தியால் வெட்டும் கட்டியாந் தயிர்'' (20—98, 99)

என்பது, அம்பிகாபதி காப்பியம் என்னும் நூலில் உள்ள ஒரு பகுதி. கோசல நாட்டில் இத்தகைய உணவு வளம் உள்ளதாம்.

கம்பரின் இப்பாடலில் உள்ள ''தம் தம் இல் இருந்து தாமும் விருந்தொடும் தமரினொடும் அயிலுறும் அமலை'' என்ற பகுதி மிகவும் இன்றியமையாதது. இது தொடர்பான குறள்பாவுக்குச் செல்லலாம்.

உண்மைக் காதலன் ஒருவன் தன் உண்மைக் காதலியுடன் உடலுறவு கொண்டு மகிழ்ந்து, தனது மகிழ்ச்சிக்கு ஓர் ஒப்புமை கூறுகிறான்; அதாவது—''அம்மாடி! இந்தப் பெண்ணோடு கொண்ட புணர்ச்சி யின்பம், தம் சொந்த வீட்டில இருந்து கொண்டு தம் சொந்த உணவைப் பலர்க்கும் பங்கிட்டு உண்ணும் இன்பம் போன்றது—என்று பாராட்டினான்:

''தம் இல் இருந்து தமது பாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு'' (1107)

என்பது குறள். மிகுந்த ஒளியுடன் எரியும் ஒரு விளக்குக்கு ஒப்புமை கூற வேண்டுமெனில், அதனினும் உயர்ந்த பொருளையே ஒப்புமையாகக் கூறுவது இயற்கை. இந்த விளக்கு ஞாயிறு போல் ஒளி வீசுகிறது என்பர். மின்மினி போல் என்று கூறுவதில்லை. இந்த அடிப்படையுடன் நோக்குங்கால், காதலியுடன் உடலுறவு கொண்ட இன்பத்தினும், தமது இல்லத்தில் இருந்து கொண்டு, தாம் ஈட்டி வந்த உணவைப் பலர்க்கும் பங்கிட்டு உண்ணும் இன்பம் மிகவும் உயர்ந்தது என்னும் கருத்து பெறப்படும்.

திருவள்ளுவர்க்கு - இந்த உவமை எவ்வாறு கிடைத்ததோ? பிறர் வீட்டில் பிறர் தந்த உணவை உண்டவர்கள் பின்னர்ப் பெற்ற மானக் கேட்டை நேரில் அறிந்திருப்பாரோ? திருவள்ளுவர் அறிந்தாரோ — அறியவில்லையோ! மூளைக் கட்டி நோய் காரணமாக ஆசிரியப் பணி செய்ய முடியாமல் சம்பள இழப்புடன் ஓராண்டு காலம் மாமனார் வீட்டிலும் சொந்தத் தமையனார் வீட்டிலும் தங்கியிருந்த எனக்கு இந்த மானக் கேட்டைப் பற்றி நன்றாக—மிகவும் நன்றாகத் தெரியும். இந்த மானக் கேட்டிற்குப் பின்னர் இந்தக் குறளைப் படிக்கும் போதெல்லாம் முன்பினும் நன்கு புரிந்து மிகுதியாகச் சுவைப்பேன் நான்.

பிறர் தந்த உணவைத் தம் வீட்டில் இருந்து கொண்டு உண்பதும் குறைவே. தமது உணவையே கூட, பிறர் இடத்தில் தங்கி யுண்ணினும், ஏதோ தூய்மையைக் கெடுத்துவிட்டதாக வீட்டுக்கு உடையவர் கருதுவதும் உண்டு. இந்த மானக் கேட்டையும் யான் பெற்றுள்ளேன். 1940-ஆம் ஆண்டு, சித்திரைச் சதய விழாவிற்காகக் கட்டு சோற்றுடன் திருவதிகைக்குச் சிலர் சென்றோம். ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கட்டு சோற்று மூட்டையை அவிழ்க்கத் தொடங்கினோம். இன்னும் உண்ணத்தொடங்க

வில்லை. இதையறிந்த வயதான அந்த வீட்டுப் பெண்மணி அநாசாரம்— அநாசாரம்— எழுந்து போங்கள்— என்று விரட்டினார். உடனே நாங்கள் கட்டு சோற்றுடன் நடுத் தெருவிற்கு வந்து விட்டோம். பின்னர் அந்த அம்மையார் பெரிய குடம் நிறையத் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து ஊற்றித் திண்ணையைத் தேய்த்துக் கழுவினார். எனவே, தமது உணவைக்கூட, பிறர் இடத்தில் இருந்து கொண்டு உண்பது பொருந்தாது போலும்.

வள்ளுவனார், 'தம் இல்—தமது உணவு' என்பவற்றோடு விட்டாரா என்ன! தாம் மட்டும் உண்டால் போதாது—பலர்க்கும் பகுத்தளித்து உண்ண வேண்டும் என்கிறார். இதையொட்டி, ஔவையார் அதியமானின் வள்ளன்மையைப் புகழ்கிறார்:

**"சிறிய கள் பெறினே எமக்கு ஈயும் மன்னே**
**பெரிய கள் பெறினே**
**யாம் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே**
**சிறு சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே**
**பெருஞ் சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே"**

(புறநானூறு,235:1—5)

என்பது ஔவையாரின் பாடல் பகுதி. ஐயா! நீ மட்டும் உழைக்கவில்லை—மாடுகளும் உழைத்துள்ளன—எனவே, பலர்க்கும் ஈந்து உண்ணுக—என்னும் கருத்தில்,

"பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க" (62—2)

என்று நாலடியாரும் கூறுகிறது. இந்தப் பகுத்துண்டலை, கம்பர், 'விருந்தொடும் தமரினொடும்' என்னும் தொடரால் குறித்துப் போந்தார். எவ்வளவோ உயர்ந்த பாடல் அல்லவா இது!

## வேள்விப் படலம்

**பெண்டிரின் தெய்வம்:**

விசுவாமித்திரர், இராம—இலக்குமணர் ஆகிய மூவரும் காட்டில் சென்று கொண்டிருந்தபோது, எதிர்ப்பட்ட ஒரு சோலையின் சிறப்பைப் பற்றி முனிவன் கூறலானான்: தங்கள் கணவரினும் சிறந்த தெய்வம் வேறு இல்லை என்று எண்ணும் மங்கையரின் மனம் போல் இந்தச் சோலை மிகவும் தூய்மையானது—என்றார்:

**''தங்கள் நாயகரின் தெய்வந்தான் பிறிது இலை**
**என்றெண்ணும்**
**மங்கைமார் சிந்தை போலத் தூயது, மற்றும்**
**கேளாய்'' (6)**

என்பது பாடல் பகுதி. இது,

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'' (55)

என்னும் குறள் கருத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. 'தங்கள் நாயகரின்' என்பதின் இறுதியில் உள்ள 'இன்' என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு. இதற்கு, தங்கள் நாயகரைப் போல் சிறந்த தெய்வம் வேறு இல்லை என்று ஒப்புப் பொருளாகப் பொருள் கொள்வதினும், தங்கள் நாயகரைக் காட்டிலும் சிறந்த தெய்வம் வேறு இல்லை என்று எல்லைப் பொருள் கூறுவது மிகவும் நயமுடையது.

இந்தக் காலத்தில் புரட்சியாளர்கள் சிலர் இந்தக் கருத்தை ஒத்துக் கொள்ளத் தயங்குவர். இது காலத்தின் கோலம். இந்தப் பகுதி, பண்டைய தமிழ் நாட்டைப் படம் பிடித்துக் காட்டுகிறது என்ற அளவில் அமையலாம்.

**கொள்ளலும் கொடுத்தலும்:**

விசுவாமித்திர முனிவரும் இராம இலக்குமணரும் காட்டில் சென்று கொண்டிருந்தபோது, முனிவர்

இராமனுக்கு மாவலி என்பவனின் வரலாற்றை உரைத்தார்: திருமால் வாமனனாகிய குள்ள உருவினராய்ச் சென்று மாவலியிடம் மூன்றடி மண் கேட்டார். கொடுப்பதாக மாவலி கூறினான். இதில் ஏதோ சூது உளது என்று எண்ணி, மாவலியின் ஆசானாகிய வெள்ளி (சுக்கிராச்சாரியார்) தர வேண்டா என்று தடுத்தார். தடுத்த வெள்ளிக்கு, தடுத்தல் தவறு என்பதைச் சுட்டிக் காட்டிப் பின்வருமாறு மாவலி கூறினான்:

மேலோய்! வள்ளல் என்றால் வழங்க வேண்டும். உயிரைப் பொறுத்ததாய் எது நேரினும் கொள்ளுதல் தீயது; கொடுத்தலே நல்லது—என்றான்.

**"வெள்ளியை ஆதல் விளம்பினை மேலோய்**
**வள்ளியர் ஆகில் வழங்குவது அல்லால்**
**எள்ளுவ என்சில; இன் உயிரேனும்**
**கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்"** (19)

இந்தப் பாடலில், வாங்குதல் நல்ல நெறி என்று எவரேனும் கூறினும் அது தீயது; கொடுப்பதால் மேலுலகம் கிடைக்காது என்றாலும் கொடுத்தலே நல்லது—என்னும் கருத்தமைந்த—

**"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று"** (222)

என்னும் குறள் மறைந்துள்ளது. மேலும் மாவலி கூறுகிறான்:

இறந்தவர்கள் அனைவருமே இறந்தவர்களாக மாட்டார்கள். நாணம் விட்டுப் பிறரிடம் கையேந்தி வாங்குபவர்களே இறந்தவர்களாகக் கருதப்படுவர். பிறர்க்கு ஈந்தவர்கள், இறந்து விடினும், உயிருடன் இருப்பவர்களாகவே மதிக்கப் பெறுவர்:

**"மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்கள் மாயாது**
**ஏந்திய கைகொடு இரந்தவர் எந்தாய்**

வீந்தவர் என்பவர்; வீந்தவ ரேனும்
ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே'' (20)

இந்தப் பாடலில், புகழ் என்னும் ஆக்கத்தை அளிப்பதான பொருள் இழப்பும், இறப்பினும் புகழுடம் பொடு வாழ்வதாகவே மதிக்கத்தக்க சாவும், திறனுடை யோர்க்கு அன்றி மற்றவர்க்குக் கிடைப்பது அரிது-என்னும் கருத்து மிளிரும்-

''நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது'' (235)

என்னும் குறள் மணம் வீசுகிறது. புறநானூற்றில் உள்ள-

''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே'' (165-1,2)

என்னும் பாடல் பகுதியும் ஈண்டு எண்ணத்தக்கது. மேலும் மாவலி கூறுகிறான்:

தீமை செய்யும் பகைவரைவிட,கொடுப்பதைத் தடுக்கும் கொடியவரே ஒருவர்க்குப் பெரிய பகைவராவர். அவர்கள் தங்களையும் அழித்துக் கொள்வர். இதனினும் தீய கேடு வேறில்லை. எமது ஆசான் வெள்ளியே! ஒருவர்க்கு ஒருவர் கொடுப்பதைத் தடுப்பது உமக்கு அழகு இல்லை. கொடுப்பதைத் தடுக்கும் கொடியவர், தாமும் தம் சுற்றமும் உடுப்பதும் உண்பதும் இன்றி அழிவர்:

''அடுப்ப வரும்பழி செய்ஞ்ஞரும் அல்லர்
கொடுப்பவர் முன்பு கொடேல் என நின்று
தடுப்பவரே பகை, தம்மையும் அன்னார்
கெடுப்பவர்,இன்னதோர் கேடிலை என்றான்'' (21)

''எடுத்து ஒருவருக் கொருவர் ஈவதனின் முன்னே
தடுப்பது நினக்கு அழகிதோ தகவில் வெள்ளி
கொடுப்பது விலக்கு கொடியோர் தமது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி ஒழியுங் காண்'' (22)

(குறிப்பு: இந்தப் பாடல் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பில் உள்ளது.)

ஈண்டு, ஒருவர் மற்றொருவர்க்கு உதவுவதைக் கண்டு பொறாமைப் படுபவனுடைய சுற்றத்தாரும் அவனோடு உடையும் உணவும் இல்லாமல் கெட்டழிவர் என்னும் கருத்து பொதிந்துள்ள-

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்" (166)

என்னும் குறள் எண்ணி மகிழ்தற்கு உரியது.

மாவலி இவ்வாறெல்லாம் கூறி, வாமனனுக்கு மூன்றடி மண் கொடுக்கத் தாரை வார்ப்பதற்காகத் தன் கையைத் தண்ணீரில் நீட்டி நனைத்தும், இகழத்தக்க குள்ள வடிவுறு வாமனன், பார்த்தவர் வியக்கவும் அஞ்சவும்,உயர்ந்தவர்க்கு உதவிய உதவி போல, வானுற ஓங்கி உயர்ந்தான்.

"கயந்தரு நறும்புனல் கையில் தீண்டலும்
பயந்தவர்களும் இகழ் குறளன் பார்த்து எதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான்
உயர்ந்தவக்கு உதவிய உதவி ஒப்பவே" (24)

இப்பாடலின் இறுதி அடி மிகவும் எண்ணத்தக்கது. உயர்ந்தவர்கு உதவிய உதவி மிகவும் பெரியதாக — மிகவும் நீண்டு உயர்ந்ததாக மதிக்கப்படுமாம். உயர்ந்தவர்க்கு ஐம்பது உருபாவும் கீழானவர்க்கு நூறு உருபாவும் தரின், இரண்டனுள் எதுஉயர்ந்தது?— எது தாழ்ந்தது?உயர்ந்தவர், மகராசன்—புண்ணியவான் ஐம்பது உருபா உதவினார் என்று வாழ்த்திக் கொண்டு செல்வார். தாழ்ந்தவரோ தூக்க முடியாமல் தூக்கி நூறு உருபா கொடுத்து விட்டான். கருமிப்பயல்—இருநூறு உருபா தந்திருக்கக் கூடாதோ என வைது கொண்டே செல்வார்.

ஈண்டு, உதவியின் அருமை பெருமை, எவ்வளவு உதவி செய்தார் என்ற உதவியின் அளவைப் பொறுத்த

தன்று;உதவியைப் பெற்றுக் கொண்டவரின் பெருந்தன்மை யின் அளவைப் பொறுத்ததே—என்னும் கருத்துடைய—

**''உதவி வரைத்தன்று உதவி உதவி**
**செய்யப்பட்டார் சால்பின் வரைத்து''** **(105)**

என்னும் குறள், கம்பரின் பாடலுக்கு மெருகு ஊட்டுவதைக் கண்டு மகிழலாம். மற்றும், நாலடியார்ப் பாடலொன்றும் நினைவுக்கு வருகிறது. கிள்ளி எறியும் அளவினதான ஒரு சிறிய ஆலம் விதை, பெரிய மரமாய் விரிந்து மிகவும் பரந்த நிழலைப் பயப்பது போல, அறத்தின் பயனும் தான் சிறியதாயிருப்பினும், தகுந்தவர் கையில் செய்யப்பெறின், வானம் சிறிதாக அதனைப் போர்த்தும் அளவு தான் பெரிதாகும்--என்னும் கருத்துடைய

**''உறக்கும் துணையதோர் ஆலம்வித்து ஈண்டி**
**இறப்ப நிழல் பயந் தாஅங்கு—அறப்பயனும்**
**தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்**
**வான்சிறிதாப் போர்த்து விடும்''** **(98)**

என்னும் நாலடியார்ப் பாடலும் நனிநயத்தற்கு உரியது.

## கடி மணப் படலம்

**ஈத்துவக்கும் இன்பம் :**

இராமன்—சீதை திருமணம் நடைபெற்ற பின்னர், தயரதன், பலருக்கும் பல பொருள்களை ஈந்து, அளவற்ற மகிழ்ச்சியை மனத்தில் கொண்டு, முனிவரோடும் சில நாள் மிதிலையில் தங்கியிருந்தானாம்:

**''ஈந்து அளவு இல்லதோர் இன்பம் நுகர்ந்தே**
**ஆய்ந்துணர் கேள்வி அருந்தவ ரோடும்**
**வேந்தனும் அந்நகர் வைகினன் மெள்ளத்**
**தேய்ந்தன நாள்சில செய்தது உரைப்பாம்''** **(102)**

பிறர்க்கு ஒன்று உதவி, அவர் அடையும் மகிழ்ச்சியைக் கண்டு மகிழும் இன்பம் இன்பங்களுக்குள் சிறந்தது. அந்த இன்பத்தைத் தயரதன் மிதிலையிலும் பெற்றான். ஈண்டு,

''ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்'' (228)

என்னும் குறளின் முற்பகுதி கம்பரால் எடுத்தாளப்பட்டு இன்பம் பயக்கிறது.

இவ்வாறு, பல குறள் கருத்துகள் ஒட்டியுள்ள கம்பரின் மாங்கனிப் பாடல்கள் பாலகாண்டத்தில் பல உள்ளன. மேன்மேலும் சுவைத்து மகிழலாம்.

அடுத்து, மற்றொரு மரம் காண்பாம்

# 9. நயம் மிக்க நற்கனிகள்

இங்கே, பாலகாண்டத்தில் உள்ள — நயம் மிகுந்த நல்ல கனிகள் போன்ற பாடல்கள் சிலவற்றைச் சுவைக்கலாம்.

## நாட்டுப் படலம்

**உறங்கும் இடங்கள் :**

சங்குகள் நீரிலும், எருமைகள் நிழலிலும், வண்டுகள் மலர் மாலைகளிலும், திருமகள் தாமரையிலும், ஆமைகள் சேற்றிலும், சிப்பிகள் நீர்த் துறையிலும், அன்னங்கள் வைக்கோல் போரிலும், மயில்கள் சோலையிலும் உறங்குமாம்.

**''நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி,**
**தாரிடை உறங்கும் வண்டு, தாமரை உறங்கும் செய்யாள்**
**தூரிடை உறங்கும் ஆமை, துறையிடை உறங்கும் இப்பி,**
**போரிடை உறங்கும் அன்னம், பொழிலிடை உறங்கும்**
**தோகை'' (6)**

கோசல நாட்டின் வளம் இப்பாடலில் நயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமகளின் இருப்பிடம் தாமரை என்று கூறும் மரபை ஒட்டித் 'தாமரை உறங்கும் செய்யாள்' என்பது கூறப்பட்டுள்ளது. இப்பாடலில் 'உறங்கும்' என்னும் சொல் ஒரே பொருளில் வழங்கப் பட்டிருப்பதால், இந்த அமைப்பு, 'சொல் பொருள் பின்வரு நிலை அணி' எனப்படும்.

## திரு அவதாரப் படலம்

**உயிரும் உடலும் :**

தயரதனுக்கு மக்கள் நால்வர் பிறந்தனர். அவர்களுள், நீலோற்பல மலரோடு தாமரை மலர்கள் கலந்து இருப்பது போன்ற மேனி அழகுடைய இராமனைத் தவிர, வேறு உயிரும் உடலும் இல்லை என்னும்படி, தயரதன் இராமன் மேல் மிக்க பற்றுக்கொண் டிருந்தானாம்:

**''காவியும் ஒளிர்தரு கமலமும் எனவே,**
**ஓவிய எழிலுடை ஒருவனை அலது ஓர்**
**ஆவியும் உடலமும் இலதென அருளின்**
**மேவினன் உலகுடை வேந்தர்தம் வேந்தன்''** (120)

இராமன் கருநீல நிறம் உடையவன் என்பதைக் காவி (நீலோற்பல மலர்) சுட்டுகிறது. அவனுடைய முகம், கண், கை, கால் ஆகியவை தாமரை போன்ற அமைப்பு உடையவை என்பதைக் கமலம் சுட்டுகிறது; இதனால், இராமனாக வந்த திருமாலைத் தாமரைத் தடாகம் என்று பெரியோர் பாடியுள்ளனர். இந்தப் பாடலில் உள்ள நயமாவது:- தயரதன், ஏழுநாள் பயணம் பிடிக்கும் கேகய நாட்டிற்குப் பரதனை அனுப்பி விட்டு, கைகேயி வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்குப் பட்டம் சூட்டுவதாகக் கேகய மன்னனுக்கு வாக்கு கொடுத்ததாகக் கூறப்படும் வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு, இராமனுக்குப் பட்டம் சூட்ட முயன்றமையும், இராமனைப் பிரிய முடியாமல் பின்னர் உயிர் விட்டமையும் ஆகியவற்றிற்கு முன் கூட்டி வித்திட்டமை போன்ற ஒரு வகைக் காப்பிய முன்னோட்ட நயம்இப்பாடலில் குறிப்பாகஅமைந்துள்ளது.

## கையடைப் படலம்

**ஒருவனைத் தந்திடுதி:**

தயரதன், தன்னைப் புகழ்ந்த விசுவாமித்திரரை நோக்கி, அளவிலா மகிழ்ச்சியோடு கூறுகிறான்: பெரியீர்!

நீங்கள் வந்ததனால் யான் அரசடைந்த பயனைப் பெற்றேன். இனி யான் உங்கட்குச் செய்ய வேண்டியது யாது? எனக் கைகூப்பி வணங்கி வினவினான்.

அதற்கு விசுவாமித்திரர் கூறியது:- காட்டில் யான் செய்யும் வேள்விக்கு அரக்கர்கள் இடையூறு செய்யா வண்ணம் தடுத்துக் காப்பதற்காக, உன் மக்கள் நால்வருள் இராமன் என்னும் ஒருவனை என்னுடன் அனுப்புக — என்று, உயிரைக் கெஞ்சிக் கேட்கும் எமனைப் போல் தயரதன் வருந்தும்படிக் கேட்டார்:

''உரை செய்யும் அளவில், அவன் முகம் நோக்கி,
உள்ளத்தில் ஒருவ ராலும்
கரைசெய்ய அரியதொரு பேருவகைக்
கடல் பெருகக் கரங்கள் கூப்பி
அரைசு எய்தி இருந்த பயன் எய்தினேன் மற்று
இனிச் செய்வது அருளுக என்று
முரைசு எய்து கடைத்தலையான் முன் மொழியப்
பின் மொழியும் முனிவன் ஆங்கே'' (10)

''தருவனத்துள் யானியற்றும் தவ வேள்விக்கு
இடையூறாத் தவம் செய்வோர்கள்
வெருவரச் சென்று அடை காமவெகுளி என
நிருதர்இடை விலக்கா வண்ணம்
செரு முகத்துக் காத்தி என நின் சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி என உயிர் இரக்கும்
கொடுங் கூற்றின் உளையச் சொன்னான்'' (11)

என்பன பாடல்கள். தனக்குப் பின்பு துன்பம் தரும் செய்தியை விசுவாமித்திர முனிவர் கூறப் போகிறார் என்பதை அறியாமல், முனிவரே! யான் அரசடைந்த பயன் இன்றே பெற்றேன் — தங்கட்கு வேண்டியதைக் கேளுங்கள் என்று தயரதன் கூறியது எதிர்மாறான

சுவையைத் தருகின்றது. முதல் பாடலில் உள்ள அரைசு (அரசு), முரைசு (முரசு) என்பன இடைப் போலிகள்.

உடனே முனிவர், வேள்வி காக்க, என்னுடன் காட்டிற்கு, உன் பிள்ளைகள் நால்வருள் கருநிற இராமன் ஒருவனை அனுப்புக என்று கூறியதும் நயமான பகுதி உனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனரே— நால்வரையுமா அனுப்பும்படி நான் கேட்கிறேன்? இல்லையே, ஒருவனை அனுப்பினால் போதும் என்பது நயமான பகுதியல்லவா? பேச்சுத் திறன் இதில் காணப்படுகின்ற தல்லவா?

எமன் உயிரை வலிந்து பற்றிக் கொண்டு செல்பவன். ஆனால், முனிவனோ, தயரதனது உயிரை இரந்து (யாசித்துக்) கேட்கும் எமன் போல் உள்ளான். இரந்து கேட்கும் எமன் ஒருவன் இல்லையாதால் இது 'இல் பொருள் உவமை அணி' எனப்படும். இதுவும் நயமான பகுதியே.

காமம் வெகுளி போன்றன நல்ல தவம் செய்ய வொட்டாமல் தடுப்பது போல், வேள்வி செய்ய விடாமல் அரக்கர்கள் தடுப்பதாகக் கூறியதும் நயமான உவமை. சுவாகு, மாரீசன் என்னும் அரக்கர் இருவருக்குக் காமம், வெகுளி என்பன உவமையாகும்.

**பெற்று இழத்தல்**

முனிவனது பேச்சு, வேல் புகுந்து துளைத்த மார்புப் புண்ணிலே, மேலும் நெருப்பு புகுந்தாற் போன்று தயரதனது காதில் புகுந்ததாம். அதனால், உள்ளத்துயர் உயிரைப் பிடித்து வெளியே தள்ள—உயிர் போகாமல் உள்ளேயே இருந்து கொண்டு ஊசாலாடிற்றாம். கண்ணை இழந்தவன் இடையிலே கண் பெற்று மீண்டும் இழந்ததைப் போல் கொடிய துயர் உற்றான் தயரதன். பாடல்:

**''எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல்**
**மருமத்தின் எறிவேல் பாய்ந்த**

**புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தாலெனச்**
**செவியில் புகுதலோடும்**
**உண்ணிலாவிய துயரம் பிடித்து உந்த**
**ஆர் உயிர் நின்று ஊசலாடக்**
**கண்ணிலான் பெற்று இழந்தான் என உழந்தான்**
**கடுந்துயரம் கால வேலான்''** (12)

முதலிலேயே வேல் மார்பில் புகுந்து உண்டாக்கிய துளையான புண் உள்ளது; அதில் நெருப்பு வைத்தாற் போன்று முனிவன் சொல் இருந்தது எனில், தயரதனுக்கு முதலில் இருந்த மனப்புண் என்ன என்பதைக் காண வேண்டும். கண்ணில்லாத முதிய பெற்றோர்களின் பிள்ளையை யானையெனக் கருதித் தயரதன் முன்பு கொன்று விட்டான். அஃதறிந்த முதியவர்கள், நீயும் மகனைப் பிரிந்து உயிர் விடுவாயாக எனக் கெடுமொழி (சாபம்) இட்டனர். அந்த அச்சம் எப்போதும் தயரதன் உள்ளத்தில் இருந்து கொண்டுள்ளது. அதுதான் முதலில் வேல் பாய்ந்த புண் போன்றதாகும். அதற்கு ஏற்ப, இப்போது முனிவர், தயரதனின் உயிரான இராமனைப் பிரியச் செய்கிறார். இது வேல் பாய்ந்த புண்ணில் கனல் நுழைந்ததைப் போன்றது.

துயரம் பிடித்துத் தள்ளுவதால் உயிர் போவதா வருவதா என ஊசலாடிற்று. ஊசலை ஆட்டுவது துயரம்; பல்லாண்டுக் காலம் பிள்ளைகள் இல்லாமல் வருந்தித் தவம் செய்து பிள்ளைகள் பெற்றவன், இப்போது மீண்டும் தனது உயிரான இராமனைப் பிரிய நேர்வதால், கண்ணிலான் பெற்று இழந்ததான உவமை கூறப்பட்டுள்ளது.

பகைவரைக் கொல்லும் காலனைப் போன்ற வேல் படையுடைய மாவீரனான தயரதனே இவ்வாறு துயருற்றான் என்பதைக் 'கால வேலான்' என்னும் தொடர் அறிவிப்பதிலுள்ள நயம் சுவைக்கத் தக்கது.

## அகலிகைப் படலம்

**கை—கால் வண்ணங்கள்:**

மிதிலை நோக்கிச் செல்லும் வழியில் காட்டில் ஒரு கல்லை மிதிக்க அகலிகை எழுந்தாள். இது தொடர்பாக விசுவாமித்திரர் இராமனைப் பாராட்டுகிறார்: இராமா! நீ தோன்றியதால் உலகுக்கு இன்பமே யன்றித் துன்பம் வராது. தாடகையோடு போர் செய்து உன் கைத் திறமையால் அம்பெய்து அவளைக் கொன்ற போது உன்கை வண்ணம் கண்டேன். இங்கே கல்லைக் காலால் மிதித்து அகலிகையை எழப் பண்ணியபோது உனது கால் வண்ணம் கண்டேன்—என்று பாராட்டு கிறார்.

**"இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த**
**உலகுக்கு எல்லாம்**
**உய்வண்ணம் அன்றி மற்று ஓர் துயர் வண்ணம்**
**உறுவது உண்டோ**
**மைவண்ணத்து அரக்கி போரில்**
**மழைவண்ணத்து அண்ணலே உன்**
**கைவண்ணம் அங்குக் கண்டேன், கால் வண்ணம்**
**இங்குக் கண்டேன்"** **(24)**

கைவண்ணம் கொலை செய்தது. கால் வண்ணம் அருள் புரிந்தது. 'துஷ்ட நிக்கிரக—சிஷ்ட பரிபாலனம்' அதாவது, கொடியவரைக் கொன்று அடியவரைக் காப்பது—என்று சொல்வார்களே—அந்த நிலை இங்கே கூறப் பட்டிருப்பதிலுள்ள நயம் சுவைக்கத் தக்கது. ஒரு பெண்ணைக் கையால் கொன்று, மற்றொரு பெண்ணுக்குக் காலால் உயிர் தந்தான் என்பது நயமான பகுதி யல்லவா?

## மிதிலைக் காட்சிப் படலம்

**சாளரத்தில் சந்திரர்கள் :**

விசுவாமித்திரரும் இராம—இலக்குமணரும் மிதிலைத் தெரு வழியே நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது

பெண்கள், மேல் மாடத்திலுள்ள சாளரங்களின் (சன்னல் களின்) வழியாக இம்மூவரையும் பார்த்ததைக் கம்பர் மிகவும் நயமுடன் ஓவியப் படுத்தியுள்ளார். சாளரங்கள் தோறும் சந்திரர்கள் உதயம் செய்தார்களாம். இந்தச் சந்திரர்கட்கு நடுவே களங்கம் இல்லையாம். ஆனால், நடுவே, வேலும் வில்லும் முடிச்சுருளும் செவ்விதழும் உள்ளனவாம். பாடல் :

**''வாளரம் பொருத வேலும் மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடு கிடந்த நீலச் சுருளும் செங்கிடையும் கொண்டு
நீளிருங் களங்கம் நீங்கி நிரை மணி மாட நெற்றிச்
சாளரம் தோறும் தோன்றும் சந்திர உதயம் கண்டார்'' (14)**

அரத்தால் கூராக்கப்பட்ட வேல் என்பது, பெண்களின் கண்கள். மன்மதனது சிலை (வில்) என்பது புருவங்கள். நீலச்சுருள் என்பது, கரிய சுருண்ட கூந்தல். செங்கிடை என்பது சிவந்த உதடுகள். இவ்வுறுப்புகள் பொருந்திய பெண்களின் முகங்களே சந்திரர்கள் இவ்வாறு சாளரங்கள் தோறும் திங்கள் தோன்றுவதை மூவரும் கண்டனராம். தெருவில் புதிதாய்ப் போபவர்களைப் பெண்கள் வேடிக்கை பார்ப்பது இயல்பு என்பது இதனால் அறியக்கிடக்கிறது.

## கார் முகப் படலம்

**எண்ணும் கண்ணும் :**

தெருவில் இராமனைக் கண்ட சீதை இரவில் அவனை எண்ணி ஏங்குகிறாள்:-பூணூலாகிய மின்னலோடு முகில் விண்ணிலேயிருந்து இறங்கி வந்தாற் போன்று வந்த அந்த ஆடவர், என் எண்ணத்திலே இருந்தும் அவர் யார் என்று என்னால் அறிந்துகொள்ள இயல வில்லை. அவர் என் கண்ணுள்ளேயிருந்தும் அவர் உருவத்தை வெளியில் நன்றாகக் காண முடியவில்லை.

''விண்ணுளே எழுந்த மேகம் மார்பின் நூலின்
மின்னொடு இம்
மண்ணுளே இழிந்ததென்ன வந்து போன மைந்தனார்
எண்ணுளே இருந்தபோதும் யாவரென்று தேர்கிலேன்
கண்ணுளே இருந்தபோதும் என்கொல்
காண்கிலாதவே'' (53)

*இராமன் அரச குமாரன் ஆதலால் மார்பில் உள்ள பூணூல் பொன்னால் ஆக்கப்பட்டது. அது, மின்னல் போல் ஒளி வீசுகிறதாம். உலகியலில் பொன்பூணூல் அணிந்து கொள்ளாவிடினும், திருமணத்தின்போது, செல்வக் குடும்பத்தினர் சிலர் பொன்நூல் அணிவதுண்டு. பூணூல் அணியும் வகுப்பினரல்லாதவர் வீட்டுத் திருமணத் திலும், மணமகனின் உடன் பிறந்தாளாவது வேறு யாராவது மணமகனுக்குப் பொன்பூணூல் அணிவிப்பது (சில இடங்களில்) உண்டு.*

மைந்தனார் என்பது மகன் என்ற பொருளில் இல்லை. மைந்து என்றால் வலிமை. மைந்தனார் என்றால், வலிமை மிக்கவர் என்பது பொருள். தந்தையினும் மகன் வலிமை யுடையவனாதலின் மைந்தன் எனப்படுகிறான்.

உணவு வீட்டில் இருந்தும், உண்ணமுடியவில்லையே என்பதுபோல, அவர் கண்ணுள்ளேயிருந்தும் காணமுடிய வில்லையே என்பது நயமான பகுதி. உலகியலில்கூட, 'அவர் என் கண்ணிலேயே இருக்கிறார் – எப்போது காண்பேனோ' என்று கூறுவதுண்டு.

## உண்டாட்டுப் படலம்

**முறுவலும் கண்ணீரும்:**

அயோத்தியிலிருந்து மிதிலை செல்பவர்கள் வழியில் பல விதமாகப் பொழுது போக்கினர். ஒருவன், தன் மனைவியி னும் இளையவளும் தன்னால் விரும்பப்பட்டவளுமாகிய

இன்னொருத்தியின் பெயரால் மறதியாகத் தன் மனைவியை அழைத்து விட்டான். இதைக் கேட்டதும், அவன் மனைவி, மறதியால் களவு வெளிப்பட்டதை எண்ணி முறுவல் செய்தாள். அதேநேரத்தில், கணவன் மற்றொருத்தி மேல் காதல் கொண்டிருப்பதை எண்ணிக் 'கள கள' எனக் கண்ணீர் உகுத்தாள்:

> "வளைபயில் முன் கை ஓர் மயில் அனாள் தனக்கு
> இளையவள் பெயரினைக் கொழுநன் ஈதலும்,
> முளை எயிறு இலங்கிட முறுவல் வந்தது
> களகள உதிர்ந்தது கயல் கண் ஆலியே" (29)

ஒரே நேரத்தில் பல் சிரிப்பதும், கண் நீர் சிந்துவதும் வியப்பும் நயப்பும் உள்ள செய்தியல்லவா? இங்கே, "நான் அழுதுகொண்டே சிரிக்கின்றேன் சிரித்துக் கொண்டே அழுகின்றேன்" என்னும் திரையோவியப் (சினிமாப்) பாடல் நினைவுக்கு வருகிறது கம்பரது பாடலில் உள்ளது போன்ற அமைப்பு இந்தப் பாடலிலும் உள்ளதால் இந்தத் திரை யோவியப் பாடலைக் குறைத்து மதிப்பிடுவதற்கு இல்லை. (சினிமாப் பாட்டை எடுத்துக் காட்டுகிறான் என்று என்னை யாரும் குறைவாக எண்ணக் கூடாது.)

**மெலிவும் வீங்கலும்:**

மனைவியைப் பிரிந்து போய்ப் பகைவரை வென்று வந்த மறவன் ஒருவன் மிதிலை செல்லும் கூட்டத்தில் தானும் சேர்ந்து கொண்டான். அவன் மனைவியையும் கூட்டத்தில் கண்டான். மனைவியின் கொங்கைகள் (மார்பகங்கள்) இளைத்திருப்பதை அறிந்ததும், அவனுடைய தோள்கள் மகிழ்ச்சியால் பருத்தனவாம்:

> "பொலிந்த வாள் முகத்தினாள் பொங்கித் தன்னையும்
> மலிந்த பேர் உவகையால், மாற்று வேந்தரை

நலிந்த வாள் உழவன் ஓர் நங்கை கொங்கை போய்
மெலிந்தவா நோக்கித் தன் புயங்கள் வீங்கினான்'' (37)

மனைவியின் உடல் உறுப்புகள் மெலிந்திருப்பதை அறிந்து அவன் வருந்த அல்லவா வேண்டும்? மாறாக மகிழ்ச்சியடைந்திருக்கிறான்—அம்மகிழ்ச்சியால் அவன் தோள்கள் பருத்தன. இதில் என்ன நயம் உள்ளது?

கணவன் பிரிந்திருந்தபோது, அவன் பால் உண்மை யான காதல் உடைய மனைவியின் உடல் உறுப்புகள் சோர்ந்து போய்விடும். இது அவளது உண்மைக் காதலின் அறிகுறி. எனவே, அவன் தன் மனைவியின் உறுப்பு சோர்ந்திருப்பதைக் கண்டு, அவளுக்குத் தன்பால் உள்ள காதல் மிகுதியை எண்ணி மகிழ்ந்தானாம். அதனால் அவன் தோள்கள் பருத்திட வீறு நடை போடுகிறான். இங்கே,

''புகழ் புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார் முன்
ஏறுபோல் பீடு நடை'' (59)

என்னும் குறளின் அடிப்படைக் கருத்து ஓரளவு ஒப்பு நோக்கத் தக்கது. கம்பர் பாடலில் நயம் கொழிக் கிறது.

## உலாவியல் படலம்

**கண்ணன்:**

இராமனாக வந்து பிறந்துள்ள திருமாலுக்குக் கண்ணன் என்னும் பெயர் உண்டு அப்பெயருக்கு ஏற்ப. தெருவிலே சென்றபோது, தன்னைப் பார்த்த பெண்களின் கண்களில் இராமன் புகுந்து விட்டானாம்.

''வீதிவாய்ச் செல்கின்றான் போல் விழித்து
இமையாது நின்ற
மாதர் கண்களூடே வாவும் மான்தேரில் செல்வான்

யாதினும் உயர்ந்தோர் தன்னை யாவர்க்கும் கண்ணன்
என்றே
ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருள் உணர்த்தி
விட்டான்'' (6)

கண்ணை மூடித் திறந்து இமைத்தால், அந்த மூடிய நேரம் கண்ணனைக் காணாது வீணாகி விடுமாதலின் பெண்கள் இமையாமல் விழித்து நின்றார்களாம். இராமன் எல்லாரிடத்தும் அருட்கண் உடையவன் ஆதலானும், எல்லாருக்கும் கண் போன்றவன் ஆதலாலும், உயர்ந்த அறிஞர்கள் கண்ணன்என்று ஒரு பெயர்வழங்கினர்.இந்தப் பாடலில் உள்ள நயமாவது,- அருட்கண் செலுத்துபவன்— கண் போன்றவன் என்ற காரணங்கள் ஒரு புறம் இருக்க, இவன் எல்லாப் பெண்களின் கண்களிலும் புகுந்ததால் கண்ணன் என்னும் பெயருக்குப் பொருத்தமானவன் என்னும் பெயர்க்காரணம் கூறப்பட்டிருப்பது நயமானது அல்லவா?

## இடையின் இடைவெளி

தெருவில் செல்லும் இராமனைப் பெண்கள் பலர் முன்னால் நின்று பார்த்துக் கொண்டுள்ளனர். அவர்களின் கூந்தல், முலைகள், அல்குல் ஆகியவை பின்னால் இருப்பவர்கட்கு இராமன் தெரியாதபடி மறைத்துக் கொண்டிருப்பதால், அவர்களின் பின்னால் நின்ற பெண் ஒருத்தி, அவர்களுடைய மிகவும் மெலிந்த இடையின் இடைவெளி வழியாக இராமனைப் பார்த்தாளாம்.

' கருங்குழல் பாரம், வார்கொள் கனமுலை, கலைசூழ்
அல்குல்
நெருங்கின மறைப்ப, ஆண்டோர் நீக்கிடம் பெறாது விம்மும்
பெருந்தடங்கண்ணி காணும் பேரெழில் ஆசை தூண்ட
மருங்குலின் வெளிகளூடே வள்ளலை நோக்குகின்றாள் (17)

குழல், முலை, அல்குல் ஆகியவை மறைப்பதற்குக் கம்பர் காரணமும் கூறியுள்ளார்.கருங்குழல் பாரம்என்பது

பரந்து செறிந்த பாரமானது கூந்தல் என்பதையும், கன முலை என்பது முலைகளின் பருமனையும், கலைசூழ் அல்குல் என்பது, மேகலை அல்லது உடை சூழ்ந்த அல்குல் என்பதையும் குறிக்கின்றன. இந்த அமைப்பால் நீக்கிடம் இல்லை. நீக்கிடம் என்றால், விலகித் தெரியும் வெற்றிடம் (காலி இடம்) என்பதாகும். இதனால் பின்னால் நின்ற பெண், எப்படியாவது பார்த்து விட வேண்டும் என்னும் அவா தூண்டியதால், முன்னால் நின்றிருப்பவர்களின் ஒடுங்கிய இடுப்பின் இடைவெளி வழியே பார்த்தாளாம் என்னும் கருத்து நயத்திற்கு உரியதன்றோ!

இடை உள்ளதோ—இல்லையோ என ஐயப்படுவதாகச் சொல்லுதல் இலக்கிய மரபு. சிவப்பிரகாசர் தமது பிரபு லிங்கலீலை—மாயை பூசை கதி என்னும் பகுதியில் "மருங்குல் என்னும் வெளி" என இடையை வெற்று வெளி யிடமாகவே (55) கூறியுள்ளார். எனவேதான், இவளால் இடை வழியாய்ப் பார்க்க முடிந்தது,

**மன்மதனின் சோர்வு**

இராமனைக் காணும் மங்கையர் பலர். இராமனது அழகோ மிகுதி. காமம் விளைக்கும் மன்மதன் பலர் மீதும் தொடர்ந்து எய்ததால் அம்புகள் தீர்ந்து விட்டன. அதனால் காமம் வளர்க்கும் போரைத் தொடர உடைவாளை உருவக் கைவைத்தான்.

"வையம் பற்றிய மங்கையர் எண்ணிலர்
ஐயன் பொற்புக்கு அளவிலை ஆதலால்
எய்யும் பொன்சிலை மாரனும் என் செய்வான்
கை அம்பு அற்று உடைவாளினும் கை வைத்தான்" (32)

புராணக் கதைகளில் உள்ளவாறு மன்மதனது ஆட்சி விவரம் வருமாறு:— இவனுக்கு வில் கரும்பு—வண்டு நாண் கயிறு —அம்புகள் தாமரை, அசோகு, மாம்பூ, முல்லை, நீலம் ஆகிய மலர்கள்—மங்கையர் படை மறவர்—

தென்னம்பாளை கவரி—மல்லிகை காளாஞ்சி-தாழை மடல் வாள்—தென்றல் தேர்—கிளி குதிரை—இருள் யானை—கடல் முரசு—குயில் எக்காளம்—திங்கள் குடை.

இவற்றைக் கொண்டு மன்மதன் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் காம உணர்வை விளைவிக்கிறான்; இங்கே இராமனைப் பார்த்த பெண்கள் பலர்ஆதலின், அவர்கட்குக் காம உணர்வைத் தூண்டத் தன்னிடம் இருந்த மலர் அம்புகள் அனைத்தையும் செலவழித்து விட்டானாம். எனவே, மேலும் காமப் போர் புரியத் தன் தாழை மடலாகிய உடைவாளைக் கையால் உருவினானாம்: தாழை மடல் உடைவாள் போலவே நீளமாயிருக்கும். இந்தக் கற்பனைச் செய்தி மிகவும் நயமாயுள்ள தல்லவா?

மன்மதன் மலர் அம்புகளை எய்து காதலை வளர்ப்பவன் என்னும் செய்தி பல இலக்கியங்களில் கூறப் பட்டுள்ளது. சிவப்பிரகாசரின் பிரபுலிங்கலீலை நூலில் பிரபு தேவர் வந்த கதி என்னும் பகுதியில் இப்படி ஒருசார்புக் கருத்து உள்ளது. மாயை என்னும் பெண் அல்லமன் என்னும் அழகன் மேல் மிக்க காதல் கொண்டு விட்டாள். மன்மதன் மேன்மேலும் வேலைசெய்துகொண்டிருக்கிறான். ஒன்றிரண்டு அம்பைத் தவிரக் கையிலிருந்த அம்புகள் அனைத்தையும் மாயைமேல் எய்து விட்டானாம்.

''ஒன்றிரண்டு ஒழிய வாளி உளவெலாம் மாரன்
தூர்த்தான்'' (29)

என்பது பாடல் பகுதி.

தெருவில் உலாவரும் சிறந்த ஆடவர் மேல் பெண்கள் காதல் கொள்வதாகக் கூறுதல் ஒருவகை இலக்கிய மரபு. (இனிமேல் இத்தகைய இலக்கிய மரபைக் கைவிடுதல் நன்று).

## கோலம் காண் படலம்

**ஏழுமலை இறுத்தல் :**

திருமணம் செய்யச் சீதையை அணி செய்து அழைத்து வந்தனர். சீதையின் பேரழகைக் கண்டு வியந்த விசுவாமித்திரர், பச்சை மலை போன்ற நிறமுடைய இராமன், இவ்வளவு சிறந்த பெண்ணை மணப்பதென்றால், மேருமலையாகிய ஒரு வில் என்ன—ஏழு மலைகளையும் இற்று விழச் செய்வானே— என்றார்.

**"அச்சென நினைத்த முதல் அந்தணன் நினைந்தான்**
**பச்சை மலை ஒத்த படிவத்து அடல் இராமன்**
**நச்சுடை வடிக்கண் மலர் நங்கை இவள் என்றால்**
**இச்சிலை கிடக்க, மலை ஏழையும் இறானோ?"** (36)

சிவன் மேரு மலையை வில்லாக வளைத்தானே—அந்த மலை வில்தான் சனகனிடம் இருந்தது. அதைத்தான் இராமன் நாணேற்றி ஒடித்தான். பேரழகியாகிய சீதையை மணப்பதற்கு, இந்த ஒன்றென்ன-ஏழுமலைகளையும் ஒடிக்கச் சொல்லினும் இராமன் ஒடித்து விடுவானாம். உலகியலில், 'இந்த அழகிய மணமகளுக்கு இன்னும் எவ்வளவு நகை கேட்பினும் போடலாமே' என்று சொல்வது போல் உள்ளது இது.

"பச்சை மாமலை போல் மேனி" எனத் தொண்டரடிப் பொடி ஆழ்வாரால் போற்றப்பட்ட திருமாலின் தெய்வப் பிறவி இராமன் ஆதலின், 'பச்சை மலை ஒத்தபடிவம்' என்றார் கம்பர்.

மலைகள் எட்டு; அவை: கைலை, இமயம். மேரு, விந்தம், நிடதம், ஏமகூடம். நீலகிரி, கந்தமாதனம் என்பன. இவற்றுள் மேருமலையாகிய வில்லை இராமன் ஒடித்து விட்டதால்,மற்ற ஏழுமலைகளையுங்கூட அவனால் ஒடிக்க முடியும் என்பதாக முனிவர் கூறினார்.

விசுவாமித்திரர் அரசர் மரபினராயினும் தவம் பூண்டிருப்பதால் 'முதல் அந்தணன்' என்று சிறப்பிக்கப் பெற்றுள்ளார். முனிவர்கட்கெல்லாம் ஓர் அச்சு (மாதிரி முனிவர்) போல் உள்ளாராம் அவர்.

## கடிமணப் படலம்

**எதிர் மாறான மங்கையர் :**

திருமணம் காண மிதிலை நகரப் பெண்கள் தம்மை அணி செய்து கொள்கின்றனர். அவர்களுள் சிலருடைய நிலைமைகள் கூறப்படுகின்றன. அவை :—

சிலர் நஞ்சனைய விழியினர்—சிலர் அமிழ்து ஒத்த மொழியினர். சிலர் நெட்டியன்ன சிவந்த இதழினர்—சிலர் நகைக்கும் வெண்முறுவலர். சிலர் முலைகள் பெரியனவா யிருப்பவர்—சிலர் இடைகள் சிறியனவாயிருப்பவர். சிலர் இளைய சிறிய அன்னங்கள் போல் நடப்பவர்—சிலர் பெரிய பெண் யானைபோல் அசைந்து அசைந்து நடப்பவர்.

''விடம்நிகர் விழியாரும் அமுது எனும் மொழியாரும்
கிடைபுரை இதழாரும் கிளர்நகை இனியாரும்
தடமுலை பெரியாரும் தனி இடை சிறியாரும்
பெடை அன நடையாரும் பிடிஎன வருவாரும் (37)

இப்பாடலில் ஒருவர்க்கு ஒருவர் எதிர்மாறானவராக—அதாவது—முரண்பட்டவராகக் கூறப்பட்டிருத்தலின் ஒரு வகை நயமான முரண் தொடை அமைந்துள்ளது.

## பரசுராமப் படலம்

**கங்கரையேறலும் மூழ்கலும்:**

தயரதன் மணமக்களோடும் படைகளோடும் மிதிலையி லிருந்து அயோத்திக்குச் சென்று கொண்டிருந்த வழியில், அவனுடைய குலப் பகைவனாகிய பரசுராமன் வந்து

எதிர்த்தான். அஞ்சிய தயரதன் என்ன ஆகுமோ என எண்ணித் துன்பக் கடலில் முழுகினான். இராமன் பரசுராமனை வென்று, தந்தை தயரதனைத் துன்பக் கடலிலிருந்து கரையேற்றினான். இராமனது வெற்றியைக் கண்டு பூரித்த தயரதன் மீண்டும் ஒரு கடலில்—அதாவது மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிவிட்டான. பாடல்:

''வெளிப்படும் உணர்வினன் விழுமம் நீங்கிடத்
தளிர்ப்புறு மதகரித் தானையான் இடை
குளிப்பருந் துயர்க் கடல் கோடு கண்டவன்
களிப் பெனும் கரையிலாக் கடலுள் ஆழ்ந்தனன் (42)

விழுமம் = துன்பம். மதகரித் தானையான் = தயரதன். கோடு கண்டவன் = கரை ஏறியவன். கோடு = கரை. துன்பக் கடலிலிருந்து தப்பிக் கரை ஏறியவன் மீண்டும் ஒரு கடலுள் (இன்பக் கடலுள்) மூழ்கிவிட்டதாகக் கூறுவது நயமான செய்தி. இதில் மேலும் ஒரு நயமாவது: துன்பக் கடலைக் கடந்து கரை காண முடிந்தது; ஆனால், அடுத்து வீழ்ந்து முழுகிய கடலோ கரை காண முடியாதது என்பதாம். அதில் மிகவும் ஆழ்ந்து—ஆழமான பகுதிக்குச் சென்று விட்டானாம். எனவேதான், 'களிப்பு என்னும் கரை இலாக் கடலுள் ஆழ்ந்தனன்' என்று நயமாகக் கூறியுள்ளார் கம்பர் பெருமான்.

இவ்வாறாக, கம்பர் பாலகாண்டத்தில், நயமான நல்ல பாடல் கனிகள் பலவற்றை நமக்குத் தந்து நுகர்ந்து சுவைக்கச் செய்துள்ளார்.

இனி அடுத்துப் பூந்துணர்கள் சிலவற்றைக் காண்பாம்

# 10. புராண வரலாற்றுப் பூந்துணர்கள்

பால காண்டப் பைம்பொழிலில் பூந்துணர்கள் போன்ற புராண வரலாற்றுக் குறிப்புகள் சில உள்ளன.

## ஆற்றுப் படலம்

**சரயுவும் கண்ணனும்:**

சரயு ஆற்று வெள்ளம், காளியன் என்னும் பாம்பின் மீது நின்று ஆடிய திருமாலாகிய கண்ணனைப்போல் (கிருஷ்ணனைப் போல்), பால், தயிர், வெண்ணெய், நெய் ஆகியவை உள்ள உறிகளையும் குருந்த மரத்தையும் மருத மரத்தையும், பெண்களின் வளையல்களையும் உடைகளையும் கவர்ந்து இழுத்துச் சென்றது.

''செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயும் சேந்த நெய்யும்
உறியொடு வாரி உண்டு குருந்தொடு மருதம் உந்தி
மறிவிழி ஆயர் மாதர் வளைதுகில் வாரும் நீரால்
பொறி வரி அரவின் ஆடும் புனிதனும் போலும்
அன்றே'' (15)

மேற்கூறிய எல்லாவற்றையும் ஆற்று வெள்ளம் கொண்டு போனது போலவே கண்ணனும் செய்துள்ளான்: சிறு பருவத்தில் பால் முதலியவற்றை வாரி உண்டான்; தன்னை அழிக்கக் குருந்த மரமாகவும் மருத மரமாகவும் வந்த அரக்கர்களை அழித்தான்; ஆயர் மடந்தையரின் வளையல்களையும்-அவர்கள் குளித்துக் கொண்டிருந்த

போது உடைகளையும் கொண்டு சென்றான்-என்னும் புராண வரலாற்றுப் பூந்துணர்கள் இப்பாடலில் அறிவிக்கப் பட்டுள்ளன.

## திரு அவதாரப் படலம்

**அறுபதினாயிரம் ஆண்டு:**

தயரதன் வசிட்ட முனிவனிடம் கூறுகிறான்: அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து உலகைக் காத்து வந்தேன். எனக்குப்பின் இவ்வுலகை ஓம்பும் மைந்தன் பிறவாமையால் இவ்வுலகம் என்ன ஆகும் என்ற மயக்கமும் குறையும் உள்ளன:

''அறுபதி னாயிரம் ஆண்டும் மாண்டுற
உறுபகை ஒடுக்கி இவ்வுலகை ஓம்பினேன்
பிறிதொரு குறையிலை; என் பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மறுக்கம் உண்டரோ'' (5)

ஆண்டு மாண்டுறல் = ஆண்டு கழிதல். தயரதன் அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கூறியுள்ளான். இந்தக் கருத்தை நம்பாமல், இதை உதிர்ந்த மலராகவே கொள்ளல் வேண்டும். மற்றும் தயரதனுக்கு அறுபதினாயிரம் மனைவியர் இருந்தனர் என்பதும், சனகனது வில்லை அறுபதினாயிரம் மல்லர்கள் தூக்கி வந்தனர் என்பதும் நம்பமுடியாதவை. தயரதனுக்குப் பட்டத் தரசிகள் மூவரன்றி, மேலும் மனைவியர் முந்நூற்றைம் பதின்மர் இருந்ததாக வால்மீகி கூறியுள்ளார். எனவே, அறுபதினாயிரம் என்னும் எண்ணிக்கையை ஒரு புராணச் செய்தியெனக் கருதி உதிர்ந்த மலராகவே எண்ணல் வேண்டும். (என் மேல் சினம் வேண்டா).

**நால்வரின் பிறப்பு:**

அரக்கர்களின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் திருமாலிடம் முறையிட்டார்கள். திருமால்

கூறினார்: அயோத்தியில் தசரதனின் பெரிய மகனாக நானும்,அடுத்தவனாக(பரதனாக)என் ஆழியும் (சக்கரமும்) அவனுக்கு அடுத்தவனாக (இலக்குவனாக) ஆதிசேடனும், அவனுக்கு அடுத்தவனாக (சத்துருக்கனனாக) என் வளையும் (சங்கும்), மலைப் பகுதிகளில் வானரர்களாகத் தேவர்களும் பிறந்து அரக்கர்களை அழித்துக் காப்போம்— என்று கூறி ஆறுதல் செய்தார்:

"வானுளோர் அனைவரும் வானரங் களாய்க்
கானினும் வரையினும் கடி தடத்தினும்
சேனையோடு அவதரித் திடுமின் சென்று என
ஆனனம் மலர்ந்தனன் அருளின் ஆழியான்" (18)

"மசரசம் அனையவர் வரமும் வாழ்வும் ஓர்
நிசரத கணைகளால் நீறு செய்ய யாம்
கசரத துரக மாக் கடல் கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதும் தாரணி" (19)

"வளையொடு திகிரியும் வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளையர்கள் என அடி பரவ ஏகி நாம்
வளைமதில் அயோத்தியில் வருதும் என்றனன்" (20)

இவ்வாறு மேலும் இராமாயணக் கதை மாந்தர் சிலரின் பிறப்பு கூறப்பட்டுள்ளது.

## கையடைப் படலம்

**துனி உறு முனிவன்:**

திரிசங்கு என்பவன் உடம்புடன் சுவர்க்கம் அனுப்பும்படி வசிட்டரை வேண்டினான். அவர் மறுத்து விட்டார். பின் விசுவாமித்திரரை வேண்டினான். இவர் ஆவன செய்யத் தொடங்கி அவனை மேலே அனுப்பினார். அதை வசிட்டர் மறுத்தார். உடனே விசுவாமித்திரர் மிகவும் துனி (சினம்) உற்று, இந்தத் தேவர் உலகம் கிடக்கட்டும்—

நான் விண்ணிலேயே உயிர்கள் நிறைந்த ஓர் உலகத்தையும், தேவர்களையும் நான்முகனையும் படைப்பேன் என்று கூறி, சுவர்க்கம் போன்ற ஓர் உலகை விண்ணிலே படைத்து, திரிசங்குவை அதில் இருக்கச் செய்தாராம். இந்தப் புராணக் கதைப் பகுதி பின்வரும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது:

''மடங்கல்போல் மொய்ம்பினான் முனைர், மன்னுயிர்
அடங்கலும் உலகும்வேறு அமைத்துத் தேவரோடு
இடங்கொள் நான்முகனையும் படைப்பன் ஈண்டெனாத்
தொடங்கிய துனி உறு முனிவன் தோன்றினான்'' (4)

தயரதனிடம் இராமரை அனுப்பும்படிக் கேட்க வந்த விசுவாமித்திரர் இத்தகையவர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளார்.

மாவலி பற்றிய புராண வரலாறு, இந்நூலில் 'ஒட்டு மாங்கனி' என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது.

வரலாற்றுப் படலம் என்னும் பகுதியில், இராமனுடைய முன்னோர்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது. இஃதும் புராண வரலாறு போலவே உள்ளது.

## கார்முகப் படலம்

**வில்லின் வரலாறு:**

சனகனிடம் உள்ள வில்லின் வரலாற்றைச் சதானந்த முனிவர் அவையோர்க்குக் கூறுகின்றார்: தக்கன் தனக்கு மகளாக வந்த உமாதேவியை, சிவனிடம் உள்ள வெறுப்பு காரணமாகத் தான் செய்த வேள்வியின்போது வரவேற்காமல் வெளியேற்றினான். மேருவை வில்லாக வளைத்த சிவன் இதையறிந்து தக்கன் வேள்வியை அழிக்கலானார். வேள்வி காண வந்த தேவர்களுள் சிலர் பல் உடைக்கப்பட்டனர்; சிலர் கையறுக்கப் பட்டனர்; சிலர் அஞ்சி ஓடி ஒளிந்தனர். வேள்வித் தீயும்

அணைந்தது; சிவனது சினத்தீயும் அணைந்தது. பின் சிவன், மேருமலையாகிய வில்லை, சனகனது முன்னோனாகிய தேவராசன் என்பவனிடம் அளித்தார். அதுதான், வழி வழியாக வந்து சனகனிடம் உள்ளது. என்று சதானந்த முனிவர் கூறினார்.

''இமைய வில் வாங்கிய ஈசன் பங்கு உறை
உமையினை இகழ்ந்தனன் என்ன ஓங்கிய
கமம் அறு சினத் தனிக் கார்முகம் கொளா
சமை உறு தக்கனார் வேள்வி சாரவே'' (12)

''உக்கன பல்லொடு, கரங்கள் வீழ்ந்தன
புக்கனர் வானவர் புகாத சூழல்கள்
தக்கன்தன் வேள்வியின் தழலும் ஆறின
முக்கண் எண் தோளவன் முனிவும் ஆறினான் (13)

''தாளுடை வரிசிலை சம்பு உம்பாதம்
நாள் உடைமையின் அவர்நடுக்கம் நோக்கி இக்
கோளுடைய விடை அனான் குலத்துள் தோன்றிய
வாளுடைய உழவன் ஓர் மன்னன்பால்
வைத்தான்'' (14)

இமைய வில் வாங்கிய ஈசன் = மேரு மலையை வில்லாக வளைத்த சிவன். இமையம் = இமயம் = இடைப்போலி. இமையம்—மந்தரம்—மேரு என்பன ஒன்று போல் கூறப் படுவதுண்டு.

சம்பு = சிவன். கோளுடை விடை அனான் = சனக மன்னன். வாளுடை உழவன் = தேவராசன் என்னும் முன்னோன். போர்க்களத்தில் வாளால் போர் புரிகின்ற மன்னரை 'வாளுடை உழவர்' எனல் மரபு இங்கு, சிலப்பதிகாரத்தில் உள்ள—

"வாள் ஏர் உழவன் மறக்களம் வாழ்த்தி" (26—234)

என்னும் பதியும், புறநானூற்றில் உள்ள—

"தாளழிப் படுத்த வாள் ஏர் உழவ" (268—13)

என்னும் பகுதியும் ஒப்பு நோக்கத் தக்கன. மற்றும்,

"வில் ஏர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல் ஏர் உழவர் பகை" (872)

என்னும் குறள்பாவில் உள்ள 'வில் ஏர் உழவர்' என்னும் தொடரும் எண்ணத் தக்கது.

## சந்திர சயிலப் படலம்

மது கயிடவர் :

அயோத்தியிலிருந்து திருமணங் காண மிதிலைக்குச் செல்லும் வழியில்—சந்திர சயிலம் என்னும் மலைப் பகுதியில் உள்ள நீர் நிலைகளைப் பெரிய யானைகள், கடலைக் கலக்கிய மது—கயிடவரைப் போலக் கலக்கினவாம்.

"பெருங்களிறு அலைப் புனல் கலக்குவன, பெட்டுக்
கருங்கடல் கலக்கும் மதுகயிடவரை ஒத்த" (25)

என்பது பாடல் பகுதி. மது கயிடவன் என்னும் அரக்கர் இருவரும் நான்முகனிடம் இருந்த வேதங்களைக் கவர்ந்து கொண்டனர். இதைத் தேவர்கள் திருமாலிடம் முறையிட, அவர் மது கயிடவரிடமிருந்த வேதங்களை அவர்கள் அறியாதபடி மீட்டார். வேதங்களைக் காணாமையால் மது கயிடவர் கடலைக் கலக்கித் தேடினார்களாம். இது, யானைகள் நீரைக் கலக்குவதற்கு ஒப்புமையாக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு பல புராண வரலாற்றுப் பூங்கொத்துகள் பால காண்டத்தில் அரும்பிக் கொண்டுள்ளன. இவற்றை உண்மையாய் நடந்த வரலாறு போல் ஆராய்ச்சி செய்யலாகாது. ஏதோ புராணக் கதைக் குறிப்பு என்ற அளவில் அமைதி கொள்ளல் வேண்டும்.

அடுத்துப் பாலகாண்டப் பைம் பொழிலில் உள்ள சிவன் கோயில்கள் சிலவற்றைக் காணலாம்.

## 11. சொல் கோயில்கள்

பெருந்தெய்வங்கட்கும் சிறு தேவதைகட்கும் உலகில் பல கல் கோயில்கள் உள்ளன. கம்பரின் பாலகாண்டத்தில் பெருந்தெய்வமாகிய சிவனுக்கு உள்ள சொல்கோயில்கள் சில வருமாறு :

### ஆற்றுப் படலம்

நீறு அணிந்த கடவுள் = சிவன் (2)

நகரப்படலம்— உமைக்கு ஒரு பாகத்து ஒருவன்—சிவன் (3)

"யாவரும் தன்னை எய்துதற்கு அரிய தன்மையால்ஈசனை ஒக்கும்.'' ஈசன்—சிவன் (8)

### திரு அவதாரப் படலம்

தோகை பாகன்—சிவன் (7)

(தோகை—உமாதேவி)

கறை மிடற்று இறை—நீலக் கறை உள்ள கழுத்தை உடைய சிவன் (11)

மதிவளர் சடை முடி மழுவலாளன்—பிறை நிலா பொருந்திய சடையையும் மழுப்படையையும் உடைய சிவன்— (14)

சுடர் மதி சூடினோன்—சிவன் (22)

இருள் தரும் மிடற்றினோன்— சிவன் (26)

கங்கை சூடும் ஈசன் – முடியில் கங்கை உள்ள சிவன் (29)

வானவன்—சிவன் (43)

## கையடைப் படலம்

பல்நகமும்நகு வெள்ளிப் பனிவரைசிவனது கைலை (8)

## வேள்விப் படலம்

நாள் மதிச் செஞ்சடைக் கடவுள்—சிவன் (39)
நாள்மதி – ஒரு நாளுக்குரிய ஒருகலைத் திங்கள்

## வரலாற்றுப் படலம்

''ஏடு அவிழ் கொன்றைப் பூநின்ற மவுலியையும் புக்கு அளைந்த புனல் கங்கை—சிவனுடைய கொன்றை மலரும் கங்கையும் உள்ள முடி (11)

## கார் முகப் படலம்

இமைய வில் வாங்கிய ஈசன் (12)

முக்கண் எண்தோளவன் — மூன்று கண்களும் எட்டுத் தோள்களும் உடைய சிவன் (13)

வார் சடை அரன்—சிவன் (15)

''புலித்தானை களிற்று உரிவைப் போர்வையான்— புலித்தோலும் யானைத் தோலும் உடுத்த சிவன் (20)

மழவிடையோன்—இளங்காளை ஊர்தியான்—சிவன் (23)

வெள்ளம் அணைத்தவன்—கங்கை சூடிய சிவன் (30)

## எழுச்சிப் படலம்

"கற்றைவார் சடை முடிக் கணிச்சி வானவன்—சடை முடியும் கணிச்சிப் படையும் உடைய சிவன் (5)

## வரைக் காட்சிப் படலம்

மலைமகள் கொழுநன்—உமையின் கணவனாகிய சிவன் (15)

## நீர் விளையாட்டுப் படலம்

கங்கைவார் சடையோன்—சிவன் (2)

## உண்டாட்டுப் படலம்

ஈறு இலான் கயிலை—அழிவு இல்லாத சிவனது கயிலை (3)

## கடிமணப் படலம்

"கார் விடக் கறையுடைக் கணிச்சி வானவன்—சிவன் (52)

"இளஞ் சந்திர மௌலி—பிறை அணிந்த முடிடையுய சிவன் (82)

## பரசுராமப் படலம்

மழு உடையான் —சிவன் (7)

திரிபுரம் எரித்த தேவன்—முப்புரங்களை

எரித்து அழித்த சிவன் (29)

வெண்மதிப் பாதியான் —பிறை அணிந்த சிவன் (37)

இவ்வாறு பல இடங்களில் சிவன் குறிப்பிடப் பட்டுள்ளார். நான் ஒவ்வொரு காண்டத்திலும் சிவனைப்

பற்றி உள்ள பகுதிகளை எடுத்துக் காட்டுவதின் நோக்கங்கள் இரண்டு:

முதலாவது :- வைணவப் பெரியார் ஒருவர், வைணவர்களைத் தவிர மற்றவர்கள் இராமாயணம் படிக்கலாகாது என்று சொன்ன கருத்து. கம்பருக்குச் சமயவேற்றுமை இல்லை—அவர் சிவனைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்—என அப்பெரியாருக்கு அறிவுறுத்துவது.

இரண்டாவது :- கம்பராமாயண ஆராய்ச்சியாளர்க்கு உதவக்கூடும் என்பது.

இனி அடுத்தாற்போல் பாலகாண்டப் பைம்பொழிலில் உள்ள அணி மலர்கள் சிலவற்றை அணிந்து மகிழலாம்.

# 12. அணி மலர்கள்

பால காண்டத்தில் உள்ள அணி மலர்களுள் முதலில் உவமை உருவக அணிமலர்களைக் கொய்யலாம்.

## 12—1. உவமை—உருவகங்கள்

**ஒப்புமைக் கலை:**

நன்கு தெரியாத ஒன்றை விளக்குவதற்கு, நன்கு தெரிந்த ஒன்றை 'அதுபோல் இது' என்று எடுத்துக் காட்டுவது உவமை—ஒப்புமை எனப்படும். இந்த ஒப்புமை ஓர் இயற்கைக் கலையாகும். புலவர்கள் மட்டுமா—கல்வியறிவில்லாத பொதுமக்களும்—எளிய மக்களும் பேசும் போது ஒப்புமை கூறுவது வழக்கம். எனவே, இது மக்கள் கலையாகும். ஓர் ஒப்புமையும் சொல்ல வராவிடினும், 'என்னமோ சொல்லுவார்களே அதுபோல'—என்றாவது இனம் தெரியாத ஒப்புமை கூறப்படும். இவ்வாறு ஒப்புமை காட்டுவது 'தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல்' என்னும் உளவியல் முறையுமாகும்.

ஒருவரின் முக மலர்ச்சியை விளக்குவதற்குத் தாமரை போல் அவர் முகம் மலர்ந்துள்ளது என்று கூறுவது உவமை—ஒப்புமை யாகும். இதையே சுருக்கித் தாமரை முகம் எனலாம். தாமரை முகம் என்பதையே திருப்பிப் போட்டு 'முகத் தாமரை' என்று கூறுவது உருவகமாகும். தாமரை முகம் என்பதில், தாமரை—முகம் என்னும் இரு பொருள்கள் சுட்டப்படுகின்றன. முகத் தாமரை என்பதில் இரு பொருள்கள் இல்லை. முகமாகிய தாமரை—முகமே

தாமரை என முகத்தையே தாமரை யாக்கிக் காட்டுவது உருவகம் எனப்படும். ஆங்கிலத்தில் உவமை Simile என்றும், உருவகம் Metaphor என்றும் வழங்கப் பெறுவது ஒப்புநோக்கற்பாற்று.

படிக்காத மக்களே—எழுதத் தெரியாத மக்களே உவமையைக் கையாளும் போது, படித்த பாவலர்கள்—எழுத்தாளர்கள் உவமையைக் கையாளாமல் விடுவார்களா என்ன? எழுத்துப் படைப்பின் இன்றியமையாத ஓர் உறுப்பு உவமையாகும். கவிஞர்கள் உவமையைக் கையாளும் போது தங்கள் கைவரிசை எல்லாம் காண்பிப்பார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு உவமையை ஒருவர் கையாள்கிறாரோ—அவ்வளவுக்கு அவ்வளவு அவரை உயர்ந்த கவிஞராக எடை போடுவாரும் உளர். 'உவமைக் கவிஞர்' என்றபட்டம் சூட்டுவதும் உண்டு.

இந்தக் கலையில் கம்பரும் இளைத்தவரோ—சளைத்தவரோ அல்லர். எங்கெங்கே எவ்வளவு உவமை உருவகங்களைக் கையாள முடியுமோ—அங்கங்கே அவ்வளவையும் கையாண்டுள்ளார். கம்பர் வலிந்து உவமைகளைத் தேடியவராகத் தெரியவில்லை. கம்பரின் பாடல்களில், இயற்கையாகவே உவமைகள் ஓடி வந்து விழுந்துள்ளன—என்று கூறலாம். இந்தஅடிப்படையுடன், கம்பர் பாலகாண்டத்தில் படைத்துக் காட்டியுள்ள உவமை உருவகச் செய்தி மலர்களைக் கொய்து அணி செய்து மகிழலாம்.

**முகில் உருவாக்கம்**

திருநீறு அணிந்த சிவன் தோற்றம் போல் வெளுத்திருந்த முகில் (வான்) ஆறுபோல் கடலை அடைந்து, கடல் நீரை மேய்ந்து, திரு மகளை மார்பில் அணிந்துள்ள திருமாலின் நிறம் போல் கறுத்து உருவாகிற்று:

**" நீறணிந்த கடவுள் நிறத்தவான்**
**ஆறணிந்து சென்று ஆர்கலி மேய்ந்து அகில்**

சேறணிந்த முலைத் திருமங்கை தன்
வீறணிந்தவன் மேனியின் மீண்டவே'' (2)

வான் = முகில். ஆர்கலி = கடல். திருமங்கை = திருமகள். வீறணிந்தவன் = திருமால். கடல் நீர் ஆவியாக மேலே செல்ல முகில் உருவாகிறது. இதைப் பண்டைப் புலவோர் முகில் கடல் நீரை முகந்து செல்வதாகவும், பருகிச் செல்வ தாகவும் கூறுவது மரபு. கம்பர் கடல் நீரை 'மேய்ந்து' மீண்டது என்று கூறியிருப்பது சுவையாயுள்ளது. உயிர் உள்ள பொருள்களின் தொழிலாகிய 'மேய்தல்' என்பதை, உயிரற்ற முகில் செய்வதாகக் கூறியிருப்பது 'சமாதி அணி' எனப்படும். முகில் வெளுத்திருக்கும் நிலைமைக்குச் சிவனது மேனி உவமை.—கறுத்திருக்கும் நிலைமைக்குத் திருமாலின் மேனி உவமை.

மாமனும் மருமகனும்:

அகன்ற இமயமலையின் உச்சி மேல் முகில் பரவிச் சென்றது, ஞாயிற்றின் வெப்பமான கதிரால் இமயம் வெப்ப மடைந்து வருந்தும் என்று கருதி, கடல் தன் நீரின் ஆவியால் முகிலாக அங்கேசென்றது என்று எண்ணும்படித் தோன்றுகிறதாம்.

''பம்பி மேகம் பரந்தது, பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
அம்பின் ஆற்றுதும் என்று அகன் குன்றின்மேல்
இம்பர் வாரி எழுந்தது போன்றதே'' (3)

பானு = ஞாயிறு. மாதுலன் = மாமன் = மாமனார். அம்பு = தண்ணீர். வாரி = கடல். வட நாட்டு ஆறுகள் இமய மலைப் பகுதியிலிருந்து தோன்றுகின்றன. எனவே. ஆறு களுக்கு மலை தந்தையாகும். ஆறுகள் போய்க் கடலைத் தழுவுகின்றன. ஆறாகிய பெண்ணுக்குக் கடல் கணவனா கும். எனவே, கடலுக்கு மலை மாமனாராகும்; மலைக்குக் கடல் மருமகனாகும். எனவேதான், கடலாகிய மருமகன்;

மலையாகிய தம் மாமனார் ஞாயிற்றின் கொடுமையால் வெப்பமுற்று வருந்துவார்-நாம் மழைத் தண்ணீரால் மாமனாரது (மலையின்) வெப்பத்தைத் தணிக்க வேண்டும் எனக் கருதி, நீராவியாக மேலே போய் முகிலாகி மலை உச்சியை அடைந்து பெய்கிறதாம். இந்த மாமனார்—மருகன் ஒப்புமை மிகவும் சுவையாயுள்ளது.

இயற்கையாகக் கடல் நீர் முகிலாகி மலை உச்சியை அடைந்து மழை பெய்வதை, மாமனாரின் வெப்பத்தைத் தணிப்பதற்காகத்தான் இவ்வாறு செய்கிறது எனப் புலவர் தாமாக ஒரு காரணத்தைக் குறித்து ஏற்றியுள்ளதால், இப்பாடலைத் 'தற்குறிப்பு ஏற்ற அணி' அமைந்த பாடலாகக் கூறலாம்.

வெள்ளமும் விலை மாதரும்:

மழைவெள்ளம் மலையின் உச்சி (தலை)—நடுப்பகுதி—அடிவாரம் ஆகிய எல்லா இடங்களிலும் உள்ள பொருள் களையெல்லாம் அடித்துக் கொண்டு வந்து அங்கு நில்லாமல் விரைந்து ஓடியதாம். இது விலைமகளிரின் நிலை போன்றது.

''தலையும் ஆகமும் தாளும் தழீஇ அதன்
நிலை நிலாது இறை நின்றது போலவே
மலையின் உள்ள எலாம் கொண்டு மண்டலால்
விலையின் மாதரை ஒத்தது வெள்ளமே'' (6)

இறை = சிறிது நேரம். மண்டல் = விரைந்து போதல். விலைமகளிர் தம்மிடம் வந்த ஆடவரின் தலையைத் தழுவி (தடவி) முத்தமிட்டும், உடம்பைக் கட்டித் தழுவி அணைத்தும், காலைத் தொட்டு வணங்கியும் அல்லது காலைப் பிடித்து விட்டும் நடித்து அவரிடம் உள்ள பொருள்களையெல்லாம் பறித்துக் கொண்டு, பின்னர் அவரோடு சிறிதும் தொடர்பின்றி அவரை விட்டு விரைவில் நீங்குவர். இதனால், விலை மாதர் வெள்ளநீருக்கு ஒப்புமையாக்கப்பட்டனர். சரயு ஆற்று வெள்ளத்தின்

செயலுக்கு இவ்வாறு இன்னும் பலஉவமைகள் கூறியுள்ளார் கம்பர் பெருமான்.

## தாடகை வதைப் படலம்

**உலோபம் :**

கடும்பற்று உள்ளம் (உலோபம்) என்னும் தீயகுணம் ஒன்றுமே எல்லா நற்குணங்களையும் அழித்தல் போல், தாடகை என்பவள் வளமான மருத நிலத்தைக் கொடிய பாலை நிலமாக்கி விட்டாளாம்:

"உளப்பரும் பிணிப்பறா உலோபம் ஒன்றுமே
அளப்பரும் குணங்களை அழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமையை அரக்கி கேடிலா
வளப்பரு மருதவைப்பு அழித்து மாற்றினாள்" (24)

கொடியவன் ஒருவனைக் குறிப்பீட்டு, அவன் இருக்கும் இடத்தில் புல் கூட முளைக்காது என உலகியலில் கூறுவது போல, வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய நீர்வளம் மிக்க மருத நிலம், தாடகை வந்ததால் பாலை நிலமாயிற்று என்று சொல்லப்பட்டுள்ளது.

## வேள்வி படலம்

மாவலியை அழிப்பதற்காக, காசிபன் — அதிதி என்பவருக்கு மகனாய்த் திருமால் ஆலம் வித்துபோல் குறள்வடிவம் (குள்ளவடிவம்) கொண்டு தோன்றினார்:

"காலம் நுனித்துணர் காசிபன் என்னும்
வால் அறிவற்கு அதிதிக்கு ஒரு மகவாய்
நீல நிறுத்து நெடுந்தகை வந்தோர்
ஆல் அமர் வித்தின் அருங்குறள் ஆனான்" (11)

குள்ள வடிவமாக வந்த வாமனன், மூன்றடி மண் அளக்கத் திடீரென வானுற ஓங்கினான் அல்லவா?

அதனால், அவனது குள்ள வடிவிற்கு ஆலம் விதை உவமையாக்கப்பட்டுள்ளது. ஆலம் பழத்திற்குள் இருக்கும் விதைகளுள் ஒரு சிறிய விதையே, சிறிய மீன் முட்டையினும் நுண்ணியதாயிருப்பினும், முளைத்துப் பெருமரம் ஆகி மன்னன் நால்வகைப் படையுடன் தங்குதற்கு நிழல் தரும்:

**''தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒருவிதை**
**தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்**
**நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை**
**அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு**
**மன்னர்க்கு இருக்க நிழலாகும்மே''** (17)

என்பது வெற்றி வேற்கைப் பாடல். சென்னை—அடையாறு ஆலமரத்தைத் தமிழர் அறிவர். கல்கத்தாவில் உள்ள ஓர் ஆலமரம் ஒன்றரை ஏக்கர் பரப்பளவு உள்ளதாம். மகாராட்டிரத்தில்—வைசத்கர் என்னும் ஊரில், முடியின் சுற்றளவு 1587 அடி கொண்ட ஓர் ஆலமரம் இருந்ததாம். ஏழாயிரம் மக்கள் தங்கக் கூடிய ஓர் ஆலமரம் நருமதை ஆற்றுப் பகுதியில் இருந்ததாம். இருபதினாயிரம் மக்கள் தங்கக் கூடிய ஓர் ஆலமரம் ஆந்திரப் பள்ளத்தாக்கு ஒன்றில் இருந்ததாம். எனவே, கம்பர் 'ஆல் அமர் வித்து' என்னும் உவமை கூறியிருப்பது மிகவும் நயத்தற்கு உரியது.

## அகலிகைப் படலம்

விசுவாமித்திரர் முதலிய மூவரும் காட்டில் எதிர்ப்பட்ட சோணை ஆற்றை அடைந்தனர். இந்த ஆறு, கம்பரால் ஒரு பெண்ணாக உருவகிக்கப்பட்டடுள்ளது. இடையிலே உள்ள மணல் மேடுகளாகிய மார்பகங்களையும், மெல்லிய வஞ்சிக் கொடியாகிய இடையையும், மலராகிய மேகலையையும், கருமணலாகிய கூந்தலையும், பிரிந்து செல்லும் கால்கள் (வாய்க்கால்கள்) ஆகிய கால்களையும் உடையவள்

சோணை என்னும் பெண் – என உருவக அணி இடம் பெற்றுள்ளது.

''அலமபும் மாமணி ஆரத்தோடு அகில் அளை புளின
நலம்பெய் பூண்முலை, நாகு இள வஞ்சியாம் மருங்குல்
புலம்பும் மேகலைப் புது மலர், புனை அறல் கூந்தல்,
சிலம்பு அலம்பு கால் சோணையாம் தெரிவையைச்
சேர்ந்தார்'' (1)

புளினம்—மணல்மேடு, கால்—வாய்க்கால், தெரிவை—பெண், ஐம் பூதங்களுள் விண்—நீர்—நிலம் ஆகியவற்றையும் கல்வி— கலை— மொழி— செல்வம் ஆகியவற்றையும் பெண்ணாகக் கூறுவது நமது மரபு. இந்த அடிப்படையில் சோணை ஆறு பெண்ணாக உருவகிக்கப்பட்டுள்ளது. நைல் நதியை 'எங்கள் அப்பன் நீலன்' என்ற மாதிரியில் ஆணாகக் கூறுவது அந்த ஆற்றுப் பகுதியில் வழக்கமாம்.

## மிதிலைக் காட்சிப் படலம்

**சீதையின் காதல் நோய்:**

தெருவில் இராமனைக் கண்ட சீதை, காதல் கொண்டு இரவில் வருந்துகிறாள். தன் மனமும் உடம்பும் தன் நூலன்ன இடையைப் போல மெலிந்து விட்டாள். கண் வழியாகப் புகுந்த காதல் நோய், குடம் பாலில் ஊற்றிய பிரை மோர், பால் அனைத்தையும் மோராக்கி விடுதல் போல், உடம்பு முழுவதும் பரவி விட்டதாம்.

''மாலுற வருதலும், மனமும் மெய்யும் தன்
நூலுறு மருங்குல் போல் நுடங்குவாள், நெடுங்
காலுறு கண்வழிப் புகுந்த காதல் நோய்
பாலுறு பிரை எனப் பரந்தது எங்குமே'' (41)

மற்றும், தன் நோயை வெளியில் சொல்லாமல் ஊமைபோல் உள்ளத்துள்ளே கொண்டு வருந்துகிறாள். இந்நிலையில், மன்மதனும் காமத்தைத் தூண்டும் ஒருமலர்

அம்பை அவள்மேல் எய்தான். இது, வேகும் நெருப்பில் மேலும் விறகு இட்டதுபோல் இருந்ததாம்:

''நோ முறும் நோய்நிலை நுவல சிற்றிலள்
ஊமரின் மனத்திடை உன்னி விம்முவாள்
காமனும் ஒரு சரம் கருத்தின் எய்தனன்
வேம்எரி அதனிடை விறகு இட்டென்னவே'' (42)

மன்மதன் எய்தது ஓர் அம்புதான். அதுவே சீதையின் கருத்தைக் கலங்கச் செய்ததாம்.

பனிக் காற்றுக்கு உருக் குலைந்த தாமரைத் தடாகம் போலவும், 'கிரகண' காலத்தில் பாம்பு விழுங்கிய திங்கள் போலவும், சீதை சோர்ந்து மலர்ப் படுக்கையில் கிடந்தாள்

''நாளறா நறுமலர் அமளி நண்ணினாள்
பூளைவீ புரை பனிப் புயற்குத் தேம்பிய
தாள தாமரை மலர் ததைந்த பொய்கையும்
வாள் அரா நுங்கிய மதியும் போலவே'' (47)

பனிக்குத் தாமரை குலையும்; ஞாயிறு தோன்றிய பின்—பனி மறைந்த பின் தாமரை செழித்துத் தோன்றும்—என்பது இதனால் புலப்படும். பாம்பால் விழுங்கப்பட்ட திங்கள் என்பது திங்கள் போன்ற முகத்தைப் படுக்கையில் கவிழ்த்துப் புதைத்துக் கொண்டாள் என்பதை அறிவிக்கிறது. முகத்தை விழுங்கிய பாம்பு கூந்தல்தான்.

அந்தி மாலைக் காலன்:

ஓரளவு செந்நிறமும்—கருநிறமும் கொண்ட மாலை வந்தது இந்த அந்தி மாலை எமனாக உருவகிக்கப்படுகிறது. எமன் உடல் கறுப்பு—தலைமுடி சிவப்பு. அவன் உயிரைப் பிடிக்க வீசும் பாசக்கயிறாகத் தென்றல் உருவகிக்கப்பட்டுள்ளது:

''விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரும் இருளும் காட்டலால்

அரியவட்கு அனல்தரும் அந்தி மாலையாம்
கருநிறச் செம்மயிர்க் காலன் தோன்றினான்'' (62)

செம்மயிர்=செம்பட்டை மயிர். அந்திமாலையாகிய எமன் அனல் கக்கி, தென்றலாம் பாசக் கயிற்றொடு வந்து சீதையின் உயிரைக் கொல்ல முயல்வதாகக் கருத்துக் கொள்ளல் வேண்டும். பிரிந்திருக்கும் காதலர்களை வருத்தும் பொருள்களுள் தென்றல்போல் அந்திமாலையும் ஒன்று.

தாமரையும் ஆம்பலும் :

ஞாயிறு மறையும் அந்தி மாலை வந்து விட்டதால், தாமரை மலர், தன்னைச் சூழ்ந்திருந்த வண்டுகள் நீங்கி யோட, தன்னிடம் அமர்ந்துள்ள திருமகளோடு குவிந்து மூடிக்கொண்டது. உடனே செவ்வாம்பல் மலரலாயிற்று. இதற்குச் சுவையான ஒப்புமை கூறப்பட்டுள்ளது. ஆணை ஆழியை (ஆக்ஞா சக்கரம்) உருட்டி, உலகுக்குத் தான் ஒருவனே அரசாக ஒரு கோல் ஓச்சி உலகை ஆண்ட பேரரசன் மறைந்ததும், இவ்வளவு காலம் ஒடுங்கியிருந்த குறுநில மன்னர்கள் தலையெடுத்தது போன்று இந்தக் காட்சி இருந்ததாம்!

''விரைசெய் கமலப் பெரும்போது
விரும்பிப் புகுந்த திருவினொடும்
குரைசெய் வண்டின் குழாம் இரியக்
கூம்பிச் சாம்பிக் குவிந்துளதால்
உரைசெய்தி கிரிதனை உருட்டி
ஒருகோல் ஓச்சி உலகாண்ட
அரைசன் ஒதுங்கத் தலைஎடுத்த
குறும்பு போன்றது அரக்கு ஆம்பல்'' (75)

திரு=திருமகள். குறும்பு—குறுநில மன்னர்கள். அரைசன்—அரசன்—இடைப் போலி. 'ஒரு கோல் ஓச்சி உலகாண்ட' என்னும் பகுதி,

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமையோர்" (189—1,2)

என்னும் புறநானூற்றுப் பாடல் பகுதியை நினைவுறுத்து கின்றது.

அரக்கு (சிவப்பு) ஆம்பல், ஞாயிறு மறைந்ததும் மலரும். "உரைசெய் திகிரிதனை உருட்டி ஒரு கோல் ஒச்சி உலகாண்ட" என்னும் பகுதியை ஞாயிற்றுக்கும் பொருத்தலாம்.

ஒற்றைத் தேர் ஆழியை (தேர்ச் சக்கரத்தை) உருட்டித் தான் ஒருவனே விண்ணிலிருந்து உலகம் முழுவதற்கும் ஒளிதரும் ஞாயிறு மறைந்ததும் தாமரை குவிய ஆம்பல் மலரும் அல்லவா?

உலகாண்டு மறைந்த அரசர் போன்றது மறைந்த ஞாயிறு—என்னும் கருத்து, திவ்வியப் பிரபந்தம்—திரு விருத்தம் என்னும் நூலிலும் கூறப்பட்டுள்ளது:

"சீரர சாண்டு செங்கோல் சிலநாள் செலீஇக் கழிந்த
பாரரசு ஒத்து மறைந்தது நாயிறு" (80)

என்பது நம்மாழ்வாரின் திருவிருத்தப் பாடல் பகுதி.

பேரரசன் மறைந்ததும் அவனைச் சார்ந்திருந்தவர் களை விரட்டி விட்டுக் குறும்பர்கள் கொட்டம் அடிப்பது போல், இங்கே, தாமரையினிடம் தேனுண்ட வண்டுகள் ஓடி விட்டன—தாமரையை இருப்பிடமாகக் கொண்ட திருமகளே மறைக்கப்பட்டு விட்டாள்—என்னும் கருத்து நயமாயுள்ளது,

## கைக்கிளைப் படலம்

**கற்பினார் போல்:**

இன்ன நாளில் திரும்பி வந்துவிடுவேன் எனத் தம்மிடம் (மனைவியிடம்) காலம் குறிப்பிட்டு, தம்

அரசர்க்காக அயல்நாடு சென்று போர் புரியவோ அல்லது தமக்காகப் பொருள் தேடவோ பிரிந்து சென்ற கணவர், தமது பிரிவுத் துன்பம் நீங்கும்படிக் குறித்த நாளில் வந்ததும், அவரைக் கண்டு மெலிவு நீங்கிப் பொலிவு பெற்று மகிழும் கற்புடைய பெண்டிர் போல், இரவில் வாடியிருந்த தாமரை மலர்கள் பொய்கையில் மலர்ந்து மணம் வீசும்படி ஞாயிறு தோன்ற, இராமன் இரவுக் கடலைக் கடந்தான்!

**''பண்டு வரும் குறி பகர்ந்து பாசறையின்,**
**பொருள் வயினின் பிரிந்து சென்ற**
**வண்டு தொடர் நறுந்தெரியல் உயிர் அனைய**
**கொழுநர் வர மணித் தேரோடும்**
**கண்டு மனம் களி சிறப்ப ஒளி சிறந்து**
**மெலிவு அகலும் கற்பினார் போல்**
**புண்டரிகம் முகல் மலர அகம் மலர்ந்து**
**பொலிந்தன பூம் பொய்கை எல்லாம்'' (15)**

சீதையைக்கண்ட நாளிரவு வருந்திக் கொண்டிருந்தான் இராமன். இரவு முடிந்ததும் ஞாயிறு தோன்றியதைப் பற்றிக் கூறும் பாடல் இது.

கணவர் வந்ததும் களிக்கும் கற்புடைய மகளிர்போல், ஞாயிறு தோன்றியதும் தாமரைகள் மலர்ந்து செழித்தன வாம். இதனால், ஞாயிற்றைத் தாமரையின் கணவனாகக் கூறுவது ஒருவகை இலக்கிய மரபு. கச்சியப்பர் கந்த புராணத்தின் காப்புச் செய்யுளில்

**''சகட சக்கரத் தாமரை நாயகன்''**

எனவும், சிவப்பிரகாசர் திருவெங்கை உலாவில்,

**''செந்தாமரை நாதன் தேரில் பதாகையொடு**
**நந்தா மதில்கொடிகள் நட்பாட''— (40, 41)**

எனவும், ஞாயிற்றைத் தாமரையின் நாயகனாக—நாதனாக அதாவது கணவனாகக் கூறியுள்ளார். பகலில் மலரும் தாமரைக்கு ஞாயிறு கணவன். எனவே இரவில் மலரும் குமுதத்துக்குத் (ஆம்பலுக்குத்) திங்கள் கணவனாம்:

**"காமக் கருத்தா குமுதநாதன் கங்குல்வரக் கண்டும்"**

என்பது ஒரு தனிப்பாடல் பகுதி.

## கார் முகப் படலம்

**சீதையும் கங்கையும் :**

மிதிலையில் சதானந்த முனிவர் அவையோர்க்குச் சீதையின் பெருமையைக் கூறுகிறார்: வானத்திலிருந்து கங்கை (ஆகாய கங்கை) கீழே வந்ததும் மற்ற ஆறுகள் பெருமை இழந்ததுபோல், சீதை தோன்றியதும் மற்ற பெண்கள் சிறப்பு குன்றினர்—என்றார்:

"கணங் குழையாள் எழுந்ததற்பின், கதிர் வானில்
கங்கை எனும்
அணங்கு இழியப் பொலிவு இழந்த ஆறு ஒத்தார்
வேறு உள்ளார்" (18)

ஆறு = மற்ற ஆறுகள். ஆறு = பால்பகா அஃறிணைப்பெயர்; ஒருமைப் பெயரே பன்மையையும் குறிக்கும். வேறு உள்ளார் = மற்ற பெண்கள்.

**புகழ் வேட்ட பொருள் :**

மேலும் சதானந்தர் கூறுகிறார்: சீதையைப் பெறச் சனகமன்னனோடு வேந்தர் பலர் போரிட்டதால், புகழை விரும்பி அளிக்கும் பொருளேபோல், சனகனது பெரிய படை குறையலாயிற்று. சீதையை விரும்பிய மற்ற மன்னர்களின் படைகள் அவர்களது ஆசையைப் போல் பெருகின:

"எம்மன்னன் பெருஞ்சேனை ஈவதனை மேற்கொண்ட
செம்மன்னர் புகழ்வேட்ட பொருளேபோல் தேய்ந்ததால்;
பொம்மென்ன வண்டலம்பும் புரி குழலைக் காதலித்த
அம்மன்னர்சேனை தமது ஆசைபோல் ஆயிற்றால்" (22)

புரி குழல்=சீதை. புகழ் நோக்குடன் பொருள் கொடுக்கக் கொடுக்கக் குறையுமாம். கல்விதான் கொடுக்கக் கொடுக்க வளரும்.மாறாகப் பொருள் கொடுக்கக் கொடுக்கக் குறையுந்தானே. குறுந்தொகையிலும் இப்படி ஒரு கருத்து உள்ளது:-

"நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சின்
கடப்பாட்டாளன் உடைப்பொருள் போலத்
தங்குதற்கு உரிய தன்று நின்
அங்கலுழ் மேனி பாய பசப்பே" (143 : 4—7)

என்பது பாடல் பகுதி. சீவக சிந்தாமணியிலும்

"நிலையிலா உலகில் நின்ற வண் புகழை
வேட்டவன் நிதியமே போன்றும்......
உலைவிலார் நில்லாது ஒருபக லுள்ளே
உருப்பவிர் வெஞ்சுரம் கடந்தார்" (2107)

இந்தக் கருத்து இடம் பெற்றுள்ளது. ஈண்டு,

"ஒப்புரவினால் வரும் கேடு எனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து" (220)

என்னும் குறள் கருத்தும் எண்ணத் தக்கது. பிறர்க்கு உதவுவதால் கேடு வருமாயினும், அக்கேட்டை ஒருவன் தன்னை விற்றாயினும் பெறவேண்டும்—என்பது கருத்து.

**காக்கையும் கூகையும்:**

சதானந்த முனிவர் மேலும் தொடர்கிறார்: சனகனது படை குறைந்ததால், அவனுக்குத் தேவர்கள் படைக்

கருவிகள் அளித்தார்களாம். அதனால் சனகன் மிக்க வலிமை உடையவன் ஆனான். இதன் பிறகு, இரவில் காக்கை கூகையைக் (கோட்டானைக்) கண்டு அஞ்சுவது போல் பகைவர்கள் சனகனுக்கு அஞ்சத் தொடங்கினர்.

''மல்காக்கும் மணிப்புயத்து மன்னன் இவன்
மழ விடையோன்
வில்காக்கும் வாள் அமருள் மெலிகின்றான்
என இரங்கி
எல்காக்கும் முடிவிண்ணோர் படை ஈந்தார்
என வேந்தர்
அல்காக்கை கூகையைக் கண்டு அஞ்சினவாம்
என அகன்றார்'' (23)

பகலில் காக்கை கூகையை வெல்லும்; இரவில் கூகை காக்கையை வெல்லும். படை குறைந்தபோது சனகன் பகல் கூகையைப் போல் இருந்தானாம்; படை பெருகியதும் இரவுக் கூகையைப் போல் ஆய்விட்டானாம். சனகனுக்குப் படை குறைந்தபோது, பகைவர்கள் பகல் காக்கையைப் போல் இருந்தார்களாம்.—படை பெருகியதும் இரவுக் காக்கைபோல் ஆனார்களாம். ஈண்டு,

''பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது'' (48)

என்னும் குறள் எண்ணத் தக்கது.

முகிலும் வறியவரும்.

சனகனது வில்லை இராமன் ஒடித்ததும், மகிழ்ச்சியினால் மன்னன் வறியவருக்கு வரையாது வழங்கினான். அதாவது—வெள்ளை முகில் மேன்மேலும் கடல் நீரைப் பருகுவதுபோல் இரவலர் பெற்றனர்.

''வெண்ணிற மேகம் மேன்மேல் விரிகடல் பருகுமாபோல்
மண்ணுறு வேந்தன் செல்வம் வறியவர் முகந்து
கொண்டார்'' (39)

என்பது பாடல் பகுதி. முகில் கடலில் முகப்பதுபோல் வறியவர் மன்னன் செல்வத்தை முகந்து கொண்டார்களாம். முகத்தல் என்பது எண்ணிப் பெறாமல் நிறைய அளவின்றிப் பெறுவதைக் குறிக்கும். 'கடலில் ஏற்றம் போட்டுஇறைப்பது போல', 'மாடு வைக்கோல் போரிலேயே மேய்வது போல்' என்னும் பழமொழிகள் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன.

## எழுச்சிப் படலம்

**விலைமகளிரும் குதிரையும் :**

இராமனது திருமணம் காணத் தயரதன் படைகளுடனும் பொதுமக்களுடனும் மிதிலை நோக்கி வந்து கொண்டிருந்தான். படையிலுள்ள குதிரைகள், உடலால் உறவு கொள்ளினும் உள்ளத்தால் உறவு கொள்ளாமல் பலரிடம் தாவித் தாவிச் செல்லும் விலை மகளிரின் உள்ளம் போல், தரையில் நன்றாகக் கால் ஊன்றாமல் மேலே தாவித் தாவிச் சென்றனவாம்:

''சூருடை நிலைஎனத் தோய்ந்தும் தோய்கிலா
வாருடை வனமுலை மகளிர் சிந்தைபோல்
தாரொடும் சதியொடும் தாவும் ஆயினும்
பாரிடை மிதிக்கில பரியின் பந்தியே'' (20)

பரியின் பந்தி—வரிசையாயுள்ள குதிரைகள். தார் என்பது, குதிரையின் கழுத்தில் கட்டியுள்ள மணி மாலை. சதி என்பது, உரிய முறையில் அடி வைப்பது. மணி ஓசைக்கு ஏற்பவும் அடி வைப்புக்கு ஏற்பவும் குதிரைகள் தாவிச் செல்கின்றன. விலை மாதரின் மூலதனம் முலை ஆதலின், வனமுலை மகளிர் என்றார். தோய்ந்தும் தோய்கிலா மகளிர் என்றதனால், விலை மகளிர் என்பது பெறப்பட்டது.

## சந்திர சயிலப் படலம்

**யானையின் சூழ்ச்சி :**

தயரதனின் படைகள் செல்லும் வழியில் நடந்த நிகழ்ச்சி இது. ஓய்வு கொள்வதற்காக ஒரு யானையை மராமரத்தில் கட்டியிருந்தனர். மதங் கொண்ட அந்த யானை கட்டுக்கு அடங்காமல் அந்த மரத்தை இழுத்து வேரோடு பறித்துக் கொண்டு சென்றதாம். தன்னை மடக்கிய பகைவரை, ஊக்கமுடைய ஓர் அரசன் சூழ்ச்சி யினால் வென்று தப்புவது —இதற்கு ஒப்புமை :

**''நேர் ஒடுங்கல் இல் பகையினை நீதியால் வெல்லும்**
**சேர்வு இடம்பெறா உணர்வினன் சூழ்ச்சியே போல,**
**காரொடும் தொடர் கவட்டு எழில் மராமரக் குவட்டை**
**வேரொடும் கொடு கிரிஎன நடந்தது ஓர் வேழம்''** (2)

யானை சூழ்ச்சியால் செயல் ஆற்றுவது போல மன்னர் கள் பகைவரிடமிருந்து சூழ்ச்சியால் தப்பிய வரலாறுகள் கம்பருக்குத் தெரியும் போலும்.

தன்னை அகப்படுத்திய குழியின் பக்க வாட்ட மண் சுவர்ப் பகுதியைத் தன் கொம்பால் குத்திக் குத்தி இடித்துக் குழியைச் சமன்செய்து மேலே தப்பி ஏறும் யானையைப் போல், கரிகாற் சோழன், தன்னை வளைத்துக் கொண்ட பகைவரிடமிருந்து சூழ்ச்சியால் தப்பிய வரலாறு பட்டினப் பாலை என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

**''பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி**
**அருங் கரை கவியக் குத்திக் குழிகொன்று**
**பெருங் கை யானை பிடிபுக் காங்கு,**
**நுண்ணிதின் உணர நாடி நண்ணார்**
**செறிவுடைத் திண்காப்பு ஏறி வாள் கழித்து**
**உருகெழுதாயம் ஊழின் எய்தி...''** (222-227)

என்பது பாடல் பகுதி. மற்றும், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் அகப்படுத்தப்பட்ட யானைக் கண் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, குழியிலிருந்து திறமையாக மீண்ட யானை போல்,சூழ்ச்சித் திறமையுடன் தப்பியசெய்தி புறநானூற்றுப் பாடல் ஒன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது :

''நீடுகுழி யகப்பட்ட
பீடுடைய எறுழ் முன்பின்
கோடு முற்றிய கொல் களிறு
நிலை கலங்கக் குழி கொன்று
கிளைபுகலத் தலைக் கூடி யாங்கு,
நீ பட்ட வரு முன்பின்
பெருந் தளர்ச்சி பலர் உவப்பப்
பிறிது சென்று மலர் தாயத்துப்
பலர் நாப்பண் மீக் கூறலின்'' (17:15—23)

என்பது பாடல் பகுதி. இத்தகைய வரலாறுகளைக் கம்பர் முன்கூட்டி அறிந்தவ ராதலின், பகையினைவெல்லும் உணர்வினன் சூழ்ச்சியே போல, வேரொடும் கொடு நடந்தது ஓர் வேழம்'' என்று பாடியுள்ளார் போலும்.

**கண்ணுதலும் கண்ணனும் :**

கரிய யானை தரையில் விழுந்து ஒரு பக்கம் வெண்ணிறப் புழுதி படிந்து வருவது, சிவன் ஒருபக்கம் பொருந்த வருகின்ற கண்ணனைப் போல் உள்ளதாம் :

''மண்ணுற விழுந்து நெடுவானுற எழுந்து
கண்ணுதல் பொருந்த வரு கண்ணனில் வரும் கார்
உண்ணிற நறும் பொடியை வீசி ஒரு பாகம்
வெண்ணிற நறும்பொடி புனைந்த மதவேழம்'' (19)

வெண்ணிறப் புழுதியில் விழுந்து புரண்ட கரு நிறயானை, ஒருபக்கத்தில் உள்ள புழுதியை மட்டும் உதறி

விட்டதால், ஒரு பக்கம் கரு நிறமாகவும், மற்றொரு புறம் வெண்ணிறமாகவும் உள்ளதாம். இந்தத் தோற்றம், வெண்ணீறு அணிந்த சிவனை வலப் பாகத்தில் கொண்டுள்ள கரு நிறத் திருமாலை ஒத்திருந்ததாம். கண்ணுதல் = சிவன். கண்ணன் = திருமால். திவ்வியப் பிரபந்தத்தில், திருமாலின் வலப்புறம் சிவன் இருப்பதான செய்தி கூறப்பட்டுள்ளது. நம்மாழ்வாரின் திருவாய் மொழியில்,

> ''வலத்தனன் திரிபுரம் எரித்தவன், இடம்பெற...
> உலகமும் தானும் புலப்பட...'' (1-3-9)

(திரிபுரம் எரித்தவன் = சிவன்)

> ''தடம் புனல சடைமுடியன் தனி ஒரு கூறு அமர்ந் துறையும்
> உடம்புடையான் கவராத உயிரினால் குறைவிலமே'' (4-8-10)

(சடைமுடியன் = சிவன்)

எனக் கூறப்பட்டிருப்பது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. சிவனது இடப் பக்கத்தில் உமாதேவி இருப்பதாகச் சைவர் கூறுவதும் ஈண்டு எண்ணத் தக்கது.

ஆங்கிலத்தில் 'ஆல் ரவுண்ட் மாஸ்டர்' (All Round Master) எனப் பல துறையிலும் வல்லுநரைக் குறிப்பிடுவார் கள்.கம்பர் அத்தகையவர் போலும்!

**ஆறும் வள்ளலும்:**

மூவரும் காட்டில் சென்று கொண்டிருந்த போது, இடை யிடையே சில ஆறுகளைக் கண்டனர்; சில ஆறுகள் வெள்ள மாக நீர் பெருகாவிடினும், தம்மிடம் மக்களால் தோண்டப் பட்ட ஊற்றுக் குழிகளின் வாயிலாக நீர் உதவுவதை நோக்கினர். இந்தக் காட்சி வள்ளல்கள் தம்மிடம் உள்ள பெருஞ்செல்வம் தீர்ந்து விடினும் எங்ஙனமாவது

வந்தவர்க்குத் தம்மாலான சிறிய உதவியையாவது செய்தனுப்புவதை ஒத்திருந்தது.

> **''வெள்ள நெடுவாரி அற வீசி உளவேனும்**
> **கிள்ள எழுகின்ற புனல், கேளிரின் விரும்பித்**
> **தெள்ளு புனல் ஆறு, சிறிதே உதவுகின்ற;**
> **உள்ளது மறாது உதவும் வள்ளலையும் ஒத்த''** **(23)**

கிள்ள எழுகின்ற புனல் = குழி தோண்டலால் உண்டான நீர்.

கம்பரின் இந்தக் கருத்தை, ஒளவையின் நல்வழி நூல் வாயிலாக மூன்றாம் வகுப்பு மாணாக்கர்களும் இப்போது அறிவர்:

> **''ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு**
> **ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு**
> **நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்**
> **இல்லையென மாட்டார் இசைந்து''** **(9**

ஒளவையின் நல்வழிப் பாடல் இது. இதற்கு வரலாறுகள் சில பல உண்டு. நாட்டில் இருந்தபோது வரையாது வாரி வழங்கிய குமணன், தம்பியால் காட்டிற்குச் சென்றிருந்த போதும், வந்த புலவர்க்குத் தன் தலையைக் கொண்டு போய்த் தம்பி கை கொடுத்துப் பொருள் பெறச் சொன்னான்.

ஆறுபோல் குமண வள்ளல் உதவிய வரலாற்றை, 'தமிழ் நாவலர் சரிதை' என்னும் தொகை நூலில் உள்ள பழம்பாடலும் அறிவிக்கிறது. பாடல்:

> **''ஆறு பெருக்கற்று அருந்திடர்தான் பட்டாலும்**
> **ஊறல் அமையாதோ உலகாற்றத்—தேற**
> **வறியை நீ யானாலும் என் கவியை மாற்றச்**
> **சிறியையோ சீர்க்குமணா செப்பு''** **(17)**

என்பது அப்பாடல். ஒன்றும் கொடுக்க முடியாத போது, பாம்புப் புற்றில் கையை விட, பாம்பு மாணிக்கத்தைக் கக்க, அதைக் கொண்டு வந்து கொடுத்த வள்ளல் கதை பலரும் அறிந்ததே. இயற்கைக் காட்சிகளின் வாயிலாக, உயர்ந்த கருத்தை வெளிப்படுத்துவதில் வல்லவர் கம்பர்.

## வரைக் காட்சிப் படலம்

வழியில் மலைகளிலிருந்து, பொன்னையும் சந்தனக் கட்டைகளையும் அடித்துக் கொண்டு ஓடும் வரிசையான அருவிகள், உலகளந்த திருமாலின் மார்பில் அணியும் மேலாடை (உத்தரீயம்—அங்கவஸ்திரம்) போல் தோன்றினவாம்.

''அலகில் பொன் அலம்பி ஓடி ஆரம்சேர் அருவிமாலை
உலகளந்த வன்தன் மார்பின் உத்தரீயத்தை ஒத்த'' (15)

திருமாலின் மார்பிலும் பொன் (திருமகள்) உள்ளாள். அருவியும் பொன்னை அடித்துக் கொண்டு வருகிறது. நறுமணம் (செண்ட்) ஏற்றிய உடைபோல, நறுமணம் உடைய சந்தனத் துண்டுகள் பொருந்தி வருகின்றன. மற்றும் மேலாடை பலவண்ணம் உடையது போல அருவியும் பொன் நிறமும் சந்தன நிறமும் உடையதாக உள்ளது.

இந்தப் பொருத்தமான உவமை மிகவும் நயத்தற்கு உரியது.

## பூக்கொய் படலம்

**கொம்பின் மெலிவும் வலிவும் :**

பூத்து மெலிந்து வளைந்த சில கொம்புகள் (கிளைகள்) ஆடவரால் தழுவப்பட்டு உடலுறவு கொண்டு மெலிந்த நிலையில் உள்ள மங்கையர் போல் தோற்றம் அளித்தனவாம். தாழ்த்தி வளைக்க முடியாமல் நிமிர்ந்து நிற்கும் சில கொம்புகள், கணவரோடு ஊடல் கொண்டு புணர்ச்சிக்கு

உடன்படாமல் வீறாப்போடு இருக்கும் மடந்தையர் போல் காட்சியளித்தனவாம்.

"உலம்தரு வயிரத் திண்தோள் ஒழுகி வார் ஒளிகொள் மேனி
மலர்ந்தபூந் தொடையல் மாலைமைந்தர் பால்மயிலின் அன்னார்
கலந்தவர் போல ஒல்கி ஒசிந்தனசில; கை வாராப்
புலந்தவர் போல நின்று வளைகில பூத்த கொம்பர்" (10)

இப்பாடலின் முற்பகுதி ஆடவரின் திண்மையை அறிவிக்கிறது. கொம்பர் = கொம்பு – கடைப் போலி. ஆடவர் ஊடலின் போது மனைவியைக் கெஞ்சுவது போலவும், அப்போது மனைவி வீம்பு காட்டுவது போலவும் கூறுவது ஒருவகை இலக்கிய மரபு. ஆடவர் ஊடலின்போது மனைவி காலில் விழுந்து வணங்குவதாகவும் கூறுதல் உண்டு.

சிவபெருமானே உமையின் காலில் விழுந்து வணங்கினாராம். அவரது முடியில் பிறைநிலா, பாம்பு, கங்கை ஆகியவை உள்ளன. அவர் கீழே விழுந்து வணங்கும் போது, உமையின் நெற்றிப்பகையாகிய பிறையும் அல்குல் பகையாகிய பாம்பும் உமையின் காலில் படுதலுக்குக்கூட உமை மகிழவில்லையாம்; சிவனது முடியில் உள்ள தன் மாற்றாளாகிய (சககளத்தியாகிய) கங்காதேவி காலில் படிவதற்காக உமை மகிழ்ந்தாளாம். இதைச் சிவப்பிரகாசரின் பிரபுலிங்கலீலை துதிகதியிலுள்ள-

"ஆதி பகவன் தனது ஊடல் தணிப்பபான் பணிய அவ்விறைவன்
பாதம் இறைஞ்சு மதற்கும் நெற்றிப் பகையும் அல்குல் பகையுமாம்
சீத மதியும் அரவும் விழும் செயற்கும் உவகை செயாமல் அலை
மாது பணியுமதற்கு மனம் மகிழும் உமையை வணங்குவாம்" (2)

என்பது கற்பனைக் களஞ்சியத்தின் பாடல்.

கடவுளை வணங்கா விடினும், ஊடலின்போது மனைவியை வணங்குவது உண்டு என்பதற்கு ஒரு சான்று: திருமாலை வணங்கும்படி இரணியனிடம் வற்புறுத்திய போது, நான் வணங்குதல் என்பது மனைவியோடு ஊடல் கொண்ட நாளிலும் இல்லை எனக் கூறி அண்டங்கள் நடுங்கும்படி ஏளனச் சிரிப்பு சிரித்தானாம்: இதைக் கம்பரின்,

**''வணங்குதல் மகளிர் ஊடல் நாளினும் இலதே**
**என்னா அண்டங்கள் நடுங்க நக்கான்''**

என்னும் பாடல் பகுதியால் அறியலாம். இந்தப் பெரிய கற்பனையைக் கம்பர் மரக்கொம்புகளின் அமைப்புக்கு ஒப்புமையாக்கி நயக்கச் செய்துள்ளார்.

## நீர் விளையாட்டுப் படலம்

**பொய்கையும் கொழுநரும் :**

மங்கையர் பொய்கையில் நீராடும்போதும் சரி—கணவருடன் உடலுறவு கொள்ளும் போதும் சரி—சிவந்த வாய் உதடு வெளுக்கும்; கண் சிவக்கும்; உடம்பில் உள்ள சந்தனப் பூச்சு அழியும்; உடை நெகிழும். எனவே, இந்த வகையில், பொய்கையில் நீராடிய பெண்கட்குப் பொய்கை கணவர் போன்ற தாயிற்றாம்:

**''செய்ய வாய் வெளுப்பக்கண் சிவப்புற,**
**மெய்யராகம் அழியத் துகில் நெக**
**தொய்யில் மா முலை மங்கையர் தோய்தலால்**
**பொய்கை காதல் கொழுநரும் போன்றதே''** (19)

காதலி காதலனுடன் களவொழுக்கம் கொண்டதால் மேற்கூறிய அறிகுறிகள் தோன்ற, தோழியோ -செவிலியோ அவளை நோக்கி இந்த நிலைமைக்குக் காரணம் என்ன என்று கேட்க, பொய்கை ஆடினேன் ஆதலால் இந்நிலை ஏற்பட்டது என்று அவள் கூறுவாள். புணர்ச்சிக்குப் பின்,

காதலன் மலர் சூட்டி அனுப்பியதால், தோழியோ செவிலியோ கேட்பர்: நீ ஆடிய பொய்கை, உதட்டை வெளுக்கவும் கண்ணைச் சிவக்கவும் செய்வதல்லாமல், தலையில் பூச்சூட்டியும் அனுப்புமோ என்று குத்தலாக—குறும்பாகக் கேட்பர். இஃது ஒருவகை இலக்கிய மரபு. திருக்கோவையாரில் உள்ள—

"கருங்கண் சிவப்பக் கனிவாய் விளர்ப்பக்
கண்ணா ரளி பின்
வருங்கண் மலைமலர் சூட்டவற்றோ மற்றவ்
வான் சுனையே" (70)

என்னும் பாடல் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. 'சுனை = பொய்கை.

கம்பர் பழைய இலக்கிய மரபுகளையெல்லாம் நினைவில் வைத்துத் தம் நூலில் பெய்திருப்பது பாராட்டத் தக்கது. கம்பரின் சில பாடல்களைக் காமக்கலைச் சுவை கொண்டு நோக்காமல், இலக்கியக்கலைச் சுவையுடன் நோக்கி இன்புறல் வேண்டும்.

இந்தப் பகுதியில் உவமை—உருவக அணிகள் இடம் பெற்றன. அடுத்து, மேலும் சில அணிமலர்களைக் கொய்யலாம்.

# 12-2. வேற்றுப் பொருள் வைப்பு அணி

ஒரு நிகழ்ச்சியை விவரித்து அதிலிருந்து பெறக்கூடிய—உலகறியும் ஒரு பொது உண்மையை வேறாக—தனியாகக் கூறுவது வேற்றுப் பொருள் வைப்பு அணியாகும்.

''முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை உலகறி பெற்றி
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்
பொருள் வைப்பே'' (47)

என்பது, அணிகள் பற்றிக் கூறும் தண்டியலங்காரம் நூற்பா. இனி இந்த அணி அமைந்துள்ள பாடல்கள் சில வருமாறு:-

### மிதிலைக் காட்சிப் படலம்

இராமனைத் தெருவில் கண்டு மயங்கிய சீதை அன்றிரவு உறக்கம் கொள்ளாமல் வருந்தினாள்; நறுமணச் சாந்து பூசப் பூச உலர்ந்து புழுங்கினாள்; காற்று வீச வீச மார்பகம் வெப்ப மடைந்தாள். உடல் நோய்க்கு மருந்து உண்டு; ஆனால் உள்ளத்தில் உள்ள வேட்கை நோய்க்கு மருந்து உண்டோ? (இல்லை).

''வாச மென் கலவைக் களி வாரி மேல்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினாள்

**வீச வீச வெதும்பினள் மென்முலை**
**ஆசை நோய்க்கு மருந்தும் உண்டாங்கொலோ''** **(80)**

முதலில் சீதை பற்றிய செய்தியைக் கூறி, அதிலிருந்து 'ஆசை நோய்க்கு மருந்து இல்லை' என்ற பொது உண்மை கூறப்பட்டுள்ளது. இந்தப் பாடலின் இறுதி அடி வேற்றுப் பொருள் வைப்பாகும்.

## சந்திர சயிலப் படலம்

**மேலவரும் சிறியவரும் :**

தயரதன் படைகளுடன் திருமணம் காண மிதிலைக்குச் செல்கிறான். பொன்னாலான தேர் உருளைகள், கரிய பாறைக் கற்கள் மேல் ஓடும்போது, அந்தக் கற்களின் மேல் உரைத்துக் கருமையைப் பொன்னிறமாக்கி ஓடினவாம். இதனால் அறிவது: பெரியோர் தாழ்ந்தவரைச் சேர்ந்தாலும் அவர்களையும் அறிவுரை கூறித் திருத்தி உயர்ந்தோராக்குவர் என்பது:

**''தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்**
**மருண்ட புன்மையை மாற்றுவர் எனும் இது வழக்கே**
**உருண்ட வாய்தொறும் பொன் உருள் உரைத்து உரைத்து ஓடி**
**இருண்ட கல்லையும் தன் நிறம் ஆக்கிய இரதம்''** **(8)**

இப்பாடலில் முன் இரண்டடி—அதாவது, மேலவர் சிறியவர்ச் சேரினும் மாற்றுவர் என்பது வேற்றுப் பொருள் வைப்பாகும்.

## பூக்கொய் படலம்

**குயில்களின் நாணம் :**

பெண்களின் ஆரவாரத்தைக் கேட்டு, வழியில் உள்ள சோலைக் குயில்கள் கூவவில்லை. அவர்களின் இனிய ஒலி போல் வாய் திறந்து ஒலி எழுப்ப முடியாமைக்கு நாணின.

மிகச் சிறந்த பேச்சாளராம் அறிஞர் முன்னே வாய் திறந்து பேசவல்லவர் யார்? (ஒருவரும் சிலர்)

''பாசிழைப் பரவை அல்குல் பண்தரு கிளவி தண்தேன்
மூசிய கூந்தல் மாதர் மொய்த்த பேர் அமலை கேட்டுக்
கூசின அல்ல பேச நாணின குயில்கள் எல்லாம்
வாசகம் வல்லார் முன்நின்று யாவர் வாய்
திறக்க வல்லார்'' (6)

இப்பாடலின் ஈற்றடி வேற்றுப் பொருள் வைப்பாகும். ஈண்டு:

''கல்லா தவரும் நனிநல்லர் கற்றார் முன்
சொல்லா திருக்கப் பெறின்'' (403)

என்னும் குறள் எண்ணத் தக்கது.

மங்கையர்க்கு மண்டியிடல்:

சோலையில் மலர் கொய்ய மடந்தையர் கைநீட்டிக் கிளைகளைத் தாழ்த்தவும் அக்கிளைகள் அவர்களின் காலடியில் பூச் சொரிந்து தாழ்ந்தன. எனவே, மங்கையரிடம் வணங்கிச் செயலாற்றாதவர் யார்?

'நஞ்சினும் கொடிய நாட்டம் அமுதினும் நயந்து
நோக்கிச்
செஞ்செவே கமலக் கையால் தீண்டலும் நீண்ட கொம்பும்
தஞ்சிலம்பு அடியில் மென்பூச் சொரிந்து உடன்
தாழ்ந்த என்றால்,
வஞ்சிபோல் மருங்குலார் மாட்டு யாவரே
வணங்கலாதார்? (7)

வஞ்சிபோல் மருங்குலார் = வஞ்சிக் கொடிபோல் மெல்லிய இடை உடைய மங்கையர். 'மருங்குலார் மாட்டு யாவரே வணங்கலாதார்' என்பது வேற்றுப் பொருள் வைப்பு.

**புதுமை பார்ப்பார் :**

பகலில் மலரும் தாமரையும் இரவில் மலரும் குவளையும் பெண்களிடத்தில் ஒரே நேரத்தில் பூத்துள்ள புதிய தோற்றத்தைக் கண்டு வண்டுகள் ஓட்டவும் ஓடவில்லை. புதுமை கண்டவர்கள் அந்தக் காட்சியை விட்டு விலகுவார்களா? (மாட்டார்கள்).

**''நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் குவளையோடு**
**மதிநுதல் வல்லிபூப்ப நோக்கிய மழலைத் தும்பி**
**அதிசயம் எய்திப் புக்கு வீழ்ந்தன; அலைக்கப் போகா**
**புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்.''**
**(9)**

இதில் இரண்டு வியப்புகள் (அதிசயங்கள்) உள்ளன: நீர் நிலையில் பூக்காமல் தாமரையும் குவளையும் பெண்களிடம் பூத்துள்ளன— பகலில் பூப்பதும் இரவில் பூப்பதும் ஒரே நேரத்தில் பூத்துள்ளன—என்பன அவை. 'புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமைப்பார்ப்பார்''—என்பது வேற்றுப் பொருள் வைப்பு.

**நல்லன நாடல்:**

மலர்களில் தேனுண்டு களிக்கும் இயல்புடைய வண்டுகள், மலர் சூடாத உயர்தரப் பெண்டிரின் கூந்தலில் மொய்க்கின்றன; மலர்களில் மொய்க்கவில்லை. நல்லோர் ஆடம்பர ஆரவாரம் நோக்காமல் நல்லனவற்றையே நாடுவது போலத் தான் இது.

**''துறும் போதினில் தேன்துவைத்து உண்டு உழல் தும்பி ஈட்டம்**
**நறுங் கோதையோடு நனை சின்னமும் நீத்த நல்லார்**
**வெறுங் கூந்தல் மொய்க்கின்றன; வேண்டல, வேண்டு போதும்**
**உறும் போகம் எல்லாம் நலன் உள்வழி உண்பர் அன்றே'' (12)**

மலரைத் துவைத்துக் கசக்கித் தேன் உண்ணும் வண்டுகள் மலர் சூடாத நங்கையரின் கூந்தலை விரும்பு கின்றனவாம். காரணம், அக்கூந்தலில் உள்ள இயற்கைக் கவர்ச்சியாகும் இதைத்தான், சிக்கலுக்கு உரிய குறுந்தொகைப் பாட்டு ஒன்று கூறுகிறது. அப்பாடல்:

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நாட்பின் மயிலியல்
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே'' (2)

என்பது பாடல், இந்தக் குறுந்தொகைப் பாடலை உள்ளத்தில் வைத்துக் கொண்டுதான், கம்பர் தமது பாடலைப் பாடினாரோ! கம்பர் பாடலில் உள்ள ஈற்றடி வேற்றுப் பொருள் வைப்பு எனலாம்.

**மாதரை வெல்வரோ:**

கணவன் பூக் கொய்யப் புன்னை மேல் ஏறினானாம். அவனது மனத்துக்கு மேல் மனைவி ஏறினாளாம். எனவே, மெய்யறிவினராலுங் கூட (ஞானிகளாலும்) பெண்களை வெல்ல இயலுமோ? (இயலாது)

''நாறு பூங்குழல் நன்னுதல், புன்னைமேல்
ஏறினான் மனத்து உம்பர் சென்று ஏறினாள்
ஊறு ஞானத்துக்கு உயர்ந்தவ ராயினும்
வீறு சேர்முலை மாதரை வெல்வரோ? (36)

ஊறு ஞானத்து உயர்ந்தவர் என்பது, ஞானத்தில் மிகவும் ஊறியவர்களாலும் இயலாது என்பதை அறிவிக்கின்றது. மேனகையிடம் மயங்கிய விசுவாமித்திரர் போன்றோர் பற்றிய கதைகள் ஈண்டு எண்ணத் தக்கன. (இப்பாடல் சில பதிப்புகளில் இல்லை). பின் இரண்டடி வேற்றுப் பொருள் வைப்பு.

## உண்டாட்டுப் படலம்

**அருமறைக்கு ஆகாதவர்:**

மிதிலை செல்பவர்கள் வழியில் உண்டாட்டு புரிகின்றனர். கூடாரத்தில் உடலுறவு கொள்பவர் உடையை முற்றிலும் களைந்து விட்டு உறவு கொள்கின்றனராம். அனைவரும் அறியும்படி பறை அடிப்பது போன்ற தன்மை உடையவர்கள் மறைவாகச் செய்யவேண்டியதை மறைவாகச் செய்வார்களா? (மாட்டார்கள்)

**''நறைகமழ் அலங்கல் மாலை நளிர்நறுங் குஞ்சி மைந்தர்**
**துறையறி கலவிச் செவ்வித் தோகையர் தூசு வீசி**
**நிறையகல் அல்குல் புல்கும் கலன் கழித்து அகல நீத்தார்**
**அறைபறை அனைய நீரார் அருமறைக்கு ஆவரோதான்''**
**(56)**

குஞ்சி = தலைமுடி. அக்காலத்தில் ஆடவரும் பெண்டிர் போல் தலையில் முடிவைத்திருந்தனர். துறை அறி கலவி என்பது, புணர்ச்சி விதியைக் குறிக்கிறது. தூசு = உடை. மறை = மறைவு.

பறை அடிப்பது அனைவருக்கும் செய்தி அறிவிப்பதற்காக அன்றோ? இதில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. இத்தகையோர் புணர்ச்சியின் போதும் ஒளிவு மறைவு இன்றி நடந்து கொள்வர். அதாவது- உலகில் மக்கள் புணர்ச்சியின் போது உடையை அறவேநீக்கி விடுவதில்லை. ஆனால், பறை அனைய அற்பர்கள் உடையை முற்றிலும் நீக்கி விடுகிறார்களாம்.

இந்தப் பாடலை மட்டமாக எண்ணிவிடக் கூடாது. பெண்களை அம்மணமாக (நிர்வாணமாக) நடனம் ஆடவிட்டுப் பொருள் ஈட்டுபவர்க்கும், அரை அம்மணத் தோடு படங்களிலும் காட்சிகளிலும் பெண்களின் உருவை அமைத்துக்காட்டிப் பொருள் ஈட்டுபவர்க்கும், கம்பர்

கொடுக்கும் சாட்டையடியாகும் இது. இப்பாடலின் இறுதி அடி வேற்றுப் பொருள் வைப்பு.

## உலாவியல் படலம்

இராமன் தெருவில் உலாப் போந்தான். கண்ட பெண் ஒருத்தி மிக்க காதல் கொண்டாள்; மனத்தை இராமன்பால் செலுத்தினாள்; இராமனைக் கண்டு வந்த மற்றொருத்தியை நோக்கி, 'நீ இராமன் பக்கத்தில் இருந்த என் மனத்தைப் பார்த்தாயா?' என்று கேட்டாளாம். ஆவல் மேலீட்டால் நாணத்திற்கு இடம் உண்டோ? (இல்லை)

**"பெருத்த காதலின் பேதுறு மாதரின்**
**ஒருத்தி மற்று அங்கு ஒருத்தியை நோக்கி என்**
**கருத்தும் அவ்வழிக் கண்டது உண்டோ என்றாள்**
**அருத்தி உற்றபின் நாணம் உண்டாகுமோ"** (37)

இராமன்மேல் ஆசை கொண்ட ஒருத்தி, இன்னொருத்தியிடம் தெரிவிக்கக் கூடாது என்ற நாணம் இல்லாமல் அவளிடம் வினவினாள். 'ஆசை வெட்கம் அறியாது' என்பது பழமொழி. அருத்தி=ஆசை. ஈற்றடி வேற்றுப் பொருள் வைப்பு.

## கோலம் காண் படலம்

**செய்யவர்ச் சேர்ந்துளார்:**

சீதைக்குத் தோழியர் அழகு செய்கின்றனர். சிவந்த சீதையின் செந்நிறம், தன் தாளைச் சேர்ந்த தாமரைக்கும் செந்நிறம் தந்ததாம்; மற்றும், மார்பகத்தில் அணிந்துள்ள வெண்ணிற முத்து மாலையையும் செந்நிறம் உடைய தாக்கியதாம். செய்யவரைச் சேர்ந்தவரும் செய்யவர் ஆவர் அன்றோ?

**"மொய் கொள் சீறடியைச் சேர்ந்த முளரிக்கும் செம்மை ஈந்த**
**தையலாள் அமிழ்த மேனி தயங்கு ஒளி தழுவிக் கொள்ள,**

**வெய்ய பூண் முலையில் சேர்ந்த வெண்முத்தம் சிவந்த என்றால்**

**செய்யவர்ச் சேர்ந்துளாரும் செய்யராய்த் திகழ்வர் அன்றே'' (9)**

முளரி=தாமரை. தையலாள்=சீதை. இறுதி அடிக்கு இரு பொருள்கள் உண்டு. ஒன்று:- செந்நிறம் உடையவரைக் சேர்ந்தவரும் செந்நிறம் உடையவரா யிருப்பர்— என்பது. செந்நிற மேனி உடையவர்கள் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளும் செந்நிறம் உடைத்தாயிருப்பதைக் காணலாம். செந்நிற இனத்தவர் குடும்பத்தார்கள் பெரும்பாலும் செந்நிறம் உடையவர்களா யிருப்பது கண்கூடு. இரண்டாவது பொருள்:—செய்யவ ராக— செம்மைப் பண்பு உடையவர்களாக உள்ள நல்லோரைச் சேர்ந்து பழகுவோரும் செம்மைப் பண்பு உடையவராகத் திகழ்வது— என்பது.

செந்நிறக் குடும்பத்துப் பிள்ளைகள் செந்நிறமா யிருப்பது மரபு நிலை (Heredity) ஆகும். செம்மைப் பண்பு உடையவரைச் சேர்ந்தவரும் செம்மையானவராயிருப்பது சூழ்நிலை (Environment) ஆகும். செய்யவர்=செந்நிறம் உடையவர்—செம்மைப் பண்பு உடையவர். பாடலின் ஈற்றடி வேற்றுப் பொருள் வைப்பு.

**மனம் என்பது ஒன்றே**

தேன் உண்ணும் வண்டின் இனிய ஒலி போன்ற இன்சொற்களைக் கிளிக்குப் பயிற்றும் சீதையின் அழகைப் பெண்கள் கண்டு காதல் போன்ற உணர்வு கொண்டு, தம் சொற்கள் குழறியும் தம்தகுதி தடுமாறியும் நின்றனர். மைந்தர்க்கும் (ஆடவர்க்கும்) மாதரர்க்கும் மனம் என்பது ஒரு தன்மைத்து அல்லவா!

**''கஞ்சத்துக் களிக்கும் இன்தேன் கவர்ந்துணும் வண்டு போல**

**அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லாம் அருளினாள் அழகை மாந்தி**

**தஞ்சொற்கள் குழறித் தத்தம் தகை தடுமாறி நின்றார்**
**மஞ்சர்க்கும் மாத ரார்க்கும் மனம் என்பது ஒன்றே**
**அன்றோ'' (19)**

கஞ்சம் = தாமரை. அருளினாள் = சீதை. மஞ்சர் = மைந்தர் = ஆடவர். ஆடவர் ஆடவரை விரும்புதல் போல் பெண்கள் பெண்களை விரும்புவதால், இரு சாரார்க்கும் மனம் என்பது ஒன்று எனப்பட்டது. ஆடவர் ஆடவரை விரும்பக் கூடும் என்ற செய்தி, விசுவாமித்திரர் இராமனை நோக்கி,

''ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்'' என (தாடகை வதைப் படலம்—23) விளித்ததிலிருந்து அறியலாம். பெண்கள் பெண்களை விரும்பக் கூடும் என்ற செய்தியை, சூர்ப்பணகை சீதையை நோக்கியதும் அத்தகைய கருத்தை வெளியிட்டதனாலும் அறியலாம். சீவக சிந்தாமணியில் கூறப்பட்டுள்ள 'பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறும் முலையினாள்' என்னும் பகுதியாலும் இது புலப்படும்.

மற்றும் திருமாலிடம் காதல் கொண்டவள் ஒருத்தி, மன்மதனும் பெண்மையை விரும்பும்படியான அழகனாகிய உன்மேல் காதல் கொள்ளும் பெண்டிரின் நிலைமை என்ன ஆகும் என்று கேட்டது போன்ற கருத்தமைந்த பாடல் திருவரங்கத் தந்தாதியில் உள்ளது. அது:-

**''வாராக வாமனனே அரங்க வட்ட நேமி வல—**
**வா ராகவா உன் வடிவுகண்டால் மன்மதனும் மட**
**வா ராக ஆதரம் செய்வன் என்றால் உய்யும்**
**வண்ணம் எங்கே**
**வா ராக வாச முலையேனைப் போல் உள்ள**
**மாதருக்கே'' (60)**

என்பது பாடல். இந்தப் பாடல்களை எல்லாம் உள்ளத்தில் கொண்டவர் போல் எண்ணும்படிக் கம்பர் தம் பாடலில்

இக்கருத்தைப் புகுத்தியுள்ளார். பாடலின் ஈற்றடி வேற்றுப் பொருள் வைப்பு. ஆடவர்க்கு ஆடவரும் பெண்டிர்க்குப் பெண்டிரும் காதல் கொள்வதான செய்திகள் இக்காலத்தில் காதில் அடிபடுகின்றன—செய்தித் தாள்களிலும் இடம் பெறுகின்றன. நாகரிகம் அற்ற செய்தி இது.

அழகெலாம் ஓரிடம்:

ஓர் உறுப்பின் அழகைக் கண்டாலே—ஓர் உயர்ந்த தகுதியைக் கண்டாலே மயக்கம் செய்யும் சீதையை மகளிர் தம் நடுவே திங்களைக் காண்பது போல் நோக்கி மயக்குற்று நின்றனர். காரணம், அவர்கள் சீதையின் எல்லா வகை அழகையும் ஒருங்கே கண்டதாகும். அங்ஙனம் கண்டால், மயங்காமல் யார்தான் வாளா இருக்க முடியும்?

**''இழைகுலாம் முலையினாளை இடை உவாமதியின் நோக்கி**
**மழைகுலாவு ஓதி நல்லார் களி மயக்குற்று நின்றார்**
**உழைகுலாம் நயனத்தார் மாட்டு ஒன்று ஒன்றே விரும்பற்கு ஒத்த**
**அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்!''** (20)

இழைகுலாம் முலையினாள் = சீதை. உவாமதி = முழு நிலா. ஓதி நல்லார் = பெண்கள். உழைகுலாம் நயனத்தார் = என்பது பொதுவாகப் பெண்களைக் குறிக்கிறது. பாடலின் ஈற்றடி வேற்றுப் பொருள் வைப்பு.

## கடிமணப் படலம்

**ஒரு நாள் தாங்காதா?**

தெருவில் இராமனைக் கண்ட சீதை அன்றிரவு உறக்கம் கொள்ளாமல் அவனையே எண்ணிப் பிதற்றுகின்றாள்: என் மனமே, அவருடனேயே போய்விட்டாய்;

மீண்டும் அவர் என்னிடம் வரும்போதுதான் நீயும் வருவாயா? நாளைக்கே திருமணம் கைகூடலாம். இன்னும் நீ ஒரு நாள் பொறுத்திருக்கக் கூடாதா? நாளை அவரை அடையலாமே! ஒரு நாள் தாங்காமல் உழல்பவர் உண்டோ?—என்கிறாள்:

"கருநாயிறு போல்பவர் காலொடு போய்
வருநாள் அயலே வருவாய்! மனனே
பெருநாள் உடனே பிரியாது உழல்வாய்
ஒருநாள் தரியாது ஒழிவார் உளரோ?" (4)

கருநாயிறு போல்வான் = இராமன். இப்பொருள் உவமை. ஞாயிறு என்பதுபோல் நாயிறு என்ற வழக்காறும் உண்டு. தமிழில் நான், நாம், நாங்கள், எங்களை, நம்மேல் என்று நகரம் போட்டு ஒலிக்கப்படுபவை, மலையாளத்தில் ஞான், ஞங்கள், ஞங்களே, ஞங்களில் என்று ஞகரம் போட்டு ஒலிக்கப்படுவது ஈண்டு எண்ணத் தக்கது. இப்பாடலின் ஈற்றடியை வேற்றுப் பொருள் வைப்பு எனலாம். ஈண்டு,

"அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீ எமக்கு ஆகா தது" (1291)

"உறாஅ தவர்க் கண்ட கண்ணும் அவரைச்
செறாஅ ரெனச் சேறி என் நெஞ்சு" (1292)

"கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்" (1293)

"துன்பத்திற்கு யாரோ துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி" (1299)

"தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி" (1300)

என்னும் திருக்குறள்கள் ஒப்பு நோக்கத் தக்கன.

**மின் கண்டவர் அறியார்:**

மாடத்தில் சீதையைக் கண்ட இராமன் அன்றிரவு உறக்கம் கொள்ளாமல் சீதையைப் போலவே பிதற்றுகிறான்: முன்னர் அவளைப் பார்த்ததும், என் கண்ணாகிய எழுது கோலால் அவளை என் இதயத் திரையில் ஓவியமாகத் தீட்டிவிட்டேன். ஆயினும் அந்தப் பெண் என்னும் கவர்ச்சியாகிய கடலின் கரையை இன்னும் காண்கிலேன். மின்னல் போல் மிளிர்கிறாள் அவள். மின்னலைக் கண்டவர்கள் என்ன செய்ய முடியும்:

''முன் கண்டு முடிப்பரு வேட்கையினால்
என் கண் துணைகொண்டு இதயத்து எழுதிப்
பின் கண்டும் ஓர் பெண் கரை கண்டிலேனால்
மின் கண்டவர் எங்கு அறிவார் வினையே'' (13)

தெருவில் இருந்தபடி முன்னால் ஒரு முறை கண்டான்; இதயத்திலே எழுதிப் பின்பும் கண்டான். ஆயினும் அவளது பேரெழிலை முற்றும் கண்டான் இல்லை. மின்னலைக் கண்டவர் கண்கள் மூடிக்கொண்டு ஒரு வினையும் செய்ய முடியாமல் தவிப்பர். அது போன்றது இராமன் நிலை. பாடலின் ஈற்றடியை வேற்றுப் பொருள் வைப்பு எனலாம்.

இதுகாறும் வேற்றுப் பொருள் வைப்பு அணிமலர்கள் சில கண்டோம்; அடுத்து, தற்குறிப்பு ஏற்ற அணிமலர் காண்பாம்.

# 12-3. தற்குறிப் பேற்ற அணி

ஒரு பொருளின் நிகழ்ச்சி இயல்பாக—இயற்கையாக நிகழ, புலவன் அதை விட்டு, இன்ன காரணத்தால் இது நிகழ்கிறது என்று தானாகத் தன் குறிப்பை—தன் கருத்தை ஏற்றிச் சொல்லுதல் தற்குறிப்பு ஏற்ற அணியாகும்:

''பெயர் பொருள் அல்பொருள் என இரு பொருளினும்
இயல்பின் விளைதிறன் அன்றி அயலொன்று
தான் குறித்து ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்'' (56)

என்பது தண்டியலங்கார நூற்பா. இதற்கு ஓர் எடுத்துக் காட்டு விளக்கம் காண்பாம்.

காலையில் ஞாயிறு தோன்றுகிறது—இருள் மறைகிறது-தாமரை மொக்குகள் விரிந்து மலர்கின்றன—இது இயற்கையாக நடப்பது. ஆனால் ஒரு புலவன் என்ன சொல்கிறான் :-

ஞாயிறு தோன்றி முற்றிலும் இருட்டை ஓட்டுகிறது. தாமரை மொக்குக்குள்ளே இருள் மறைந்திருக்குமோ என்று ஐயுற்றுத் தன் கதிராகிய—ஒளியாகிய கையால் தாமரை மொக்கின் இதழைத் திறந்து பார்க்கிறது—என்று புலவன் தானாக ஒரு கற்பனைக் காரணத்தைக் குறித்து ஏற்றுகிறான். இதுதான் தற்குறிப் பேற்ற அணியாகும். இனிக் கம்பரிடம் செல்வாம் :-

## நகரப் படலம்

**மதிலின் எழுச்சி:**

வெண்மையான திங்களுக்குச் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டினாற் போன்றிருக்கும் நகங்களையும், தாமரை போன்ற அடியையும், கொடி போன்ற இடுப்பையும், இளநீர் போன்ற மார்பகங்களையும்,மூங்கிலை வளைத்து அமைத்து வைத்தாற் போன்ற தோளையும், இன்சொல்லையும் உடைய மங்கையர் வாழும் அயோத்தி நகரம் போன்ற அழகு உடையதாகத் தேவர் உலகம் இருக்குமா என ஆய்வு செய்வதற்காக உயர்ந்ததுபோல் அயோத்தி நகர மதில்கள் வானளாவ உயர்ந்துள்ளனவாம்:

**''பஞ்சி வான் மதியை ஊட்டிய தனைய**
**படர் உகிர், பங்கயச் செங்கால்,**
**வஞ்சிபோல் மருங்குல், குரும்பைபோல் கொங்கை,**
**வாங்கு வேய் வைத்த மென் பணைத்தோள்,**
**அஞ்சொலார் பயிலும் அயோத்திமா நகரின்**
**அழகுடைத்தோ என அறிவான்**
**இஞ்சி வான் ஓங்கி இமையவர் உலகம்**
**காணிய எழுந்தது ஒத்துளதே''** (9)

உகிர் = நகம். மருங்குல் = இடை. வஞ்சி = கொடி. குரும்பை = இளநீர். தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில், தென்னைமரத்தில் பம்பரம் அளவு உள்ள சின்னஞ்சிறு பிஞ்சுக் காயையே குரும்பை என்பர். மற்ற பகுதிகளுள் சிலவற்றிலும் மலையாளத்திலும் இலங்கை யிலும் இளநீர் குரும்பை என்று வழங்கப்படுகிறது. இஞ்சி = மதில். இமையவர் = தேவர்.

மதில் இயற்கையாக வானளாவ உயர்ந்திருக்கவும், தேவர் உலகம் அயோத்திக்கு ஒப்பாகுமா என ஆய்வு செய்வதற்கு உயர்ந்ததாகக் கம்பர் தற்குறிப் பேற்றம் செய்துள்ளார். எனவே, இந்தப் பாடல் தற்குறிப் பேற்ற அணி அமைந்த தாகும்.

## அகலிகைப் படலம்

**வெம்மை ஆற்றுதல்:**

விசுவாமித்திரன், இராம—இலக்குமணர் ஆகிய மூவரும் காட்டில் சோணையாற்றங்கரையை அடைந்தனர். அப்போது ஞாயிறு மேற்குக் கடலில் மூழ்கி மறைந்தான். பகல் முழுதும் வெப்பம் வீசினோம்—நாளை காலையிலாவது மூவர்க்கும் குளிர்ச்சி தரவேண்டும் என்று எண்ணி, ஞாயிறு தன் வெப்பத்தைத் தண்ணீரில் மூழ்கி ஆற்றிக் கொள்வதற்காகக் கடலில் மூழ்கியது போல் இருந்தது.

**''நதிக்கு வந்து அவர் எய்தலும், அருணன் தன் நயனக்**
**கதிக்கு முந்துறு கலினமான் தேரொடும், கதிரோன்**
**உதிக்கும் காலையில் தண்மை செய்வான், தனது உருவில்**
**கொதிக்கும் வெம்மையை ஆற்றுவான்போல் கடல் குளித்தான்''** (2)

அருணன் = ஞாயிற்றின் தேர்ப்பாகன். கலினமான் = கடிவாளம் பூட்டிய குதிரை. அருணனின் கண் பார்வை செல்லும் தொலைவுக்கு அப்பாலும் மிகவும் விரைவாகச் செல்கின்றனவாம் குதிரைகள். ஏழு குதிரைகள் பூட்டி ஒற்றை ஆழித் தேரை அருணன் செலுத்த ஞாயிறு உலா வருவதாகக் கூறுவர். கடல் = மேற்குக் கடல் (அரபிக்கடல்).

ஞாயிறு இயற்கையாக மேற்குக் கடல் பக்கம் சாய்ந்து மறைவது போல் தோன்ற, மூவருக்கும் மறுநாள் காலை குளிர்ச்சி தருவதற்காகத் தன் வெப்பத்தை ஆற்றிக் கொள்ளக் கடலில் ஞாயிறு படிந்ததாகக் கூறுதல் தற்குறிப் பேற்றம்.

## மிதிலைக் காட்சிப் படலம்

மிதிலை நகரில் கொடிகள் அசைந்தாடுவதைக் கம்பர் அழகு செய்து கூறுகிறார். தாமரை மலரில் இருந்த

திருமகள் நாம் செய்த தவத்தால் நம்மிடம் வந்து சீதை யாகத் தோன்றினாள். அவளை மணக்க வரும் இராமனைக் கை நீட்டி வா வா என அழைக்க வேண்டும் என அயோத்தி அழைப்பது போல் கொடிகள் அசைந்தனவாம்.

**''மையறு மலரின் நீங்கி யான்செய் மாதவத்தின் வந்து**
**செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்னும்**
**கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்**
**ஐயனை ஒல்லை வா என்று அழைப்பது போன்ற தம்மா!'' (1)**

செய்யவள் = திருமகள். ஐயன் = இராமன். இயற்கை யாகக் கொடிகள் அசைய, இராமனை வரவேற்கக் கையால் அழைப்பது போல் இருந்தது என்பது தற்குறிப் பேற்றம்.

**காமத் தீ:**

தெருவில் இராமனைக் கண்ட சீதை அன்றிரவு காமத் தீயால் வருந்தினாள். அந்தத் தீ வெப்பம் தன்னையும் சுடுவதாகவும் அதைத் தாங்க முடியாததாகவும் கற்பனை செய்து, தன் கைகளை அசைத்துக் கொண்டு தன்னைக் குளிர்ச்சி செய்து கொள்வதற்காக மேலைக் கடலில் மூழ்கி மறைந்தான் கதிரவன்.

**''அன்ன மென் நடையவட்கு அமைந்த காமத் தீ**
**தன்னையும் சுடுவது தரிக்கிலான் என,**
**நன்னெடுங் கரங்களை நடுக்கி ஓடிப் போய்**
**முன்னை வெங்கதிரவன் கடலில் மூழ்கினான்'' (61)**

நடையவள் = சீதை. கரங்கள் = கதிரொளி. 'ஓடிப் போய்' என்பது, சூடு தாங்காமல் ஓடுவது போன்ற குறிப்பாகும். இயற்கையாகக் கடலில் மறையும் ஞாயிறு சூடு தாங்காமல் மறைவதாகக் கூறியிருப்பது தற்குறிப் பேற்றம்.

## எழுச்சிப் படலம்

**சகரரோடு பகை:**

*இராமனது திருமணம் காண மக்களுடனும் படைகளுடனும் தயரதன் மிதிலை நோக்கிச் செல்கிறான். படைகள் போவதால் எழும் தூசு திசையெங்கும் பரவி விண்ணையும் மறைத்து— ஒருவர்க்கு ஒருவர் முகம் பார்த்துக் கொள்ள முடியாதபடி அனைவரின் கண்களையும் மறைத்து, அதோடு விடாமல் மேலும் பரவி, சகரரோடு பகை கொண்டதென்னும்படிக் கடலையும் தூர்த்ததாம்.*

**"ஆர்த்தது விசும்பை முட்டி மீண்டு அகன் திசைகள் எங்கும்**
**போர்த்தது; அங்கு ஒருவர் தம்மை ஒருவர் கட்புலம் கொளாமைத்**
**தீர்த்தது; செறிந்த தோடித் திரைநெடுங்கடலை எல்லாம்**
**தூர்த்தது, சகரரோடு பகைத்தெனத் தூளி வெள்ளம்"** (76)

*தூளி வெள்ளம்=தூசின் மிகுதி. ஒரு காலத்தில் சகரர் என்னும் அரச வகுப்பினர் கடலைத் தோண்டி உண்டாக்கினர்; அவ்வாறு சகரரால் தோண்டப்பட்டதால் கடல் சாகரம் என்னும் பெயர் பெற்றது—என்பது புராணக் கதை. தரையை ஆழமாகத் தோண்டிய சகரரைப் பகைத்துக் கொண்டு கடலைத் தூர்க்க வேண்டும் என எண்ணியது போல் மிக்க தூசு கடலையும் தூர்த்ததாம். இயற்கையாக இவ்வாறு நிகழ்ந்ததற்குக் காரணம் கற்பித்தது. தற்குறிப் பேற்றம்.*

## நீர் விளையாட்டுப் படலம்

**நளினம் ஏறிய அன்னம்:**

*அன்னத்தின் நடையைத் தோற்கடித்துப் பெண்கள் அழகாக நடந்தன்ராம். அந்தத் தோல்வியைப் பொறுக்க-*

முடியாத அன்னம் பழி தீர்க்க எண்ணியதாம். பெண்களை ஒன்றும் செய்ய முடியாமையால், அவர்களின் காலடிகள் போன்றிருக்கிற தாமரை மலர்களின் மேல் ஏறி நடந்து சிதைத்தனவாம்:

''சுளியும் மென்னடை தோற்க நடந்தவர்
ஒளிகொள் சீறடி ஒத்தன ஆமென
விளிவு தோன்ற மிதிப்பன போன்றன
நளினம் ஏறிய நாகு இள அன்னமே'' (26)

நளினம் = தாமரை. பகைவர் தம்மினும் வலியவராயின், அவர்களைச் சேர்ந்தவர்க்காவது துன்பம் விளைவிப்பது சிலரது இயல்பு. அரசில் புரட்சி செய்பவர்கள், அரசுத் தலைவரோடு அவரைச் சேர்ந்தவர்களையும் சிறை வைப்பது ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. தாமரை மலர் மேல் இயற்கையாக அன்னம் நடக்க, அதற்கு ஒரு காரணம் கற்பித்திருப்பது தற்குறிப் பேற்றம்.

**ஞாயிற்றின் காதல்:**

பெண்டிரும் ஆடவரும் நீர் விளையாடியதை நோக்கிய ஞாயிறு, தானும் நீராட விரும்பியவன் போல் மேலைக் கடலில் மூழ்கினான்.

''மானின் நோக்கியர் மைந்தரொடு ஆடிய
ஆனநீர்விளை யாடலை நோக்கினான்
தானும் அன்னது காதலித்தான் என
மீன வேலையை வெய்யவன் எய்தினான்'' (32)

மானின் நோக்கியர் = பெண்கள். மைந்தர் = ஆண்கள். இயற்கையாகக் கடலில் மூழ்கிய ஞாயிற்றின் செயலுக்கு ஒரு காரணம் குறித்து ஏற்றியதால் இது தற்குறிப்பேற்றம்.

உயிர்கள் சார்ந்ததன் வண்ணம் என்பர்.மனத்தின்பொதுப் போக்குகள் (General Tendencies)* நான்கனுள் பின்பற்றல் (Imitation) என்பதும் ஒன்று. பின்பற்றல் இருப்பதனால் தான் குழந்தைகள் பெரியோரைப் பார்த்து வளர்ந்து செயலாற்ற முடிகிறது. இந்த அடிப்படையுடன் நோக்குங்கால், ஒருவர் செய்வதைப் பார்த்து அதேபோல் மற்றொருவர்செயலாற்றுவதற்குப் பல எடுத்துக்காட்டுகள் தரமுடியும். இந்தப் பின்பற்றலை ஞாயிற்றின்மேல் ஏற்றி யிருப்பது காப்பியக் கற்பனை.

## கடிமணப் படலம்

**ஞாயிறின் வருகை :**

இராமனும் சீதையும் நாளை மணப்பர் என்பதைப் பறையறைந்து அறிவித்ததும், ஞாயிறும் தனது சுடராகிய கையால் இருளை ஓட்டி, தன் குல மரபினனான இராமனின் திருமணம் காண ஓராழித் தேர்மேல் வந்தவன்போல் காலையில் தோன்றினான்.

''அஞ்சன ஒளியானும் அலர்மிசை உறைவாளும்
எஞ்சலில் மணம் நாளைப் புணர்குவர் எனலோடும்,
செஞ்சுடர் இருள்கீறித் தினகரன் ஒருதேர்மேல்
மஞ்சனை அணிகோலம் காணிய என வந்தான்'' (21)

அஞ்சன ஒளியான் = மை வண்ண (கரிய) இராமன். அலர்மிசை உறைவாள் = தாமரையில் உறைபவளாகிய திருமகளின் பிறவியாகிய சீதை. தினகரன் = நாள்களை உண்டாக்குகிற ஞாயிறு. மஞ்சன் = மைந்தன் = ஞாயிறு

அடிக்குறிப்பு :—1. ஒத்துணர்வு (Sympathy) 2. குறிப்பறிதல் (Suggestion), 3. பின்பற்றல் (Imitation) 4. விளையாட்டு (Play).

குலத்து இராமன். காலையில் இயற்கையாக ஞாயிறு தோன்ற, மணம்காண வந்ததாகக் கூறியிருப்பது தற்குறிப் பேற்றம்.

**தூதுவர் :**

இராமன் மணக்கோலம் கொள்கிறான். இரு செவிகளி லும் குண்டலங்கள் அணிகிறான். இவை பகலில் சீதை படும் காதல் வேதனையை ஞாயிறும், இரவில் சீதை படும் துயரைத் திங்களும் இராமனின் காதுகளில் மறைவாக (இரகசியமாக) அறிவிக்கத் தூது வந்தனபோல, இராமனின் காதுகளில் அணிவிக்கப்பட்டன.

> ''ஏதுமில் இருகுழை இரவு நன்பகல்
> காதல் கண்டு உணர்ந்தன கதிரும் திங்களும்
> சீதைதன் கருத்தினைச் செவியின் உள்ளுறத்
> தூது வந்து உரைப்பன போன்று தோன்றவே'' (52)

வட்டமான இரு குண்டலங்களும் ஞாயிறும் திங்களும் போல் உள்ளன. இரண்டில் ஒன்று ஞாயிறு போன்றது; மற்றொன்று திங்கள் போன்றது. இராமன், ஞாயிறு குலத்தவனாதலின் தூது சொல்ல ஞாயிறு அக்கறை கொண்டது. சீதை திங்கள் குலத்தவளாதலின் அவளது நிலையைத் தூதாக இராமனுக்குச் சொல்லத் திங்கள் அக்கறை எடுத்துக்கொண்டது என்பது கருத்து. உண்மை யில் ஞாயிறும் திங்களும் தூது வரவில்லை: அவை தூது வந்தாற்போல் சொல்லியிருப்பது தற்குறிப்பேற்றம்.

இவ்வாறு பாலகாண்டத்தில் தற்குறிப்பேற்ற அணி இடம்பெற்றுக் கற்பதற்குக் களிப்பு தருகிறது.

# 13. ஒரு கண்ணோட்டம்

**தொடர்புடைய தொகுப்பு:**

பாலகாண்டப் பைம்பொழில் என்னும் இந்த நூலில் உள்ள கட்டுரைகள் தனித்தனி உதிரிகள் அல்ல. எனவே, இந்நூல், தனித் தனி உதிரிக் கட்டுரைகளின் தொகுப்பு அன்று. பல மரஞ்செடி கொடிகளை உடைய ஒரு தோப்பு போல், பாலகாண்டம் என்னும் ஒரே காண்டம் பற்றிய தொடர்புடைய கட்டுரைகளின் தொகுப்பு,இந்நூல்

பாலகாண்டத்தில் உள்ள செய்திகளைப் பன்னிரண்டு தலைப்புகளாகப் பிரித்து, ஒவ்வொரு தலைப்போடும் தொடர்புடைய பாடல்களை அனைத்துப் படலங்களினின்றும் தேர்ந்தெடுத்து இந்நூலில் விளக்கம் அளிக்கப் பட்டுள்ளது.

படலம் வாரியாகத் தொடர்ந்து கருத்துகளைச் சொல்லிக்கொண்டு போனால், கதைத்தொடர்பு அறாமல் இருக்கும். இஃது ஒருமுறை. இந்த முறையினால், பல்வேறு தலைப்புகள் பற்றிய செய்தியை ஒரு சேரத் தொகுத்துத் தெரிந்துகொள்ள முடியாது. யான் இந்நூலில் கையாண்டுள்ள முறை, ஒவ்வொரு தலைப்பைப் பற்றிய செய்தியெல்லாம் ஒருசேர அறிந்துகொண்டு அது—அது தொடர்பாக ஆய்வு செய்ய ஆராய்ச்சியாளர்க்குத் துணை புரியலாம். படலம் வாரியாகக் கதைத் தொடர்பு அறாமல் சிலரால் எழுதப்பட்டுள்ள வேறு சில நூல்கள் உள்ளன;

அந்த வகையில் விருப்பம் உடையோர் அந்நூல்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**ஆசிரிய இராமாயணம்:**

''தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும் முந்திய
நாவினான் உரையின் படி நான்தமிழ்ப்
பாவினால் இது உணர்த்திய பண்பரோ'' (10)

எனக் கம்பர் பாயிரப் பகுதியில் நூல்வழி கூறியுள்ளார். தேவபாடை = சம்சுகிருதம். சம்சுகிருத நூலை முதல் நூலாகக் கொண்டு அதன் வழித் தாம் தமிழில் தம் நூலை இயற்றியதாகக் கம்பர் அறிவித்துள்ளார்.

இந்திய மொழிகள் பலவற்றில் இராமாயணக் கதை எழுதப்பட்டுள்ளது. கதையில் பெரிய மாற்றங்கள் உள்ள படைப்புகளெல்லாம் உள்ளன. பௌத்த ராமாயணம், சைன ராமாயணம் என்பனவும் உண்டு, பௌத்த ராமாயணத்தில், சீதை இராமனின் தங்கை எனவும், இராமன் தங்கை சீதையை மணந்து கொண்டான் எனவும் உள்ள செய்திகள் நமக்கு வியப்பளிக்கிறது. பண்டு, வடக்கே, அண்ணன் தன் தங்கையை மணக்கும் மரபு பௌத்தர்களிடத்தில் உண்டெனத் தெரிகிறது. சீதை இராவணனது தங்கை என்று சொல்லும் செய்தியும் அடிபடுகிறது.

தமிழில் கி. பி. 18 ஆம் நூற்றாண்டினரான அருணாசலக் கவிராயர் என்பவர் 'இராம நாடகக் கீர்த்தனை' என்னும் பெயரில் இராம காதை பாடியுள்ளார்.

இதற்கு—முன்னும் கம்பர் காலத்திற்கு முன்னும் தமிழில் ஆசிரியப் பாவால் இயற்றப்பட்ட இராமாயணம் ஒன்று இருந்தமை புலனாகிறது. இந்தச் செய்தி, இந்நூலில், 'கருத்து வெளியீட்டில் புதுமை' என்னும் தலைப்பிலும் கூறப்பட்டுள்ளது. தமிழில் ஆசிரியப் பாவால்

இப்படி ஓர் இராமாயணம் இயற்றப்பட்டிருந்தது என்பதற்கு மற்றொரு சான்றும் தர இயலும். தொல்காப்பியம்—பொருளதிகாரம்—புறத்திணையியலின் 21 ஆம் நூற்பாவின் உரையில் 'அரசு கட்டில் நீத்த பால்' என்னும் பகுதிக்கு எடுத்துக் காட்டாக நச்சினார்க் கினியர் பின்வரும் பாடலைத் தந்துள்ளார்.

**"கடலும் மலையும் தேர்படக் கிடந்த**
**மண்ணக வளாக நுண்வெயிற் றுகளினும்**
**நொய்தா லம்ம தானே இஃதெவன்**
**குறித்தனன் நெடியான் கொல்லோ மொய்தவ**
**வாங்குசிலை இராமன் தம்பி ஆங்கவன்**
**அடிபொறை யாற்றி னல்லது**
**முடிபொறை ஆற்றலன் படிபொறை குறித்தே"**

என்பது பாடல். இது நேரிசை ஆசிரியப்பா. இராமனின் தம்பியாகிய பரதன், இராமனின் அடிகளைச் (பாதுகைகளைச்) சுமந்தானே தவிர, அரச முடியைச் சுமக்கவில்லை—என்னும் செய்தி இப்பாடலில் அறிவிக்கப் பட்டுள்ளது. இந்தப் பாடலும் ஆசிரியப் பாவாய் இருப்பதால், தமிழ் மொழியில் ஆசிரியப் பாவால் ஆன இராமாயணம் ஒன்று இருந்திருக்கிறது என்பது புலனாகும். இந்த இராமாயணத்தில், கம்பர் கூறியுள்ளதினும் சில வேறுபாடுகள் உண்டு என்பதை முன்னர் 'கருத்து வெளியீட்டில் புதுமை' என்னும் தலைப்பில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதைக் கொண்டு துணியலாம்.

### தமிழ் மரபு

காதல் தொடர்பான அகப் பொருள் இலக்கணம் தமிழ் மொழிக்கே உரிய சிறப்புக் கூறாகும்—என்று சொல்லப் படும். அந்த மரபைக் கம்பர் பால காண்டத்தில் மிகவும் பின்பற்றியுள்ளார். சங்க இலக்கியங்களில் காதல் செய்தி பெயர் சுட்டாமல் சொல்லப்பட்டிருக்கும்; அங்ஙனம் இருப்பதுதான் அகப் பொருளாகும்; பெயர் சுட்டின் அது

புறப்பொருளாகக் கருதப்படும். இருப்பினும்—அதாவது—கம்பர் படைப்பில் இராமன்—சீதை என்று பெயர் சுட்டப்பட்டிருப்பினும், இருவர் தொடர்பாகக் காதல் செய்தி கம்பரால் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வேண்டுமானால் நாம் இதை அகப்புறமாகக் கொள்ளலாம் என எண்ணுகிறேன். இருவரையும் தெய்வப் பிறவிகள் எனக் கம்பர் கூறியிருப்பினும், மிதிலையில் ஒருவரை ஒருவர் முதல் முதலாகக் கண்டதும் கொண்ட காதல் மயக்கத்தை, மக்கள் பிறவியினர் கொண்டது போல அளவு மீறிப் புனைந்துரைத்து விட்டார்.

இவர்கள் இருவரும் காதல் வேதனைப்படுவது ஒரு புறம் இருக்க,—உலா நூல்களில் தலைவன் ஒருவன் உலா வருவதைக் காணும் பெண்கள் காதல்—காம வயப்படுதல் போல், இராமனை மிதிலைத் தெருவில் கண்ட பெண்டிரும் காதல்—காம வயப்பட்டு வருந்தியதாகக் கம்பர் கூறியுள்ளார். இஃதும் ஒரு புறம் கிடக்க,—திருமணம் காண அயோத்தியிலிருந்து மிதிலைக்குப் புறப்பட்டுச் செல்லும் பொது மக்களுள் ஆடவரும் பெண்டிரும் வழியில் காதல் திருவிளையாடல்கள் பல புரிந்தமை பற்றிக் கம்பர் வெளுத்துக் கட்டிவிட்டார். ஏன் இவ்வாறு கூறுகிறேன் எனில், அவற்றுள் சில செய்திகளை எழுத எனக்கே கூச்சமாக இருந்ததால், அவற்றை எழுதாமல் விட்டு விட்டேன்—அதனால் என்க.

**காப்பியச் சுவை:**

கம்பர் ஏன் அந்த அளவுக்குக் காதல்—காமம் பற்றிக் கூறினார் எனின், காப்பியத்தில் மற்ற சுவைகள் போல் காதல்—காமச் சுவையும் ஓரளவு இருக்க வேண்டும் என்னும் மரபு பற்றியாகும். இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. இதற்கு இளங்கோவடிகளின் துணையையும் நாடுவோம்.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் — மனையறம் படுத்த காதையில், கண்ணகியை நோக்கிக் கோவலன்,

''மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை...'' (73-80)

என்று நலம் பாராட்டுவதாகப் பாடியுள்ளார். இது இயற்கைக்கு உகந்ததா? இல்லையே. இந்தக் காலத்தில், முதல் இரவு அறையில், மணமகன் மணமகளை நோக்கி இவ்வாறு புனைந்துரைக்கத் தொடங்கினால், மணமகள் என்ன நினைப்பாள்? பைத்தியம் என்னென்னவோ உளறுகிறதே – இதைச் சென்னை-10-கீழ்ப்பாக்கம் போகும் வண்டியில் அல்லவா ஏற்றிக் கொண்டுபோய் விட வேண்டும்—என்றெல்லாம் நினைக்கக் கூடும் அல்லவா? ஆனால் இளங்கோவடிகள் ஏன் இப்படிப் பாடினார் என்றால், அடுத்த அரங்கேற்று காதையிலேயே கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவிபால் சென்று விடுகிறான். அதனால், காப்பிய முன்னோட்டச் சுவைக்காக இளங்கோ இவ்வாறு பாடினார்.

இளங்கோவைப் போலவே, கம்பரும் காப்பியச் சுவைக்காக இவ்வாறு பாடினார் எனலாம். எவ்வாறெனில், பால காண்டம் கடந்ததும், இறுதி யுத்த காண்டம் வரையும், பிரிவு-இறப்பு-போர்-கொலை-ஐயம்-துன்பம்-துயரம் முதலிய தீய சூழ்நிலைகளே பெரும்பாலும் இடம் பெற்றுள்ளன. அதனால் கம்பர் அவாத் தீரப் பால காண்டத்தில் காதல்—காமச் சுவையை மழையெனப் பொழிந்து தள்ளி விட்டார்.

**முன்னோர் மொழி:**

நன்னூல்-பொதுப்பாயிரத்தில் உள்ள

"முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும்—முன்னோரின்
வேறு நூல் செய்துமெனு மேற்கோளில் என்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்" (9)

என்னும் நூற்பாவிற்கு ஏற்பக் கம்பர் தமக்கு முன்னிருந்த புலவர்கள் மொழிந்துள்ள பல கருத்துகளையும் தம் நூலில் எடுத்தாண்டுள்ளார். சங்க இலக்கிய மேற் கணக்கு நூல் களின் கருத்துகள் சிலவும், கீழ்க் கணக்கு நூல்களில் திருக்குறள் கருத்துகள் பலவும் கம்பரின் படைப்புக்கு மணமூட்டுகின்றன. ஐம்பதுக்கும் மேற்பட்ட திருக்குறள் கருத்துகள் பால காண்டத்தில் மட்டும் உள்ளன எனில், பால காண்டம் சிறப்புறக் கேட்கவா வேண்டும்!

கம்பர் தம் முன்னோரிடமிருந்து பெற்றது போலவே கம்பரிடமிருந்தும் அவருக்குப் பின்னோர் சில—பல கருத்துகளைப் பெற்றுத் தம் படைப்புக்கு வளம் ஊட்டி யுள்ளனர்.

**கம்பரின் பெருமை :**

"கம்பன் பிறந்த தமிழ் நாடு" (பாரதியார்)
"கல்வியில் பெரியவன் கம்பன்"
"கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்,"
"கம்பநாடன் கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே,"
"கம்ப சூத்திரம்—கவிச் சக்கரவர்த்தி"

என்பன கம்பரின் வானளாவிய பெருமையைப் பறை சாற்றிக் கொண்டுள்ளன. கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!

# 14. இந்நூலுக்குக் கருத்து வழங்கிய கருவூல நூல்கள்

குறிப்பு:- கீழே முதலில் இந்நூலின் பக்க எண்ணும், அடுத்து மேற்கோள் நூலின் பெயரும் உட்பிரிவும், மூன்றாவதாக மேற்கோள் நூலின் ஆசிரியர் பெயரும் அமைந்துள்ளன.

## 2. பாயிரம்

நூலின்
பக்கம்

11 திருக்குறள் —1 திருவள்ளுவர்
11 திருமுருகாற்றுப் படை — 1 —நக்கீரர்
11 பெரிய புராணம் - கடவுள் வணக்கம் —1 — சேக்கிழார்
15 திவாகரம்—ஒலி பற்றிய பெயர்த்தொகுதி-திவாகரர்
17 நன்னூல்—பொதுப் பாயிரம்—24 பவணந்தி முனிவர்
19 திரு மந்திரம்—95, 99 திருமூலர்
20,21 பெரிய புராணம்—5, 6, 7, 8, 10 சேக்கிழார்
21 திருவாசகம்—பாயிரப் பகுதி (சிவபுராணம்)— மாணிக்க வாசகர்
23 பெருந்தொகை—1135— தொகுப்பாசிரியர் மு. இராகவையங்கார்
23,24 தனிப்பாடல்கள்

## 3. உலகியல் நடை முறைகள்

நூலின்
பக்கம்

28 திருப்புகழ்—திருவதிகை பற்றியது—
அருணகிரி நாதர்
37 கவுதமப் புத்தர் காப்பியம், —9-5—
சுந்தர சண்முகனார்.

## 4. கருத்து வெளியீட்டில் புதுமை

39 மலரும் மாலையும்—பசு—கவிமணி
தேசிக விநாயகம் பிள்ளை
41 பரிபாடல்—3—6 கடுவன் இளவெயினனார்
42,43 பிரபுலிங்க லீலை—மாயையின் உற்பத்திகதி—16—
சிவப்பிரகாசர்
47 திருக்குறள் —1094.
51,52 பிரபுலிங்க லீலை—பிரபு தேவர் வந்த கதி—
57, 58, 59
52,53 திருக்குற்றாலக் குறவஞ்சி—திரிகூடராசப்பக்
கவிராயர்
63 தொல்காப்பியம்—பொருளதிகாரம்
—அகத்திணையியல்—54 தொல்காப்பியர்
64 புறத்திரட்டு—தொகுப்பாசிரியர் பெயர்
தெரியவில்லை
பதிப்பாசிரியர்—எஸ். வையாபுரிப்பிள்ளை
69,70 சீவக சிந்தாமணி—1485—திருத்தக்க தேவர்
70 திருக்குறள்
72 திருக்குறள்— 1248, 1291, 1293

## 5. சொல் மலர்—மாலைகள்

75 நன்னூல்—எழுத்து—பதவியல்—9
பவணந்தி முனிவர்

நூலின்
பக்கம்

77 புறநானூறு—24 : 22—மாங்குடி கிழார்
77 ” 327—2—ஆசிரியர் பெயர் தெரியவில்லை
78 கல்லாடம்—கல்லாடர்
„ நற்றிணை—138:1—அம்மூவனார்
„ பெருங்கதை—2-2-72—கொங்கு வேளிர்
„ சிலப்பதிகாரம்—25-37—இளங்கோவடிகள்
„ ” 26-168— ”
„ பெருங்கதை—2-14-68, 69—கொங்கு வேளிர்
„ சிலம்பு - 6-127—இளங்கோவடிகள்
„ மணிமேகலை—16-122, 123
சீத்தலைச் சாத்தனார்
80 பிரபுலிங்கலீலை—மாயை பூசைகதி—50—
சிவப்பிரகாச அடிகள்
81,82 திருவாசகம்—சிவபுராணம் 26-31
மாணிக்கவாசகர்
81,82 திருக்குறள்—29, 872
84 தொல்காப்பியம்—எழுத்து—புள்ளி
மயங்கியல்—61—தொல்காப்பியர்
85 ஞானசம்பந்தர் தேவாரம்-
திருவாலவாய்ப் பதிகம் 5-1
85 திருக்குறள்—1098—திருவள்ளுவர்

## 6. சிறப்புறு செய்திக் கனிகள்

88 பட்டினப்பாலை - 6 - கடியலூர்
உருத்திரங்கண்ணனார்
90 திருக்குறள் - 66
90 மணிமேகலை - 4 - 55, 56 - சாத்தனார்
90 மேரு மந்திர புராணம் - வச்சிராயுதம் - 31 -
வாமன முனிவர்

நூலின்
பக்கம்

90 சிலம்பு - 2 - 79 - இளங்கோவடிகள்
91 பாரதிதாசன் பாடல்
92,93 திருக்குறள் - 573, 412, 413
93,94 திருக்குறள் - 84, 81
96 திருமுருகாற்றுப்படை — 67, 68, 69 — நக்கீரர் பரிமேலழகர் உரை
96 தணிகைப்புராணம் - சீ பரிபூரணம் - 58 - கச்சியப்ப முனிவர்
96 திருநாகைக் காரோணப் புராணம்— நகரப் படலம் 90— மீனாட்சி சுந்தரம் பிள்ளை
97 சீவக சிந்தாமணி—2585—திருத்தக்க தேவர்
97 பெரிய திருமொழி—3 -8 - 8 - திருமங்கை யாழ்வார்
98 குறுந்தொகை — 193:3 - 6—அரிசில் கிழார்
98 சிதம்பரச் செய்யுட் கோவை - 57
99 திருக்குறள் - 935 - 937
,, திரி கடுகம் - 42 - நல்லாதனார்
,, ஆசாரக் கோவை - 98 - பெருவாயின் முள்ளியார்
,, சீவக சிந்தாமணி - 101 — திருத்தக்கதேவர்
,, நைடதம் - 20— அதிவீர ராம பாண்டியன்
100 திருவாய்மொழி - 6 - 2 - 6 —நம்மாழ்வார்
100 திருவிளையாடல் புராணம் - 57 - பரஞ்சோதி முனிவர்
100 திவாகர நிகண்டு - இடப்பெயர்த் தொகுதி - 160 - திவாகரர்
101 சுந்தரர் தேவாரம் - திருத்தொண்டத் தொகைப் பதிகம்
101 திருமுருகாற்றுப் படை - பிற்சேர்க்கை-1 -நக்கீரர்
101 திருப்புகழ்—அருணகிரிநாதர்
103 பெரிய புராணம் - திருநகரச் சிறப்பு - 45 - சேக்கிழார்

நூலின்
பக்கம்

104 பிரபுலிங்க லீலை- மாயையின் உற்பத்தி கதி - 14 - சிவப்பிரகாசர்
104,105 திருக்குறள் - 402, 403, 404, 1007
108 பிரபுலிங்க லீலை—மாயையின்உற்பத்தி கதி - 49- சிவப்பிரகாசர்
108 குறுந்தொகை - 131 - 4,5 - ஓர் ஏர் உழவனார்.
108 தனிப்பாடல் திரட்டுப் பாடல் ஒன்றின் பகுதி.
409 பாரதிதாசனது தமிழ் வாழ்த்துப் பாடல்
109 திருவாசகம் - திருச்சதகம் - 26 - மாணிக்கவாசகர்
112 திருக்குறள் - 29, 719, 720
113 புறநானூறு - 173 - 11, 12- சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்
114,115 திருக்குறள் - 1053, 1054
115 திவ்வியப் பிரபந்தம் - திருமாலை - 23 - தொண்டரடிப் பொடியாழ்வர்
116 பட்டினப் பாலை - 7,8 - கடியலூர் உருத்திரங் கண்ணனார்
116 பாரதிதாசன் பாடல்-
119 நெடுநல் வாடை - 30 - நக்கீரர்
119 மதுரைக் காஞ்சி - 359 - மாங்குடி மருதனார்
119 நற்றிணை - 200 - 3 - கூடலூர்ப் பல் கண்ணனார்
119 மலைபடுகடாம் - 481 - இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார்
119 பெருந்தொகை - 2 - 7-7; 5-7 23 - கொங்கு வேளிர்
120 நறுந்தொகை - 35 - அதிவீரராம பாண்டியன்
120 நன்னெறி - 38 - சிவப்பிரகாசர்
120 திருக்குறள் - 782

நூலின்
பக்கம்

120 சீவக சிந்தாமணி - 786 - திருத்தக்க தேவர்
120 திருவிளையாடல் புராணம் - நரி பரியாக்கிய படலம்- 99 - பரஞ்சோதி முனிவர்
121 காஞ்சிப் புராணம் - சிவஞான சுவாமிகள்
122 திருக்குறள் - 1101 -
123 மணிமேகலை - 5 - 123, 124 - சாத்தனார்
124,125 ஞான சம்பந்தர் தேவாரம் - திருவையாறு - 2 - 1
126 கலித்தொகை - 11 - 8,9 - சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ
,, ,, 40 - 26, 27, 28 - கபிலர்
126 பூதத்தாழ்வார் திருவந்தாதி - 75 - பூதத்தாழ்வார்
127 திரு ஈங்கோய் மலை எழுபது - 32 - நக்கீர தேவ நாயனார்
128 பழமொழி நானூறு - 234 - முன்றுறை அரையனார்
128 திருக்கோவையார் - 138 - மாணிக்க வாசகர்
128 அகநானூறு - 2 - கபிலர்
130 ஞான சம்பந்தர் தேவாரம் - தோணிபுரம் - 10
130 குறுந்தொகை - 160 - மதுரை மருதன் இளநாகன்
131 ,, 177 - உலோச்சனார்
131 ,, 301 - குன்றியனார்
131 நற்றிணை - 152 - 7, 8 - ஆலம் பேரி சாத்தனார்
,, ,, 218 - 10, 11 - கிடங்கில் காவிதி கீரன் கண்ணனார்
,, ,, 303 - 5, 6, 7 - மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்
,, ,, 335 - 7, 8 - வெள்ளி வீதியார்
131 அகநானூறு - 270 - 13, 14 - சாகலாசனார்
131 மணிமேகலை - 5, 127,128 - சாத்தனார்
131 மனோன்மணியம் - சுந்தரம் பிள்ளை

நூலின்
பக்கம்

133,134 கந்த புராணம் - காப்புச் செய்யுள் கச்சியப்ப சிவாசாரியார்
134 ஞான சம்பந்தர் தேவாரம் - திருக்கோலக்கா பதிகம்-1
134 தொல்காப்பியம் - (போந்தை) பொருளதிகாரம் -புறத் திணையியல் - 5 - தொல்காப்பியர்
136,137 திருக்குறள் - 1089, 850, 1091, 138,
138 சீவக சிந்தாமணி - 167 - திருத்தக்க தேவர்
138 திருக்கோவையார் - 5 - மணிக்க வாசகர்
139 மலைபடு கடாம் - 387 - 89 - இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார்
139 திருக்குறள்—1040
142 திவ்வியப் பிரபந்தம் - இயற்பா - மூன்றாம் திருவந்தாதி- 63 - பூதத்தாழ்வார்
142 ,, முதல் திருவந்தாதி - 5, 98 - பொய்கையாழ்வார்

## 7. கற்பனைக் கனிகள்

146 மணிமேகலை - 5- 123, 124 - சாத்தனார்
146 குறுந்தொகை - 305 - 6 - குப்பைக் கோழியார்
147 கந்தபுராணம்- கச்சியப்ப சிவாசாரியார்
148 அழகின் சிரிப்பு - புறா - பாரதிதாசன்
150 மணிமேகலை - 3 - 24, 25 - சாத்தனார்
155,156 திருக்குறள் - 1313, 1314, 1317, 1318, 1319, 1320.
158 சீவக சிந்தாமணி - 2677 - திருத்தக்க தேவர்
158 ஞானசம்பந்தர் தேவாரம் - தோணிபுரம்-10.
160 முத்தொள்ளாயிரம் - 38 - ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## 8. ஒட்டு மாங்கனிகள்

நூலின்
பக்கம்

163,164 காள மேகப் புலவரின் தனிப்பாடல்
164 சித்தர் பாடல்
164 அம்பிகாபதி காதல் காப்பியம் - 20 - 98, 99 - சுந்தரசண்முகனார்
165 திருக்குறள்-1107
166 புறநானூறு - 235; 1 - 5 - ஔவையார்
166 நாலடியார் - 62 - 2 - சமணமுனிவர்
167,168,169 திருக்குறள்-55 - 222, 235
169 புறநானூறு - 165 - 1, 2 - பெருந்தலைச் சாத்தனார்
170,171 திருக்குறள் - 166, 105
171 நாலடியார் - 98 - சமணமுனிவர்
172 திருக்குறள் - 228

## 9. நயம் மிக்க நற்கனிகள்

181 திரை ஓவியப் பாடல்
182 திருக்குறள் - 59
184 பிரபுலிங்கலீலை - மாயை பூசை கதி - 55 - சிவப்பிரகாசர்
185 ,, –பிரபு தேவர் வந்த கதி—29''
186 திவ்வியப் பிரபந்தம் -திருமாலை—2 —தொண்டரடிப் பொடியாழ்வார்

## 10. புராண வரலாற்றுப் பூந்துணர்கள்

194 சிலப்பதிகாரம் - 26 - 234 - இளங்கோவடிகள்
194 புறநானூறு - 368 - 13 - கழாத் தலையார்
194 திருக்குறள் -872

## 12. அணி மலர்கள்
## 12. 1 உவமை—உருவகங்கள்

நூலின்
பக்கம்

205 வெற்றிவேற்கை (நறுந்தொகை)—17—
அதிவீரராம பாண்டியன்
209 புறநானூறு—189—1, 2 - நக்கீரர்
209 திவ்வியப்பிரபந்தம் - திருவிருத்தம் - 40 -
நம்மாழ்வார்
210 கந்தபுராணம் - காப்புச் செய்யுள்- கச்சியப்ப
சிவாசாரியார்
210 திருவெங்கை உலா - 40, 41 - சிவப்பிரகாசர்
212 குறுந்தொகை - 143; 4 - 7 - மதுரைக்
கணக்காயர் மகனார் நக்கீரனார்
212 சீவக சிந்தாமணி 2107- திருத்தக்க தேவர்
212,213 திருக்குறள் - 220, 481
215 பட்டினப் பாலை - 222 - 227- கடியலூர்
உருத்திரங் கண்ணனார்
216 புறநானூறு - 17 : 15 - 23 -குறுங்கோழியூர்கிழார்
217 திருவாய் மொழி - 1 - 3 - 9; 4 - 8 - 10 -
நம்மாழ்வார்
218 நல்வழி - 9 - ஔவையார்
218 தமிழ் நாவலர் சரிதை - 17. தொகுப்பாசிரியர்
பெயர் தெரியவில்லை
220 பிரபுலிங்கலீலை - துதி கதி - 2 - சிவப்பிரகாசர்

## 12-2. வேற்றுப் பொருள் வைப்பணி

223 தண்டியலங்காரம் - 47 - தண்டி ஆசிரியர்
225 திருக்குறள் - 403
227 குறுந்தொகை - 2 - இறையனார்
231 சீவக சிந்தாமணி - திருத்தக்க தேவர்

231 திருவரங்கத் தந்தாதி - 60 - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

233 திருக்குறள் 1291,- 1292, 1293, 1299, 1300.

## 12-3. தற்குறிப் பேற்ற அணி

235 தண்டியலங்காரம் - 56 - தண்டியாசிரியர்

## 13. ஒரு கண்ணோட்டம்

244 பௌத்த ராமாயணம் - பௌத்தர்

244 இராம நாடகக் கீர்த்தனை - அருணாசலக் கவிராயர்

245 தொல்காப்பியம் - பொருளதிகாரம்- புறத்திணையியல் 21- நச்சினார்க் கினியர் உரை

247 சிலப்பதிகாரம் - மனையறம் படுத்த காதை - 73 - 80- இளங்கோ வடிகள்

248 நன்னூல் - பொதுப் பாயிரம் - 9 - பவணந்தி முனிவர்

248 கம்பர் மேல் புகழ் மொழிகள்

MK Colour Process Madras-14
Phone : 841478